134/2002

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

ஜனவரி 23, 2001

தொகுதி 112 எண் 3

V211,31'P01
P01.112.2
222790

வெளியீடு 23-7-2001 Issued 23-7-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஜனவரி 23, 2001 – தொகுதி 112– எண் 3

**Tuesday the 23rd January, 2001 – Volume 112– No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

*விலை ரூ. 3.00*] [Price Rs. 3.00

134/2002

23-1-2001

## உள்ளடக்கம்

*பக்கங்கள்*


1. **வினாக்கள்-விடைகள்—**

   (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 177-229

   (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 மற்றும் 2) 229-298

2. **சிறப்புக் கவன ஈர்ப்பு—**

   கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களை மாலத் தீவிலிருந்து மீட்டல் 299-305

   *திரு. இரா. பெர்னார்டு 299

   டாக்டர் *தே. குமாரதாஸ் 300-301

   திரு. ஜி.கே. மணி 301

   திரு. டி. மணி 301-302

   திரு. சி. வேலாயுதன் 302-303

   *மாண்புமிகு திருமதி ஜெனிபர் சந்திரன் 304-305

3. **தகவல் கோரல்—**

   சிமெண்ட் விலையேற்றத்தைத் தடுக்கக் கோரி புரட்சித் தலைவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஊர்வலம் 305

4. **அறிவிப்பு—**

   பேரவைக் கூட்டம் 25-1-2001 அன்று நடைபெறுதல் 307-308

பக்கங்கள்

5. அறிக்கை அளித்தல்—

பொதுக் கணக்குக் குழு 308

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி 308-379

திரு. ச. அழகிரி 312-326

*திரு. குத்தாலம் பி. கல்யாணம் 327-334

திரு. வை. சிவபுண்ணியம் 335-343

திரு. வ. அன்பழகன் 343-348

*திரு. லா. சந்தானம் 348-354

*திரு. ஆ. இராசேந்திரன் என்கிற திரன் 354-362

*திரு. ரா. சேதுநாதன் 362-367

*திரு. பி. வெங்கடசாமி 368-371

திரு. கே.ஆர். இராமசாமி 371-379

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 379-380



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### தை 10, விக்கிரம—திருவள்ளுவர் ஆண்டு 2032

### 2001 ஜனவரி 23, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை உடைத்திவ் வுலகு"

கடமை தவறாமையிலும், கருணை பொழிவதிலும் முதன்மையாக இருப்போருக்கு இந்த உலகமே உரிமையுடையதாகும்.

### 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 21, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**21—**

### நவீன தொழில் நுட்பப் பரிமாற்றம்

***35512—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா பல்கலைக்கழகம் ஜெர்மன் பல்கலைக்கழகத்துடன் நவீன தொழில் நுட்பப் பரிமாற்றம் சம்பந்தமாக ஒப்பந்தம் செய்துள்ளதா?

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பொறியியல் ஆராய்ச்சி, வளர்ச்சி மற்றும் நவீன தொழில் நுட்பப் பரிமாற்றம் தொடர்பாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்தம் நவீன தொழில் நுட்பப் பரிமாற்றம் என்று குறிப்பிடுகின்றபோது, என்னென்ன வகை என்பதை அறிவிக்க இயலுமா, அல்லது எத்தனை ஆண்டுகளுக்கு இது நீடிக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பல்கலைக்கழகத்திற்கு கல்வி வளர்ச்சியைப் பொறுத்தவரையில் நவீன முறைகளை மேற்கொள்வதற்கும், செயல்படுவதற்கும் உரிமை இருக்கிறது. அந்த முறையிலே அண்ணா பல்கலைக்கழகம் இந்த ஒப்பந்தங்களை மேற்கொண்டிருக்கிறது. அப்படி ஏற்றுக்கொண்டிருக்கிற இந்த உடன்பாடு, புகைப்படக் கணிப்பியல் Photo-Grametry, தொலை உணர்வு—Remote Sensing, புவி அமைப்புத் தகவியல்—Geo Informatics ஆகிய புலங்களில் தொழில்நுட்ப ஆராய்ச்சியை மேம்படுத்தும் வகையில் இந்தப் பல்கலைக்கழகம், ஜெர்மனியில் உள்ள ஸ்டெப்காட் செயல்முறை அறிவியல் பல்கலைக்கழகத்துடன் இந்த உடன்பாட்டை மேற்கொண்டுள்ளது. அதேபோல, Remote Sensing and Photo-Grametry ஆகிய பிரிவுகளில் ஜெர்மனியிலே உள்ள ஹெனோவர் பல்கலைக்கழகத்தோடு 17-4-2000-ல் மேலும் ஒரு உடன்பாடு மேற்கொண்டுள்ளது. இதனுடைய முக்கியமான நோக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் ஒத்துழைப்புப் பெறுவது, ஆய்வுத் தகவல் பரிமாற்றம் செய்துகொள்வது, ஆசிரியர்கள் பணிமாற்றம் தேவையான வகையில், தேவைப்படுகிறபோது செய்து கொள்வது, உயர்கல்வி மற்றும் ஆய்வுப் பணிகளில், இளநிலை- முதுநிலை மாணவர்களைப் பரிமாறிக் கொள்வது.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உள்நோக்கம் இல்லாமல் கேள்வி கேட்க முடியுமா? திரு. சி. ஞானசேகரன், கேளுங்கள்.





**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா பல்கலைக்கழகம் ஏற்கெனவே இந்த வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களோடு இப்படி ஒப்பந்தம் போட்டு, கல்வியினுடைய வளர்ச்சிக்கு நல்ல ஒரு முயற்சி எடுத்திருக்கிறது, நன்றி. ஆனால் நிறைய பேர் நம்முடைய தமிழகத்தில் பொறியியல் துறையில் பல பட்டங்களைப் பெற்றுவிட்டு, வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கென்று தனியாக ஒரு Corporation வைத்து, அதாவது யாரெல்லாம் இதுமாதிரி தொழில்நுட்பக் கல்வியைப் பயின்று இருக்கிறார்களோ, அவர்களுடைய பெயர்களைப் பதிவு செய்து, வெளி நாட்டில் இருக்கக்கூடிய தேவைகளைப் பூர்த்தி செய்ய, இந்தக் Corporation மூலமாக அவர்களை வேலைக்கு அனுப்பி வைத்து, இங்கேயிருக்கக்கூடிய இந்த வேலையில்லாப் பொறியியல் பட்டதாரிகளுக்கெல்லாம் ஒரு நல்வாழ்வு கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? இந்த வேலையில்லாப் பொறியியல் பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்க அரசு வழி வகுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக, இந்தக் கேள்விக்குத் தொடர்பில்லாத விவரங்களை அறிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்கள். Man Power Corporation மூலமாக அப்படிப்பட்ட பணிகள் நடைபெறுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது மாண்புமிகு உறுப்பினருக்கு இப்போது வாடிக்கையாகப் போய்விட்டது. நேற்றையதினம் என்னிடம் வந்து, பேசுவதற்கு அனுமதி கேட்டார்கள். 15 நிமிடங்கள் கொடுக்கலாம் என்றேன். துணைத் தலைவரிடம் 20 நிமிடங்கள் கொடுங்கள் என்றேன். 26 நிமிடங்கள் பேசிவிட்டு, வெளியே போய், ஜனநாயகப் படுகொலை என்று பேட்டி கொடுக்கிறார். (சிரிப்பு) அதனால் அவரைப் பற்றி அவ்வளவு கவலைப்பட வேண்டியதில்லை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இது குறித்துக் கவனிக்க Man Power Corporation இருக்கிறது. அது வேறு அமைப்பு. அந்த அமைப்பிலே ஓரளவு கவனிக்கின்றார்கள். பல்கலைக்கழகத்தினுடைய கல்வித் திட்ட அடிப்படையிலே எழுந்த கேள்வி என்ற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியைத் தனிக் கேள்வியாகப் போட வேண்டுகிறேன்.

[2001 ஜனவரி 23

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 22, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**22—**

### மனநல மருத்துவமனை

***24284—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் மேலும் ஒரு மனநல மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையை வழங்கிட அனுமதி கோருகிறேன்.

(அ) ஆம்.

(ஆ) திருச்சியில் 100 படுக்கைகள் கொண்ட ஒரு மனநல மருத்துவமனை அமைப்பதற்கான திட்ட வரைவு மத்திய அரசின் நிதி உதவியினைப் பெறுவதற்காக அனுப்பப்பட்டது. ஆனால் மத்திய அரசு இத்திட்டத்திற்கு நிதி உதவி அளிக்க வழிவகை இல்லை எனத் தெரிவித்துள்ளது. இருப்பினும், நமது அரசு இம்மருத்துவமனையின் அவசியத்தை கருத்தில் கொண்டு, இதற்கான செயற்குறிப்பை 2001-2002 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தில் சேர்த்து அனுப்புமாறு மருத்துவக் கல்வி இயக்குநரைக் கேட்டுக்கொண்டுள்ளது.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனநல மருத்துவமனை என்பது சென்னை நகரிலே இருக்கிறது. 500, 600 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பகுதியிலிருந்து வரக்கூடிய ஏழையெளியவர்கள், பொது மக்களுக்கு எல்லாம் பல்வேறு இடையூறுகள் இருக்கக்கூடிய சூழ்நிலையில் விரைவாக வர இயலவில்லை. பல்வேறு நலத் திட்டங்களை மத்திய அரசு நிராகரித்தாலும்கூட, மிக அத்தியாவசியத் தேவையான திட்டங்களையெல்லாம் மாநில அரசு தனது நிதி ஆதாரத்தின் மூலமாகச் செயல்படுத்துவதுபோல, இதற்கு



2001 ஜனவரி 23]

முன்னுரிமை கொடுத்து 2001-லே ஆரம்பிப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, அவசியமாக நிறைவேற்றிக் கொடுப்பதற்கு, மாநில அரசே மத்திய அரசினுடைய நிதியை எதிர்பார்க்காமல் செயல் படுத்திக் கொடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சென்னையிலே இருக்கக்கூடிய மனநோய் மருத்துவமனை ஏறக்குறைய 1,800 படுக்கை வசதிகள் கொண்டது. தென் மாநிலங்களிலே இப்படிப்பட்ட மருத்துவமனை இல்லாத காரணத்தால் இந்த மருத்துவமனைக்கு நம்முடைய தமிழ்நாட்டிலே மட்டுமன்றி கேரளா, ஆந்திரா, கர்நாடகா, புதுவை போன்ற பல மாநிலங்களிலிருந்து மன நோயாளிகள் வருகின்றார்கள். அவர்களுக்கு முறையாக நாம் மருத்துவம் செய்வதன் மூலம் இதனுடைய புகழ் அகில இந்தியாவும் பரவி இப்போது காஷ்மீரிலிருந்துகூட அந்த மருத்துவமனைக்கு நோயாளிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். எனவேதான் இருக்கின்ற படுக்கைகள் போதாது என்று எண்ணி அகில இந்திய அளவிலே நோயாளிகள் வருகின்ற காரணத்தாலே வேறு ஒரு மருத்துவமனையை திருச்சியிலே ஆரம்பிக்க வேண்டுமென்று அரசு முடிவு செய்து, அதற்கான வேண்டுகோளை மத்திய அரசிடம் தெரிவித்தோம். ஆனால் மத்திய அரசு, நிதிநிலை வசதி இல்லாத காரணத்தால் இதைப் பரிசீலிக்க முடியாது என்று சொன்ன காரணத்தால் பகுதி-2 திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு தமிழக அரசே இந்தத் திட்டத்தைத் தொடங்குவது என்று முடிவு செய்து இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகள் முதலமைச்சரோடு கலந்து பேசி நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பரவலாக பலபேர் மனநோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, தனியாக மருத்துவமனை தொடங்குவதற்கு இயலவில்லை என்று சொன்னாலும்கூட, குறைந்தபட்சம் மாவட்ட அளவிலாவது மனநோய் நலச் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்துவதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனநோயாளிகள் பரவலாக இருக்கிறார்கள் என்று சொல்வது தவறு. அதற்காக மாவட்டந்தோறும் ஒரு

[2001 ஜனவரி 23

மருத்துவமனை கட்டக்கூடிய அளவிற்கு தமிழ்நாட்டிலே மன நோயாளிகள் எண்ணிக்கை பெருகவில்லை. இருந்தாலும் ஒருசில இடங்களிலே வெவ்வேறு காரணங்களினாலே மனநோய் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த அரசாங்கம் இயன்ற முயற்சிகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெருக்களிலே மனநோயாளிகள் சுற்றித் திரிவதும், அவர்களால் சில இடங்களிலே ஆபத்து நிகழ்வதும் நடந்து கொண்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால், நேற்றுகூட நெல்லையிலே ஒரு மனநோயாளி ஒரு சப்-இன்ஸ்பெக்டரையும், ஒரு காவலரையும் வெட்டி இருக்கிறார். இப்படிப்பட்ட ஆபத்தான நோயாளிகளும் இருக்கிறார்கள். ஆபத்து இல்லாமல் வெறுமனே பிச்சை எடுத்துக் கொண்டு சுற்றித் திரியக்கூடிய சில மனநோயாளிகளும் இருக்கிறார்கள். அவர்களைக் கொண்டு வந்து ஓர் இடத்தில் வைக்க, மன நலக் காப்பகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன நோயாளிகளைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள வேண்டுமென்றால் ஒரு மணி நேரம் அதுகுறித்து நாம் சொல்ல வேண்டும். எனென்றால், சிலபேர் மனநோயாளிகளைப் போல் தோன்றுவார்கள், ஆனால், அவர்கள் மனநோயாளிகளாக இருக்க மாட்டார்கள். சிலபேர் நல்ல முறையிலே இருப்பார்கள்; ஆனால், அவர்களுடைய நடவடிக்கைகளைப் பார்த்தால் மன நோயாளிகளைவிட மோசமாக இருக்கும். எனவே, இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான், உண்மையான மனநோயாளிகள் யாரோ அவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு சிகிச்சை அளிக்க அரசு நடவடிக்கை எடுக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை வைத்தியத்திலே மிகவும் நம்பிக்கை உடையவர்கள் நம்முடைய அமைச்சர் அவர்கள். திருப்பூருக்குப் பக்கத்தில் இருக்கின்ற திருமுருகன்பூண்டியிலும், குணசீலம், ஏர்வாடி தர்கா போன்ற



2001 ஜனவரி 23]

இடங்களிலேயும் ஏராளமான மனநோயாளிகள் வந்து தங்கி, 48 நாட்களிலே குணம் அடைந்து போவதை நாம் பார்க்கிறோம். அதுபோன்று நம்முடைய புனிதத் தலங்களிலும் மனநோயாளிகள் வந்து தங்குவதற்கு ஏற்ப அரசு விளம்பரம் செய்து நோயாளிகளை அங்கே அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல ஒரு சில இடங்களிலே இப்படிப்பட்ட நடைமுறை இருந்து வருகின்றது. ஏர்வாடியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏர்வாடியில் நடைபெறுகின்ற அந்த நிகழ்ச்சிகள் வருந்தத்தக்கவை. நானே அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தேன். அங்கே மனநோயாளிகள் என்ற பெயரிலே, யார் யார், வீட்டிலே அடங்காத பிள்ளைகளாக இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் கொண்டுபோய்ச் சிறையிலே அடைப்பதைப் போல அடைத்து வைத்து அங்கே கொடுமைப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதை எல்லாம் உடனடியாக, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும், அங்கே இருந்த காவல் துறை அதிகாரிகள் மூலமாகவும் கண்டறிந்து அந்த இடங்களிலே சோதனையிட்டு, யார், யார் மனநோயால் பாதிக்கப்படாமல், குடும்பப் பிரச்சினைக்காக அங்கே அனுமதிக்கப்பட்டார்களோ அவர்கள் எல்லாம் விடுவிக்கப்பட்டு, உண்மையான மன நோயாளிகளை சென்னை, கீழ்ப்பாக்கம் மன நோய் மருத்துவமனைக்குக் கொண்டு வந்து சேர்த்து சிகிச்சை அளித்துக்கொண்டு இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்திலே, கீழ்ப்பாக்கத்திலே இருக்கின்ற மனநோய் மருத்துவமனை நல்ல முறையில் செயல்படுவதாகவும், இந்தியா முழுவதிலிருந்தும் அங்கு வருகை அதிகரித்து நல்லமுறையில் சிகிச்சை பார்ப்பதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நமது தமிழக அரசு 'வருமுன் காப்போம்' என்ற ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அதேமாதிரி அரசியல்வாதிகள், M.L.A., M.P.-க்கள் போன்றவர்களுக்கு திடீர், திடீரென்று தேர்தல் நேரத்திலே சூடுபிடித்து மனநோயாளிகள் மாதிரி ஆகிவிடுகிறார்கள். ஆகவே, விசேஷ சிகிச்சை பெறுவதற்காக, ஊட்டி, குற்றாலம் போன்ற

இடங்களிலே மனநோயாளிகள் மருத்துவமனை ஆரம்பிப்பதற்கு அரசிடம் ஏதேனும் விசேஷ திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மனு போடுவதாக இருக்கிறீர்களா? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி போன்றவர்களுக்கு எல்லாம் நிச்சயம் அந்த இடத்திற்குப் போகவேண்டிய அவசியம் ஏற்படாது என்றே கருதுகிறேன். இருந்தாலும், ஊட்டி கொடைக்கானல் போன்ற இடங்களிலே மனநோயாளிகளைத் தங்க வைப்பதன் மூலம் அவர்களுடைய நோய் தீர்ந்துவிடும் என்பதற்கான ஆதாரம் ஏதுமில்லை. சிகிச்சை மூலமாகத்தான் அந்த நோயைத் தடுக்க முடியுமே தவிர, தீர்க்க முடியுமே தவிர, குளிர் பிரதேசத்திலே அவர்களைக் கொண்டுபோய் வைப்பதன் மூலம் மனநோய் தீர்ந்துவிடும் என்பதற்கான ஆதாரம் இல்லை. அப்படியென்றால், குளிர் பிரதேசங்களாக இருக்கக்கூடிய, ஏறக்குறைய ஓர் ஆண்டிலே 4 மாதங்கள் குளிர் பிரதேசமாக இருக்கக்கூடிய டெல்லியிலோ அல்லது காஷ்மீர் போன்ற பகுதியிலோ மன நோயாளிகள் அதிகரிப்பதற்கான வாய்ப்பு குறைந்திருக்கும். ஆனால், அது அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. எனவே, இதற்கும் குளிர் பிரதேசத்திற்கும், உஷ்ணமான பிரதேசத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனநோயாளிகளைப் பொறுத்தவரையில், குற்றாலம் பகுதியில், குற்றாலம் மலை அருவியிலே குளித்தால் மனநோயாளிகள் சுகம் அடைவதாகச் சொல்லுகிறார்கள். அது மூலிகைகள் நிறைந்த பகுதி, அந்தப் பகுதியில் குளிப்பதன் மூலம் பலன் இருப்பதாகக் கருதப்படுகிறது. எனவே, அந்தப் பகுதியை மையமாகக் கொண்டு ஒரு மனநல மருத்துவமனையை ஆரம்பிக்கவேண்டும் என்பதோடு, பொதுவாக வடநாட்டிலிருந்து பெருவாரியானவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகிறார்கள். வருகிறபோது அவர்களோடு சில மனநோயாளிகளை அழைத்து வருகிறார்கள். கன்னியாகுமரிக்கு வந்து தங்கிவிட்டு போகிறபோது அவர்களை அங்கேயே விட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுவாக கடற்கரைப் பகுதியிலே சுற்றித் திரிகின்ற ஏழைகளாக இருந்தாலும் சரி, அல்லது மனநலம் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, அவர்களில் பெரும்பாலானவர்கள் வடநாட்டைச் சேர்ந்தவர்கள். எனவே,





அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு காப்பகம் அமைக்கின்ற முகத்தான் அல்லது அப்படிப்பட்டவர்களை வந்த இடத்திற்கே திருப்பி அனுப்பும் முகத்தான் ஏதாவது ஒரு முயற்சியை மேற்கொண்டு, அந்தப் பகுதியைச் சரியாக வைத்துக்கொள்வதற்கும், அதே நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவம் செய்து சுகமாக்குகின்ற விதத்திலும், அதிலும் குறிப்பாக இந்திய முறை மருத்துவத்தின் மூலம் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலத்திலே மூலிகைகள் கலந்து வருகிற அந்த நீரின் மூலமாக மனநோய் தீருகிறது என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதைச் சித்த மருத்துவர்களும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நமக்கு இருக்கின்ற பிரச்சினை, வருடம் 365 நாளும் குற்றாலத்திலே நீர் வருவதில்லை. சில மாதங்கள்தான் வருகிறது. மனநோயாளிகளை அங்கே கொண்டுபோய் இரண்டு மாதத்திற்கோ, மூன்று மாதத்திற்கோ வைத்துவிட்டு, பிறகு ஒன்பது மாதத்திற்கு அவர்களைச் சும்மா வைத்தால், அதுவே அவர்களைப் பைத்தியமாக்கிவிடும். எனவே, அதுவும் இயலாத காரியம். கன்னியாகுமரி பற்றிச் சொன்னார்கள். வடநாட்டிலேயிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகள், மனநோயாளிகளை அங்கேயே விட்டுவிட்டுபோய் விடுகிறார்கள்; அதனால், அங்கே பிரச்சினைகள் அதிகமாகின்றன என்று சொன்னார்கள். அதுகுறித்து அரசுக்கு முழுத் தகவல் கிடைக்குமானால், அவர்களை உரிய இடத்திற்குத் திருப்பி அனுப்பத் தேவையான ஏற்பாடுகளை அரசு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 23, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**23—**

## மருத்துவமனைக்கு படுக்கை வசதி

*26938—திரு. மு. பன்னீர்செல்வம்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 23

சீர்காழி தொகுதி சீர்காழி அரசு பொது மருத்துவமனையில் பெண்கள் பகுதி படுக்கை வசதியை விரிவுபடுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழி அரசு பொது மருத்துவமனையில் பெண்கள் பிரிவில் படுக்கை வசதியை விரிவுபடுத்துதல் குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. நிதிநிலைக்கேற்ப, இனி வரும் காலங்களில் இது பற்றி அரசு கருத்திற்கொள்ளும்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி அரசு மருத்துவமனையில் ஒரு நாளைக்கு வெளி நோயாளிகள் குறைந்தபட்சம் 1,500 பேர் வருகிறார்கள். உள் நோயாளிகள் பிரிவிலே 74 படுக்கைகள் இருக்கின்றன. அதிலே பெண்கள் பிரிவிலே 16 படுக்கைகள் மட்டும்தான் இருக்கின்றன. பல ஆண்டுகளாக பெண்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகிறார்கள். உள் நோயாளிகள் பிரிவில் இடம் கிடைக்காத காரணத்தினால், பெண்கள் பிரிவில் 16 படுக்கைகளே இருக்கின்ற காரணத்தினால், அதில் மேலும் 10 படுக்கைகளையாவது விரிவுபடுத்திக் கொடுக்க வேண்டும். மேலும், அந்த அரசு மருத்துவமனையில் 9 மருத்துவர்கள் பணியாற்றினார்கள்; தற்சமயம் 4 மருத்துவர்கள்தான் இருக்கிறார்கள். மயக்க மருந்து மருத்துவர் இல்லவே இல்லை. எனவே, அதையும் உடனடியாக நிரப்பிக்கொடுத்து, 10 படுக்கைகளைக் கூடுதலாக பெண்கள் பிரிவிற்கு ஏற்படுத்திக் கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற 16 படுக்கைகள் என்பது, பேறுகால பின் கவனிப்புப் பிரச்சினைகளுக்காக இருக்கின்ற படுக்கைகள். பெண்கள் பிரிவிலே தனியாக 15 படுக்கைகள் இருக்கின்றன. மகப்பேறு பிரிவிலே 16 படுக்கைகள் இருக்கின்றன. பெண்கள் மகப்பேறு காலம் முடிந்ததற்குப் பிறகு ஏதாவது பிரச்சினைகள் இருக்குமானால், அவர்களை அனுமதிக்க 6 படுக்கைகள் இருக்கின்றன. எனவே, பெண்களைப் பொறுத்தவரையிலே கிட்டத்தட்ட 37 படுக்கைகள் அந்த மருத்துவமனையிலே இருந்துகொண்டிருக்கின்றன. எனவே, தேவையிருப்பின் நிச்சயமாக இந்த அரசாங்கம் 10 அல்லது 20 படுக்கைகளைக்கூட அதிகரித்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறது.



2001 ஜனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 24, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**24—**

## மாவட்ட ஊராட்சிக் குழுக்களுக்கு அதிகாரம்

***26971—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட ஊராட்சி நிலைக்குழு அமைப்புகளுக்கு அதிக அதிகாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இயலாது.

(ஆ) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பதினொன்றாவது அட்டவணையில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மட்டுமே பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட ஊராட்சி அமைப்பைப் பொறுத்தவரை கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி என்பதைப்போல, எங்களால் எந்தவிதமான பணிகளையும் மேற்கொள்ள இயலவில்லை என்ற பொதுவான ஒரு மனக்குறை அவர்களுக்கு இருந்து வருகிறது. ஏற்கெனவே ஜில்லா போர்டு அமைப்பு முறை இருந்தபோது, பணி நியமனம் உட்பட பல்வேறு அதிகாரங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. ஒன்று, இந்த மாவட்ட ஊராட்சி நிலைக் குழு அமைப்புகளுக்குப் போதுமான அதிகாரம் வழங்கப்பட வேண்டும். இல்லையென்று சொன்னால், இந்த மாவட்ட ஊராட்சி அமைப்பு முறை அதாவது அந்த மூன்று அடுக்கு அமைப்பு முறையிலே மாற்றம் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2001 ஜனவரி 23

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய துணைக் கேள்வியிலேயே அதனுடைய பொருள் அடங்கியிருக்கிறது. கூடுமானவரையில், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் உருவாக்கிய இரண்டு அடுக்கு முறையைத்தான் அனைத்துக் கட்சிகளும் விரும்புகிறோம். அதன் அடிப்படையில், மத்திய சர்க்காருக்கு, இதைப் பற்றிய ஒரு திருத்தம் வெளியிட வேண்டுமென்றும், அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு முறை கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஒருமுறை நானும் நேரில் அங்கே சென்றபோது தெரிவித்திருக்கிறேன். அதைப்பற்றிப் பரிசீலிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். உள்ளபடியே அப்படிப்பட்ட ஒரு நிலை வருவதற்காகவும், அதேநேரத்தில் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு இப்போது இருக்கிற நிலைக்குத் தக்கவாறும் ஊராட்சிகளில் யார் இருந்தாலும், எத்தனை அடுக்கு இருந்தாலும், ஊராட்சிகளுக்குத்தான், கிராமப்புறங்களுக்குத்தான் அத்தனை பணிகளையும் செய்ய வேண்டியிருக்கிறது. அதில் நேரிடையாக யார், யார் பணிகளைச் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறதோ, அப்படிப்பட்ட ஊராட்சிகளுக்கு கொஞ்சம் அதிகமான நிதி ஒதுக்கீடும், அதிகாரங்களும்—அதற்கு அடுத்த தட்டில் இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களுக்கும்—வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல வருகிற பொதுத் தேர்தலுக்குள், அதாவது ஊராட்சி மன்றத்தின் தேர்தலுக்குள், இரண்டு அடுக்கு முறையாக மாற்றலாமா என்ற நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படுகிற நிதி வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. அதுவும் குறிப்பாக, கடந்த மூன்று வருடங்களாக படிப்படியாகக் குறைத்து வழங்கப்படுவதாகவும், இந்த ஆண்டு இன்னும் வழங்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறதே, நிதியை வழங்குவதற்கான முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.



2001 ஜனவரி 23]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுத்தமாக நிதி வழங்கப்படவில்லை என்பது தவறு; வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், இந்த ஆண்டைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே சென்ற நான்கு ஆண்டுகளில் வழங்கப்பட்ட நிதியை விட, திட்டத்திற்காகவும், மற்ற பணிகளுக்காகவும், நிதி, கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அதிகமாக வழங்கப்பட்டிருக்கிறது. இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நிதியனைத்தும் திட்டத்திற்காகத்தான் முக்கியமாகத் தரப்படுகிறது. காரணம், மத்திய அரசிலிருந்து பங்கு பெறுவதற்காகவும், இவற்றை உடனடியாகச் செய்து, செலவினங்களைக் காட்டி, பணிகளை முடித்து, அதிலே அதிக கவனம் செலுத்தி, இந்த மத்திய அரசினுடைய பணத்தைத் தவறாமல், இந்தியாவிலேயே நாம்தான் வருடாவருடம் பெற்றுக்கொண்டிருக்கிறோம். அதன் அடிப்படையில், திட்டங்களுக்காக நாம் அனுமதி வழங்கி இருக்கிறோம். ஆனால், அன்றாடச் செலவுகளுக்குக்கூட ஊராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் அரசை எதிர்பார்ப்பது நியாயம்தானா என்பதைச் சட்டமன்ற உறுப்பினர் உணரவேண்டும். இதற்காகத்தான் ஆரம்பத்திலேயே, ஓராண்டு காலத்திற்கு, அந்த நிர்வாகத்திற்குத் தேவையான நிதியினை வைத்துக்கொண்டு, நிர்வாகத்தை நடத்தவேண்டுமென்று ஆணைகளே பிறப்பித்திருக்கிறோம். அது தவிர, சில பஞ்சாயத்துகள், சில ஊராட்சி ஒன்றியங்கள், சில நகராட்சிகள் இப்படிப்பட்ட பிரச்சினையில் தலையிடுகின்றன. அதையும் கூடுமானவரையில் கவனித்து உரிய நடவடிக்கையை முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஒரு சில பகுதிகளில், ஒருசில நிதியாதாரங்கள் சற்றுக் காலதாமதமாகச் சென்றிருந்தாலும், திட்டங்களுக்கு உரிய தொகைகளை வழங்கிவிட்டோம் என்ற செய்தியை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு நேரிடையாக வசூலிப்பதற்கான வாய்ப்பு பொதுவாக குறைவாகவே இருக்கும். ஆனால், அதனுடைய அன்றாடப் பணிகளைச் செய்வதற்குக்கூட வாய்ப்பு இல்லாமல் இருக்கும் சூழ்நிலை இருந்துகொண்டு வருகிறது. குறிப்பாக மேல்புரம் ஊராட்சி ஒன்றியத்தில் அரசாங்கம் மூன்று வாகனங்களைக் கொடுத்தது. இவை, இரண்டு மூன்று வருடங்களாக மழைக் காலத்திலே வெளியேதான் நிற்கின்றன. ஒரு shed போடுவதற்குக்கூட நிதி இல்லாத குறை இருந்துகொண்டே

[2001 ஜனவரி 23

இருக்கிறது. ஏற்கெனவே, அப்படிப்பட்ட நிதிப் பற்றாக்குறை இருக்கின்ற சில ஊராட்சி ஒன்றியங்களுக்காவது, இந்த வாகனங்களைப் பாதுகாக்கின்ற வகையிலும், அதுபோன்று இவர்களுடைய அடிப்படையான சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கின்ற வகையிலும் நிதி தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றியம் தேவையில்லை என்ற அளவிற்குத்தான் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கேள்வி, துணை வினா எழுகிறது. காரணம், அது இருந்துகொண்டு, கிராமப்புறங்களில் இப்படிப்பட்ட பணிகளைச் செய்வதற்கு, வாகனங்கள் இருந்தும் அதை வைத்துக்கொள்வதற்கு இடமில்லை என்று சொன்னால், இந்தச் சாதாரண விஷயத்தைக்கூட அரசு நேரிடையாகச் செய்ய வேண்டுமென்பது அவ்வளவு நல்லதல்ல; அதற்குச் செலவிடுகிற தொகைகளை, அவர்களே, பொது நிதியிலிருந்து செலவழிக்க வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு சிக்கனமாகச் செலவழிக்க வேண்டுமோ, அவ்வாறு செலவழித்ததற்குப் பிறகு உள்ளபடியே பற்றாக்குறை இருந்து, அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், இப்படிப்பட்ட சாதாரண பிரச்சினைகளைப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**25—**

## குளிர்பதனக் கிடங்கு

***32853—திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர் வட்டத்தில் காய்கறி மற்றும் திராட்சை உற்பத்தி அதிகமாக உள்ளதால், குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?



2001 ஜனவரி 23]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**Thiru B. Venkatasamy:** Honourable Speaker, Sir, Hosur and Denkanikottai Taluks are producing more vegetables, next to Ooty and they are not in a position to store the potatoes, grapes and other things when the rates are down. From the beginning, I am requesting the Hon. Minister to construct a building with cold storage facility at Hosur. The Uzhavar Sandhai at Hosur is also performing well. I came to understand that it is the best in Tamil Nadu. Lot of vegetables also have to be stored for the next day's sale. May I know from the Honourable Minister whether he would consider construction of atleast one building with cold storage facility in the Uzhavar Sandhai at Hosur, so that big farmers as well as small farmers could be benefited.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்கள் கிருஷ்ணகிரியில் ஓசூர் பகுதியில் குளிர்பதனக் கிடங்கு ஒன்று தேவை என்று இந்தப் பேரவையின் வாயிலாகவும், நேரில் பார்க்கிறபோதும் அவர்கள் என்னைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும், அரசின் சார்பிலே இதை அமைப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை. இப்போது கிருஷ்ணகிரியில் தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சிக் கழகமும், சென்னையைச் சேர்ந்த park foods and exports என்ற நிறுவனமும் கூட்டு முயற்சியில் 5,000 மெட்ரிக் டன் கொள்ளளவுடன் ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைக்க உத்தேசித்துள்ளன. இதற்கான மொத்த திட்டச் செலவு 790 இலட்சம் ஆகும். இதிலே தேசிய தோட்டக்கலை வாரியம் குளிர்பதனக் கிடங்கு அமைக்க முதலீடு மானியமாக 1 டன் கொள்ளளவிற்கு ரூ. 1,000 மானியம் என்ற விகிதத்தில், அதிகபட்சம், திட்டச் செலவில் 25 விழுக்காடு வழங்கியிருக்கிறது. வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் இந்தத் திட்டத்தின்கீழ் தனியார்களை, இப்படிப்பட்ட குளிர்பதனக் கிடங்கு அமைக்க, கொண்டுவருவாரேயானால், இந்த மானியத்தைக் கொடுத்து அமைக்க இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

[2001 ஜனவரி 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 26, திரு. செ. இராமலிங்கம் மற்றும் திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**26—**

## வேளாண்மைக் கல்லூரி

***33028—திரு. செ. இராமலிங்கம், திரு ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஆடுதுறையில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையத்தில் வேளாண்மைக் கல்லூரி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ) இல்லை. தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறையில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையத்தில் வேளாண்மைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு பற்றி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பதிவாளருடன் கலந்து பரிசீலிக்கப்பட்டது. தற்போது உள்ள நிதிப் பற்றாக்குறையின் காரணமாக, ரூ. 40.00 கோடி மூலதனத்தில் புதிதாக ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையம் சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. போதுமான அளவிற்குக் கட்டட வசதி உள்ளது. சிறந்த நூலகம் அமைந்துள்ளது. சுமார் 50-க்கு மேற்பட்ட வேளாண் விஞ்ஞானிகள் அங்கே பணிபுரிகிறார்கள். அரசுக்கு எந்த கூடுதல் நிதிச் சுமையும் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. அப்படியே தேவைப்பட்டாலும் எங்கள் மாவட்டத்தில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து பங்களிக்க சம்மதிக்கிறோம். அதிநவீன சாகுபடி முறைகள், சிறந்த ரக விதைகள் எல்லாம் இங்கே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நாட்டிலேயே ஒரு சிறந்த நெல் ஆராய்ச்சி நிலையமாக இந்த நிலையம் திகழ்ந்து கொண்டிருக்கிறது. எனவே, அரசு பரிசீலனை செய்து மீண்டும் அங்கே



2001 ஜனவரி 23]

வேளாண் கல்லூரி தொடங்க ஆணை பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்களே கேள்வி என்ற வகையில் ஒரு பதிலைத் தந்திருக்கின்றார்கள். ஆடுதுறையிலே இருக்கக்கூடிய நெல் ஆராய்ச்சி நிலையம், நல்ல வீரிய வித்துக்கள், உற்பத்தி கூடுதலாகத் தரக்கூடிய நெல் வகைகள், அதைப்போல குறுகிய காலத்திலே விளையக்கூடிய வீரிய வித்து நெல் வகைகள், அதைப்போல சிறு தானியங்கள் இதுபோன்றவற்றை ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்து வேளாண் பெருமக்களுக்கு வழங்குவதற்காகத்தான் செயல்படுகிறது. இது பல்கலைக்கழகத்தினுடைய கட்டுப்பாட்டுக்குள்ளே வரக்கூடியது. ஆக, இந்த ஆராய்ச்சிக்காக இருக்கக்கூடிய நிலங்கள், இந்த ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய ஆய்வுக்கூடங்கள், கட்டடங்கள் இவற்றிலே கல்லூரி அமைக்க வேண்டும் என்று கேட்பது அவ்வளவு சரியாகப்படவில்லை. கல்லூரிக்குத் தனி இடம் தேவைப்படும். ஆகவே, இந்த ஆராய்ச்சி நிலையத்திலே கொண்டுபோய், கல்லூரியை ஆரம்பிக்க வேண்டும், கட்டட வசதி எல்லாம் இருக்கிறது என்ற அந்தக் கோரிக்கையை ஏற்பதற்கில்லை.

*முற்பகல் 10-00*

இதிலே இன்னொன்று, ஒவ்வோராண்டும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலும் அந்தக் கல்லூரிகளிலுமாக 571 பேர் சேர்க்கப்பட்டு அவர்களெல்லாம் படித்து வெளியே வருகிறார்கள். இப்போது 5,000-க்கும் மேற்பட்டவர்கள் படித்துவிட்டு வேலையில்லாத ஒரு நிலையும் இருக்கிறது. ஆகவே, அவர்கள் எங்களுக்கு வேலை வேண்டுமென்ற ஒரு கோரிக்கையையும் அரசாங்கத்திற்கு எடுத்து வைத்து வாதாடி, போராடி வருகின்றார்கள். ஆகவே, இந்த நிலையில் இப்போது அங்கு ஒரு கல்லூரி தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. அப்படியே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் இவர்களெல்லாம் அவர்களுடைய மேம்பாட்டு நிதியிலேயிருந்து ஒரு கல்லூரி அமைக்க வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை எழுத்துபூர்வமாக எழுதி அரசுக்கு அனுப்புவார்களேயானால் இந்த நெல் ஆராய்ச்சி நிலையத்தில் எவ்வளவு நிலம் மீதியாக இருக்கிறதோ அந்தப் பகுதியிலே ஆரம்பிக்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்கலாம்.

[2001 ஜனவரி 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம், என்பது சிறு விவசாயிகள் நிறைந்த ஒரு மாவட்டமாக இருக்கின்றது. அங்கே விவசாயிகளின் குடும்பங்களிலே பிறக்கின்ற குழந்தைகளெல்லாம் அதிகமான படிப்புகளைப் படிப்பதற்கு வெளி மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டிய ஒரு நிலை இருக்கின்றது. அதனால், அங்கே தரமான விவசாயப் பொருட்களை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு வசதியாக, அந்த மாவட்டத்திலே, அதாவது தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய 3 மாவட்டங்களுக்குமாகச் சேர்த்து ஒரு வேளாண்மைக் கல்லூரி தேவை என்று சட்டமன்றத்திலே 4 ஆண்டு காலமாக நாங்கள் கேட்டு வருகின்றோம். அதிலும், குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற ஏழை எளிய மாணவர்கள் திருச்சியிலே இருக்கின்ற வேளாண்மைக் கல்லூரிக்குச் சென்று அங்கு தங்கிப் படிப்பதற்கு அதிகமான செலவு ஆகின்றது. மேலும் தஞ்சை மாவட்டத்திலேயுள்ள விவசாயக் குடும்பங்களிலே பிறந்திருக்கின்ற குழந்தைகள் அதிகமான படிப்பைப் படித்து நல்லதொரு வேலைக்குச் செல்ல முடியாமல், குடும்ப வேலையை, விவசாயத்தைக் கவனிக்க வேண்டிய ஒரு நிலை இருப்பதால், அந்த விவசாயக் கல்லூரியிலே படித்து அவர்கள் தங்களுடைய நிலங்களைப் பார்த்து அதிக உற்பத்தி செய்வதற்கும் அது ஒரு மேன்மையாக விளங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே நாட்டிலே இப்போது விளை நிலங்களை எல்லாம் நாம் வீடுகட்டுவதற்காகப் பயன்படுத்துகின்ற ஒரு காலகட்டத்திலே, விவசாய நிலங்கள் குறைவாக இருக்கின்ற நேரத்திலே அதிகமான விளைபொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்று நமது அரசு கொள்கை அடிப்படையிலே ஈடுபட்டு இருக்கின்ற ஒரு காரணத்தினாலே, அங்கே ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது மாண்புமிகு திருவிடைமருதூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அங்கே அதிகமான நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களை கல்லூரிக்குப் பயன்படுத்துவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. அதைப்போலவே நமது சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், நிதியினைக் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம். மேலும், நாங்கள் அந்தப் பகுதியிலே ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதற்கு பொதுமக்களிடத்திலேயிருந்தும் நிச்சயமாக நிதி வசூல் செய்து தரவும் தயாராக இருக்கிறோம்.



2001 ஜனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன கேள்வியா? நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குமேல் விளக்கமாகப் பதில் சொல்லப் போகிறார்கள். (சிரிப்பு).

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாணவன் படிப்பதற்கு இப்போது 1,27,000 ரூபாய் ஒரு ஆண்டுக்குச் செலவாகிறது. இந்த நிதிச் சுமையும் அரசாங்கத்திற்குக் கூடுதலாக ஏற்படக்கூடிய ஒரு வாய்ப்பாக அமைகிறது. முன்பே சொன்னதைப்போல, படித்துவிட்டு வேலையில்லாத மாணவர்கள் பலர் வேலைக்காகக் காத்துக் கொண்டிருக்கக்கூடிய நிலையும் இருக்கிறது. இன்னொன்று, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கேட்டதைப்போல, இது ஒரு விவசாய நாடுதான். அதை நாங்கள் ஒத்துக்கொண்டிருக்கிறோம். நாம் எல்லோருமே ஒத்துக் கொண்டிருக்கின்றோம். அதற்காகத்தான், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளிலே எல்லாம் வேளாண்மையை ஒரு பாடமாகக் கொண்டு வந்தால், அந்தப் பள்ளிகளிலே படிக்கக்கூடிய மாணவர்கள் தொழில் நுட்பங்களைத் தெரிந்துகொள்வதன் மூலமே அவர்கள் வேளாண் உற்பத்தியிலே முழுக் கவனத்தைச் செலுத்த முடியும் என்ற அந்த நோக்கத்திலேதான் 1997-லே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதே பேரவையில் வேளாண்மை ஒரு பாடமாகக் கொண்டு வரப்படும் என்று அறிவித்து, இப்போது அதற்கு syllabus தயாரிக்கப்பட்டு புத்தகங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கிடையே B.Sc. (Agri) படித்தவர்களை ஆசிரியர்களாக நியமிப்பதற்கு ஆசிரியர்கள் தேர்வாணையம் மூலம் நாம் கோரினோம். இடையிலே தோட்டக்கலைத் துறையிலே டிப்ளமோ படித்தவர்கள் எங்களுக்கும் பணி வேண்டும் என்று Tribunal-ல் சென்று ஒரு இடைக்காலத் தடை உத்தரவை வாங்கி இருக்கின்ற காரணத்தினாலே, உரிய ஆசிரியர்களை நியமித்து 2000-2001-லே இந்த பாடத்திட்டத்தைத் தொடங்குவதற்கான வாய்ப்பு இல்லாத ஒரு நிலை ஏற்பட்டது. இப்போது அந்தத் தடையாணையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தடையாணையை நீக்கியவுடன் உரிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு 2001-2002 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 200 பள்ளிகளிலே, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளிலே வேளாண்மையை ஒரு பாடமாகக் கொண்டு வர இருக்கிறோம். தொடர்ந்து 3 ஆண்டு, 5 ஆண்டு காலத்திற்குள் எல்லா

[2001 ஜனவரி 23

பள்ளிகளிலும் இது வந்துவிடுமானால் புதிதாக வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டும் என்ற அவசியமே இருக்காது என்று கருதுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**27—**

## குறைந்த குத்தகைக்கு வனத் துறை நிலங்கள்

***25513—டாக்டர் க. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களில், திருநெல்வேலி மாவட்டம்-மாஞ்சோலை, தேனி மாவட்டம்-ஹைவேவிஸ், கோயம்புத்தூர் மாவட்டம்-வால்பாறை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில், தேயிலை, காப்பி, ஏலம் போன்ற பணப் பயிர்கள் விளைவித்து வரும் பி.பி.டி.சி., டாட்டா, பிர்லா, இந்துஸ்தான் லீவர், பாரி அக்ரோ, என்.இ.பி.சி., சக்தி போன்ற நிறுவனங்கள் குறைந்த குத்தகையே கொடுத்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை அதிகப்படுத்த அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பி.பி.டி.சி. நிறுவனத்திற்கு 1929 முதல் 99 ஆண்டுகளுக்கு ஏக்கர் ஒன்றிற்கு, ஒரு ஆண்டிற்கு ரூ. 35 வீதம் 8,373 ஏக்கர் நிலம் குத்தகையில் அளிக்கப்பட்டுள்ளது. மற்ற நிறுவனங்களுக்கு தேனி மாவட்டம் ஹைவேவிஸ், கோயம்புத்தூர் மாவட்டம் வால்பாறை ஆகிய இடங்களில் வன நிலங்கள் குத்தகைக்கு விடப்படவில்லை.

(ஆ) ஒப்பந்த விதிகளின்படி பி.பி.டி.சி. நிறுவனத்திற்குக் குத்தகைத் தொகையை உயர்த்த சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பது முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலரால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.



2001 ஜனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, இருக்கையில் இல்லை, திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி, நீலகிரி, வால்பாறை போன்ற பகுதிகளில் நீண்ட காலமாக பெரிய தேயிலைத் தோட்ட எஸ்டேட்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டு வந்தது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதேபோல நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதியில் டாட்டா, பிர்லா போன்றவர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம், கூடலூரில் சுமார் 15,000-க்கும் மேற்பட்டவர்கள் 1 ஏக்கர், 2 ஏக்கர் என்கிற அளவில் வனத் துறை பாதுகாப்பில் உள்ள நிலங்களை சுமார் 20, 30 ஆண்டுகளாக அனுபவித்து வருகிறார்கள். அவர்களுக்கும் இதேமாதிரி சலுகை குத்தகை அடிப்படையில் உதவி செய்து அந்த ஏழைகளை இந்த அரசு பாதுகாக்க உதவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது நீலகிரி மாவட்டம் கூடலூர் போன்ற இடங்களிலே டாட்டாவிற்கும், பிர்லாவிற்கும் வனத் துறை நிலங்கள் குத்தகைக்கு விடப்படவில்லை. நீலகிரியில் இருக்கிற நிலங்கள் வேறு. அது அவருக்கே தெரியும். ஜென்ம பூமி, Non-ஜென்ம பூமி, என்று அதாவது ஜமீன் பூமி என்றும் மற்றது எல்லாம் கோவில் நத்தம், கிராம நத்தம் என்றும் அவை பல்வேறு நிலங்கள்; அவை வனத் துறைக்குரியவை அல்ல; ஆனால், வனத் துறைக்குரியவை சிறு, சிறு நிலங்கள் விடப்பட்டிருந்தன. அவை எல்லாம் எடுக்கப்பட்டு 63 ஹெக்டேர் மட்டும்தான் இருக்கிறது. அதுவும் வழக்கிலிருக்கின்றது. 13 பேர்களிடத்திலே தேனி, மதுரை, கம்பம், போடி போன்ற பகுதிகளில் இருக்கிற நிலங்கள் அவை. பொதுவாக வனத் துறையிலிருந்து விடப்பட்டவை மாஞ்சோலையில் இருக்கிற, அந்த எஸ்டேட்டிலே இருக்கிற 8,373 ஏக்கர் நிலங்கள்தான். ஆனால், இரண்டாவது ஒரு கேள்வி கேட்டார் முபாரக் அவர்கள். ஏழைகளுக்கு அப்படிப்பட்ட நிலங்கள் தரப்படுமா என்று. எஸ்டேட் லேண்டில் இருப்பவை வனத் துறைக்குத் தேவையில்லாமல் இருக்குமானால், வன உயிர்ப் பாதுகாப்பு என்பதன்கீழ், வன விலங்குகள் இருக்கிற அந்த ஏரியாவிலே —wild forest area—அவை வராமல் இருக்குமானால், தேவையில்லை என்று அரசு கருதுமானால் இப்படிப்பட்டவர்களுக்குக் குறைந்த வாடகைக்குக் கொடுப்பதைவிட ஏழைகளுக்குத் தருவதை இந்த அரசு யோசிக்கும்.

[2001 ஜனவரி 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, திரு. டி. மணி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**28—**

## தடுப்பு அணை

***28076—திரு. டி. மணி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தாமிரபரணி ஆற்றில், குழித்துறை பகுதியில் தடுப்பணை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தாமிரபரணி ஆற்றில், குழித்துறை பகுதியில், தடுப்பணை (பாசன நோக்கத்திற்காக) கட்ட ஆய்வு ஏதும் இதுவரையில் செய்யப்படவில்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நீராதாரங்களை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்ற ஒரு கருத்தரங்கம் நடந்தபோது கன்னியாகுமரி மாவட்டத்திலிருக்கிற தாமிரபரணி ஆற்றிலும், வள்ளியாற்றிலும், பழையாற்றிலும் இந்தத் தடுப்பணை கட்டுவதன் மூலமாக விவசாயிகளுக்குத் தண்ணீரை வழங்கமுடியும் என்று ஓர் ஆலோசனை கூறப்பட்டது. பரிந்துரைகளும் அரசுக்கு அனுப்புவதாகக் கூறினார்கள். அந்த வகையிலே அதுபோன்று தடுப்பணையைக் கட்டுவதன் மூலமாக கிணறுகளிலே தண்ணீர் பெருகுவதற்கும், ஆற்றிலே போடப்படுகின்ற குடிநீர்க் கிணறுகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் வாய்ப்பாக அமையும். அந்த வகையிலே, அந்தப் பகுதியிலே ஒரு தடுப்பணை கட்டுவது என்று சொல்கின்றபோது—4 அடி இருக்கக்கூடியது அந்த ஆற்றின் நீர் மட்டம் என்றால்—அப்படிக் கட்டப்படுவது 6 அடி



2001 ஜனவரி 23]

உயரம் இருந்தால் போதும். அதிலே பெரிய பிரச்சினை வராது. பெரிய பணச் செலவும் வருவது இல்லை. அந்த வகையிலே அரசு யோசிக்குமா, முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி தாமிரபரணி ஆற்றின் குறுக்கே குழித்துறை பகுதியில் தடுப்பணை கட்டப்படுவது பற்றியது. இதிலே, பத்திரிகைகளுக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் சந்தேகம் வரலாம். தாமிரபரணி திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளதாயிற்றே, இது எப்படி கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வரும் என்று. அதிலே சில நேரங்களிலே, பெயர்மயக்கம் வரும். இலக்கியத்திலே திணை மயக்கம் என்பார்கள். ஒரு நிலத்திற்குரிய கருப்பொருள் மற்றொரு நிலத்திற்கு இருக்குமானால் திணைமயக்கம் என்பார்கள். அப்படி ஒரு திணைமயக்கம், பெயர் மயக்கம் வரக்கூடும். கோதையாறு மேற்குத் தொடர்ச்சி மலையிலே உற்பத்தியாகி, கீழே ஓடிவருகிறது. பரளியாறு என்ற இன்னொரு ஆறு வருகிறது. கோதையாற்றின் குறுக்கே பேச்சிப்பாறை அணை கட்டப்பட்டிருக்கிறது. பரளியாற்றின் குறுக்கே பெருஞ்சாணி அணை கட்டப்பட்டிருக்கிறது. பேச்சிப்பாறையிலேயிருந்து ஒரு கால்வாய் மட்டும் வெட்டப்பட்டு தனியாக வருகிறது. பரளியாற்றிலே அது கலக்கிறது. புத்தன் அணை கட்டப்பட்டிருக்கிறது. அங்கிருந்து கீழே கால்வாய் போகிறது. ஆனால், கோதையாற்றிலிருந்து நேராக வருகிறபோதும், பரளியாறு, புத்தன் அணை கீழேயிருந்து வருகிறபோதும், குழித்துறைக்கு முன்பாக ஒன்றாகச் சேர்கிறது. அப்படிச் சேர்ந்ததற்குப் பின்னர், குழித்துறைக்குப் பிறகு, அந்த ஆற்றுக்குப் பெயர் தாமிரபரணி. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல கோதையாற்றின் குறுக்கே பேச்சிப்பாறை அணை கட்டி அங்கே தண்ணீரை நிறுத்திவிடுகிறோம். கால்வாய்த் தண்ணீர் புத்தன் அணைக்குப் போய் பல கால்வாய்களில் போய் விடுகிறது. கோதையாற்றின் கீழே திற்பரப்பு என்ற இடத்திலே ஒரு Check Dam கட்டப்பட்டிருக்கிறது. அங்கே 2,800 ஏக்கர் நிலங்கள் பயிரிடப்படுகின்றன. பரளியாற்றின் குறுக்கே புத்தன் அணை கட்டப்பட்டதால், அங்கிருந்து கீழே வருகிற தண்ணீரை அருவிக்கரை என்ற இடத்திலே ஒரு Check Dam கட்டி, அதன்மூலம் அங்கே 2,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இதற்குக் கீழே தாமிரபரணி ஆற்றிலே ஓடுவது கிட்டத்தட்ட 4,000 மில்லியன் கனஅடி தண்ணீர்தான் இருக்கும் என்கிறார்கள். மாண்புமிகு

[2001 ஜனவரி 23

உறுப்பினருக்கு என்னைவிட நன்றாகத் தெரியும். அதற்குக் கீழே அருவிக்கரைக்கும், திற்பரப்பிற்கும் கீழே போய் தேங்காய்ப்பட்டினம் தாண்டி கடலிலே கலக்கிற இடத்தில்—deep cutting—ஆறு ஆழத்திலே ஓடுகிறது. அந்தத் தண்ணீரை நிறுத்தினாலும் அது விவசாயிகளுக்குப் பயன்படாது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அங்கே ஒரு Check dam, deep cutting-ல் போய் கட்டினாலும், ground water உயருமா என்பதற்கு வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினரின் யோசனை ஆராயப்படுமே தவிர, அது நேரடிப் பாசனத்திற்கு ஒத்துவராது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பேச்சிப்பாறை அணை, பெருஞ்சாணி அணை, சிற்றாறு-1, சிற்றாறு-2 ஆகிய நான்கு அணைக் கட்டுகளிலும், மொத்தக் கொள்ளளவு சுமார் 5,000 எம்.சி.யு. எஃப்.டி. இருந்தாலும் ஒவ்வொரு ஆண்டும் வீணாகக் கடலிலே கலக்கின்ற தண்ணீருடைய அளவு சுமார் 7,000 எம்.சி.யு. எஃப்.டி. ஆகவேதான், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பேச்சிப்பாறை அணையினுடைய உயரத்தை 6 அடி உயர்த்திக் கட்டி ராதாபுரம் கால்வாயை வெட்டி 52 குளங்களுக்குப் பாசன வசதி ஏற்படுத்தித் தந்தார்கள். ஆனால், கால்வாய் இருக்கின்றது. தண்ணீர் வருவது இல்லை. காரணம், தோவாளைக் கால்வாயினுடைய கொள்ளளவு 450 கன அடிதான். தற்போது 390 கன அடிக்கு மேலே அதிலே தண்ணீர் எடுக்க முடியாது. அந்த அளவிற்கு மோசம் அடைந்துவிட்ட காரணத்தினால் ராதாபுரம் கால்வாய்க்குத் தனியாக நம்முடைய தோவாளைக் கெனாலுக்கு இணையாக ஒரு கால்வாய் வெட்டித் தரப்படுமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புவதோடு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், அத்துடன் அறிந்துகொள்ள விரும்புங்கள். பல துணைக் கேள்விகளைக் கேட்க நான் அனுமதிக்க மாட்டேன்.

**திரு. மு. அப்பாவு:** பரளியாற்றிருந்து வீணாகக் கடலிலே கலக்கின்ற தண்ணீரை அங்கிருந்து lift irrigation மூலம் இராதாபுரம் கால்வாய்க்குக் கொண்டுவரவேண்டும் அதாவது கடலிலே கலக்கிற தண்ணீரைத்தான் நாங்கள் கேட்கின்றோம். அதிலே...



2001 ஜனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வாத்தியார் என்றுதான் நான் நினைத்தேன். நீங்கள் பெரிய என்ஜினியராக இருப்பீர்கள் போல் இருக்கிறதே? எழுதி அனுப்புங்கள். மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரவர்கள் சவுகரியத்திற்கு கடலிலே கலக்கிற தண்ணீரின் அளவை அதிகமாகக் காட்டிக்கொள்கிறார்கள். நாங்களே கணக்கிட்டு, அதற்கு என்று அளவு போட்டு, அதிகாரிகளைப் போட்டு 4,000 மில்லியன் கன அடி தண்ணீர் போகிறது என்று நாங்கள் சொல்கிறோம். உடனே மாண்புமிகு உறுப்பினர் 7,000 கனஅடி போகும் என்று சொல்கிறார்கள். அதனாலே, ஏன் எங்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று கேட்கிறார். ஏற்கெனவே இராதாபுரத்திற்குத் தண்ணீர் தரவேண்டியதற்கு சட்டத்திட்டங்கள் இருக்கின்றன. அந்தச் சட்டத்திட்டங்களின்படி தண்ணீர் தரப்பட்டிருக்கிறது. அதையும் மீறிமாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையை ஏற்று பலமுறை தண்ணீர் தரப்பட்டிருக்கிறது. வேறு ஒரு பிரச்சினையைக் கிளப்பினால், கன்னியாகுமரி மாவட்டத்துக்காரர்கள், இருக்கிற தண்ணீருக்காகச் சண்டைக்கு வந்துவிடுவார்கள். ஆகவே, இதிலே பேசாமல் இருப்பதே சுகம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்புச் சுவர் பற்றிய கேள்வி. Please allow me, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கன்னியாகுமரி மாவட்டம் பற்றிய துணைக் கேள்வி என்றால் கேட்க விடுவேன். இல்லையென்றால் அனுமதிக்க முடியாது, உட்காருங்கள்.

முற்பகல் 10-15

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவரவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எல்லாவற்றிற்கும் அனுமதி கொடுக்க முடியாது. உங்களுக்கே தெரியும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது தெரியும் எனக்கு. நான் சிலருக்குத்தான் அனுமதி கொடுக்கலாம். மாவட்டத்திலுள்ள எல்லா

[2001 ஜனவரி 23

உறுப்பினர்களுக்கும் நான் அனுமதி கொடுக்க முடியாது. You are a senior Member. You should know that.

வினா எண் 29, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**29—**

## திட்ட மேலாண்மைக் குழு

***10645—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திட்ட மேலாண்மைக் குழு தொடர்ந்து நடைபெற அக்குழுமத்தின் நிர்வாகத்திடமிருந்து முறையான வேண்டுகோள் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லையெனில், திட்ட மேலாண்மைக் குழு தொடர்ந்து நடைபெற உரிய நேரத்தில் திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை என்பது உண்மையா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை. எனினும் தமிழ்நாடு முதலாம் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்கான உலக வங்கியின் கடனுதவித் தொகை 216 மில்லியன் முழுவதுமாகப் பெறப்பட்டு இத்திட்டம் 30 செப்டம்பர் 1997-ல் நிறைவு பெற்றது. எனவே, இது தொடர்பாக மேலாண்மைக் குழு ஜனவரி 1998-ல் கலைக்கப்பட்டது. இருப்பினும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளமைப்பு கட்டுமானங்கள் மேம்படுத்த தமிழ்நாடு இரண்டாவது நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், 105 மில்லியன் அமெரிக்க டாலர்கள் நிதி உதவியுடன் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்விரண்டாவது திட்டத்தை, தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டுமான நிதிச்சேவை நிறுவனமும், நகராட்சி நிர்வாகத்தின் ஒரு பிரிவாக உருவாக்கப்பட்டுள்ள திட்ட மேலாண்மைக் குழுவும் செயல்படுத்தி வருகின்றன.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திட்ட மேலாண்மைக் குழு நம்முடைய தமிழகத்திலே செயல்பட்டபொழுது, அப்பொழுது பல திட்டங்களுக்குப் பல நகராட்சிகள், மாநகராட்சிகள் போன்றவற்றில் எல்லாம் அதனுடைய



2001 ஜனவரி 23]

நிதியைப் பயன்படுத்தியபொழுது 13.6 சதவீதம் வட்டியிலே அவர்கள் கடனுதவியைப் பெற்று, அதேபோல மானியத்தையும் பெற்று அவர்கள் திட்டங்களை நிறைவேற்றினார்கள். ஆனால் அப்பொழுதேகூட, 1996-லேகூட, உலக வங்கி கொடுத்த பணத்தைச் சரியாகப் பயன்படுத்தாத காரணத்தினாலே பணமே திரும்பப் போய்விட்டது. இப்படியிருக்கிற நிலையில், கலைத்துவிட்டு இப்பொழுது புதிதாக Asset Management என்று ஒன்றை ஆரம்பித்தார்கள். அதற்குப் பிறகு Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited என்று ஒன்றை ஆரம்பித்து அதிலே இப்பொழுது 16 சதவீத வட்டிவீதத்தில் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதற்காகக் கடனைத் தந்து கொண்டிருக்கிறீர்கள். அது, நிச்சயமாக, அதிகமான வட்டி என்கிற காரணத்தினாலே பல நகராட்சிகள் அதைச் செலுத்த முடியாமல் இருக்கின்றன. ஏற்கெனவே இருந்த திட்டத்தின் மூலமாக சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, வேலூர், ஈரோடு, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருப்பூர் ஆகிய நகரங்களில் கூரை மேம்பாட்டுத் திட்டம், வீட்டு மனைத் திட்டம், அதேபோல சென்னைக்கு எடுத்துக்கொண்டால் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கே 58.8 கோடி ரூபாய் உலக வங்கியிலிருந்து அவர்கள் பெற்றார்கள். இப்படிப் பல திட்டங்களை அப்பொழுது நிறைவேற்ற முடிந்தது. அப்படி திட்டங்களையெல்லாம் நிறைவேற்றக்கூடிய அந்தத் திட்ட மேலாண்மைக் குழுவை நீங்கள் ஏன் மூடினீர்கள்? இப்பொழுது, அதிலே என்னென்ன வசதிகள் Facilities கிடைத்தனவோ அத்துணை வசதிகளையும் குறைந்த வட்டியில் இதுபோன்ற நகராட்சிகளுக்குக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இதைக் கொஞ்சம் தெளிவாக விளக்க வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. அவர் சொன்னதைப்போல, அங்கே உலக வங்கியின் 216 மில்லியன் டாலர்கள் மூலமாக திட்டங்கள் நடத்தப்படுகின்றன. TNUDP Scheme-I, TNUDP Scheme-II என்று இருக்கின்றன. முதலாவது திட்டம் 1988-லே தொடங்கப்பட்டு, 1997 வரை அந்தத் திட்டத்திற்காக 216 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டது. அந்த நிதியைச் செலவு செய்வதற்காகத்தான் அந்த P.M.G. உருவாக்கப்பட்டது. 1997-லே அந்தத் திட்டம் முடிவுற்ற பிறகு அந்தக் குழுவினுடைய காலமும் இயற்கையாகவே முடிவடைந்து விடுகிறது. அதை நீட்டிக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டோம். உலக வங்கியிலிருந்து நிறுவனர்கூட வந்தார்கள். முதலிலேயிருந்த

[2001 ஜனவரி 23

திட்டத்திலேயிருந்த சாராம்சம் என்னவென்று சொன்னால் நகராட்சியிலே இருக்கிற வளர்ச்சிப் பணிகள்; அதுபோல நெடுஞ்சாலைத் துறை, அதுவும் அல்லாமல் உங்களுக்குத் தெரியும். சென்னையிலே இருக்கிற போக்குவரத்துப் பராமரிப்புப் பணிகள்; இதுபோன்ற பல்வேறு பணிகளைச் செய்வதற்கு அன்று உலக வங்கி அனுமதி அளித்திருந்தது. அதன்மூலமாக நீங்கள் சொன்னதைப்போல 216 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால், 2-வது முறை அவர்கள் வந்தபொழுது அந்தத் திட்டத்தையே நாங்கள் கொள்கை அளவிலே நிறுத்திவிட்டோம்; ஆனால் நகராட்சிகளுக்குக் கடன் உதவி கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் சொன்னதன் அடிப்படையிலேதான் N.U.D.F. என்ற திட்டத்தை மட்டும் அவர்கள் தொடர்ந்து நடத்துவதற்கு அனுமதி அளித்தார்கள். அந்த N.U.D.F. திட்டத்தின் கீழே இரண்டாவது திட்டத்திலே 105 கோடி மில்லியன் டாலர் நமக்குக் கிடைத்திருக்கிறது. அந்த N.U.D.F. திட்டத்தின் மூலமாக நகர்ப்புறங்களுக்கு அது கோவையாக இருந்தாலும், மதுரையாக இருந்தாலும், நகர்ப்புறங்களுக்குக் கடன் வசதி வழங்கப்படுகிறது. அதிலே 30 சதவீதம் அதற்கு மானியமாகவும் வழங்கப்படுகிறது. உதாரணமாக, எங்கள் விழுப்புரம் நகரத்திலேகூட பேருந்து நிலையத்தைக் கட்டுவதற்கு இதன் மூலமாகத்தான் நாங்கள் நிதியுதவி பெற்றிருக்கிறோம். 30 சதவீதம் மானியமும் கொடுக்கப்படுகிறது. தொடர்ந்து இந்தக் குழு இயங்கி வருகிற காரணத்தினால் இதை மேற்பார்வையிடுவதற்காகத்தான் T.N.U.F.L. என்ற நிறுவனம் உருவாக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் சொன்ன அந்த P.M.G.-இலேகூட அது நிரந்தரமான குழு அல்ல; அதற்கு ஒரு ஐ.ஏ.எஸ். செகரட்டரி இருந்தார். அதிலே C.M.D.A., Highways போன்ற துறைகளிலேயிருந்து deputation basis-லே வந்து பல பேர் இருந்தார்கள். அவர்கள் எல்லாம் மீண்டும் அந்தந்தத் துறைகளுக்கே அனுப்பப்பட்டுவிட்டார்கள். இப்பொழுது அவற்றை விட்டுவிட்டு உள்ளாட்சி நிர்வாகத்தின்கீழே, நகராட்சி நிர்வாகத்தின்கீழே இந்த T.N.U.F.L. என்ற உயர்மட்டக் குழு இருக்கிறது. அந்தத் துறைச் செயலரே அதற்குத் தலைமை வகித்து நடத்திக் கொண்டிருக்கிறார். அதன் பணிகளை இரண்டு விதமாகச் செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு நகராட்சியினுடைய வளர்ச்சிப் பணிக்கும் அவர்கள் கடன் உதவியும், மானியமும் வழங்குவது மட்டுமின்றி அதிலே பணியாற்றுகிற மற்றவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவும், கம்ப்யூட்டர் வசதிகளைச் செய்து கொடுப்பதற்காகவும் P.M.U. என்ற அமைப்பும் அதிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, நகராட்சித் துறையிலே



2001 ஜனவரி 23]

தொடர்ந்து அந்தத் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-20*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ் எங்களுடைய வேலூர் நகரத்து மக்களுடைய நெடுநாள் கோரிக்கைகளான பாதாள சாக்கடையும், அதேபோல வேலூர் பேருந்து நிலையத்தை 15 ஏக்கர் பரப்பில் புதிதாக அமைக்கவும் நிதியுதவி கேட்டிருக்கிறோம். அதை இந்த நிறுவனத்தின் மூலமாக, 30 சதவீதம் மானியத்தோடு கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இவ்வளவு தெளிவாகச் சொன்னேன். இது முதலில் C.M.D.A.-வில் இருந்தது. இப்போது நகராட்சித் துறையினர்தான் இதைச் செய்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி கேட்டு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடமிருந்து அதற்கான பதிலைத் தனியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**30—**

## பெண் தொழிலாளர்களுக்கு நன்மை செய்தல்

***31255—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விற்பனை அபிவிருத்திக்காக வீடு வீடாகச் சென்று பொருட்களை விற்பனை செய்ய நியமிக்கப்படுகிற பெண்களுக்கு, தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்கள் மூலம் நன்மைகள் செய்யப்பட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2001 ஜனவரி 23

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம், தொழிலாளர்களின் நலனுக்காக உருவாக்கப்பட்டு அமல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தச் சட்ட விதிகளின்கீழ் பொருட் கிடங்குகள், கடைகள் இவற்றில் பணி செய்யும் தொழிலாளர்களும், இவ்விடங்களிலிருந்து பொருட்களை வெளியில் வியாபாரத்திற்காக எடுத்துச் சென்று விற்பனை செய்பவர்களும் அடங்குவர். எனவே, இவ்வகைத் தொழிலாளர்களின் நலன் மேற்படி கடைகள் நிறுவனங்கள் சட்ட விதிகளின் மூலம் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

(ஆ) மேற்கண்ட விளக்கத்தினால் 'ஆ' வுக்கான பதில் எழவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது மாதிரி, இந்தப் பொருட்களை விற்பனை செய்கின்ற நேரத்திலே அவர்களுக்கு ஏராளமான சங்கடங்கள் ஏற்படுகின்றன. இடையில் அவர்கள் பல்வேறு பாதிப்புக்குள்ளாகி, அந்த வேலையிலிருந்து நீக்கப்படக்கூடிய அவல நிலை எல்லாம் ஏற்படுகின்ற காரணத்தாலே, அவர்களுக்கு தொழிலாளர்கள் நலப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழே பாதுகாப்பு அளிக்கப்பட்டு, மீண்டும் அப்படி வேலையிலிருந்து நீக்கப்பட்டால் தொடர்ந்து வேலை அளிப்பதற்கும் உத்தரவாதம் அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதிலிலே சொன்னபடி, 1947 ஆம் ஆண்டுச் சட்டம் மட்டுமின்றி, 1961 ஆம் ஆண்டிலும் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி, பத்துக்கு மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்பட்ட கடைகளும் இந்தச் சட்டத்தின் விதிகளைப் பின்பற்ற வேண்டுமென்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக, குழந்தைப் பேற்றுக்காக 12 வாரங்கள் விடுப்பு, மருத்துவச் சான்றின் பேரில் ஒரு மாத மருத்துவ விடுப்பு, குறைப் பேறுகாலத்திற்காக 6 வார விடுப்பு வழங்குவது போன்ற சலுகைகளை அதில் பெற்றிருக்கின்றார்கள். பேறு காலங்களின் முந்தைய மற்றும் பிந்தைய காலங்களில் அவர்களுக்கு ரூ.250 மருத்துவ போனசாக வழங்குவதற்கும் இச்சட்டத்தில் வழி செய்யப்பட்டுள்ளது. ஆகவே, 1961 ஆம் ஆண்டு சட்டமே இதுபோன்ற பணியாற்றுகின்ற பெண்களுக்கான பல்வேறு பாதுகாப்புகளைக் கொடுத்திருக்கிறது.



2001 ஜனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 31, திரு. லா. சந்தானம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**31—**

## பாலம் கட்டுதல்

***15670—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், இரும்பாடி மன்னாடிமங்கலம் கிராமத்திற்குக் குறுக்கே வைகை ஆற்றில் பாலம் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லியிருக்கின்ற இந்த இரும்பாடி மன்னாடிமங்கலம் கிராமத்தைச் சுற்றி ஏறக்குறைய 75,000 ஜனத்தொகை இருக்கிறது. அவர்கள் இந்த ஆற்றைக் கடந்து செல்வதற்கு, சோழவந்தான் வரை ஏறக்குறைய 10, 15 கிலோமீட்டர் தூரம் சுற்றித்தான் செல்கின்ற நிலை இருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து, அந்தப் பணிகளை எடுத்துக்கொள்வதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இரண்டு மூன்று பாலங்கள் கேட்டார்கள். அவற்றையெல்லாம் கொடுத்து முடித்துவிட்டோம். இது மிச்சம் இருக்கிறது. இங்கேயாவது ஒரு பாலம் கட்டுங்கள் என்று கேட்கிறார். இது வைகையாற்றில் கட்டப்பட வேண்டிய பாலம். குறைந்தது 5 கோடி ரூபாய் இதற்காகத் தேவைப்படுகிறது. இந்த இரும்பாடி மன்னாடிமங்கலம் என்ற இந்த ஊருக்குப் பக்கத்தில் மூன்றாவது கிலோ மீட்டரில்தான், தென்கரை-சோழவந்தான் பாலம் இப்போது ரூ.4.30 கோடியில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன. இருந்தாலும் இது மாண்புமிகு உறுப்பினருடைய ஆசை; இதையும் கட்டினால் தேவலை

[2001 ஜனவரி 23

என்று கருதுகிறார். நிதி ஆதாரத்திற்குத் தக்கபடி எதிர்காலத்தில் இதுகுறித்து யோசிக்கலாம். இப்போது உடைந்த பாலங்களைக் கட்டுவது, உடையும் தருவாயில் இருக்கக்கூடிய பாலங்களைக் கட்டுவது, Major District Roads and State Highways என்று இருக்கக்கூடிய அப்படிப்பட்ட சாலைகளில் விடுபட்டிருக்கக்கூடிய பாலங்களைக் கட்டுவது ஆகிய மூன்றுக்கும்தான் தமிழக அரசு முன்னுரிமை வழங்குகிறது. எனவே, இந்தப் பாலத்திற்கு இப்போது முன்னுரிமை வழங்க இயலாது. எதிர்காலத்தில் யோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 32, திரு. ஏ.வி.ஏ. நாசர், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**32—**

### சாலையை உயர்த்துதல்

***29667—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை-கும்பகோணம்-திருச்சி நெடுஞ்சாலையில் சேத்தியாத்தோப்பு முதல் கூட்டு ரோடு வரை, மழை நீர் வடிவதற்காக உள்ள மூன்று தாம்போகிகளை மாற்றி, வீராணம் குழாய்கள் அமைத்து, சாலையை உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

முற்பகல் 10-25

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை-கும்பகோணம் சாலையில் சேத்தியாத்தோப்பு கூட்டு ரோடு அருகிலே மழைக் காலங்களிலே போக்குவரத்திற்கு இலாயக்கில்லாமல் மழைத் தண்ணீர் ஓடுகிறது; அந்தப் பகுதியில் உள்ள சாலைகளை



2001 ஜனவரி 23]

அரித்துக்கொண்டு ஓடுகிறது. எனவே, வீராணம் திட்டத்தின்கீழ் செய்யப்பட்ட பைப்புகள் பயனில்லாமல் இருக்கின்ற நிலையில், அவற்றை அந்தத் துறையிலிருந்து விலைக்குப் பெற்று, அந்தப் பகுதியிலே பதித்து பாலம் அமைத்துத் தந்தால் மழைக் காலங்களில் எந்தவிதமான இடையூறும் இல்லாமல் போக்குவரத்து நடைபெற வசதியாக இருக்கும். அதுமட்டுமல்லாமல், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய சேத்தியாத்தோப்பு சர்க்கரை ஆலையின் அருகில் இருக்கக்கூடிய பாலம் மிகக் குறுகலாக இருக்கின்ற காரணத்தினாலே அடிக்கடி அங்கே போக்குவரத்துத் தடை ஏற்படுகிறது. எனவே, இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து புதிதாக ஒரு பாலம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா? அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி-கும்பகோணம்-தஞ்சாவூர் சாலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இடத்தில் மூன்று பள்ளமான பகுதிகள் இருக்கின்றன. அவற்றில் அடிக்கடி நீர்ப் போக்குவரத்து ஏற்படுகிறது என்பது உண்மைதான். இன்னொரு பாலம் மிகவும் குறுகலாக இருக்கிறது என்பதும் உண்மைதான். எனவே, இவற்றை எல்லாம் மாற்றிக் கட்டுவதற்கு உடனடியாக 10 கோடி ரூபாய்க்கு மேல் நிதி தேவைப்படுகிறது. என்றாலும், இந்தச் சாலையினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, எதிர்காலத்தில் இதற்கு முன்னுரிமை கொடுத்துப் பரிசீலிக்கலாம் என்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது. இப்போது இருக்கக்கூடிய நிதி நெருக்கடியில் இதை உடனடியாகச் செய்ய இயலாத நிலையும் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 33, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**33—**

### தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை

***10867—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 23

*(அ) வெளி மாநிலங்களில் வாழும் தமிழ் அறிஞர்கள் மற்றும் கலைஞர்களுக்கு விருது மற்றும் உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வெளி மாநிலங்களில் வாழும் தமிழ் அறிஞர்களுக்கு விருது, உதவித் தொகை மற்றும் கலைஞர்களுக்கு கலைமாமணி விருது அரசின் நடைமுறையில் உள்ள திட்டங்கள் வாயிலாக வழங்கப்பெற்று வருகின்றன.

(ஆ) தகுதியுடைய தமிழறிஞர்களைப் போற்றும் வகையிலும் அவர்களுடைய பணிகளைப் பின்வரும் சமுதாயமும் பின்பற்றிடும் வகையிலும் தமிழ் அறிஞர்களுக்கு விருது மற்றும் உதவித் தொகை வழங்கப்பெற்று வருகிறது. அவ்வாறு விருதும், உதவித் தொகையும் வழங்குகிறபோது, பெறுகிறவரின் தகுதியும், தமிழ்த் தொண்டும்தான் கருதிப் பார்க்கப்படுகிறதே தவிர, அவர் தமிழ்நாட்டுக்காரராக இருக்க வேண்டுமென்ற கட்டுப்பாடு இல்லை. இதேபோன்று, வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் வாழும் தமிழ்க் கலைஞர்களுக்கும் 'கலைமாமணி' விருது வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா தமிழ் அறிஞர்களுக்கும், கலை விற்பன்னர்களுக்கும் விருது வழங்கி நமது அரசுதான் பெருமைப்படுத்தி வருகிறது. அதைப்போலவே, அவர்கள் ஊக்கமும், உற்சாகமும் அடைய இன்னும் பல அறிஞர்களை அடையாளம் கண்டு, கலை விற்பன்னர்களை அடையாளம் கண்டு, விருதுகளும், உதவிகளும் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொல்லப்பட்ட அந்த விடைக்குத்தான் மறுபடியும் வினா வந்திருக்கிறது என்றாலும், கூடுதல் விளக்கத்திற்காகச் சில செய்திகளைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டுக்காரராக மட்டும் இருக்க வேண்டியதில்லை என்ற அடிப்படையில் கருதி, வெளிநாட்டிலும் சிறந்த தமிழ் அறிஞர்கள் இருக்கின்றார்கள். அவர்களும்



2001 ஜனவரி 23]

அடையாளம் கண்டு சிறப்பிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில், சில விரிவான திட்டங்களை ஏற்கெனவே செயல்படுத்தியிருக்கிறோம். 1998 ஆம் ஆண்டு கோலாலம்பூரைச் சேர்ந்த முரசு நெடுமாறன் என்பவருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் பாரதிதாசன் விருது வழங்கப்பட்டது. அதுமட்டுமல்ல, 2000 ஆண்டிற்கான திரு.வி.க. விருது, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் அறிஞர், சிறந்த தமிழ் அறிஞர்-திறனாய்வாளராக இருக்கின்ற ஒரு பேரறிஞராக விளங்குகிற திரு. கா. சிவத்தம்பி அவர்களுக்கு வழங்கப்பட்டது. அண்மையில் குறள் பீட விருது வழங்கும் விழாவில் குறள் பீடப் பரிசு, கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த சேஷநாராயணன் என்பவருக்கு வழங்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே பல்லாயிரக்கணக்கான பேர் விண்ணப்பித்தாலும் தகுதியுடையவர்கள் என்று பல பேர் கலைமாமணி விருது வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்படுகிறார்கள். அந்தவகையில் வெளிநாடுகளைச் சார்ந்தவர்கள், வெளி மாநிலத்தில் வாழ்கின்ற கலைஞர்களையும் தேடிப்பிடித்து, மொத்தம் 19 பேர்களுக்கு கலைமாமணி விருது வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே புதுவையைச் சேர்ந்த 2 பேர், சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒருவர், பரோடாவில் இருக்கிற ஒருவர், மும்பையைச் சேர்ந்த 4 பேர், புதுடெல்லியைச் சேர்ந்த 6 பேர், கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த 4 பேர், திருவனந்தபுரத்தில் இருக்கிற ஒருவர் என்று 19 பேர் சிறப்பு பெற்றிருக்கிறார்கள். எனவே, எல்லை விரிவடைந்து அதேநேரத்தில் எங்கெல்லாம் சிறந்த கலைஞர்கள், எங்கெல்லாம் தமிழ் அறிஞர்கள் இருக்கிறார்களோ அவர்களையெல்லாம் உட்படுத்தி, தமிழக அரசு சிறப்புச் செய்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள் - விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. வினா எண் 34, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**34—**

## சேவை நிறுவனங்களுக்கு உணவுப் பொருட்கள்

***6706—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

*மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2001 ஜனவரி 23

சமூக சேவை புரியும் சேவை நிறுவனங்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் குறைந்த விலையில் உணவுப் பொருட்களை விற்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமூக சேவை புரியும் சேவை நிறுவனங்களுக்கு அவரவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் அத்தியாவசியப் பொருட்களான அரிசி, சர்க்கரை, கோதுமை போன்றவை பொது விநியோக அங்காடி விலைக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக சேவை நிறுவனங்கள் குறிப்பாக, வில்லிவாக்கம் தொகுதியிலே மாதா அமிர்தானந்த மயி பொதுச் சேவை நிறுவனம், என்.வி.என். நகர் ரெசிடெண்ட்ஸ் அசோசியேஷன், வளசரவாக்கம் ரெசிடெண்ட்ஸ் அசோசியேஷன், இராமாபுரம் குடியிருப்போர் நலச் சங்கம் போன்ற நல்ல அமைப்புகள் மக்களுக்கு நல்ல முறையிலே பணியாற்றி வருகின்றன. இதுபோன்ற பொதுச் சேவை நிறுவனங்கள் தனிப்பட்ட முறையிலே வீடு கட்டிக்கூடத் தருகின்றன. மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, 61 வீடுகள் கட்டி, அதிலே 5 வீடுகள் இஸ்லாமிய மக்களுக்கும், 4 வீடுகள் கிறிஸ்துவ மக்களுக்கும் கொடுத்து அனைத்துச் சமுதாய மக்களும் இருக்கின்ற வகையிலே நன்கு பணியாற்றி வருகின்ற மாதா அமிர்தானந்த மயி பொதுச் சேவை நிறுவனம் போன்ற நிறுவனங்களுக்கு இந்த அரசு நியாய விலைக் கடைகள் நடத்துகின்ற ஒரு வாய்ப்பு வழங்குமானால் இலாபநோக்கு இல்லாமல் மக்களுக்கு நல்ல முறையிலே அவர்கள் சேவை செய்வார்கள். இலாபநோக்கு இல்லாமல் சேவை செய்கின்ற இதுபோன்ற பொதுச் சேவை நிறுவனங்களுக்கு வழங்குவதன் மூலமாக அளவுக் குறைப்பு, எடைக் குறைப்பு இல்லாமல் சர்க்கரை வழங்குவதிலே சீரான முறையைக் கடைபிடிப்பது, அரிசி வழங்குவதிலே சீரான முறையைக் கடைபிடிப்பது, மண்ணெண்ணெய் வழங்குவதிலே சீரான முறையைக் கடைபிடிப்பது போன்றவற்றின் மூலமாக துறை நல்ல பெயர் எடுப்பதற்கு வழி ஏற்படும். இதனால் அரசுக்கும் நல்ல பெயர் ஏற்படும். ஆகவே, இந்த அரசு பொதுச் சேவை புரிகின்ற இதுபோன்ற நிறுவனங்களுக்கு நியாய விலைக் கடைகளை வழங்க முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2001 ஜனவரி 23]

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுச் சேவை செய்கின்ற நிறுவனங்களுக்கு இந்த அரசு சார்பாக சலுகை விலையிலே பொருட்கள் வழங்கப்படுகின்றனவா என்று கேட்டு, அது வழங்கப்படுகின்றன என்று சொன்னவுடன், மேலும் அவர்களுக்கு நியாய விலைக் கடைகளை நடத்துவதற்கு அனுமதிக்கப்படுமா என்பதையும் இங்கே கேட்டிருக்கிறார்கள். குறிப்பாக, ஒவ்வொரு மாதமும் 2 இலட்சம் டன் அரிசி விநியோகத்திலே நமது சத்துணவுத் திட்டம், இன்னும் சொல்லப்போனால், ஆதிதிராவிட நலத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை நடத்துகின்ற மாணவர் விடுதிகள், அதுமட்டுமல்ல, பவானிசாகரிலுள்ள அரசு பயிற்சி மையம், உளுந்தூர்பேட்டையிலுள்ள அரசு மறுவாழ்வு இல்லங்கள், தமிழ்நாடு அரசு காவல் துறை பயிற்சி மையங்கள், காவல் துறை தற்காலிக முகாம்கள், புவியியல் ஆராய்ச்சிக் குழுக்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் சிறைச்சாலைகள், சார்நிலை சிறைச்சாலைகள், தொழு நோய் இல்லங்கள், அரசு மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கும் பொது விநியோக முறையில் நிர்ணயிக்கப்பட்ட அந்த விலையிலேயே அரிசி தரப்படுகின்றன. அதுமட்டுமல்ல, மத்திய ரிசர்வ் காவல் முகாம்கள், கண் மருத்துவ முகாம்கள் ஆகியவற்றிற்கும், அதுபோல இஸ்லாமிய பெருமக்கள் நடத்துகின்ற அமைப்புகளுக்கு ரம்ஜான் நோன்பு காலங்களிலும் பொது விநியோகத் துறையின் அந்த விலையிலேயே அரிசி ஒதுக்கப்படுகிது. இந்த அரசு வந்த பிறகு, எவ்வளவு கூடுதலாக ஒதுக்கியிருக்கிறது என்ற கணக்கைச் சொல்ல விரும்புகிறேன். 1995-96 ஆம் ஆண்டு, 7,295 டன், கிட்டத்தட்ட 2 கோடியே 73 இலட்சத்து, 58 ஆயிரம் ரூபாய்க்கும், 1999-2000-ல் 22,514 டன், 8 கோடியே, 44 இலட்சத்து, 27 ஆயிரத்து 500 ரூபாய்க்கும் பொது வாழ்வு இல்லங்கள் மற்றும் இதுபோன்ற சமூக சேவை மையங்களுக்கும் தொடர்ந்து இந்த அரசு வழங்கி வருகிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, சிறந்த நிறுவனங்கள் இருந்தால் அவர்கள் மனு செய்வார்களேயானால் அதையும் இந்த அரசு ஆராய்ந்து அவர்களுக்கும் வழங்கும். கடைசியாக அவர் சொல்கின்றபோது, நியாய விலைக் கடைகளை நடத்துவதற்கு அந்த நிறுவனங்களுக்கு அனுமதி தரப்படுமா என்று கேட்டார்கள். நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் சுய உதவிக் குழுக்களே இன்றைக்கு நியாய விலைக் கடைகளை நடத்த வேண்டுமென்று சொல்லி தமிழ்நாடு முழுவதும் 300 கடைகளை இப்போது சுய உதவிக் குழுக்களே ஏற்று நடத்துகின்ற சூழ்நிலையை உருவாக்கித்

தந்திருக்கிறார்கள். அதேபோல, நல்வாழ்வு இல்லங்கள், இருக்கின்ற சேவை நிறுவனங்கள் தொடர்ந்து நடத்துவதற்கு மனு செய்தால் அதையும் இந்த அரசு ஆராய்ந்து அவர்களுக்கும் நியாய விலைக் கடைகளை நடத்துவதற்குரிய உரிமை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 35, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**35—**

## வயது வரம்பு தளர்த்துதல்

***38773—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் வருவாய்க் கிராமங்களைப் பிரிக்கும்போது ஏற்கெனவே கிராம நிர்வாகப் பயிற்சி பெற்ற குமரி மாவட்டத்தைச் சார்ந்தவர்களுக்கு, வயது வரம்பு தாண்டிய நிலையில் உள்ளவர்களுக்கு, வயது வரம்பினைத் தளர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராமங்களைப் பிரித்து, புதிய கிராமங்கள் தோற்றுவிக்கும் பணிகள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. எனவே, புதிய கிராமங்கள் தோற்றுவிக்கவோ அல்லது அதற்குத் தேவையான கிராம நிர்வாக அலுவலர் நியமனம் செய்யவோ தற்போது கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லாததால் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வயது வரம்பினைத் தளர்த்துவது என்ற கேள்வி எழவில்லை.

*முற்பகல் 10-35*

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுக்க கிராமங்களைப் பிரிக்கும்போது, ஆட்கள் தேவைப்படுவார்கள் எனக் கருதி, கிராம நிர்வாகிகள் பயிற்சி





வழங்கப்பட்டது. அரசாங்கம் அதற்கான பட்டயமும் வழங்கி இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்களில் ஏற்கெனவே பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய கிராம அதிகாரிகள் விடுப்பில் செல்லும்போது, கிராம அதிகாரிகள் பயிற்சி முடித்தவர்களுக்கு அந்த விடுப்புப் பணி வழங்கப்பட்டது. சமீபத்தில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னால்கூட கிராம அதிகாரிகள் பணிக்குத் தேவைப்படும்போது யாரெல்லாம் பணியாற்றியிருக்கிறார்களோ அவர்களுக்கு மட்டும் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பித்தது. இதன் அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு அந்தப் பணி கிடைக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் கிராம அதிகாரிகள் விடுப்பில் செல்லும்போது அவர்களுக்கு அந்தப் பணி கொடுப்பதில்லை. வேறு கிராம அதிகாரிகளுக்கு 'சார்ஜ்' என்று சொல்லி பொறுப்பு கொடுத்தார்கள். எனவே, கன்னியாகுமரி மாவட்டத்திலும் கிராம அதிகாரிகள் விடுப்பில் செல்லும்போது அங்கே பயிற்சி முடித்தவர்களுக்குப் பணி கொடுப்பதோடு, அவர்களுடைய வயது அதிகமாகிவிட்ட காரணத்தால் அரசாங்கம் வயது வரம்பைத் தளர்த்தி அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டும். இன்னொன்று, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்.

**திரு. சி. வேலாயுதன்:** கன்னியாகுமரி மாவட்டம், தாய்த்தமிழகத்தோடு இணைந்த ஒரு மாவட்டம். கேரளத்திற்குச் செல்லும்போது எங்களைப் பார்த்து தமிழர்கள் அல்லது தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் என்று பேசுகிறார்கள். இங்கு வரும்போது அந்தப் பேச்சு இல்லாமல் இருந்தாலும்கூட, அந்த உணர்வோடு எங்களைப் புறக்கணிக்கிறார்களோ என்று அங்குள்ள சில மக்கள் வேதனைப்படக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, இதுமாதிரியான சந்தேகங்கள் எல்லாம் போகக்கூடிய வகையில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் இந்த வாய்ப்பு இல்லாமல் இருப்பதை நிவர்த்தி செய்ய அரசு ஆவன செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு என்று ஒரு அணுகுமுறை, மற்ற மாவட்டங்களுக்கு என்று ஒரு அணுகுமுறை என்பது உண்மையான தகவல் அல்ல. அடுத்து, வயது வரம்பைத் தளர்த்துவது என்பது

அரசின் கொள்கை முடிவு பற்றிய ஒன்றாகும். இப்போது வயது வரம்பைத் தளர்த்துவது பற்றிய கொள்கை முடிவை அரசு எடுக்கவில்லை. அதற்கும் மேலே ஒன்றை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 14-10-1980 அன்று பணி நீக்கம் செய்யப்பட்ட பகுதி நேர கிராம அலுவலர்கள் 23,010 பேர். அவர்களையெல்லாம் தெருவிலே விட்டுவிடாமல் கருணையே உருவான கலைஞரின் தலைமையிலே உள்ள அரசு, அவர்களுக்கு சிறப்பு ஓய்வூதியமாக மாதம் ரூபாய் 250/-ஐ 12,260 பேர்களுக்கு கொடுக்கிறது. அதுமட்டுமல்லாமல், பழைய Village Officers-க்கு பதவித் தகுதிகள் இருக்குமானால், ஏற்கெனவே தகுதி இல்லாமல் பதவியில் மட்டும் பணியாற்றி இருப்பார்களானால் அந்தக் காலியிடத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தகுதியின் அடிப்படையில் ஏற்கெனவே வேலை பார்த்தவர்தானா என்ற கண்டிஷன் அடிப்படையில் பணிநியமனம் செய்கிறார்கள். ஏற்கெனவே 14-11-1981 அன்று சட்டம் கொண்டு வந்து கிராமப் பணியாளர்கள் 23,010 பேரை பணி நீக்கம் செய்த பிறகு இப்போது Screening test வைத்து, அந்தத் தேதியில் தகுதியுடையவர்கள் மீண்டும் சர்வீஸ் கமிஷன் மூலமாக Village Administrative Officers-களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் எந்த சட்டச் சிக்கலும் இல்லை, யாரும் பாதிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 36, திரு. ஆ.செ. மணிக்கண்ணன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**36—**

## மாணவர் விடுதி கட்டடம்

***34454—திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநாவலூரில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?





**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநாவலூரில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநாவலூர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி நீண்ட காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது கிராமப் பகுதி என்பதால் கட்டட வசதி, அடிப்படை வசதிகள் ஏதும் இல்லாத ஒரு சூழ்நிலையில் அங்கே இருந்து கொண்டு இருக்கிறது. அதனால் மாணவர்கள் தங்கிப் படிக்க பல்வேறு சிரமங்கள் உள்ளன. அதற்குத் தேவையான நிலத்தைக்கூட வட்டாட்சியர் அவர்கள் ஒதுக்கீடு செய்து அந்தத் துறைக்கு ஒப்படை செய்திருக்கிறார்கள். மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக முன்மொழிவும்கூட அரசுக்கு வரப்பெற்றுள்ளது. அதை இந்த ஆண்டாவது எடுத்துச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்திலுள்ள 43 மாணவ-மாணவியர் விடுதிகளில் 7 விடுதிகள் மட்டுமே அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 36 மாணவ-மாணவியர் விடுதிகள் வாடகை கட்டடங்களில்தான் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை வருங்காலத்திலே நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 37, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்.

**37—**

## பவானி ஆற்றில் மாசுபடுத்துதல்

***40026—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 23

கழிவு நீரால் பவானி ஆற்றை மாசுபடுத்தும் தென்னிந்திய விஸ்கோஸ் தொழிற்சாலையின் மரக்கூழ் தயாரிக்கும் பகுதியை மட்டும் மூடிவிட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தென்னிந்திய விஸ்கோசினுடைய கழிவுநீரை அந்த ஆலை சரியாகச் சுத்திகரிப்புச் செய்யாத காரணத்தினால் அந்தப் பகுதியிலே பல்லாயிரக்கணக்கான ஏக்கரிலுள்ள விவசாய நிலங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதோடு குடிநீரும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆலையையே மூடிவிட வேண்டுமென்று சொல்லவில்லை. இந்த ஆலையின் ஒரு பகுதியாகிய மரக்கூழ் தயாரிக்கிற அந்தப் பகுதியை மட்டும் மூடிவிடுவது நல்லது. காரணம் அங்கிருந்து வெளியேறுகிற கழிவு நீரில்தான் அதிகமாக மாசு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதைப் பரிசீலனை செய்த சுகாதார இலாகாவினர் இந்தத் தண்ணீரானது குடிப்பதற்கு இலாயக்கற்றது என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். Unfit for human consumption என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல, கால்நடை மருத்துவத் துறையைச் சார்ந்த மருத்துவர்கள்கூட இந்தத் தண்ணீரைக் கால்நடைகள் அருந்தினால் இறந்துவிடும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அங்கே இரும்பறை போன்ற பஞ்சாயத்திலே இருக்கிற மக்கள் எல்லாம், தாங்கள் வேறு இடத்திற்கு குடிபெயர்ந்துவிட வேண்டுமோ என்று எண்ணுகிற அளவுக்கு மிகவும் அச்சத்திலே இருக்கிறார்கள். எனவே, நான் உங்களைக் கேட்டுகொள்வதெல்லாம், Pollution Control Board-கூட அவர்களுக்கு 17 நிபந்தனைகளை விதித்திருக்கிறது. ஆனால், எந்த நிபந்தனையையும் அவர்கள் பின்பற்றுவதாகத் தெரியவில்லை. நான் அந்தத் தண்ணீர் மாதிரியைக் கொண்டு வந்திருக்கிறேன். ஏற்கெனவே, நம்முடைய சபாநாயகர் அவர்களிடத்திலே இந்த மாதிரியைக் காட்டியிருக்கிறேன். அதைப் பார்க்கிறபோது தெரியும்; இது சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரா, இல்லையா என்பது பார்த்தாலே தெரியும். இதனாலே வியாதிகள் வருகின்றன. கால்நடைகள் இறக்கின்றன. விவசாயம் பாதிக்கப்படுகிறது என்ற காரணத்தினால் . . . .



2001 ஜனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தண்ணீரைக் காட்டியது உண்மைதான். அந்தத் தண்ணீர் மோசமானது என்றால் கட்டாயமாக அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். உறுப்பினர் பேசுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** அந்த ஆலை சொல்கிறது இந்தத் தண்ணீர் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் என்று. இந்தத் தண்ணீர் அங்கேயிருக்கின்ற ஆழ்குழாய்க் கிணற்றிலேயிருந்து எடுக்கப்பட்ட தண்ணீர்.

(மாண்புமிகு உறுப்பினர் இரண்டு பாட்டில்களில் வைக்கப்பட்டிருந்த தண்ணீரைக் காட்டினார்.)

இந்தத் தண்ணீரைப் பற்றித்தான் சுகாதார இலாகா Unfit for human consumption என்று சொல்லியிருக்கிறது. பலசமயங்களில் சுத்திகரிக்கப்படாமலேயே பவானி ஆற்றிலே விடப்பட்டு, பவானி ஆற்றிலே இருக்கின்ற மீன்கள் எல்லாம் இறந்துபோய் இருப்பதை எல்லோரும் நன்றாக அறிவார்கள். நம்முடைய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் சில நாட்களுக்கு முன்பு அங்கே வந்தபோது பொதுமக்கள் இந்தக் குறைகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஊராட்சி மன்றத்திலே தீர்மானம் எல்லாம் நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலைக்கு முதலிலே ஒரு நாளைக்கு 60 டன்தான் மரக்கூழ் தயாரிக்க அனுமதி வழங்கப்பட்டது. பின்பு 90 டன்னாக உயர்த்தப்பட்டு, இப்போது 120 டன் ஒரு நாளைக்கு உற்பத்தி செய்கிற அளவுக்கு அந்தத் தொழிற்சாலை இந்த மரக்கூழ் உற்பத்தியை அதிகரித்திருக்கின்ற காரணத்தினாலே அதிகமாகக் கழிவுநீர் அங்கே செல்கிறது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசி முடியுங்கள், அமைச்சர் பதில் சொல்லுங்கள். அவர் நியாயமான பிரச்சினையைச் சொல்லியிருக்கிறார். பதில் என்ன என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாளர்கள் எஸ்.ஐ.வி. இன்டஸ்டிரீஸ் நிறுவனம், கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், சிறுமுகை கிராமத்தில் 1961 முதல் இயங்கி வருகிறது. இத் தொழிற்சாலையில் மொத்தம் 3,650 தொழிலாளர்கள் நேரடியாகவும், 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் மறைமுகமாகவும் பணிபுரிந்து வருகிறார்கள். இத் தொழிற்சாலையின் கழிவுநீரை பவானி ஆற்றில் வெளியேற்றுவதால் ஆற்று நீர் மாசுஅடைவதாகக் கூறி கோபிச்செட்டிபாளையம் பவானி ஆறு பாதுகாப்பு இணைக் குழு, இத்தொழிற்சாலையின் மரக்கூழ்

தயாரிக்கும் ஆலை இயங்குவதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் 1995 - ஆம் ஆண்டு வழக்குத் தொடுத்தது. 27-11-1996 நாளைய தீர்ப்பில் இத்தொழிற்சாலை எக்காரணம் கொண்டும் கழிவுநீரை பவானி ஆற்றில் விடக்கூடாது என்று நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது. இதன்படி மேற்படி நிறுவனம் 1997 ஜனவரி முதல் தனது உற்பத்தியை நிறுத்தி பவானி ஆற்றில் கழிவுநீர் விடுவதை நிறுத்தியது. சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து இந் நிறுவனம் மரக்கூழ் உற்பத்திப் பிரிவு நீங்கலாக மற்ற பிரிவுகளை இயக்க உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.

உச்ச நீதிமன்றம் மேற்கூறிய மேல்முறையீட்டினைப் பரிசீலனை செய்து மரக்கூழ் உற்பத்திப் பிரிவைத் தவிர்த்து ஏனைய பிரிவுகளை இயங்க அனுமதிப்பதுடன் வாரியத்தின் இசைவு ஆணையை மீண்டும் பெற்று மரக்கூழ் உற்பத்தியைத் தொடரலாம் என ஆணை பிறப்பித்தது. இதன்படி இந்நிறுவனம் தனது மரக்கூழ் உற்பத்திப் பிரிவை இயக்குவதற்கு வாரியத்தின் இசைவினை வேண்டி மீண்டும் விண்ணப்பித்தது. இந்த நிறுவனத்தின் விண்ணப்பத்தினை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு விவாதித்து சில நிபந்தனைகளை விதித்து, மரக்கூழ் உற்பத்தியைத் தொடரலாம் என அரசின் ஒப்புதலுக்குப் பரிந்துரை செய்தது. அரசு இந்நிறுவனத்தின் மரக்கூழ் உற்பத்திப் பிரிவை இயக்குவதற்கு இந்நிறுவனத்திற்கு 3-12-1998 அன்று 17 நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கியது. அதன்படி நாள் ஒன்றுக்கு 90 டன் உற்பத்தித் திறனுடன் இயக்கலாம் என இசைவு ஆணை வழங்கப்பட்டு இப்போது ஆலை இயங்கி வருகிறது.

முற்பகல் 10-45

இதனிடையே 12-7-1999 அன்று இத்தொழிற்சாலையின் நிறம் கலந்த நீரை பவானி ஆற்றில் விட்டதால் மீன்கள் இறந்துவிட்டதாக வாரியத்திற்கு ஒரு புகார் வந்தது. தொழிற்சாலையிடம் விளக்கம் கோரப்பட்டது. பின் அதில் உண்மை இருப்பதை அறிந்து, தொழிற்சாலைக்கு வாரியம் ரூ.10 இலட்சம் அபராதம் விதித்தது. தொழிற்சாலை அதனை வாரியத்திற்குச் செலுத்தியது. பிறகு இத் தொழிற்சாலையே ரூ.400 கோடி வரை நட்டப்பட்டுவிட்டதால் நாள்தோறும் பல இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லி ஆலையின் உற்பத்தித் திறனை 90-லிருந்து 120 டன் இயக்குவதற்கு அனுமதி கோரியது. மேற்படி தொழிற்சாலையின்



கோரிக்கையை வாரியத்தின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு பரிசீலனை செய்து அரசுக்குப் பரிந்துரை செய்தது. அரசு 19-10-2000 அன்று நாள் ஒன்றுக்கு 120 டன் உற்பத்தித்திறனுடன் இயக்க சில நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கியது. தொழிற்சாலை நிறமுள்ள கழிவுநீரைச் சுத்தம் செய்து, அதனைத் தொழிற்சாலைக்குச் சொந்தமான 600 ஏக்கர் நிலத்தில்விட்டு இப்போது விவசாயத்திற்குப் பயன்படுத்தி வருகிறது. மேலும் 200 ஏக்கர் நிலத்தை வாங்கி இப்போது அதை மேம்படுத்தி வருகிறது. இவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் வாரியம் நிர்ணயித்துள்ள தரத்திற்கு உட்பட்டுள்ளதாக எங்களுக்கு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிக்கைகள் தரப்பட்டு இருக்கின்றன. எனவே, மரக்கூழ் தயாரிக்கும் பிரிவினை மூடுவதற்கான அவசியம் தற்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூற்றிலே உண்மை இருந்தால், நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். . .

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி இல்லை.

**திரு. ச. அழகிரி:** திருப்தியான பதிலே இல்லை. ஆதாரபூர்வமாக 2 பாட்டில் நீரை அவர்கள் காண்பித்தார்கள். அமைச்சர், அதிகாரி எழுதிக் கொடுத்ததைப் படித்தால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் முறையாக நடக்க வேண்டும், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. லட்சுமணன் அவர்கள் ஒரு பொறுப்புள்ள உறுப்பினர். அவர் இங்கே ஆதாரத்தோடு அங்கே இருக்கக்கூடிய நிலைமைகளை அரசுக்கு எடுத்துக் காட்டி இருக்கிறார். உடனடியாக Pollution Control Board அதிகாரிகளை அந்த ஆலைக்கு அனுப்பி, இது குறித்து விசாரணை நடத்தி, இதுதான் அங்கே இருக்குமானால், உடனடியாகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும்.

[2001 ஜனவரி 23

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு) இதுதான் பதிலா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள்; நான் ஒன்று சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) பேரவைத் தலைவர் பேசும்போது எல்லோரும் உட்காருங்கள். இந்த அமைச்சரைப் பார்த்து, பேரவைத் தலைவர் என்கிற முறையிலே "இந்த உறுப்பினர் ரொம்ப பொறுப்பான உறுப்பினர்; அரசியல் ஆதாயத்திற்காகப் பேசக்கூடியவர் அல்ல; இந்தக் குற்றச்சாட்டுச் சொல்கிறார்; இது உண்மையாகத் தெரிகிறது; உடனடியாக நடவடிக்கை எடுங்கள்" என்று நானே சொல்லி இருக்கிறேன். ஆகையினால், இதுதான் பதிலா என்று நீங்கள் கேட்கக்கூடாது. (குறுக்கீடுகள்) இன்று முதலமைச்சர் இல்லை; அரசாங்கத்தின் சார்பில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லி இருக்கிறார். அதற்குள் நீங்கள் எல்லோரும் கோபித்துக்கொண்டு எழுந்தீர்கள் என்றால் எப்படி?

**திரு. ச. அழகிரி:** பதில் திருப்தியாக இல்லையே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அளித்த பதில் திருப்தியாக இருக்கிறதல்லவா?

**திரு. ச. அழகிரி:** சம்பந்தப்பட்ட அமைச்சர் இந்த பாட்டில்களைப் பார்த்த பிறகுகூட, தவறு இல்லை என்றுதான் பதில் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** பதிலை மாற்றிச் சொல்லியிருக்க வேண்டுமல்லவா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** தவறு இருந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் சொல்லி இருக்கிறேன்,

**திரு. ச. அழகிரி:** கடைசி பாராவை திருப்பிப் படியுங்கள் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. அழகிரி, நீங்கள் திரு. ஞானசேகரன் மாதிரி பண்ணக்கூடாது. (குறுக்கீடுகள்)



2001 ஜனவரி 23]

**திரு. ச. அழகிரி:** அதைப் பேரவைத் தலைவர் வாபஸ் வாங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் வாபஸ் வாங்கமாட்டேன். நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். நேற்றைக்கு 16 நிமிடங்கள் . . . (குறுக்கீடுகள்)

**திரு. ச. அழகிரி:** அது வேறு subject.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. ஞானசேகரன் மாதிரி என்று சொன்னதற்கு, அப்படி நீங்கள் சொல்லக்கூடாது என்று சொன்னீர்களே, அதற்குச் சொல்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** விஸ்கோஸ் பற்றி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விஸ்கோஸ் பற்றித்தான் நான் சொல்லிவிட்டேனே, அவருடைய குற்றச்சாட்டு நியாயமாகத் தெரிகிறது, உடனே நடவடிக்கை எடுங்கள் என்று.

**திரு. ச. அழகிரி:** நீங்கள் சொல்லிவிட்டீர்கள்; மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சொல்லிவிட்டார். சம்பந்தப்பட்ட அமைச்சர் சொல்லவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூத்த அமைச்சர் சொன்னால் போதும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 விளக்கங்களை நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, அதிகாரிகள் தருகிற அந்த விவரங்களைத்தான் இங்கே சொல்ல முடியும். அதற்குமேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், மறுபடியும் அவர் ஆலோசித்து, தகுந்த முறையிலே, செய்ய வேண்டிய அவசியம் இருந்தால்கூட, பதில் சொல்கிறபோது அவசரப்பட்டு எந்த ஒரு பதிலையும் சொல்லி commit பண்ணக் கூடாது என்பதுதான் ஒரு அரசாங்கத்தில் பொறுப்பிலே உள்ளவர்களுக்கு அழகு. அதனாலே, அமைச்சர் இப்படிப் பதில் சொல்லலாமா என்று கேட்கக் கூடாது. இதுதான் எங்களுக்குக் கிடைத்த விவரம். அதற்கு மேல் இதுபற்றி மறுபடியும் கேட்டுத்தான் பதில் சொல்ல வேண்டும். கேள்வியில் உண்மை இருக்கலாம். உண்மையாக இருந்தால்கூட, பதில் சொல்கிறபோது, கொஞ்சம் பொறுப்பாகச்

[2001 ஜனவரி 23

சொல்கிறபோது, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் நினைப்பது போல பதில் சொல்வது என்பது இயலாத ஒரு காரியம். இரண்டாவது, அமைச்சரவை சார்பாக ஒரு அமைச்சர் எழுந்து சொன்னால், அது எல்லா அமைச்சர்கள் சார்பாகவும்தான். ஆகவே, ஆற்காடு வீராசாமி அவர்கள், நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன பதில், இந்த அமைச்சரவை சார்பானது என்பதால், அந்தத் துறை அமைச்சர் சொல்லவில்லையே என்று கேட்பதிலே அர்த்தம் இல்லை.

*முற்பகல் 10-50*

**திரு. ச. அழகிரி:** இந்த நிகழ்வைப் பொறுத்தவரையிலும் திடீரென்று உறுப்பினர் கொண்டு வந்து காட்டவில்லை. இது நீண்டகாலமாக இருக்கிறது. ஏன் நான் இதில் உறுதியாக நிற்கிறேன் என்றால் இது எப்படி நடந்திருக்கும் என்பது சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் தெரியும். இதில் பல பிரச்சினைகள் நடந்திருக்கின்றன. பல போராட்டங்கள் நடந்திருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வேறு மாதிரி குற்றச்சாட்டு சொல்வது மாதிரி இருக்கிறது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் சொல்வது என்னவென்றால் எது நியாயம், அநியாயம் என்பது பேரவைத் தலைவருக்குத் தெரியும். ஆகையினால் நான் அமைச்சரிடம் சொன்னேன். பொறுப்புள்ள ஓர் உறுப்பினர், அரசியல் ஆதாயம் தேடாதவர், இதைக் கொண்டு வந்து காண்பிக்கிறார்; இதிலே உண்மை இருக்கிறது, நடவடிக்கை எடுங்கள் என்று நான் அவரிடம் சொன்னேன். அதிலே உறுதியாக நடவடிக்கை எடுப்பதாக நல்வாழ்வுத் துறை அமைச்சர் சொல்லியிருக்கிறார். இதோடு போதும். (குறுக்கீடு) மணி 10-51 ஆகிறது. நடவடிக்கை எடுக்கப்படும், நீங்கள் உட்காருங்கள்.

வினா எண் 38, திரு. இரா. பெர்னார்டு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**38—**

## தொழிற்பேட்டை

***31035—திரு. இரா பெர்னார்டு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 23]

(அ) குளச்சல் தொகுதியில் முட்டத்திற்கும், அம்மாண்டிவிளைக்கும் இடைப்பட்ட சிவந்தமண் பகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இத்திட்டம் தொடங்கப்படும்?

**மாண்புமிகு இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பரிசீலனையில் உள்ளது. (குறுக்கீடுகள்)

**திரு. வி.கே. லட்சுமணன்:** நான் controversial-ஆக எதுவும் சொல்லப் போவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எப்பொதுமே controversial-ஆகச் சொல்ல மாட்டீர்கள். மணி 10-50 ஆகிவிட்டது. நேரம் அதிகமாகிவிட்டது. அடுத்த கேள்விக்குக் கூப்பிட்டாகிவிட்டது. திரு. இரா. பெர்னார்டு.

**திரு. இரா. பெர்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பேட்டை அமைக்க... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. லட்சுமணன் அவர்களுக்கு ஓர் உறுதியை அளிக்கிறேன். நிச்சயமாக நடவடிக்கை எடுத்து, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று இந்தப் பேரவைக் கூட்டத் தொடர் முடிவதற்கு முன்னாலே, உங்களுக்குத் தகவல் சொல்ல வேண்டுமென்று அரசுக்கு நான் கருத்துச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). திரு. இரா. பெர்னார்டு.

**திரு. இரா. பெர்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பேட்டை அமைப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குமரி மாவட்டம் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டம். பல்லாயிரக்கணக்கான மாணவர்கள், இளைஞர்கள் படித்து, பட்டம் பெற்று, தொழில் பயிற்சி பெற்று, வேலையின்றி அவதிப்படுகிறார்கள் என்பதை அரசும் அறியும். இந்த அவல நிலையைப் போக்க குமரி மாவட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி, முட்டத்திற்கும், அம்மாண்டிவிளைக்கும் இடைப்பட்ட பகுதியில் தொழிற்பேட்டை அமைக்க எல்லாவித வாய்ப்பும், வசதியும் இருக்கின்ற

காரணத்தால் அங்கே விரைவில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா, எவ்வளவு காலத்தில் அது தொடங்கப்படும், எவ்வளவு முதலீட்டில் பணி நடைபெறும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகஸ்தீஸ்வரம் தாலுகா, நீண்டகரை, தீக்கிராமத்தில் சுமார் *13.63* ஏக்கர் பட்டா நிலமும், கல்குளம் தாலுகா கடியப்பட்டினம் கிராமத்தில் சுமார் *11.17* ஏக்கர் பட்டா நிலமும், மொத்தம் *24.80* ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த நில எடுப்புச் சட்டத்தின்கீழ், அரசின் நிருவாக ஒப்புதலுக்காக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பிரேரணைகள் அனுப்பப்பட்டுவிட்டன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்தால் ஒரு மாத காலத்திற்குள்ளாகவே நம்முடைய சிட்கோ மூலமாக அங்கே தொழிற்பேட்டை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *39*, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**39—**

### கால்நடை மருத்துவமனை

***27723—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, தென்மலை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாசுதேவநல்லூர் தொகுதி, தென்மலை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்மலை கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று அமைச்சருடைய கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டு வரப்பட்டுள்ளது. தென்மலையிலிருந்து கிழக்கே *15* கிலோமீட்டருக்கு அப்பாலும், மேல் பகுதியில் *15* கிலோமீட்டருக்கு மேற்கே உள்ள





பகுதியிலும் விவசாயிகளிடம், பசு மாடுகளும், எருமை மாடுகளும் நிறைய இருக்கின்றன. இந்த இடத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்ய முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு-*2000-2001* ஆண்டுக்கு புதிய கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனைகள் தொடங்குவதற்கு அரசால் நிதி ஒதுக்கப்படவில்லை. எனினும், திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் தொகுதி, வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல சிவகிரி என்ற ஊரில் கால்நடை மருத்துவமனையும், சிந்தாமணி என்ற இடத்தில் கால்நடை மருந்தகமும் மற்றும் வாசுதேவநல்லூர், நெற்கட்டும்செவல், முள்ளிக்குளம், விஸ்வநாதபேரி, இராயகிரி ஆகிய இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்களும், ஆத்துவழி, பாறைப்பட்டி, வடமாபுரம், தேவிப்பட்டினம், திருமலாபுரம் ஆகிய இடங்களில் பார்வைக் கிளை நிலையங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் வினாவில் குறிப்பிட்டிருக்கின்ற தென்மலை கிராமத்தில் *25-7-2000* அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்பு கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் நடைபெற்று, அங்கே *2,352* கால்நடைகளுக்குச் சிகிச்சை இலவசமாக அளிக்கப்பட்டிருக்கிறது. எதிர்வரும் காலங்களில் அரசின் நிதிநிலைமை மற்றும் அந்த ஊரிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கால்நடை மருத்துவமனை தொடங்க பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *40*, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**40—**

### நல வாரியம்

***10907—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 23

தமிழகத்தில் பழங்குடியினத்தவர்களுக்கென தனியாக நல வாரியம் ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசால் ஆய்வு செய்யப்படவில்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியின மக்கள் பல்வேறு வகையிலே பாதிக்கப்படுகிறார்கள். மலையில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்குக் கல்வி, இருப்பிட வசதி, உணவு மற்றும் பல்வேறு வசதிகள் கிடைக்காத ஒரு அவல நிலை தொடர்ந்து நடைபெறுகிறது. இவர்களுக்குத் தனியாக இயக்குநரகம் அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும்கூட, ஒரு இயக்குநரே இவர்களுக்காக எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு தீர்வு கண்டுவிட முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அவர்களை அந்த மோசமான நிலையிலிருந்து பாதுகாப்பதற்கான முயற்சிகள் எடுத்து, அவர்களுக்குத் தேவையான வசதியை செய்ய வேண்டுமானால் அவர்களுக்கு என்று ஒரு தனி நல வாரியம் அமைக்கப்பட வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகவே, இந்த அரசு ஆழ்ந்த சிந்தனையுடன் பரிசீலித்து பழங்குடி இனத்தவர்களுக்கு உரிய தனி நல வாரியம் அமைப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்டையகுடி, பழங்குடி, அதுவே பாரில் சிறந்த குடி என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளையும் புரிந்திருக்கிறது. அந்தப் பழங்குடி மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு, மலை அளவுக்குச் செய்ய வேண்டுமென்று பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது. தேவையின் அடிப்படையில் திட்டங்களைத் தீட்டுவது மட்டுமல்ல, செயல்படுத்துவது, தடைப்படா முன்னேற்றம் காண்பது, அந்தப் பகுதி மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவது இந்த அரசினுடைய கொள்கையாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்காக தனி இயக்குநரகம் அமைத்து ஒரு மூத்த ஐ.ஏ.எஸ். அலுவலரையும் நியமித்து சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. பழங்குடியினர் நலம்காக்க சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனி அலுவலர் சிறப்பாகப்



2001 ஜனவரி 23]

பணியாற்றி வருகிறார். ஆகவே ஒரு இயக்குநரகம் இருக்கின்ற நேரத்திலே அதற்காகத் தனியாக வாரியம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 மற்றும் 2)*
## (முதல் பட்டியல்)

**1—**

### தேர்ச்சி

**வினா 18449—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய ஆட்சிப்பணி (ஐ.ஏ.எஸ்.), இந்திய காவல் பணித் (ஐ.பி.எஸ்.) தேர்வுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் அதிகம் தேர்ச்சி பெற தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

(ஆ) சேலத்தில் இப்பணித் தேர்வுகளுக்குப் பயிற்சி அளிக்க பயிற்சி மையம் ஒன்று அமைக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்து அவர்களை அகில இந்திய ஆட்சிப்பணி மற்றும் மத்தியப் பணிகளில் அமர்த்த அரசு ஆணை எண் 2315, உள்துறை, நாள் 14-7-1966-ல் ஒரு பயிற்சி நிலையம் துவக்கப்பட்டது. அதே போல பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கும் பயிற்சி அளிக்க அரசு ஆணை எண் 730, சமூக நலத்துறை, நாள் 21-6-1971-ல் ஒரு பயிற்சி நிலையம் துவக்கப்பட்டது. இப்பயிற்சி நிலையங்கள் தனித்தனியே இயங்கி வந்தன. இவ்விரு நிலையங்களிலிருந்து முறையே 103 தனிப்பயிற்சி நிலையம் (பி.வ) மூலமும், 80 பேர் முன் தேர்வு பயிற்சி மையம் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்) மூலமும் பயிற்சி பெற்றவர்கள் அகில இந்திய ஆட்சிப்பணி மற்றும் மத்திய பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் தமிழகத்திலிருந்து அதிகமாக இந்திய ஆட்சிப் பணிகளில் தேர்ச்சிப் பெறவும், இந்நிலையங்களின் தரத்தை மேம்படுத்தி வசதிகளைப்

* இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2001 ஜனவரி 23

பெருக்கவும், மாண்புமிகு முதலமைச்சர் சட்டமன்றப் பேரவையில் நிதி நிலை அறிக்கையில் 1999-ல் அறிவித்ததற்கு இணங்க இவ்விரு நிலையங்களும் அரசு ஆணை எண் 7, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, நாள் 3-2-2000-த்தின்படி ஒருங்கிணைக்கப்பட்டு, அண்ணா மேலாண்மை நிலையத்தின் கட்டுப்பாட்டில் ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு இரு நிலையங்களின் கட்டுப்பாட்டை ஏற்ற பின்பு அண்ணா மேலாண்மை நிலையம் மூலமாகப் பயிற்சி அளிக்கப்பட்டு, 25 நபர்கள் 2000-ம் ஆண்டில் நேர்முகத் தேர்விற்கு டெல்லிக்குச் சென்றனர். அவர்களில் 16 பேர் இந்திய ஆட்சிப்பணி மற்றும் மத்திய செயலகப் பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். கடந்த காலங்களில் இந்த அளவு எண்ணிக்கையில் தமிழகத்திலிருந்து இந்திய ஆட்சிப்பணி மற்றும் இதரப் பணிகளுக்கு மாணவர்கள் தேர்ச்சிப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையங்களின் மூலமாக, தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் 90 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும், 100 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும் 10 இதர வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும் இலவசப் பயிற்சி மற்றும் உறைவிடம் அளிக்கப்படுகின்றன. ரூபாய் 50,000-க்கு உட்பட்ட ஆண்டு வருமானம் உடைய மாணவர்களுக்கு மாதம் ரூபாய் 500/- உணவு மானியம் அளிக்கப்படுகிறது. அனுபவம் வாய்ந்த பேராசியர்களால் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பல ஆயிரக்கணக்கான புத்தகங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட நிலைய நூலகத்தில் பயிற்சியாளர்களின் பயன்பாட்டிற்கு உள்ளன. சென்னை அண்ணா நகரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய இடமாற்றக் குடியிருப்பில் 99 அறைகள் உள்ள கட்டடத்தில் இந்நிலையம் வாடகைக் கட்டணம் செலுத்தப்பட்டு இயங்கி வருகிறது. இந்நிலையத்திற்குச் சொந்தமாக கட்டடம் கட்ட 10 கிரவுண்ட் நிலம் மாநில அரசால் சைதாப்பேட்டை ஆசிரியர்கள் கல்லூரி வளாகத்தில் ஒதுக்கப்பட்டு, கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்குறித்த செயல்பாடுகள் மூலம் தமிழக அரசு தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் அதிகம் தேர்ச்சிப் பெற நடவடிக்கை எடுத்து வருகிறது. இவ்விரு நிலையங்களை ஒருங்கிணைத்துப் பராமரிக்க ஆண்டொன்றுக்கு ரூபாய் 70.29 இலட்சம் அரசு செலவு செய்கிறது.

(ஆ) சேலத்தில் இப்பணித் தேர்வுகளுக்குப் பயிற்சி அளிக்க பயிற்சி மையம் அமைக்க அரசு நடவடிக்கை ஏதும் இல்லை.



2001 ஜனவரி 23]

**2—**

## தகவல் பலகை

**வினா எண் 39730—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு துறையிலும் அத்துறை செயல்பாடுகள் பயன்கள் விவரம் தகவல் பலகை மூலம் தெரிவிக்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஆம். பொதுமக்கள் தொடர்புடைய அனைத்துத் துறை அலுவலகங்களின் நுழைவாயிலில் ஒரு தகவல் மற்றும் சேவை மையம் அமைத்து, அந்தத் துறை ஆற்றுகின்ற பணி விவரங்கள், நடைமுறை ஆகியவற்றை விளக்கமாக அறிவிப்புப் பலகையில் எழுதி வைக்க வேண்டுமென அரசு ஆணை (நிலை) எண் 308, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 22-12-1997-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**3—**

## இலங்கைத் தமிழர்கள்

**வினா எண் 39910—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் கோட்டையில் பாதுகாப்பிலுள்ள இலங்கைத் தமிழர்கள் இலங்கை செல்ல விழைவதால், அவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

1946 ஆம் ஆண்டில் அயல்நாட்டார் சட்டப்பிரிவு 3(2) (இ)-ன்படி வேலூர் திப்பு மகாலில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களின் தற்போதைய எண்ணிக்கை 62 ஆகும். இந்த இலங்கைத் தமிழர்கள் மீது வழக்கு எதுவும் நிலுவையில் இல்லாதபட்சத்தில் அவர்கள் சொந்த விருப்பத்தின் பேரில், சொந்த செலவில் இலங்கைக்கோ அல்லது அவர்கள் விரும்பும் வெளிநாட்டிற்கோ செல்வதற்கு அரசு அனுமதி அளித்து வருகிறது. சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பல

நபர்கள் இவ்வாறு அரசு அனுமதி அளித்ததன்பேரில் இலங்கைக்கோ அல்லது வெளிநாட்டிற்கோ தங்கள் சொந்த செலவில் சென்று விட்டனர். வேலூர் திப்பு மகால் சிறப்பு முகாமில் தற்பொழுது தங்க வைக்கப்பட்டுள்ள 62 இலங்கைத் தமிழர்களில் 39 பேருக்கு, சொந்த செலவில் வெளிநாட்டிற்கு செல்ல அரசு அனுமதி அளித்துள்ளது.

4—

## கழிப்பிட வசதி

**வினா எண் 38022—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வேலூர் மாவட்டம், காட்பாடி அரசு ஆண்கள் பள்ளியில் போதுமான அளவில் கழிப்பிட வசதி மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இல்லை என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், கூடுதலாகக் கழிப்பிட வசதி எப்போது செய்து தரப்படும்?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், காட்பாடி அரசு ஆண்கள் பள்ளியில் கூடுதலாகக் கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்க நமக்கு நாமே திட்டத்தின்படி ரூ.1,10,000/- நிதி ஒதுக்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் தேவைப்படும் கழிவறை வசதிகளை சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் இருந்து பூர்த்தி செய்ய வேலூர் முதன்மைக் கல்வி அலுவலர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தில் நிதியொதுக்கம் பெறப்படின், இப்பள்ளிக்கு தேவையான கூடுதல் கழிவறை வசதிகள் செய்து தரப்படும்

5—

## நூலகங்கள்

**வினா எண் 42160—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*2000-2001 ஆம் ஆண்டில் தமிழகத்தில் புதியதாக எத்தனை நூலகங்கள் ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது?*



விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*அரசாணை (1டி) எண் 189, பள்ளிக் கல்வித் துறை, நாள் 22-6-2000த்தில் 2000-2001-ம் ஆண்டில் கீழ்க்கண்ட 10 கிளை நூலகங்கள் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

| வரிசை எண் | மாவட்டத்தின் பெயர் | கிளை நூலகம் திறக்க அனுமதியளிக்கப்பட்ட ஊரின் பெயர் |
|---|---|---|
| 1 | வேலூர் | வெள்ளக்குட்டை |
| 2 | திருவண்ணாமலை | காட்டாம்பூண்டி |
| 3 | நீலகிரி | உல்லத்தி |
| 4 | சேலம் | கே.ஆர். தோப்பு |
| 5 | திருவள்ளூர் | சுண்ணாம்புக்குளம் |
| 6 | திருநெல்வேலி | ஆவரைக்குளம் |
| 7 | கோயம்புத்தூர் | டிகே. ரங்கபாஷ்யம் நகர் |
| 8 | கன்னியாகுமரி | காரங்காடு |
| 9 | சென்னை | சிவஞானம் பூங்கா |
| 10 | காஞ்சிபுரம் | ஆலந்தூர் எம்.கே.என். சாலை |

*2. 2000-2001-ஆம் ஆண்டில் கீழ்க்காணும் 3 ஊர்ப்புற நூலகங்கள் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளது:*

திருவண்ணாமலை—

1. அனந்தம்.
2. பெருங்களத்தூர்.

வேலூர்—

இச்சிப்புத்தூர்.

[2001 ஜனவரி 23

3. இதுதவிர, ஏற்கெனவே அரசாணை எண் 66, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை, நாள் 30-1-1996-ல் அனுமதிக்கப்பட்ட 625 ஊர்ப்புற நூலகங்களில் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய இயலாத காரணத்தால் திரும்ப ஒப்படைக்கப்பட்ட 19 ஊர்களுக்குப் பதிலாக வேறு 19 இடங்களில் புதிதாக ஊர்ப்புற நூலகங்கள் திறக்க அரசாணை (பத்தாண்டுகள்) எண் 334, பள்ளிக் கல்வி, நாள் 1-11-2000-ல் அரசு அனுமதித்துள்ளது. அந்நூலகங்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது:—

| மாவட்டம் (1) | ஊரின் பெயர் (2) | வட்டம் (3) | ஊராட்சி (4) |
|---|---|---|---|
| 1. திருநெல்வேலி | 1. வன்னிக்கோனேந்தல் | சங்கரன்கோயில் | மேலநீலிதநல்லூர் |
| | 2. கருவந்தா | ஆலங்குளம் | ஆலங்குளம் |
| 2. வேலூர் | 3. ஜம்புகுளம் | வாலாசா | ஜம்புகுளம் |
| 3. ஈரோடு | 4. நீலாங்காளிவலசு | தாராபுரம் | மூலனூர் |
| | 5. அட்டவணைப் புதூர் | பவானி | அந்தியூர் |
| 4. கோயம்புத்தூர் | 6. தினம்பாளையம் | கோவை | தாளியூர் |
| | 7. மங்கலம் | திருப்பூர் | மங்கலம் |
| | 8. பாப்பம்பட்டி | பல்லடம் | பாப்பம்பட்டி |
| | 9. கழுவேரிப்பாளையம் | திருப்பூர் | வாலிபாளையம் |
| | 10. கொடுவாய் | திருப்பூர் | தெற்கு அவிநாசி பாளையம் |
| | 11. செலக்கரிசல் | பல்லடம் | செலக்கரிசல் |
| 5. நாமக்கல் | 12. முத்துக்காபட்டி | நாமக்கல் | முத்துக்காபட்டி |
| | 13. கொண்ட நாயக்கன்பட்டி | நாமக்கல் | கொண்ட நாயக்கன்பட்டி |
| 6. திருவாரூர் | 14. அலிவலம் | திருவாரூர் | அலிவலம் |
| | 15. வடசங்கந்தி | திருத்துறைப்பூண்டி | வடசங்கந்தி |
| 7. காஞ்சிபுரம் | 16. செவிலிமேடு | காஞ்சிபுரம் | செவிலிமேடு |
| 8. நாகப்பட்டினம் | 17. மேலையூர் | சீர்காழி | பூம்புகார் |
| | 18. கள்ளிமேடு | வேதாரண்யம் | கள்ளிமேடு |
| 9. தூத்துக்குடி | 19. சங்கரபேரி | தூத்துக்குடி | தூத்துக்குடி |



2001 ஜனவரி 23]

4. ஊர்மக்களால் உரிய நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டால் அவ்விடங்களில் நூலகங்கள் திறக்க அவ்வப்போது அனுமதிக்கப்படும். குறிப்பிட்டதொரு ஆண்டில் இவ்வாறு எத்தனை நூலகங்கள் திறக்க இயலும் என்பதை முன்னரே அனுமானித்துக் கூற இயலாது.

6—

**சுயநிதிப் பொறியியற் கல்லூரிகள்**

**வினா எண் 43357—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000ஆம் ஆண்டு டிசம்பர் வரை எத்தனை சுயநிதிப் பொறியியற் கல்லூரிகள் துவங்கப்பட்டன?

(ஆ) இதில் சேலம் மாவட்டத்தில் எத்தனை?

*விடை—*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) 1999-2000ஆம் ஆண்டு டிசம்பர் வரை 135 சுய நிதிப் பொறியியற் கல்லூரிகள் துவக்கப்பட்டன.

(ஆ) இதில் இரு சுயநிதிப் பொறியியற் கல்லூரிகள் சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ளன.

7—

**தனியார் மருத்துவமனைகள்**

**வினா எண் 32057—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சில தனியார் மருத்துவமனைகள் வியாபார நோக்குடன் செயல்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2001 ஜனவரி 23

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தனியார் மருத்துவமனைகள் வியாபார நோக்குடன் செயல்படுவதைத் தடுக்க அரசிடம் சட்ட வடிவம் எதுவும் இல்லை.

**8—**

**மூலிகைப் பண்ணை**

**வினா எண் 35825—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் மூலிகைப் பண்ணை அமைத்து இயற்கை வைத்தியம் செய்ய தகுதியானவர்களுக்குப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதியில் மூலிகைப் பண்ணை அமைக்கவோ, இயற்கை வைத்தியம் செய்யத் தகுதியானவர்களுக்குப் பயிற்சி அளித்தல் தொடர்பான திட்டமோ அரசின் பரிசீலனையில் இல்லை.

**9—**

**விண்ணப்பப் படிவங்கள்**

**வினா எண் 36254—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் விண்ணப்பப் படிவங்கள் வாரியத்தின் மூலமாகவே வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?



2001 ஜனவரி 23]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் விண்ணப்பப் படிவங்களுக்கு வரிசை எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின்வாரியத்தின் அனைத்துப் பகுதி விண்ணப்பதாரர்களுக்கும் விண்ணப்பப் படிவங்கள் இலவசமாக மின்வாரியப் பிரிவு அலுவலகங்கள் மூலம் கொடுக்கப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்கள் கையிருப்பில் இல்லாதபோது விண்ணதாரர்களின் வசதியைக் கருத்திற்கொண்டு, ஜெராக்ஸ் நகல்கள் எடுத்து அவற்றிற்கு வரிசை எண்கள் அளிக்கப்பட்டு பிரிவு அலுவலகங்கள் மூலம் கொடுக்கப்படுகின்றன. பதிவுக் கட்டணம் (Registration fee) பெற்ற பின் விண்ணப்பப் படிவங்கள் பதிவு செய்யப்படுகின்றன.

**10—**

**சித்த மருத்துவமனை**

**வினா எண் 37523—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், அரசு மருத்துவமனைகளில் சித்த மருத்துவர்கள் எத்தனை பேர் உள்ளனர்?

(ஆ) திருவோணம் தொகுதியில் சித்த மருத்துவமனை எத்தனை உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தஞ்சாவூர் மாவட்ட அரசு மருத்துவமனைகளில் 7 (ஏழு) சித்த மருத்துவர்கள் உள்ளனர்.

(ஆ) திருவோணம் தொகுதியில் அரசு மருத்துவமனைகள் ஏதுமில்லை. ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூன்று இயங்கி வருகிறன்றன. அவற்றில் சித்தா பிரிவு ஏதுமில்லை.

[2001 ஜனவரி 23

11—

**நிதியுதவி**

**வினா எண் 37587—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமியோபதி மருத்துவ வசதிக்காக மத்திய அரசு, மாநிலங்களுக்கு நிதியுதவி செய்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், 1996-97 முதல் 1999-2000 ஆம் ஆண்டு முடிய தமிழ்நாடு பெற்றுள்ள நிதியுதவி விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

**(அ) மற்றும் (ஆ) ஓமியோபதி மருத்துவ வசதிக்கென மத்திய அரசு நிதியுதவி ஏதும் வழங்கவில்லை.**

12—

**மின் கம்பங்கள்**

**வினா எண் 38060—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் இடையன்சாத்து கிராமத்தில் மின் கம்பம் மாற்றக் கோரி பணம் கட்டியும் மாற்றப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

**(அ) மற்றும் (ஆ) வேலூர் இடையன்சாத்து கிராமத்தில் மின் கம்பம் 6-4-2000 அன்று மாற்றப்பட்டுள்ளது.**



2001 ஜனவரி 23]

13—

**மின் இணைப்புகள்**

**வினா எண் 38249—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் மின் விநியோக வட்டத்திலுள்ள எடப்பாடி நகரப் பகுதியில் மின் இணைப்பு கோரி வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

(ஆ) அதில் 1998-99 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மின் இணைப்புகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மேட்டூர் மின் விநியோக வட்டம், எடப்பாடி நகரப் பகுதிகளில் விவசாய மின் இணைப்பு கோரி வந்துள்ள விண்ணப்பங்கள் எண்ணிக்கை 49 ஆகும்.

(ஆ) 1998-99ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட இணைப்புகள் 2 ஆகும்.

14—

**மின்சார விநியோகம்**

**வினா எண் 40087—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியம் கடந்த 1998-99-ல் பிற மாநிலங்களுக்கு மின்சாரம் ஏதாவது வழங்கியுள்ளதா?

(ஆ) அதேபோல் பிற மாநிலங்களிலிருந்து எவ்வளவு மின்சாரம் பெற்றது?

(இ) மத்திய அரசு தொகுப்பில் இருந்து பெற்றுக்கொண்ட மின்சாரம் எவ்வளவு?

[2001 ஜனவரி 23

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியம் பிற மாநிலங்களிலிருந்து 1998-99 இல் பெற்ற மின்சாரத்தின் அளவு 776.723 மில்லியன் யூனிட்டுகள் ஆகும். அதன் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. மராட்டிய மாநிலம் | .. | 188.783 மி.யூ. |
| 2. பஞ்சாப் மாநிலம் | .. | 150.661 மி.யூ. |
| 3. கிழக்கு பிராந்தியம் | .. | 386.713 மி.யூ. |
| 4. மேற்கு பிராந்தியம் | .. | 50.506 மி.யூ. |
| மொத்தம் | .. | 776.723 மி.யூ. |

(இ) மத்தியத் தொகுப்பில் இருந்து பெற்றுக்கொண்ட மின்சாரம் 7831.310 மில்லியன் யூனிட்டுகள் ஆகும். அதன் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. நெய்வேலி அனல் மின் நிலையம் இரண்டு பிரிவு-1 | .. | 1139.142 மி.யூ. |
| 2. நெய்வேலி அனல் மின் நிலையம் இரண்டு பிரிவு-2 | .. | 1509.557 மி.யூ. |
| 3. கல்பாக்கம் அனல் மின் நிலையம் | .. | 608.840 மி.யூ. |
| 4. ராமகுண்டம் அனல் மின் நிலையம் | .. | 4573.771 மி.யூ. |
| மொத்தம் | . | 7831.310 மி.யூ. |

**15—**

## மூலிகைப் பண்ணை

**வினா எண் 40400—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 23]

சித்த மருத்துவம் பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் மாவட்ட அளவில் மூலிகைப் பண்ணை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்து கழகத்திற்கு சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு மூலிகைப் பண்ணையும், நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு மூலிகைப் பண்ணையும் உள்ளது.

மேலும் அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் கல்விச் சுற்றுலா மூலம் மலைப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு இயற்கையாகப் பயிராகும் மூலிகைச் செடிகள் பற்றிய விவரங்கள் சம்பந்தப்பட்ட வினைத்திறன் அலுவலர்களால் போதிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் சித்த மருத்துவம் பயிலும் மாணவர்கள் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக மாவட்ட அளவில் மூலிகைப் பண்ணை அமைக்க தற்சமயம் அரசின் பரிசீலனையில் ஏதும் இல்லை.

**16—**

## காற்றாலை மின் உற்பத்தி

**வினா எண் 41784— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் காற்றாலைகள் மூலம் உற்பத்தி செய்த மொத்த மின்சாரம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் கடந்த 1999-2000ஆம் ஆண்டில் காற்று சக்தியிலிருந்து அரசுத் துறையின் மூலம் 27.228 மில்லியன் யூனிட்டுகளும் தனியார் துறை மூலம் 1129.365 மில்லியன் யூனிட்டுகளும் ஆக மொத்தம் 1156.593 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது.

[2001 ஜனவரி 23

**17—**

### மின் உற்பத்தி

**வினா 41789—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மின் வாரியத்தில் இந்த ஆண்டு உற்பத்தி செய்த மொத்த மின்சாரம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மின் வாரியம் சென்ற ஆண்டு 1999-2000 ஆண்டில் உற்பத்தி செய்த மொத்த மின்சாரம் 23548.912 மில்லியன் யூனிட்டுகள் ஆகும். அதன் விவரம்:-

| | | |
|---|---|---|
| புனல் மின்சாரம் | .. | 4443.429 |
| அனல் மின்சாரம் | .. | 18861.394 |
| காற்றாலை மின்சாரம் | .. | 27.229 |
| வாயு சுழல் மின்சாரம் | .. | 216.860 |
| மொத்தம் | .. | **23548.912** |

மேலும் தமிழ்நாடு மின் வாரியம் கடந்த 1999-2000 ஆண்டில் 14763.747 மில்லியன் யூனிட் மின்சாரம் வாங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | நெய்வேலி அனல் மின் நிலையம் | .. | 2972.854 மி.யூ. |
| 2. | நெய்வேலி அனல் மின் நிலையம் | .. | |
| | பகுதி-1 | .. | 1105.794 மி.யூ. |
| 3. | பகுதி-2 | .. | 1431.727 மி.யூ. |
| 4. | கல்பாக்கம் அணு மின் நிலையம் | .. | 595.527 மி.யூ. |



2001 ஜனவரி 23]

| | | | |
|---|---|---|---|
| 5. | தேசிய அனல் மின் கழகம் | .. | 4657.233 மி.யூ. |
| 6. | மணலி | .. | 30.013 மி.யூ. |
| 7. | தனியார் காற்றாலை | .. | 1129.674 மி.யூ. |
| 8. | பாண்டிச்சேரி மின் கழகம் | .. | 35.789 மி.யூ. |
| 9. | இணை உற்பத்தி | .. | 385.031 மி.யூ. |
| 10. | டி.சி.பி.எல். ஹைடெக் | .. | 216.712 மி.யூ. |
| 11. | ஜி.எம்.ஆர். வாசவி | .. | 1300.404 மி.யூ. |
| 12. | மஹாராஷ்டிரம் | .. | 6.827 மி.யூ. |
| 13. | பஞ்சாப் | .. | 73.616 மி.யூ. |
| 14. | கிழக்கு பிராந்தியம் | .. | 734.880 மி.யூ. |
| 15. | மேற்கு பிராந்தியம் | .. | 61.936 மி.யூ. |
| 16. | கைகா அணுமின் நிலையம் | .. | 25.720 மி.யூ. |
| | மொத்தம் | .. | **14763.747 மி.யூ.** |

ஆக, 1999-2000 ஆண்டிற்கான தமிழ்நாடு மின் வாரியத்தின் மொத்த மின்சார பயனீட்டு அளவு 38312.659 மில்லியன் யூனிட் ஆகும்.

**18—**

### முறைசாரா மின்திட்டம்

**வினா 42588—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் முறைசாரா மின் திட்டம் மூலம் மின்சாரம் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) இல்லையெனில், அவ்வகை மின்சாரம் தயாரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2001 ஜனவரி 23

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தின் முறைசாரா மின் திட்டம் மூலம் மின்சாரம் தயாரிக்கும் செயற்குறிப்புகள் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

(இ) தனியார் தொழில் முனைவர்களிடமிருந்து கருத்துக்கள் வந்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**19—**

**பெண் மருத்துவர்**

**வினா 43276—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஏற்காடு அரசு மருத்துவமனைக்கு பெண் நோயாளிகளை கவனிக்க பெண் மருத்துவர் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பெண் மருத்துவரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஏற்காடு அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை 2. இரு ஆண் மருத்துவர்கள் தற்போது பணிபுரிகின்றனர். எந்த ஒரு பெண் மருத்துவரிடமிருந்தும் மாற்றம் கேட்டு விண்ணப்பம் பெறப்படவில்லையாதலால், பெண் மருத்துவரை பணியமர்த்தவில்லை.

**20—**

**பள்ளிக் கட்டடங்கள்**

**வினா 16370—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 23]

(அ) எடப்பாடி தொகுதியில், பெரும்பாலான ஆரம்பப் பள்ளி கட்டடங்கள் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீர் செய்ய அரசு முன்வருமா?

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் 1997-1998ஆம் ஆண்டில் 40 ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கட்டடங்களும், 1999-2000ஆம் ஆண்டில் 36 பள்ளிக் கட்டடங்களும் பழுதுநீக்கம் செய்யப்பட்டு உள்ளன. தற்போது 8 பள்ளிக் கட்டடங்களை பழுது நீக்க ரூ.76,000/- மதிப்பீட்டில் பழுதுபார்க்க ஒன்றியக் குழு மூலம் நிர்வாக அனுமதி பெற்று டெண்டர் மூலம் கல்வி நிதியிலிருந்து பணிகள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் 56 ஆரம்பப் பள்ளிக் கட்டடங்கள் பழுதடைந்துள்ளன. அவற்றை ரூ.15,60,000/- ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் சீர் செய்ய தற்போது இயலாது.

**21—**

**தெரு விளக்கு**

**வினா 26536—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரகாசனஅள்ளி ஊராட்சியின் பாலிக்காடு கிராமத்தில் (1) கம்பன் தெரு (2) கோவிந்தன் தெரு ஆகிய இடங்களில் தெரு விளக்கு அமைக்காமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தெரு விளக்குகள் அமைக்கப்படும்?

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரகாசனஅள்ளி ஊராட்சியில் போதுமான நிதிவசதி இல்லை. எனவே, அங்கு தற்சமயம் தெருவிளக்கு அமைக்க கருத்துரு ஏதுமில்லை.

[2001 ஜனவரி 23

22—

### தெரு விளக்குகள்

**வினா 26537—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், அரகாசனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த எர்ரம்பட்டி கிராமத்தில் (1) ஆட்டுக்காரன்கொட்டாய் பகுதி, (2) எர்ரம்பட்டி மேல் வீதி, (3) எர்ரம்பட்டி கீழ் வீதி (4) இராமர் கொட்டாய் பகுதி ஆகிய இடங்களில் இதுவரை தெரு விளக்குகள் அமைக்காமலிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் அங்கு தெருவிளக்கு அமைக்கப்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரகாசனஅள்ளி ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே, அவ்விடங்களில் தெருவிளக்குகள் அமைக்கும் கருத்துரு ஏதுமில்லை.

23—

### விளக்கு வசதிகள்

**வினா 26540—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பிளியானூர் ஊராட்சியில் தோப்பு கொல்லை கொட்டாய் கிராமத்தில் (1) அண்ணாமலை வீடு அருகில், (2) சுப்பு கோவிந்தன் கொட்டாய் பகுதியில் தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2001 ஜனவரி 23]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பிளியானூர் ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, தற்சமயம் அவ்விடங்களில் தெரு விளக்கு அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

24—

### தெரு விளக்கு

**வினா 26541—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பொண்ணாகரம் தொகுதி, பத்தரஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த பத்தரஅள்ளி கிராமத்தில் தாடிக்காரன் தெருவில் தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பத்தரஅள்ளி ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே தற்சயம் தெருவிளக்கு அமைக்கும் கருத்துரு ஏதுமில்லை.

25—

### தெரு விளக்கு வசதி

**வினா 26542—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 23

(அ) தருமபுரி மாவட்டம், பத்தரஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த ஆரல்குந்தி கிராமம், பெருமாள் வீடு அருகில், ஊர்நத்தம் அருகில், மாரியம்மன் கோவில் அருகில், மாரமன் வீடு அருகில், அம்மாசிநடராயர் வீடு அருகில் தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பத்தரஅள்ளி ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே, தற்சமயம் அவ்விடங்களில் தெருவிளக்கு அமைக்கும் கருத்துரு இல்லை.

**26—**

**படிக்கட்டுகள்**

**வினா 32032—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலியிலுள்ள திருவள்ளுவர் மேம்பாலத்தையொட்டி பாதசாரிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள பாலத்தில் படிக்கட்டுகள் உடைந்து சிதைந்து இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தப் படிக்கட்டுகள் எப்போது சீரமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாதசாரிகளுக்கான பாலம் ரயில்வே துறையின் பராமரிப்பில் உள்ளது. எனவே, உடைந்த படிக்கட்டுகளை ரயில்வே துறைதான் சரி செய்ய வேண்டும்.



2001 ஜனவரி 23]

**27—**

**தெருவிளக்கு வசதி**

**வினா 34241—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 13-வது வார்டு ராஜமாதா நகரில் தெருவிளக்கு வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு எப்போது தெருவிளக்கு அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகரம் 13-வது வார்டு ராஜமாதா நகரில் 12 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு தற்போது உபயோகத்தில் உள்ளன.

**28—**

**அடிப்படை வசதிகள்**

**வினா 34478—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சி எல்லைக்குள் எத்தனை குடிசைப் பகுதிகள் இருக்கின்றன?

(ஆ) அவற்றிற்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகராட்சி எல்லைக்குள் 88 குடிசைப் பகுதிகள் உள்ளன. அவற்றில் 51 குடிசைப் பகுதிகளுக்கு அடிப்படை

வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மீதியுள்ள 27 குடிசைப் பகுதிகளுக்கு வரும் நிதியாண்டில் நகராட்சியின் நிதி நிலைமையை அனுசரித்து அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

**29—**

## மின் இணைப்பு

**வினா 34961—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருப்பூர் காளிபாளையம் ஊராட்சியில், ஊராட்சி மேல்நிலைத் தொட்டிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படாமல் உள்ளதால் குடிநீர் விநியோகம் தடைபட்டுள்ளதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், அதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த, காளிபாளையம் ஊராட்சியிலுள்ள காளிபாளையம், காளிபாளையம் புதூர், காளிபாளையம் ஆதிதிராவிடர் காலனி, கிழக்கு சிரணம்பாளையம், தெற்கு சிரணம்பாளையம், வாரணாசிபாளையம் மற்றும் பள்ளபாளையம் ஆகிய 7 குடியிருப்புகள் திருப்பூர் மற்றும் 412 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பயன்பெறும் குடியிருப்புகளாகும். அவை ஒவ்வொன்றிலும் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, கூட்டுக் குடிநீர் திட்ட நீர் எடுப்பு முனை 5ல் இருந்து 3/99 முதல் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது.





நீர் எடுப்பு முனை எண் 5ல் காளிபாளையம் ஊராட்சியானது கடைக்கோடியில் அமைந்துள்ளதால் மேற்கண்ட 7 குடியிருப்புகளில் உள்ள மேல்நிலைத் தொட்டிகளுக்கு சீராக நீர் ஏற்ற முடியாமல் அவ்வப்போது குடிநீர் விநியோகம் தடைபட்டு வந்தது.

இதன்காரணமாக, பிரதான குடிநீர்க் குழாயின் பாதையில் நெருப்பெரிச்சல் ஊராட்சியிலுள்ள பூலுவப்பட்டி குடியிருப்பில் 2.25 லிட்டர்கள் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியும், நீரேற்ற அறையும் கட்டப்பட்டது. இதற்கான மின் இணைப்பு 3/2000-ல் பெறப்பட்டு சீரான மின் அழுத்தமும் உறுதி செய்யப்பட்டு காளிபாளையம் ஊராட்சியில் உள்ள மேற்கண்ட 7 குடியிருப்புகளில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு நீரேற்றப்பட்டு 3/2000 முதல் குடிநீர் விநியோகம் சீராக நடைபெற்று வருகிறது.

**30—**

## கூடுதல் வகுப்பறைகள்

**வினா 35110—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருப்பூர் 43-வது வார்டு செல்லப்புரம், ஆரம்பப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருப்பூர் நகராட்சி வார்டு எண் 43-க்குட்பட்ட செல்லப்புரம் ஆரம்பப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டுவதற்கான திட்டம் எதுவும் தற்போது இல்லை.

**31—**

## சாலையைச் செப்பனிடல்

**வினா 36154—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 23

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை பிராமண சமுதாய மக்களுக்குப் பாத்தியப்பட்ட, புதூர் பேரூராட்சிப் பகுதியில் அமைந்துள்ள சுடுகாட்டிற்குச் செல்லும் சாலையை செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள, மேடுபள்ளமாக இருந்த சாலை புதூர் பேரூராட்சியால் செப்பனிடப்பட்டு தற்போது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**32—**

**தூர் வாருதல்**

**வினா 36202—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துவாச்சாரி பகுதி 1 மற்றும் 2-ல் மழை நீர் கால்வாய்கள் தூர்ந்து விட்டதால் மழைநீர் தெருக்களில் வருவதைத் தவிர்க்க கால்வாய்களை தூர்வார வேண்டியது குறித்து அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சத்துவாச்சாரி பேரூராட்சி, பகுதி 1 மற்றும் 2-ல் மழை நீர் கால்வாய்கள் தூர்ந்து விட்டதைத் தொடர்ந்து கால்வாய்களைத் தூர் வாரும் பணி 15-10-2000 அன்று முடிவுற்றது.



2001 ஜனவரி 23]

**33—**

**கழிப்பிட வசதி**

**வினா 36208—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மா.பா. சாரதி மாளிகையில் உள்ள கழிப்பிடங்கள் உபயோகமற்ற நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) இதனால் வியாபாரிகள், பொது மக்கள் அவதிக்குள்ளாவதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மா.பா. சாரதி மாளிகையில் உள்ள கழிப்பிடங்கள் தற்போது பயன்படுத்தத் தக்கவாறு நல்ல நிலையில் உள்ளன. வணிகர்கள் மற்றும் பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் நகராட்சியின் துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு நாள்தோறும் இக்கழிப்பிடங்கள் சுத்தம் செய்யப்படுகின்றன.

**34—**

**கட்டணம்**

**வினா 37173—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வழங்கும் ஆயிரம் லிட்டர் குடிநீருக்கு வசூலிக்கும் கட்டணம் எவ்வளவு?

(ஆ) ஆம் எனில், அந்தத் தொகையை நலிந்த நிதிநிலையிலுள்ள நகராட்சிகளுக்கு குறைத்து ரூபாய் ஒன்று என வசூலிக்க அரசு முன்வருமா?

[2001 ஜனவரி 23

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வழங்கும் ஆயிரம் லிட்டர் குடிநீருக்கு ரூ.3.50 என வசூல் செய்யப்படுகிறது.

(ஆ) இத்தொகையினை நலிந்த நிதிநிலையிலுள்ள நகராட்சிகளுக்கு குறைத்து ரூபாய் ஒன்று என வசூலிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தற்போது உத்தேசமில்லை. மேலும் குடிநீர்த் திட்டங்களை நல்ல முறையில் பராமரிப்பதற்கு குறைந்த அளவில் நிர்ணயம் செய்யப்பட்ட இந்தக் குடிநீர்க் கட்டணம் மிகவும் இன்றியமையாதது ஆகும். செலவழிக்கப்பட்ட பராமரிப்புத் தொகையின்படி மாதம் ஒன்றுக்கு சராசரியாக 1000 லிட்டர் குடிநீருக்கு ரூ.5.00-க்கு மேற்பட்டு வருகிறது. இருப்பினும் இதனை ரூ.3.50 என குறைத்து அனைத்து நகர உள்ளாட்சிகளிடமிருந்து வாரியம் வசூல் செய்கிறது.

**35—**

### குப்பைகளை அகற்றுதல்

**வினா 37696—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையிலுள்ள குடியிருப்புப் பகுதிகளிலிருந்து குப்பைகளை லாரிகளைக் கொண்டு அகற்ற, அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் சி.எம்.சி. மருத்துவமனை குடியிருப்புப் பகுதிகளில் சேரும் குப்பைகள் அனைத்தும் அவ்வப்போது அகற்றப்பட்டு, அப்பகுதி தற்போது சுத்தமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.



2001 ஜனவரி 23]

**36—**

### ஆக்கிரமிப்புகள்

**வினா 37700—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் தெற்குப் பகுதியில் அரசு மருத்துவமனை ரோட்டிலும், பில்டர்பெட் சாலையிலும் ஆக்கிரமிப்புகள் நிறைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) அதை அகற்றி மக்கள் போக்குவரத்திற்குத் தடையின்றி இருக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் நகராட்சிக்குட்பட்ட பில்டர்பெட் ரோட் மற்றும் அரசு மருத்துவமனை சாலையில் நிரந்தர ஆக்கிரமிப்பு ஏதுமில்லை. தற்காலிக ஆக்கிரமிப்புகள் அவ்வப்போது அகற்றப்படுகின்றன.

**37—**

### தனியார் ஆக்கிரமிப்புகள்

**வினா 37702—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான ஓட்டேரியில் சுமார் 40 ஏக்கர் நிலம் தனியார்கள் ஆக்கிரமிப்பு செய்து பயிர் தொழில் மற்றும் செங்கல் சூளை தொழில் செய்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை அகற்ற அரசு மேற்கொள்ளும் முயற்சி என்ன?

[2001 ஜனவரி 23

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான ஓட்டேரியில் 107.53 ஏக்கர் பரப்பு உள்ள நீர் தங்கும் இடத்திலோ, 17.57 ஏக்கர் பரப்புள்ள நீர்ப் பிடிப்பு இடத்திலோ எந்தவிதமான. ஆக்கிரமிப்புகளும் இல்லை.

**38—**

**ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்**

**வினா 37983—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான ஓட்டேரி பகுதியை நீர்ப் பிடிப்புப் பகுதியாக அறிவிக்கப்பட்டிருந்தும் பாதி இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பகுதியில் தற்போது ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை.

**39—**

**தண்ணீர் வசதி**

**வினா 38004—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வேலூர் அல்லாபுரம் பேரூராட்சிக்கு உட்பட்ட டி.கே.எம். கல்லூரி சாலை, கமலப்பிள்ளை தெரு



2001 ஜனவரி 23]

முதலியவற்றில் தெருக் குழாய்களிலும் வீட்டு இணைப்புக் குழாய்களிலும் தண்ணீர் வராதது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அல்லாபுரம் பேரூராட்சியில் டி.கே.எம். கல்லூரி சாலை, கமலப்பிள்ளை தெருவிற்கு குடிநீர் சீராக செல்ல வேண்டி புண்ணியகோட்டி தெரு, நடேசமுதலி தெரு வழியாக பைப்லைன் இணைத்து கேட்வால்வுகள் பொருத்தி தெருக் குழாய்களிலும் வீட்டுக் குடிநீர் இணைப்புகளிலும் குடிநீர் வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வேலூர் நகராட்சி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் குடிநீர் பெற்று சுழற்சி முறையில் 5 நாட்களுக்கு ஒரு முறை 60 நிமிடம் குடிநீர் அளிக்கப்படுகிறது. தவிர அல்லாபுரம் பேரூராட்சிக்குக் குடிநீர் வசதி செய்ய 2000-2001 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் டி.கே.எம். கல்லூரி சாலையில் ஓர் ஆழ்துளைக் கிணறும், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ் ஓர் ஆழ்துளைக் கிணறும், மற்றும் கமலப்பிள்ளை தெருவில் பேரூராட்சியினால் ஓர் ஆழ்துளைக் கிணறும் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**40—**

**கழிவுநீர்க் கால்வாய்**

**வினா 38010—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வேலூர் சத்துவாச்சாரி வீட்டு வசதி குடியிருப்புப் பகுதி 3-ல் கழிவு நீர்க் கால்வாய் இல்லாததால் கொசுக்கள் பெருக்கமடைந்து மலேரியா காய்ச்சல் பரவும் அபாயம் இருப்பது பற்றி அரசு அறியுமா?

[2001 ஜனவரி 23

(ஆ) ஆம் எனில், எப்போது கழிவு நீர்க் கால்வாய் கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சத்துவாச்சாரி வீட்டு வசதி வாரிய குடியிருப்புப் பகுதி 3-ல் கழிவு நீர்க் கால்வாய் கட்டுவதற்கு வழி வகை இல்லாத காரணத்தால் ஸ்டோன்வேர் பைப் மூலம் கழிவு நீர் அகற்றப்பட்டு வருகிறது. மலேரியா திட்ட தடுப்புப் பணியாளர்களின் மூலம் கொசு மருந்து தெளிக்கப்பட்டு வருவதால் மலேரியா காய்ச்சல் ஏற்படும் அபாயம் இல்லை.

**41—**

**நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 38355—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, டேம்காடு கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி அமைக்காமல் இருப்பது அரசு கவனத்திற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, டேம்பாடு கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இல்லாமல் இருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) இக்குடியிருப்பின் மொத்த மக்கட்தொகை 60 ஆகும். இக்குடியிருப்பின் மக்கட்தொகை மிகக் குறைவாக உள்ளதால், வாரிய



2001 ஜனவரி 23]

விதிமுறைகளின்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட இயலாது. எனவே, இக்குடியிருப்பிற்கு ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் கையிறைப்பான் திட்டம் அமைத்து மக்களுக்குக் குடிநீர் வழங்கலாம்.

**42—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 38356—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தின்னம்பள்ளி ஊராட்சியில் தோரூர் புதிய காலனிக்கு குடிநீர்ப் பற்றாக்குறை அதிகமிருப்பதால், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தின்னம்பள்ளி ஊராட்சியில் தோரூர் புதிய காலனிக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியினை அமைக்கும் பிரேரணை எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை. இக்குடியிருப்பின் மொத்த மக்கட்தொகை 65 ஆகும். மக்கட்தொகை குறைவாக உள்ளதால் இக்குடியிருப்பிற்கு மேல்நிலைத் தொட்டி அமைக்க வழிவகையில்லை. எனவே, ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் கையிறைப்பான் திட்டம் அமைத்து இக்குடியிருப்பிற்கு குடிநீர் வழங்கலாம்.

**43—**

**நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 38357—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 23

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, ஜகந்நாதன் கொட்டாய் (மூங்கில் மடுவு) கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, ஜகந்நாதன் கொட்டாய் கிராமத்தின் குடிநீர் பற்றிய பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) 1992 ஆம் ஆண்டு குடிநீர் நிலை மறு ஆய்வின்படி இக்குடியிருப்பு குறியீட்டுப் புத்தகத்தில் இடம்பெறாத புதிய குடியிருப்பாகும். இக்குடியிருப்பின் மொத்த மக்கட்தொகை 80 ஆகும். இக்குடியிருப்பில் மக்கள் தொகை மிகக் குறைவாக இருப்பதால், வாரிய விதிமுறைகளின்படி இக்குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வழிவகையில்லை. எனவே, ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் இக்குடியிருப்பிற்கு கையிறைப்பான் திட்டம் மூலம் மக்களுக்குக் குடிநீர் வழங்கலாம்.

**44—**

## குடிநீர் வசதி

**வினா 38358—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, வடக்கத்தியான் கொட்டாய் கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?



2001 ஜனவரி 23]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, வடக்கத்தியான் கொட்டாய் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இல்லாத பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) இக்குடியிருப்பின் தற்போதைய மொத்த மக்கட்தொகை 70 ஆகும். இக்குடியிருப்பின் மக்கட்தொகை குறைவாக இருப்பதால், இக்குடியிருப்பிற்கு நடைமுறையிலுள்ள வாரிய விதிமுறைகளின்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வழிவகையில்லை. எனவே, இக்குடியிருப்பிற்கு ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் கையிறைப்பான் திட்டம் மூலம் மக்களுக்குக் குடிநீர் வழங்கலாம்.

**45—**

## குடிநீர் தொட்டி

**வினா 38359—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, தொருமன் கொட்டாய் கிராமம், அஜ்ஜனஅள்ளி காலனி கிராமம், அன்னை சுந்தராம்பாள் நகர் மற்றும் அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, மோரிக்காடு ஆகிய இடங்களில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, தொருமன் கொட்டாய் கிராமம், அஜ்ஜனஅள்ளி காலனி

கிராமம், அன்னை சுந்தராம்பாள் நகர் மற்றும் அஜ்ஜன அள்ளி ஊராட்சி, மோரிக்காடு ஆகிய இடங்களில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பற்றிய பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) 1992 ஆம் ஆண்டு குடிநீர் மறு ஆய்வின்படி மேற்குறிப்பிட்டுள்ள குடியிருப்புகள் அனைத்தும், குறியீட்டுப் புத்தகத்தில் இடம் பெறாத புதிய குடியிருப்புகள் ஆகும். இக்குடியிருப்புகளின் மொத்த மக்கட்தொகை பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| தொருமன் கொட்டாய் | .. | 75 |
| அஜ்ஜன அள்ளி | .. | 50 |
| அன்னை சுந்தராம்பாள் நகர் | .. | 60 |
| மோரிக்காடு | .. | 80 |

இக்குடியிருப்புகளில் மக்கட்தொகை குறைவாக உள்ளதால், வாரிய விதிமுறைகளின்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு வகையில்லை. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் கையிறைப்பான்கள் அமைத்து குடிநீர் வழங்கலாம்.

46—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 38367—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, மாங்கரை காலனி கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, மாங்கரை காலனி கிராமத்தில் குடிநீர் பற்றிய பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) 1992 ஆம் ஆண்டு குடிநீர் நிலை மறு ஆய்வின்படி, இக்குடியிருப்பு குறியீட்டுப் புத்தகத்தில் இடம் பெறாத புதிய குடியிருப்பாகும். இக்குடியிருப்பின் மொத்த மக்கட்தொகை 450 ஆகும்.

அடுத்து வரும் நிதியாண்டில் தேவை மற்றும் தகுதியின் அடிப்படையில் அரசின் நிதி ஒதுக்கீடு பெற்று நீராதாரம் உருவாக்கப்பட்டு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.

47—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 38369—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சி, பாண்டூர் கெட்டு கோமாளி கொட்டாய் (நல்லாம்பட்டி) கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சி, பாண்டூர் கெட்டு கோமாளி கொட்டாய் (நல்லாம்பட்டி) கிராமத்தில் குடிநீர் பற்றிய பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

[2001 ஜனவரி 23

(ஆ) 1992 ஆம் ஆண்டு குடிநீர் நிலை மறு ஆய்வின்படி இக்குடியிருப்பு குறியீட்டுப் புத்தகத்தில் இடம் பெறாத புதிய குடியிருப்பாகும். இக்குடியிருப்பின் மொத்த மக்கட்தொகை 90 ஆகும். இக்குடியிருப்பில் மக்கட்தொகை குறைவாக இருப்பதால், நடைமுறையிலுள்ள வாரிய விதிமுறைகளின்படி இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு வழிவகையில்லை. எனவே, இக்குடியிருப்பிற்கு ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் கையிறைப்பான் திட்டம் அமைத்து குடிநீர் வழங்கலாம்.

48—

**நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 38370—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சி, சத்திரியர் நகர் (எஸ். கல்லாத்திரம்பட்டி) கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சி, சத்திரியர் நகர் (எஸ். கல்லாத்திரம்பட்டி) கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பற்றிய பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) 1992 ஆம் ஆண்டு குடிநீர் மறு ஆய்வின்படி இக்குடியிருப்பு குறியீட்டுப் புத்தகத்தில் இடம்பெறாத புதிய குடியிருப்பாகும். எனவே, இக்குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டம் நிறைவேற்றப்படவில்லை. இக்குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 120 ஆகும். தற்போது இக்குடியிருப்பில் இரண்டு கையிறைப்பான்கள் பயனில் உள்ளன. இவை தற்போதைய குடிநீர் வசதிக்குப் போதுமானவையாகும்.



2001 ஜனவரி 23]

49—

**நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 38372—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சி, வண்ணாத்திப்பட்டி கொட்டாய் கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சி, வண்ணாத்திப்பட்டி கொட்டாய் கிராமத்தில் குடிநீர்ப் பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) 1992-ம் ஆண்டு குடிநீர் நிலை மறு ஆய்வின்படி, இக்குடியிருப்பு குறியீட்டுப் புத்தகத்தில் இடம் பெறாத புதிய குடியிருப்பாகும். இக்குடியிருப்பின் மொத்த மக்கட்தொகை 65 ஆகும்.

இக்குடியிருப்பின் மக்கட்தொகை மிகக் குறைவாக உள்ளதால் தற்போதைய வாரிய விதிமுறைகளின்படி இக்குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வழிவகையில்லை. எனவே இப்பகுதிக்கு ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் கையிறைப்பான் அமைத்து குடிநீர் வழங்கலாம்.

50—

**நீர்தேக்கத் தொட்டி**

**வினா 38373—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 23

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சி, மாந்தோப்பு கொட்டாய் (பிள்ளைப்பட்டி) கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சி, மாந்தோப்பு கொட்டாய் (பிள்ளைப்பட்டி) கிராமத்தில் குடிநீர் பற்றிய பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) 1992-ஆம் ஆண்டு குடிநீர் நிலை மறு ஆய்வின்படி இக்குடியிருப்பு குறியீட்டுப் புத்தகத்தில் இடம்பெறாத புதிய குடியிருப்பாகும். இக்குடியிருப்பின் மொத்த மக்கட்தொகை 70 ஆகும். இக்குடியிருப்பின் மக்கள் தொகை மிகக் குறைவாக உள்ளதால், வாரிய விதிமுறைகளின்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வழிவகையில்லை. எனவே, இக்குடியிருப்பிற்கு ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் கையிறைப்பான் திட்டம் அமைத்து மக்களுக்குக் குடிநீர் வழங்கலாம்.

## இரண்டாம் பட்டியல்

1—

### சாலை வசதி

**வினா 38409—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வேலூர் சத்துவாச்சாரி பகுதி, 7-வது தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



2001 ஜனவரி 23]

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி பகுதி I-ல், 7-வது தெருவில் அமைக்கப்பட்டுள்ள தார்ச்சாலை நல்ல முறையில் காணப்படுகிறது. எனவே, சிமெண்ட் சாலையாக அமைக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

2—

### நிலம்

**வினா 38522—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சிக்கு குப்பை கொட்டுவதற்கு நிலம் கையகப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சி, நகருக்கு அருகில் உரக்கிடங்கு அமைக்க புதிய இடம் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3—

### இணைப்பு

**வினா 38535—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் சத்துவாச்சாரி பேரூராட்சியிலுள்ள பாப்பாத்தியம்மன் கோயில் தெருவும், நேத்தாஜி நகரும் இணைக்க வழி வேண்டி உள்ளதை அரசு அறியுமா?

[2001 ஜனவரி 23

(ஆ) ஆம் எனில், எப்போது இணைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாப்பாத்தியம்மன் கோயில் தெரு மற்றும் நேத்தாஜி நகருக்கு இடையில் தனியார் நிலம் உள்ளது. மேற்படி இடத்தை தானமாகவோ விலைக்கோ பெற இயலாத நிலையில் உள்ளதால் மேற்கண்ட தெருக்களை இணைக்கும் வாய்ப்பு எழவில்லை.

4—

### குடிநீர் வசதி

**வினா 38536—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் தொரப்பாடி பேரூராட்சியில் வீட்டுக் குழாய் இணைப்புகள் இருந்தும் குழாயில் குடிநீர் வரவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது போதிய அளவு நீர் கிடைப்பதால், அனைத்துத் தெருக்களுக்கும் குடிநீர் குழாயில் விடப்பட்டு வருகிறது. குடிநீர்ப் பிரச்சினை ஏதும் இல்லை.

5—

### காரிய மண்டபம்

**வினா 38540—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 23]

(அ) வேலூர் சத்துவாச்சாரி பேரூராட்சியில் ஆற்றங்கரையில் "காரிய மண்டபம்" கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சத்துவாச்சாரி பேரூராட்சியில் ஆற்றங்கரையில் காரிய மண்டபம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணி 31-3-2000-க்குள் செய்து முடிக்கப்படும்.

6—

### குடிநீர் வசதி

**வினா 38947—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், சேண்பாக்கம் பேரூராட்சியில் விநியோகம் செய்யப்படும் குடிநீர் உப்புத்தன்மை மிகுதியானதாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) நல்ல குடிநீர் வழங்க அரசு எப்போது நடவடிக்கை எடுக்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேண்பாக்கம் பேரூராட்சியில் பொதுமக்களுக்குக் குடிநீர் விநியோகித்து வந்த கிணற்றில் நிலத்தடி நீர் குறைந்து விட்டதால் குடிநீர் உப்புத்தன்மை மிகுதியாக இருந்தது. தற்போது கடந்த மாதம் பெய்த மழையின் காரணமாக நிலத்தடி நீரின் அளவு அதிகரித்திருப்பதால் குடிநீரின் உப்புத்தன்மை மாறி பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் உபயோகம் உள்ளதாக இருக்கிறது.

[2001 ஜனவரி 23

7—

**மலைச்சாலை**

**வினா 38962—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வேலூரில் இருந்து செங்காநத்தம் போகும் மலைச்சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

*(ஆ)* எப்போது அந்தச் சாலை செப்பனிடப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வேலூரிலிருந்து செங்காநத்தம் மலைச்சாலையில் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிவரை 825 மீட்டர் நீளத்திற்கு தார்ச்சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

8—

**பள்ளிக் கட்டடங்கள்**

**வினா 39214—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பள்ளிக் கட்டடங்கள் நகராட்சியிடம் உள்ளதாலும் பள்ளி நிர்வாகம் பள்ளிக்கல்வி இயக்குநரிடம் உள்ளதாலும் பள்ளிக் கட்டடங்கள் பழுதுபார்க்க முடியாமலும், பராமரிக்க முடியாமலும் சீர்கேடுகள் ஏற்பட்டு இடிந்து விழும் நிலையில் இருப்பதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், பள்ளிக் கட்டடங்களை பழுதுபார்க்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நகராட்சி பள்ளிக் கட்டடங்கள் பழுது அடைந்தால் சம்பந்தப்பட்ட நகராட்சிகள் அக்கட்டடங்களை



2001 ஜனவரி 23]

பழுதுபார்க்க ஆகும் செலவினை சொத்து வரியுடன் சேர்த்து வசூலிக்கப்படும் கல்வி வரியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

9—

**நூலகம்**

**வினா 39215—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வேலூர் கோட்டை ரவுண்டில் பாரதியார் சாலையிலுள்ள காந்தி நூலகம் என்ற இடம் படிக்க வசதியற்றதாக உள்ளதை அரசு அறியுமா?

*(ஆ)* அதனை நவீனப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வேலூர் நகராட்சி கோட்டை ரவுண்டில் பாரதியார் சாலையிலுள்ள காந்தி நூலகம் நகராட்சியின் நிர்வாகத்தில் உள்ளது. இதில் படிப்பதற்கு வசதிக்குறைவு ஏதுமில்லை. அதன் அருகில் வேலூர் நகராட்சியின் நீர் உந்து நிலையம் உள்ளது. நூலகத்தை விரிவுபடுத்த இடவசதி இல்லை. எனவே, அதனை நவீனப்படுத்த இயலாது.

10—

**கட்டணம்**

**வினா 39305—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 23

(அ) எடப்பாடி நகராட்சி வீட்டிணைப்புக்கு குடிநீர் வைப்புக் கட்டணத் தொகை ரூ. 2,000 வசூல் செய்கிறார்கள் என்பதை அரசு அறியுமா?

(ஆ) அதைக் குறைத்து ரூ. 1,000 வைப்புத்தொகையை வாங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகராட்சியில் வீட்டிணைப்புக்கு குடிநீர்க் கட்டண வைப்புத்தொகை ரூ. 2,000 வசூல் செய்து வருவதை குறைத்து ரூ. 1,000 வைப்புத்தொகையாக குறைக்க நடைமுறையிலுள்ள விதிகளில் இடமில்லை.

**11—**

**சாலை**

**வினா—39324—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் சத்துவாச்சாரி பகுதி-1, 7-வது தெருவில் சிமெண்ட் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சத்துவாச்சாரி பகுதி-1-ல் 7-வது தெருவில் தற்போதுள்ள தார்ச்சாலை நல்ல நிலையில் உள்ளதால், சிமெண்ட் சாலையாக மாற்றி அமைக்க அவசியம் எழவில்லை.

**12—**

**மின்சார எரியூட்டு**

**வினா 40041—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 23]

(அ) சென்னையிலுள்ள காசிமேடு பள்ளத்தில் மின்சார எரியூட்டு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) சென்னை காசிமேடு மயானபூமி சென்னையின் வடக்குப் பாகத்தில் அமைந்துள்ளது. காசிமேடு மயானபூமி அளவில் மிகச் சிறியது. அதன் பரப்பளவில், பெரும்பகுதி சமாதிகள் அமைந்துள்ளன. புதைப்பதற்குக்கூட இங்கு போதுமான இடவசதி இருக்காது. மேலும், மின்சார எரியூட்டு மேடை அமைத்திட ரூ.1 கோடி செலவாகும். காசிமேடு பக்கத்தில் உள்ள மூலக்கொத்தளம் (வண்ணாரப்பேட்டை) மயானபூமியில் ஏற்கெனவே மின்சார எரிமேடை அமைக்கப்பட்டுள்ளது. மேற்காணும் காரணங்களால் மின்சார எரிமேடை அமைத்திட இயலாது.

**13—**

**சுகாதார வசதி**

**வினா 40145—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான அண்ணா பூங்கா குப்பைகள் நிறைந்து சுகாதாரம் அற்ற முறையில் உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சுத்தப்படுத்தி பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் நவீனப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2001 ஜனவரி 23

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான அண்ணா பூங்காவை உருவாக்கிச் செயல்படுத்தி ஒப்படைக்கும் திட்டத்தின்கீழ் அரசாணை எண் 19, ந.நி.(ம) கு.வ. (மாந.2) துறை, நாள் 17-5-1999-ல் ஒப்பளித்தபடியும் அரசு கடிதம் எண் 35689/மாந2/99, நாள்: 3-5-2000-இல் வெளியிடப்பட்ட நிபந்தனைகளின்படியும் பணி உத்தரவு வழங்கப்பட்டு, நவீன முறையில் பூங்கா சீரமைக்கப்பட்டது. 24-9-2000 அன்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டு பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் செயல்படுகிறது.

**14—**

### முட்புதர்களை நீக்குதல்

**வினா 40160—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சிக்குட்பட்ட ஜலகண்டபுரம் ரோடு, க. புதூரில் உள்ள சுடுகாட்டில் முட்புதர்கள் அதிகம் உள்ளதால் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்குள்ள முட்புதர்கள், முள்செடிகளை வெட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சிக்குட்பட்ட ஜலகண்டபுரம் ரோடு, க. புதூரில் உள்ள சுடுகாட்டில் பொதுமக்கள் உபயோகிக்கும் இடங்களிலுள்ள முட்புதர்கள் அகற்றப்பட்டுவிட்டன.



2001 ஜனவரி 23]

**15—**

### குடிநீர்

**வினா 41553—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாநகராட்சி 39-ஆவது வார்டுக்கு எடமலைப்பட்டி புதூரில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியில் இருந்து காவிரி குடிநீர் கிடைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு 39-ல் பிராட்டியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் எடமலைப்பட்டி புதூரில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மூலம் மேற்படி பகுதிகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**16—**

### வேலைவாய்ப்பு

**வினா 41573—திரு. டி. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நகராட்சிகளுக்கு, பேரூராட்சிகளுக்கு குடிநீர்ப் பிரிவிலும், சுகாதாரப் பிரிவிலும் தேவையான ஊழியர்களை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நகராட்சியில் 1-10-1996-க்கு முன்பிருந்தும் பேரூராட்சிகளில் 31-12-1996-க்கு முன்னிருந்தும் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் தற்காலிகப் பணியாளர்களை பட்டியலிட்டு அவர்களின் தகுதிக்கேற்ப சம்பந்தப்பட்ட நகராட்சிகள்/பேரூராட்சிகளில் அவ்வப்போது ஏற்படும் காலிப்பணியிடங்களில் (ஆரம்ப நிலைப் பணியிடங்களில் மட்டும்) முறையாக நியமனம்

[2001 ஜனவரி 23

செய்துகொள்ளலாமெனவும் மேற்படி பட்டியலில் இடம் பெற்றுள்ள அனைத்து தினக்கூலிப் பணியாளர்களும் முறையாக பணியிடங்களில் நியமனம் செய்யப்படும் வரையில் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் புதிய நியமனங்கள் செய்யக்கூடாது எனவும் 27-5-1999-ஆம் நாளிட்ட நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கு துறையின் அரசாணை நிலை எண் 125-ல் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி ஆணையின் பிரிவிலும் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக தேவையான பணியாளர்களைப் பணி நியமனம் செய்ய தற்போது நடவடிக்கை எடுக்க இயலாது.

**17—**

### பூங்காவை அழகுபடுத்துதல்

**வினா 41581—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஜவுளிகளின் நகரம் ஈரோடு நகரில் வ.உ.சி. பூங்கா சீரமைத்து அழகுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஈரோடு வ.உ.சி. பூங்காவில் கூடுதலாக அலங்கார மின்விளக்கு, புல்தளம், சரிவுகளில் புல்தளம், நீர்த்தூவல் முறையில் தண்ணீர் விநியோகம் மற்றும் பூங்காவின் நடுப்பகுதியில் அமைந்துள்ள கோயிலுக்குச் சென்றுவர தனி வழிப்பாதை அமைத்தல் போன்ற அபிவிருத்திப் பணிகள் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படுகிறது. பூங்கா பராமரிப்பிற்குத் தேவையான சுத்திகரிக்கப்படாத தண்ணீரைக் காவிரி ஆற்றிலிருந்து தனியாக குழாய் மூலம் கொண்டுவரும் பணி ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படுகிறது. பூங்காவில் அமைந்துள்ள பழைய கூண்டுகளை விலங்குகளுக்குத் தேவைப்படும் அளவிற்கு மாற்றி அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பூங்காவைச் சீரமைக்கும் பணியில் முதல் கட்டமாக ரூ.15.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு நகராட்சியால் மேல்நடவடிக்கை தொடரப்படுகிறது.



2001 ஜனவரி 23]

**18—**

### ஊரக மருத்துவர்கள்

**வினா 42264—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழகத்தில் காலமுறை ஏற்ற சம்பளத்தில் பணிபுரியும் ஊரக மருத்துவர்களை முழுநேரம் பணிபுரிய அரசு ஆணையிடுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* ஊராட்சி ஒன்றிய ஊரக மருந்தகங்கள், பகுதிநேர மருந்தகங்கள் ஆகும். தமிழகத்தில் முழுநேர ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மற்றும் துணைச் சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட மருத்துவ வசதி அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள நிலையில், தற்போதிருக்கும் ஊராட்சி ஒன்றிய பகுதிநேர ஊரக மருந்தகங்கள் தொடர்ந்து பகுதிநேர மருந்தகங்களாகவே செயல்பட வேண்டும் என்று அரசாணை (நிலை) எண் 250, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 14-9-2000-ல் ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, ஊரக மருத்துவர்களை முழுநேரம் பணிபுரிய ஆணையிடும் பிரச்சினை எழவில்லை.

*(ஆ)* வினாவுக்கு இடமில்லை.

**19—**

### சந்தை வசதி

**வினா 42647—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினர்க்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* அம்பத்தூர் நகராட்சி முகப்பேர் மேற்குப் பகுதி மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட குடியிருப்புப் பகுதியில் தினசரி மார்க்கெட் அமைக்க அரசு முன் வருமா?

*(ஆ)* ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அம்பத்தூர் நகராட்சி எல்லைக்குள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள முகப்பேர் மேற்கு திட்டப் பகுதியில் தினசரி சந்தைக்கான இடம் எதுவும் வீட்டுவசதி வாரியத்தால் நகராட்சிக்கு ஒப்படைக்கப்படவில்லை. மேலும், தினசரி மார்க்கெட் அமைக்க ஏதுவாக அப்பகுதியில் நகராட்சிக்குச் சொந்தமான இடம் எதுவும் இல்லை. எனவே, அப்பகுதியில் தினசரி சந்தை அமைக்க வாய்ப்பில்லை.

**20—**

### உலர்களம்

**வினா 3581—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒழுங்குமுறை விற்பனைக் குழுக்கள் மூலம் விவசாயிகளுக்கு உலர்களம் அமைத்துக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விற்பனைக் குழுக்கள் மூலம் விவசாயிகளுக்கு உலர்களம் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் தஞ்சாவூர், நாகப்பட்டினம், விழுப்புரம், திருவண்ணாமலை, சேலம் மற்றும் திருவாரூர் ஆகிய 6 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 10 உலர்களங்கள் வீதம் மொத்தம் 60 உலர்களங்கள் ரூ.90 இலட்சம் செலவில் 1997-98 ஆம் ஆண்டில் கட்டி முடிக்க அரசாணை நிலை எண் 285, வேளாண்மைத் துறை நாள்: 15-7-1997-ல் ஆணைகள் வழங்கப்பட்டு, அனைத்து உலர்களங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த உலர்களங்களை உபயோகிக்க விவசாயிகள் எந்தவிதமான கட்டணமும்





செலுத்தத் தேவையில்லை. இவ்வுலர்களங்கள் சம்பந்தப்பட்ட உள்ளூர் பஞ்சாயத்துக்களால் பராமரிக்கப்படும்.

**21—**

### இணை இயக்குநர்

**வினா 39166—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தோட்டக்கலை இணை இயக்குநர் நியமிக்கும் கருத்துரு ஏதும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையில் இல்லை. தஞ்சாவூர் மாவட்டத்தில் தற்போது ஒரு தோட்டக்கலை உதவி இயக்குநர் வாயிலாக அனைத்து தோட்டக்கலைத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**22—**

### மரங்கள்

**வினா 36105—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கல்ராயன் மலையில் வனத் துறைக்குச் சொந்தமாக எத்தனை ஏக்கர் நிலமுள்ளது?

(ஆ) அவற்றில் எத்தனை வகையான மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், கல்ராயன் மலையில் வனத் துறைக்குச் சொந்தமாக 5190.745 ஹெக்டேர் நிலங்கள் காப்புக்காடாக மற்றும் காப்பு வனமாக உள்ளது.

(ஆ) அதில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இன மரங்கள் கீழ்க்கண்ட பரப்பில் பயிரிடப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | மூங்கில் | .. | 571.60 ஹெக்டேர் |
| 2. | பலா | .. | 41.40 ஹெக்டேர் |
| 3. | மருத்துவ தோட்டம் | .. | 40.30 ஹெக்டேர் |
| 4. | புல்வகை | .. | 10.97 ஹெக்டேர் |
| 5. | சில்வர் ஓக் | .. | 70.10 ஹெக்டேர் |
| 6. | கடுக்காய் | .. | 42.00 ஹெக்டேர் |
| | மொத்தம் | .. | 776.37 ஹெக்டேர் |

**23—**

**சந்தன ஆலை**

**வினா 38282—திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி ஒன்றியம், தெக்குப்பட்டு சந்தன ஆலை இலாபத்தில் இயங்குகின்றதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) இந்த ஆலைக்குத் தேவையான சந்தன மரங்கள் இருப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) 1997-98-ல் ரூ. 7.48 இலட்சமும், 1998-99-ல் ரூ.89.39 இலட்சமும் 1999-2000-ல் ரூ.81.99 இலட்சமும் நிகர இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

(இ) திருப்பத்தூர், சேலம் மற்றும் சத்தியமங்கலம் அரசு சந்தன மரக் கிடங்குகளில் தேவையான சந்தனக் கட்டைகள் உள்ளன. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தில் கோரிக்கையின் பேரில் வனத் துறையின் மூலம் வழங்கப்படுகிறது.

**24—**

**இறந்தவர்கள்**

**வினா 21743—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1997-98-ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை இரயில் பாதையை கடக்கும்போது இரயிலில் அடிபட்டு இறந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) இந்த இறப்பைத் தடுக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்னென்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ)

| | 1997 | | 1998 | |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| சென்னை இரயில்வே காவல் மாவட்டம் | 1036 | 167 | 711 | 137 |
| திருச்சி இரயில்வே காவல் மாவட்டம் | 328 | 101 | 173 | 58 |
| மொத்தம் | 1364 | 268 | 834 | 195 |

(ஆ) இறப்பைத் தடுக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆளில்லா சந்திக்கடவுகளில் உள்ள குறைபாடுகளை நீக்க இரயில்வே துறை அலுவலர்கள், ஆளில்லா சந்திக்கடவுகளில், சிறப்பு ஆய்வுகள் செய்யப்படுகின்றன. கண்காணிப்பாளர்கள் பாதுகாப்பு தணிக்கை செய்கின்றனர். வாகன ஓட்டுநர்கள் மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு, விபத்துக்களைத் தடுப்பது குறித்து ஆலோசனை வழங்கப்படுகிறது.

இரயில் என்ஜின் ஓட்டுநர்கள் ஆளில்லா சந்திக்கடவுகளை கடக்கும்போது தொடர்ந்து ஊதல் ஒலிக்கச் செய்யும்படி அறிவுறுத்தப்படுகின்றனர். மேலும் விபத்துக்களைத் தடுக்க பாதுகாப்பு குறித்து சுவரொட்டிகள் பொது இடங்களில் ஒட்டப்பட்டும், தொலைக்காட்சிகள் மூலமாகவும், திரையரங்குகளில் விளம்பரங்கள் மூலமாகவும் அறிவுரை வழங்கப்படுகிறது.

இரயில் வருவது நன்கு தெரியும்படி இரயில் நிலையத்தில் தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

இரயில்வே துறை கண்காணிப்பாளர்கள், போக்குவரத்துக் கழக நிலையங்களுக்குச் சென்று சாலையில் செல்பவர்களுக்கு ஆளில்லா சந்திக்கடவுகளைக் கடந்துசெல்வது குறித்து பயிற்சி அளிக்கின்றனர்.

**25—**

**கட்டட வசதி**

**வினா 35995—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், கண்டிதம்பட்டு ஊராட்சியில் உள்ள கூட்டுறவு அங்காடிக்கு நிரந்தரக் கட்டட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், கண்டிதம்பட்டு ஊராட்சியில் உள்ள நியாயவிலைக் கடைக்கு நடப்பு நிதியாண்டில்





சொந்தக் கட்டடம் கட்டித்தர திட்ட அலுவலர், தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு தஞ்சாவூர் மண்டல இணைப் பதிவாளரால் 18-8-2000 தேதியிட்ட கடிதத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**26—**

**சொந்தக்கட்டடம்**

**வினா 35996—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதியில் வாடகை கட்டடத்தில் இயங்கும் நியாயவிலைக் கடைகள் எத்தனை?

(ஆ) இவைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் சட்டமன்றத் தொகுதியில் 49 நியாயவிலை அங்காடிகள் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன.

(ஆ) இந்த 49 அங்காடிகளில் இவ்வாண்டில் 7 அங்காடிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு திட்ட அலுவலர், தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு தஞ்சாவூர் மண்டல இணைப் பதிவாளரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மற்ற அங்காடிகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கு வரும் ஆண்டுகளில் பரிந்துரைக்க இணைப் பதிவாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**27—**

**அங்காடிக்குக் கட்டடம்**

**வினா 36717—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 23

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், சங்கரனார் குடிகாடு கிராமத்தில் உள்ள அமுதம் அங்காடிக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், சங்கரனார் குடிகாடு கிராம நியாயவிலைக் கடைக்கு நடப்பு நிதியாண்டில் சொந்தக் கட்டடம் கட்டித்தர திட்ட அலுவலர், தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு தஞ்சாவூர் மண்டல இணைப் பதிவாளரால் 18-8-2000 தேதியிட்ட கடிதத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**28—**

## கட்டட வசதி

**வினா 38722—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், வெங்கரை ஊராட்சியில் கோட்டைக்காடு கிராமத்தில் கூட்டுறவு அங்காடிக்குக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், வெங்கரை கோட்டைக்காடு நியாயவிலைக் கடைக்கு நடப்பு நிதியாண்டில் சொந்தக் கட்டடம் கட்டித்தர, திட்ட அலுவலர், தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு தஞ்சாவூர் மண்டல இணைப் பதிவாளரால் 18-8-2000 தேதியிட்ட கடிதத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.



2001 ஜனவரி 23]

**29—**

## கட்டட வசதி

**வினா 39179—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பஞ்சநதிக்கோட்டை ஊராட்சியில் காசாநாடு தெக்கூர் அமுதம் அங்காடிக்குக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பஞ்சநதிக்கோட்டை ஊராட்சி, காசாநாடு தெக்கூர் கூட்டுறவு அங்காடிக்கு நடப்பு நிதியாண்டில் முன்னுரிமை கொடுத்து கட்டடம் கட்டுவதற்கு தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு தஞ்சை மண்டல இணைப் பதிவாளரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**30—**

## அங்காடிக்குக் கட்டட வசதி

**வினா 39180—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பஞ்சநதிக்கோட்டை ஊராட்சியில் கருக்காக்கோட்டை கிராமத்திலுள்ள அங்காடிக்கு கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பஞ்சநதிக்கோட்டை ஊராட்சியில் கருக்காக்கோட்டை நியாயவிலைக் கடைக்கு, நடப்பு

[2001 ஜனவரி 23

நிதியாண்டில் அரசு கட்டடம் கட்டுவதற்குத் திட்ட அலுவலர், தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களுக்கு தஞ்சாவூர் மண்டல இணைப் பதிவாளரால் 16-8-2000 தேதியிட்ட கடிதத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**31—**

**சொந்தக் கட்டடம்**

**வினா 39735—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், திருக்காலூர்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம் நடப்பு நிதியாண்டில் (2000-2001) கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், திருக்காலூர்பட்டியில் 1999-2000 ஆண்டிலேயே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தெரிவு செய்யப்பட்டு முன்மொழிவுகள் பெறப்பட்டு, அதற்கான நிதி ஒதுக்கீட்டிற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**32—**

**வீடுகள் கட்டுதல்**

**வினா 36230—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் மொத்தமுள்ள குடிசைப்பகுதிகளில் வாழும் மக்கட்தொகை எவ்வளவு?

(ஆ) அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2001 ஜனவரி 23]

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) 1988-ஆம் ஆண்டு நடைபெற்ற கணக்கெடுப்பின்படி சேலம் மாநகரில் உள்ள குடிசைப்பகுதிகளில் வாழும் மக்கட்தொகை 44,315.

(ஆ) தற்போதைக்கு இல்லை.

**33—**

**விடுதிக்குக் கட்டடம்**

**வினா 36424—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு சத்திரம் மாணவர் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு சத்திரம் மாணவர் விடுதி அரசினால் நடத்தப்படுவது அல்ல. இவ்விடுதி, தஞ்சாவூர் சத்திரம் நிர்வாகத்தால் நடத்தப்படுகிறது. தற்போது விடுதி இயங்கிவரும் கட்டடத்திற்குச் சீர்செய்யும் வேலை நடைபெற்று முடிவுறும் தருவாயில் உள்ளது.

**34—**

**தரிசு நிலங்கள்**

**வினா 38679—திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

**(அ) அரசுக்குத் தேவையில்லா மானாவாரி தரிசு நிலங்களைத் தனியாருக்கு விவசாயம்** செய்ய விற்கும் செயற்குறிப்பு அரசிடம் **உள்ளதா?**

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2001 ஜனவரி 23

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆட்சேபணையற்ற மற்றும் பொது காரியங்களுக்கு தேவைப்படாத அரசுப் புறம்போக்கு நிலங்கள் தீர்வை ஏற்பட்ட தரிசாக வகைமாற்றம் செய்யப்பட்டு, தகுதிவாய்ந்த நிலமற்ற ஏழை மக்களுக்கு விவசாயம் செய்வதற்காக ஒப்படை செய்யப்படுகின்றன. அதனால் அரசுக்குத் தேவையில்லா மானாவாரி தரிசு நிலங்களைத் தனியாருக்கு விவசாயம் செய்ய விற்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**35—**

**தமிழ்நாடு சீட்டுக் கழகம்**

**வினா 39975—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சீட்டுக் கழகம் லிமிடெட் என்ற அரசு நிறுவனம் கலைக்கப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது, என்ன காரணத்தால் கலைக்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திரு. கே.வி. இராமநாதன், இ.ஆ.ப., தலைமையிலான கமிட்டி சீட்டு நடத்துவது அரசுக்கு உகந்த தொழில் அல்லவென்றும், தனியார் சீட்டு நிறுவனங்களின் ஒழுங்கற்ற செயல்களைக் கட்டுப்படுத்தி சீர்செய்யும் வகையில் சட்டம் இயற்றலாமென்றும், அரசு நடத்தும் சீட்டுத் தொழில் அரசின் நிதிநிலைக்கு உதவும் வகையில் இலாபமீட்டும் தொழிலாக இல்லையென்றும் குறிப்பிட்டு தமிழ்நாடு சீட்டுக் கழகத்தைக் கலைத்துவிடலாமெனப் பரிந்துரை செய்தது. இதனடிப்படையில் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண் 305, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள்: 2-5-1989-இன்படி தமிழ்நாடு சீட்டுக் கழகத்தைக் கலைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1993 பிப்ரவரி மாதத்துடன்



2001 ஜனவரி 23]

இக்கழகம் நடத்தி வந்த சீட்டுக்கள் அனைத்தும் முடிவுற்றன. தற்போது குறைந்த அளவு பணியாளர்களுடன் நிலுவைத் தொகையினை வசூலிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**36—**

**கூடுதல் கட்டடங்கள்**

**வினா 40634—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரிலுள்ள ஆண்கள் மத்திய சிறைச்சாலை, பெண்கள் சிறைச்சாலை ஆகியவற்றில் கூடுதல் கட்டடங்கள் கட்டி இடவசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூரிலுள்ள ஆண்கள் மத்திய சிறைச்சாலை மற்றும் பெண்கள் சிறைச்சாலைகளில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விட குறைவாக சிறைவாசிகள் உள்ளனர். எனவே, கூடுதல் கட்டடங்கள் கட்ட அவசியம் எழவில்லை.

**37—**

**சிறைச்சாலைகள்**

**வினா 40635—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்திலுள்ள கிளைச் சிறைச்சாலைகளைப் பழுதுபார்த்து, விரிவுபடுத்த அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டக் கிளைச் சிறைகளில் கட்டடங்கள் நல்ல நிலையில் உள்ளன. தற்போது அங்கீகரிக்கப்பட்ட அடைப்பு மற்றும்

[2001 ஜனவரி 23

சராசரி அடைப்பு ஆகியவற்றை பார்க்கும்பொழுது இக்கிளைச் சிறைகளை விரிவுபடுத்த வேண்டிய அவசியமில்லை.

**38—**

**வீட்டுமனை**

**வினா 25450—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி மற்றும் செங்கோட்டை வட்டத்தில் வீட்டுமனைப் பட்டா கேட்டு விண்ணப்பித்துள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கு வீட்டுமனை இடம் வழங்க தேவையான இடத்தை வாங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை விவரம் என்ன?

(இ) எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி மற்றும் செங்கோட்டை வட்டங்களில் வாழும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமூகத்தில் இலவச வீட்டுமனைக் கோரி விண்ணப்பித்த நபர்களுக்கு தென்காசி வட்டத்தில் இலவச வீட்டுமனை வழங்க தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் கையகப்படுத்த தகுந்த நிலங்களைத் தேர்வு செய்தபின் நில உரிமையாளர்களிடம் நிலம் கையகப்படுத்த ஒப்புதல் கோரும்போது சந்தை மதிப்பிற்கும் வழிகாட்டி மதிப்பிற்கும் மிகுந்த வேறுபாடு காணப்படுவதால் நிலத்தை அரசுக்குக் கொடுக்க தயக்கம் காட்டுகின்றனர். எனினும், தென்காசி மற்றும் செங்கோட்டை வட்டங்களில் சந்தை மதிப்பு மற்றும் வழிகாட்டி மதிப்பு ஆகிய இரண்டும் ஒத்துள்ள தகுந்த நிலங்களைத் தேர்வு செய்து தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நிலங்களை கையகப்படுத்தி இலவச வீட்டுமனைப் பட்டா விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2001 ஜனவரி 23]

**39—**

**இடம் ஒதுக்கீடு**

**வினா 34453—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முன்னேறிய வகுப்பின் இடஒதுக்கீட்டில் (O.C.) (கிரீமி லேயர்) அளவுகோல் நடைமுறைப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொதுபோட்டியின்கீழ் நிரப்பப்படும் 31 சதவீத இடஒதுக்கீட்டில் முன்னேறிய பிரிவினர் (creamy layer) கொள்கையை நடைமுறைப்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**40—**

**கடன் வசதிகள்**

**வினா 35210—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் என்னென்ன கடன் வசதிகள் எத்தனைப் பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சேலம் மாவட்டத்தில் கடந்த நிதியாண்டில் 19 பயனாளிகளுக்கு தனிநபர் கடனாக ரூ.9.30 இலட்சம் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:—

[2001 ஜனவரி 23

| வ. எண். | பயன்பாடு | பயனாளிகளின் எண்ணிக்கை | மொத்தம் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | வியாபாரம் | 1 | 0.81 |
| 2. | தொழில் தொடங்கல் | 3 | 1.31 |
| 3. | விவசாயம் | 15 | 7.18 |
| | மொத்தம் | **19** | **9.30** |

மேலும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் கடன்கோரி சேலம் மாவட்டத்தில் பெறப்பட்ட 41 மனுக்களில், 21 மனுக்கள் மனுதாரர்கள் தேவையான ஆவணங்கள் வழங்கப்படாததினாலும், அடமான சொத்துக்கள் மனுதாரர்கள் பெயரில் இல்லாததாலும் நிராகரிக்கப்பட்டன. மீதமுள்ள 20 மனுக்கள் கூட்டுறவு வங்கிகளின் பரிசீலனையில் உள்ளன.

**41—**

**கறவை மாடுகள்**

**வினா 38673—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார முன்னேற்றக் கழகத்தின் மூலமாக 1999-2000ஆம் ஆண்டில் கறவை மாடுகள் வளர்ப்புக் கடன் பெற்றவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1999-2000 ஆம் ஆண்டில் பால்வள நிறுவனமான ஆவின் ஒன்றியங்களின் மூலமாக 1,183 பயனாளிகளுக்கு கறவை மாடுகள் வளர்ப்புக் கடனாக ரூ.2,37,57,600 வழங்கியுள்ளது.

**42—**

**கடனுதவி**

**வினா 23715—திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 23]

(அ) பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் (Prime Minister's Rozgar Yojana) திட்டத்தில் சமீப காலமாக கறவை மாடுகள் வாங்க கடனுதவி வங்கிகளில் கொடுக்கப்படுவது இல்லை என்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கிராமப்புற இளைஞர்களுக்கு நாம் என்ன செய்யப்போகிறோம்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மத்திய அரசு விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களுக்கும், பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் கடன் வழங்க அனுமதித்துள்ளது. இதன்படி பால் மற்றும் பால் பொருட்கள் தயார் செய்தல் தொழில் தொடர்பாக கடன் உதவி தரலாம் என அறிவிக்கப்பட்டு, கறவை மாடுகள் வழங்க பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடன் வழங்கப்படுகிறது.

(ஆ) மேற்கண்ட பதிலின் அடிப்படையில், இவ்வினா எழவில்லை.

**43—**

**நிலப்பகுதி பதிவு**

**வினா 40344—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்து சென்ட் குறைவான நிலப்பகுதிக்கு பதிவு செய்ய தேவைப்படும் டோப்பாஸ் ஸ்கெட்ச் முறை ரத்து செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

10 சென்ட்க்கு குறைவான நிலப்பகுதி, மனையா அல்லது நிலமா எனக் கண்டறியவும் சுற்றியுள்ள புல எண்களில் உள்ள இடத்தின்

[2001 ஜனவரி 23

தன்மை, வளர்ச்சி, பயன்மாற்றம் ஆகியவைகளைக் கருத்தில்கொண்டும், வழிகாட்டி மதிப்பு நிர்ணயிக்கவும், சரியான பாதிக்கப்பட்ட புலத்தினை அடையாளம் கண்டுகொள்ளவும் டோப்பாஸ் ஸ்கெட்ச் தேவைப்படுகிறது.

**44—**

**பதிவுக் கட்டணம்**

**வினா 40351—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊனமுற்றோர், விதவைகள் வாங்குகின்ற மனைகள், வீடுகள் ஆகியவற்றிற்கு ஆவணப்பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

விற்பனை ஆவணங்கட்கு சொத்து மதிப்பின்மீது 1% பதிவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. துறையால் செய்யப்படும் பணிக்கான சேவைக் கட்டணம், உடல் ஊனமுற்றோர், விதவைகள் வாங்குகின்ற மனைகள்/வீடுகளுக்கு பதிவுக் கட்டணச் சலுகை வழங்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**45—**

**பத்திரப் பதிவு**

**வினா 40352—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 23]

பத்திரப்பதிவுத் துறையில் நிலங்களைப் பரிவர்த்தனை செய்வதற்கு குறைந்த மதிப்பீட்டில் பத்திரப்பதிவு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

பரிவர்த்தனை ஆவணங்களில் இரண்டு சொத்துகள் சம்பந்தப்பட்டிருந்தாலும், மேற்படி சொத்துகளில் அதிக மதிப்பினையுடைய சொத்துக்கு மட்டுமே முத்திரைத் தீர்வை விதிக்கப்படுகிறது. இதுவே மக்களுக்கு அளிக்கப்பட்ட ஒரு சிறந்த சலுகையாகும். இதனைக் குறைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**46—**

**விற்பனையாளர்கள்**

**வினா 40378—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் முத்திரைத் தாள் விற்பதற்கு படித்த வேலையில்லாத பட்டதாரிகளுக்கு உரிமம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

படித்து பட்டம் பெற்று வேலையில்லாப் பட்டதாரிகளும் முத்திரைத் தாள் விற்பனையாளராக நியமிக்கப்படுகின்றனர்.

[2001 ஜனவரி 23

47—

**பெயர் மாற்றப் பதிவு**

**வினா 40384—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சொத்து பதிவான பிறகு அது சம்பந்தப்பட்ட பெயர் மாற்றத்தைச் செய்ய சார் பதிவாளர் அலுவலகம் தாமதமின்றி சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்குத் தகவல் அனுப்பவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அனுப்பு ஏற்பாடு செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பட்டா மாறுதல் மனுக்கள் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படும்போது உரிய கட்டணத்துடன் பெறப்படுகின்றன. இம்மனுக்கள் ஆவணப் பதிவு விவரங்களுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு ஒவ்வொரு வாரமும் சார் பதிவாளர்களால் அனுப்பப்படுகின்றன. நில உடைமைப் பதிவேடுகள் பராமரித்தல், பெயர் மாற்றம் செய்தல் வருவாய்த் துறையினரின் பணி என்பதால் பதிவுத் துறை இப்பணியைச் செய்திட இயலாது.

48—

**முத்திரைத் தாள் விற்பனை**

**வினா 40386—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி எடப்பாடியில் முத்திரைத் தாள் உரிமம் பெறாத நபர்கள், முத்திரைத் தாள் விற்பனை செய்து வருகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதைத் தடுக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?



2001 ஜனவரி 23]

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி பகுதியில் உரிமம் பெறாத எவரும் முத்திரைத் தாள் விற்பனை செய்யவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

49—

**கடன் வசதி**

**வினா 40439—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாரதப் பிரதமர் நிதியுதவித் திட்டத்தின்கீழ் படித்த இளைஞர்களுக்கு சுயதொழில் தொடங்க கடன் பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

பாரதப் பிரதமர் நிதியுதவித் திட்டத்தின்கீழ் படித்த இளைஞர்களுக்கு சுயதொழில் தொடங்க கடன் பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்கிறது. பாரதப் பிரதமரின் நிதியுதவித் திட்டத்தில் சுயதொழில் தொடங்குவதற்குக் கடன் பெற்றுத்தர மாவட்டத் தொழில் மையங்கள் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளன. மேலும் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் வங்கியாளர்களை அமைத்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் குறைந்தது மாதம் ஒரு முறை கூட்டப்பட்டு தொழில் முனைவோர் கடன் பெறுவதில் உள்ள குறைபாடுகள் ஆராய்ந்து நிவர்த்தி செய்யப்படுகின்றன. மேலும் மாநில அளவிலான வங்கியாளர்கள்

கூட்டம் கூட்டப்பட்டு தாமதம் தவிர்க்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**50—**

### பதிவுக் கட்டணச் சலுகை

**வினா 40464—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊனமுற்றோர், விதவைகள் வாங்கும் வீட்டுமனைகள், வீடுகளுக்கு ஆவணப்பதிவுக் கட்டணம் செலுத்திட விலக்கு அல்லது குறைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விற்பனை ஆவணங்கட்கு சொத்து மதிப்பின்மீது 1% பதிவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இது செய்யப்படும் பணிக்கான சேவைக் கட்டணம். உடல் ஊனமுற்றோர், விதவைகள் வாங்குகின்ற மனைகள்/வீடுகளுக்குப் பதிவுக் கட்டணச் சலுகை வழங்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]





## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களை மாலத் தீவிலிருந்து மீட்டல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் மாலத் தீவில் காவலில் வைக்கப்பட்டது குறித்து கவன ஈர்ப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் குமாரதாஸ், திரு. வேலாயுதன், திரு. பென்னார்டு ஆகியோரும், ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோரும், சற்றுக் காலம் தாழ்த்தி திரு. ஜி.கே. மணி அவர்களும், திரு. அப்பாவு அவர்களும் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவற்றைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொண்டு, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் முதலில் திரு. பென்னார்டு அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன். சுருக்கமாகப் பேச வேண்டும். 6 பேர் பேச இருக்கிறார்கள்.

***திரு. இரா. பென்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தைச் சேர்ந்த 8 மீனவர்கள் திசைமாறியும், கடல் நீரோட்டத்தால் பாதிக்கப்பட்டும் மாலத் தீவில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை மீட்க அரசின் கவனத்தை ஈர்க்கின்றேன். குமரி மாவட்டம், தூத்தூர், வெள்ளவிளையைச் சேர்ந்த 8 மீனவர்கள் கேரள மாநிலம் விளிஞ்சம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து இழுவலைத் தூண்டில்கள் மூலம் மீன்பிடிப்பதற்காகச் சென்றபோது கடல் கொந்தளிப்பு, புயல் காரணமாகவும் கடல் நீரோட்டம் மாறுதல் காரமாகவும் திசைமாறி மாலத் தீவு சென்றடைந்து அங்கு அந்த அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற சோகச் செய்தி எட்டியதும், வழக்கம்போல மீனவர் நலனில் தனி அக்கறை கொண்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும், மீன்வளத் துறை அமைச்சர் மாண்புமிகு ஜெனிபர் சந்திரன் அவர்களும் விரைந்து அந்த அரசோடு தொடர்பு கொண்டு விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற நல்ல செய்தியை அறிவித்திருக்கிறார்கள். அதற்காக மீனவ மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கும் அதேவேளையில், இந்த 8 பேருடைய குடும்பங்களும் பாதிப்புக்கு உள்ளாகி, வறுமையில் வாடி, மிகுந்த வேதனைக்கு உள்ளாகியிருக்கின்றன என்பதைத் தெரிவித்து, விரைந்து மீண்டும் அந்த அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு, அவர்களைத் தாயகத்திற்கு மீட்டு வரவேண்டுமென்று தெரிவித்து அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகாவைச் சேர்ந்த, தூத்தூர் மீனவர் கிராமத்தைச் சேர்ந்த திரு. அந்தோணி அடிமையார் என்பவருடைய படகில் கடந்த 12-11-2000 அன்று மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் இராஜன் 32 வயது, செல்வின் 23 வயது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த விவரங்கள் எல்லாம் வேண்டாம், 8 பேர் என்று சொல்லுங்கள். அதை யாரும் மறுக்கவில்லையே?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பிறகு அவர்கள் யார் யார் பிடிக்கப்பட்டிருக்கிறார்களா என்று தெரியாது அல்லவா? அதனால் அந்த விவரத்தைச் சொல்லிவிட்டால் சரியாக இருக்கும். அந்தோணி 26 வயது, சேவியர் 38 வயது, சேஷையன் 46 வயது, மில்டன் 20 வயது, ஜான்போஸ் 53 வயது, லாரன்ஸ் 53 வயது, ஆகிய மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்று 18-11-2000 அன்று மாலத் தீவில் சிறை வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. ஆனால், இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. இரண்டு மாதங்கள் ஆனதற்குப் பிறகும் அவர்களை மீட்பதற்குப் பல்வேறு முயற்சிகளை அரசு மேற்கொண்டு இருந்தாலும், இதுவரையில் அவர்கள் மீட்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, தமிழக அரசு வேகம் காட்டுகின்ற அதே நேரத்தில் மத்திய அரசாங்கம் மெத்தனமான போக்கைக் கடைப்பிடிக்கிறதோ என்கிற உணர்வும் ஏற்படுகிறது. இப்படி மீன் பிடிக்கும் தொழிலுக்குச் செல்லுகின்றவர்களுக்கு எப்போதும் தொடர்ச்சியாக ஆபத்து வந்துகொண்டிருக்கிறது. மாலத் தீவிலே, அதேபோல இலங்கையிலே, இப்படி அண்டை நாட்டவர்கள் நமது மீனவர்களுக்குப் பல்வேறு தொல்லைகளைத் தொடர்ச்சியாக ஏற்படுத்தி வருகிறார்கள். எனவே, அவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்புக் கொடுக்கின்ற முகத்தான் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்ற அதேநேரத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களை உடனடியாக மீட்க வேண்டும். பாகிஸ்தானில் சிறையில் இருந்தார்கள். இங்கே இருந்துதான் குரல் கொடுத்தோம். அதற்குப் பிறகுதான் இந்திய அரசு தலையிட்டு அவர்களை மீட்டு வருகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. மத்திய அரசாங்கம் இவர்களைப் பற்றித் தெரிந்தும் தெரியாமல் இருக்கிறதோ என்று





புரியவில்லை. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், நம்முடைய மீன்வளத் துறை அமைச்சர் அவர்களும் இதிலே தனிக் கவனம் செலுத்தி உடனடியாக இந்தச் சட்டமன்றக் கூட்டம் முடிவதற்குள்ளாக அவர்களை மீட்டு வருவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். ஏனென்றால், மாலத் தீவு ஒன்றும் நமக்கு விரோதமான நாடு அல்ல. அவர்களிடம் நீங்கள் நேரடித் தொடர்பு கொண்டு மீனவர்களை மீட்டு வரமுடியும். எனவே, அதற்குத் தனி முயற்சிகளை மேற்கொள்வது பற்றியும், எப்போது அவர்களை மீட்டு வருவார்கள் என்கின்ற தகவலையும் அறிவிக்க வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 8 மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்று, கடந்த இரணடு மாதங்களாகத் திரும்ப வரவில்லை என்று சொல்லி, அந்தக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் எல்லாம் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதேவேளையில் மீனவர்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் பொறுத்தவரையில், மீன் பிடிக்கச் சென்றவர்கள் வீட்டுக்குத் திரும்புவார்களா என்கிற கேள்வி எழக்கூடிய நிலையிலே அவர்களுடைய வாழ்க்கை இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தாலேயும், தொடர்ந்து இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையிலும் இந்த மீனவர்கள் குறித்து மாலத்தீவு அரசாங்கத்தோடு பேசி, விரைவிலே நம்முடைய தமிழக அரசு முயற்சிகளை மேற்கொண்டு அவர்களை மீட்டுத் தரவேண்டுமென்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை இம்மாதம் நம்முடைய சட்டப்பேரவை துவங்கிய நாளன்று காலையிலேயே கொடுத்துவிட்டேன். ஏற்கெனவே, இதற்கு முன்னால் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், அதுபோன்று நம்முடைய மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் fax செய்தி மூலமாகச் சொல்லிவிட்டேன். அதற்கும் மேலாக நம்முடைய

P01.11.2.2
V211, 31 P01
228790

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த மேலவை உறுப்பினர் மாண்புமிகு சங்கரலிங்கம் அவர்கள் டெல்லிக்கு fax மூலமாகவும், அதுபோன்று பாரதப் பிரதமருக்கும் செய்திகள் தந்து, அதற்கு பதிலையும் தந்திருக்கிறார்கள். சுமார் 3 மாதங்கள் ஆகின்றன. இப்படி 3 மாதங்கள் ஆகியும் இன்னும் அவர்களை மீட்பதற்குப் சரியான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. மேலும் அந்த 8 குடும்பங்களின், வீடுகளுக்குச் சென்று நான் பார்க்கிறபோது, அந்த மீனவர்களுடைய குடும்பத்தார் படுகின்ற துன்ப, துயரம் மிகவும் அதிகம். அவர்கள் பட்டினியால் வாடுகின்றார்கள். நான் மாண்புமிகு அமைச்சருக்கு எழுதிய கடிதத்திலும், தொலைபேசியிலும் அவர்களுடைய குடும்பங்களுக்கு உணவு வழங்குவதற்கு ஏதாவது வழிவகை உண்டா என்று அவர்களுண்டய மேலான கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். இருந்தும், இதுவரையிலும் விதிமுறைகளில் அதற்குச் சாத்தியமில்லை என்ற பதிலைத்தான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த மீனவர்களை விடுதலை செய்வதற்கு, அதுவும் நம்மோடு சுமுகமாக இருக்கின்ற அந்த மாலத் தீவிலே இருக்கின்ற 8 மீனவர்களையும், அவர்களுடைய படகுகளையும் மீட்டு வருவதற்கு இந்த மூன்று மாத காலம் தேவையா என்பதுதான் ஒரு பிரச்சினையாக எழுகின்றது. ஆகவேதான், அரசாங்கத்தினுடைய கவனத்திற்கும், எல்லாத் துறைகளுக்கும் நான் சொல்லியும், இன்னும்கூட அதற்கு ஒரு சரியான தீர்வை ஏற்படுத்த முடியாத சூழ்நிலையில்தான், ஓர் ஒத்திவைப்புத் தீர்மானமாக இந்தப் பிரச்சினையை இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கமே தவிர, வேறு அல்ல. அந்த அடிப்படையிலே, நம்முடைய சட்டப் பேரவையின் இந்த நிகழ்ச்சி முடிவடைவதற்கு முன்னால் மத்திய அரசோடு மாநில அரசு தொடர்பு கொண்டு, அந்த மீனவர்களை மீட்டு வருவதற்கும், அந்தக் குடும்பங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் வழிவகை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் மூலமாக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 8 மீனவர்கள், கிட்டத்தட்ட மூன்று மாதங்களாக, நமக்கு நல்லுறவோடு இருக்கக்கூடிய மாலத்





தீவில் அடைபட்டு இருக்கின்றார்கள். மீன்பிடிக்கச் செல்லக்கூடியவர்கள் அலையின் காரணமாக, புயலின் காரணமாகத் திசை திரும்பி இன்னோர் இடத்திற்குச் செல்வது வழக்கம். அவர்களை விசாரித்து, நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது பாரதத்தைச் சேர்ந்தவர்கள் என்ற தகவல் கிடைத்தவுடன், அவர்களை அனுப்பி வைக்கக்கூடிய அளவிற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இது இயற்கையாக நடக்கக்கூடிய சம்பவம்தான். எனவே, இதில் அரசாங்கம் அதிகமான கவனம் செலுத்தி எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்; அல்லது எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று தெரிந்துகொள்ள ஒருசில நாட்கள் கால அவகாசம் தேவைப்படலாம். அதற்கு மேலும் அவர்களை வைத்துக்கொள்கிறார்கள் என்று சொன்னால், துன்புறுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் வைத்திருக்கின்றார்களா என்ற சந்தேகம் அந்தப் பாமர ஏழை மக்களுக்கு வருகின்றது.

இன்னொன்று, ஏற்கெனவே 19 மீனவர்கள், நம்முடைய பகைமை நாடான பாகிஸ்தானில் இருந்தபோதுகூட, நல்லுறவு இல்லாதபோதுகூட, நம்முடைய பாரதப் பிரதமரும், தமிழக அரசும், அந்த விரோத மனப்பான்மையைக்கூடப் பொருட்படுத்தாமல், எவ்வளவோ முயற்சி எடுத்து, அவர்களுக்குப் பெரியவிதமான பாதிப்புகள் இல்லாத அளவிற்கு மீட்டுக்கொண்டு வந்தார்கள். உண்மையிலேயே மத்திய, மாநில அரசுகளை அந்த மீனவ மக்கள், கன்னியாகுமரி மாவட்ட மக்கள் மனப்பூர்வமாகப் பாராட்டுகின்றனர். காரணம், அவர்களை எப்படிக் கொண்டு வருவார்களோ என்று ஐயப்பட்டுக் கொண்டிருந்த காலம். ஆனால் இது சுமுகமான சூழ்நிலை இருக்கக்கூடிய ஒரு தீவு. எனவே, அதற்கு இந்த மூன்று மாத கால அவகாசம் என்பது மிகுந்த வேதனை அளிக்கக்கூடியது. இப்படித் தொடர்ந்து நடக்கக்கூடிய நிலையில், இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்கு அந்த நாட்டோடு அரசாங்கம் தக்கபடியான தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு மீட்டுக்கொடுப்பதோடு, அந்த ஏழைகளுடைய குடும்பத்திற்கு அரசாங்கம் தக்க நிவாரணம் கொடுத்து, இதுபோன்ற பாதிப்பு ஏற்படும்போது, அவர்களைக் கவனிக்கக்கூடிய அளவிற்கு ஒரு நிதியை ஏற்படுத்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த வேளையில் கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

[2001 ஜனவரி 23

***மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாலத் தீவு அரசால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்டம், தூத்தூர் கிராமத்தைச் சேர்ந்த மீனவர்களைப் பற்றி இங்கே நமது மாண்புமிகு உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பையும், ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் கொண்டு வந்திருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் தூத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் 8 பேர், 12-11-2000 அன்று கேரள மாநிலத்தின் விளிஞ்சம் என்ற மீன்பிடித் துறைமுகத்திலிருந்து, தூத்தூரைச் சேர்ந்த திரு. அந்தோணி அடிமை என்பவருக்குச் சொந்தமான கே.கே.டபிள்யூ.928 'மிஸ்டர் இந்தியா' என்ற விசைப்படகில்—இங்கே நமது மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் சொன்னதுபோல, அந்த 8 மீனவர்களும்—கடலில் மேற்குத் திசையிலே தூண்டில் மற்றும் இழு வலைகளைக் கொண்டு மீன் பிடிக்கச் சென்றார்கள். கடந்த 18-11-2000 அன்று, மேற்படி குழுவில் ஒருவரான திரு. இராசன் அவர்கள் மாலத்தீவிலிருந்து தொலைபேசி மூலம் படகின் உரிமையாளர் திரு. அந்தோணி அடிமையுடன் தொடர்பு கொண்டு, தாங்கள் அனைவரும் மாலத்தீவின் சுங்கத் துறையால் படகுடன் கைது செய்யப்பட்டு, மாலத்தீவில் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் தெரிவித்திருக்கிறார். அந்தத் தகவலின் அடிப்படையில், அந்த உரிமையாளர், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீன் வளத் துறை உதவி இயக்குநருடன் 20-11-2000 அன்று தொடர்பு கொண்டு மேற்படி மீனவர்களைப் படகுடன் மீட்டு வரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்.

*முற்பகல் 11-10*

அதுமட்டுமல்லாமல், நமது மாண்புமிகு உறுப்பினர்கள், மணி அவர்களும், குமாரதாஸ் அவர்களும், பென்னார்டு அவர்களும் மற்றும் நமது சுற்றுலாத் துறை அமைச்சர் போன்றவர்களும் தொடர்புகொண்டு, இவர்களை விரைவாக மீட்டுவர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். 20-11-2000 அன்று நாகர்கோவில் மீன் வளத் துறை உதவி இயக்குநர் மூலமாகப் பெறப்பட்ட தொலையச்சுத் தகவல் மூலமாக, மாலத்தீவிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கு மீன் வளத் துறை ஆணையர் அவர்கள் தொடர்புகொண்டு, இந்த மீனவர்களையும், படகையும் விரைவில் விடுவிக்க வேண்டுமென்று அங்கே தகவல் தெரிவித்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், மீண்டும் 27-11-2000 அன்றும் 22-1-2001 அன்றும் தொலையச்சு மூலமாகத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி,



2001 ஜனவரி 23] [திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்]

தொடர்ந்து அந்த மீனவர்களை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற அதேவேளையில், ஒரு நாளிதழில் மத்திய இணை அமைச்சர் மாண்புமிகு பொன். இராதாகிருஷ்ணன் அவர்கள், மீனவர்களை மீட்டுவர மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுப்பதாக ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள். தொடர்ந்து தமிழக அரசும், அவர்களை மீட்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று தெரிவிக்கின்ற வேளையில் மாலத் தீவிலுள்ள மீனவர்கள் இங்கே வந்தாலும் அவர்களை விடுவித்துத் திரும்ப அனுப்புவதற்கு இங்கே நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தித்தான் விடுவிப்பார்கள். எனவே, நமது மீனவர்களை மீட்க இந்த அரசு மீண்டும் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து, விரைவில் அந்த மீனவர்கள் மீட்கப்படுவார்கள் என்பதை உங்கள் மத்தியிலே தெரிவித்து அமர்கிறேன், நன்றி.

## 3. தகவல் கோரல்

### சிமெண்ட் விலையேற்றத்தைத் தடுக்கக் கோரி புரட்சித் தலைவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஊர்வலம்

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் நீண்டநாள் அமைச்சராக இருந்த திரு. எஸ்.டி.எஸ். அவர்களும், திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களும், அவர்களுடைய புரட்சித் தலைவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, இன்று ஓர் ஊர்வலம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள், இப்போது. அவர்களுடைய கோரிக்கை என்னவென்று சொன்னால், தமிழ்நாட்டில் மட்டும் சிமெண்ட் விலை பயங்கரமாக ஏறி, 200 ரூபாய்க்கு மேலே போய், அதன் காரணமாக, சிமெண்ட் வாங்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளதோடு, அதில் ஈடுபடுகின்ற கட்டடத் தொழிலாளர்களும், இன்று வேலை இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அதற்கு ஒரு நிவாரணம் தேடவேண்டுமென்று கேட்டு ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். பக்கத்து மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களில் எல்லாம் மிகக் குறைந்த விலைக்கு சிமெண்ட் விற்கிறபோது, தமிழ்நாட்டில் மட்டும் ஏன் இந்த உயர்ந்த விலை என்று எல்லோரும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பொறுப்புள்ள தலைவர்கள் ஊர்வலமாக வந்து கொண்டிருக்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா, இதற்கு நம்முடைய அரசு என்ன பதில் கூற விரும்புகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்ட அந்தப் பிரச்சினைக் குறித்து முன்னாள் அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் போன்றவர்கள் இன்று ஊர்வலம் வருவதாகவும், ஒரு விண்ணப்பத்தை முதலமைச்சர் அவர்களிடத்திலே அளிக்க வேண்டும் என்றும், இரண்டு தினங்களுக்கு முன்னாலேயே அனுமதி கேட்டார்கள். முதலமைச்சர் அவர்களும், அந்த ஊர்வலத்திற்கு அனுமதித் தந்து விண்ணப்பம் பெறுவதற்குத் தயாராக இருந்தார்கள். ஆனால், முதலமைச்சர் அவர்களுடைய உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அந்த விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளும்படி என்னைக் கேட்டுக் கொண்டார்கள். நானும் அவர்கள் வந்தவுடனே அவர்களைச் சந்தித்து அந்த விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்த சிமெண்ட் விலை இன்றைய தினம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதை கட்டுமானப் பணிகளிலே ஈடுபட்டு இருக்கிறவர்களும், தொழிலாளர்களும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அரசாங்கமும் இதுபற்றி ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நினைத்தபோது, கட்டுப்படுத்தப்பட்ட தனி உரிமை வியாபார நடைமுறை விதிகளின்படி, அதாவது M.R.T.P. Act-ன்படி சிமெண்ட் விலை உயர்வதற்கான காரணங்களை விளக்குமாறு M.R.T.P. Commission கீழ்க்கண்ட 5 சிமெண்ட் உற்பத்தியாளர்களை விளக்கம் கேட்டுள்ளது.

1. கிராசிம் சிமெண்ட்; (2) இந்தியா சிமெண்ட்; (3) எல். & டி. சிமெண்ட்; (4) குஜராத் அம்புஜா; (5) ஏ.சி.சி. போன்ற இந்த 5 மிகப்பெரிய சிமெண்ட் ஆலை அதிபர்களை அழைத்து அவர்கள் விளக்கம் கேட்டிருக்கிறார்கள். M.R.T.P. Commission என்பது ஏறக்குறைய நம்முடைய சிவில் சட்டத்தின்படி விசாரணை நடத்தக்கூடிய ஒரு அதிகாரம் படைத்த அமைப்பு. அவர்கள் இப்போது, அந்த நடவடிக்கைகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இதற்கிடையில் இந்தப் பிரச்சினை குறித்து, மத்திய அரசுக்கும், குறிப்பாக, பிரதமருக்கும் நம்முடைய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய் கவனத்திற்கும் சென்ற காரணத்தால், மத்திய அரசும், நம்முடைய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சரிடம் கலந்து பேசி, அவுர்களும் இன்றையதினம் சிமெண்ட் அதிபர்களை அழைத்து, அதற்கான காரணங்களைக் கேட்டு, சிமெண்ட் விலை உயர்வதற்கான



அடிப்படைக் காரணங்களை விசாரித்து, இதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்கான நடவடிக்கைகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே தமிழ்நாட்டிலே மட்டும்தான் ஏதோ சிமெண்ட் விலை உயர்ந்திருக்கிறது, கேரளா போன்ற மாநிலங்களிலே எல்லாம் விலை குறைவாக இருக்கிறது என்ற ஒரு செய்தியைச் சொன்னார்கள்.

முற்பகல் 11-15

நான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு 19-1-2001 அன்றைய நிலவரப்படி எனக்குக் கிடைத்த அந்தத் தகவல்களை இங்கே சொல்கின்றேன். தமிழ்நாட்டில் சங்கர் சிமெண்ட் சில்லறை விலையிலே ரூ.190-லிருந்து ரூ.197 வரை விற்கிறது. ராம்கோ சிமெண்ட் ரூ. 195-லிருந்து ரூ.197 வரை விற்கிறது. செட்டிநாடு சிமெண்ட் ரூ.190 முதல் ரூ. 197 வரை; L&T சிமெண்ட் ரூ. 190-லிருந்து ரூ. 199 வரை; அரசு சிமெண்ட் ரூ.170-லிருந்து ரூ.177 வரை விற்றுக் கொண்டிருக்கின்றோம்.

அதைப்போல கேரளாவில் சங்கர் சிமென்ட் 19-1-2001 நிலவரப்படி ரூ.184-லிருந்து ரூ.199 வரையிலே விற்கிறது. டால்மியா சிமெண்ட் ரூ.194 முதல் ரூ.197 வரையிலே விற்கிறது. அம்புஜா சிமெண்ட் ரூ.192-லிருந்து ரூ.193 வரையிலே விற்கிறது. ஏ.சி.சி. சிமெண்ட் ரூ.178லிருந்து ரூ.191 வரையிலே விற்கிறது. L & T சிமெண்ட் ரூ.182-லிருந்து ரூ.192 வரையிலே விற்கிறது. இப்படி கேரளா மற்றும் அகில இந்திய அடிப்படையிலே பார்த்தால்கூட பம்பாயிலேயும் சிமெண்ட விலை இன்றைய தினம் 190 ரூபாய்க்கு அதிகமாக விற்கிறது என்று பம்பாயிலே இருக்கக்கூடிய அரசாங்கமே இன்றைய தினம் மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதி, இந்தப் பிரச்சினையை உடனடியாக மத்திய அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சரும் நம்முடைய மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சரிடத்தில் இது குறித்துப் பேசியிருக்கிறார். விரைவிலே மத்திய அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

## 4. அறிவிப்பு

### பேரவைக் கூட்டம் 25-1-2001 அன்று நடைபெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 19-1-2001 அன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவின்

அடிப்படையில் 25-1-2001 அன்று பேரவைக் கூட்டம் இல்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், 25-1-2001 ஆம் நாளன்று பேரவைக் கூட்டம் நடைபெறும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆளுநரின் உரையின் மீதான விவாதத்திற்கு அன்று பதிலளிப்பார்கள் என்று பேரவையின் அனுமதியோடு தெரிவிக்கின்றேன்.

முற்பகல் 11-15

## 5. அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் 306 முதல் 310 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட வேண்டும். திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு நான் கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகிறேன்;

"தீர்மானத்தில் பின்வருமாறு சேர்க்கப்பட வேண்டும்: 'கோவை நகரில் சிறுவர் உலகம் நிறுவ அரசு மேற்கொண்ட முயற்சிகள் குறித்தும்;

கோவை நகரில் கோளரங்கம் ஒன்று நிறுவுவது குறித்தும்;

கோவை நகரில் புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்குமேல் குடியிருக்கும் ஏழைகளுக்கு மனைப்பட்டா வழங்குவது குறித்தும்;



குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் உள்ள தடைகளைக் களைய அரசு மேற்கொண்ட முயற்சிகள் குறித்தும்;

புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்குவது குறித்தும்;

கிருஷ்ணா, வீராணம், அவிநாசி ஆகிய குடிநீர்த் திட்டங்கள் குறித்தும், இவற்றைச் சீரமைக்க வேண்டியது குறித்தும் குறிப்பிடாததற்காக வருந்துகிறோம்'.

**திரு. சி. ஞானசேகரன்:** அந்தத் திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

*** THIRU J. HEMACHANDRAN:** Hon. Speaker, Sir, I move the following amendment to the Motion of Thanks for the Governor's Address:

``Add at the end, of the following:

`but regret to note that no mention is made about—

1. Steps taken by Government to arrest the fall of prices of agricultural commodities;

2. Steps to check industrial crisis in the State; and

3. Steps to check unemployment due to closure of many industrial units'.

**திரு. டி. மணி:** அந்தத் திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்க இருக்கிறது. நேற்றையதினம் நான் இருக்கையிலே இல்லாதபோது நடந்த ஒரு நிகழ்வைக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். நன்றி அறிவிப்புத் தீர்மானத்தின்மீது முன்மொழிந்து பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர் 16 நிமிடங்கள் பேசினார். அடுத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் 26 நிமிடங்கள் பேசி விட்டு, அது போதாது என்று துணைத் தலைவரோடு தகராறு செய்துவிட்டு, வெளியேறி பேட்டி கொடுத்து, ஜனநாயகப் படுகொலை என்று சொல்லி, அதோடு மட்டுமல்லாமல் அரசு மீது அடுக்கடுக்காகக் குற்றஞ்சாட்டுகள் சொல்வதைத் தடுத்துவிட்டார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டையும் சொல்லி இருக்கிறார்கள். நல்லவேளையாக, இது கடைசிக் கூட்டத் தொடர். ஆகவே, இதிலே அவரைப்போல அதிக வேகம் காட்டக் கூடாது என்று நான் அமைதியாக இருக்கின்றேன். பேரவைத் தலைவருக்கோ, துணைத் தலைவருக்கோ அரசாங்கத்தின் மீது குறை சொல்வதைத் தடுப்பதற்காக இந்தப் பதவி எங்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

அதற்காகக் கொடுத்திருந்தால், அந்தப் பதவியிலே நாங்கள் இருக்க மாட்டோம். பேசுகின்ற உறுப்பினர்கள், குறிப்பாக ஞானசேகரன் அவர்கள் அடுக்கடுக்காகக் குற்றச்சாட்டுகளைச் சொல்ல வேண்டும் என்றால், ஆரம்பத்திலேயே அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளைச் சொல்லிவிட்டு, மீதமுள்ள நேரத்திலே மற்றவற்றைப் பற்றிப் பேசியிருக்கலாம். ஒரே குற்றச்சாட்டை 20 நிமிடங்கள் பேசிவிட்டு அதற்குப் பிறகு நேரம் இல்லை என்று சொல்வதை இந்த இருக்கைக்கு, பேரவைத் தலைவர் பதவிக்குக் களங்கம் கற்பிப்பதாகவே நான் கருதுகின்றேன். இது முறை ஆகாது. ஆகவே, இன்று பேசுகின்றவர்களாவது முறையோடு பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்; முறையோடு நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். என்னுடைய மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. ச. அழகிரி அவர்கள் விவாதத்தைத் தொடங்கி வைக்கின்றார்கள்.

*முற்பகல் 11-20*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே, நேற்று எங்களுக்கு 10 நிமிடம்தான் கொடுத்தார்கள். அதிலேயும் நிறையக் குறுக்கீடுகள் வந்தன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பேசிக் கொண்டிருக்கும்போது நீங்கள் யாரும் எழுந்து நிற்கக் கூடாது, உட்காருங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** தலைவர் அவர்களே, . . . .

**திரு. இரா. விசுவநாதன்:** தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பேசும்போது யாரும் எழுந்து நிற்கக் கூடாது, உட்காருங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** தலைவர் அவர்களே, நேற்று எங்களைப் பேச விடாமல், . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கும் பேச வாய்ப்புக் கொடுத்தேன். நீங்கள் கேட்டது 10 நிமிடம் தான்.

**திரு. சொ. கருப்பசாமி:** தலைவர் அவர்களே, . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 3 பேரும் கீழே உட்காருகிறீர்களா இல்லையா இப்போது? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடு) நீங்கள் முதலிலே உட்காருங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** எங்களுக்கு வழங்கப்பட்ட அநீதியைச் சொல்கிறோம். நேற்று எங்களைப் பேச அனுமதிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களைப் பற்றிப் பேசவில்லை.

**திரு. இரா. விசுவநாதன்:** நீங்கள் எங்களைப் பற்றிப் பேச வேண்டாம். எங்களை ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைப் பற்றிப் பேசாத காரணத்தையும் நான் சொல்கிறேன். நான் உங்களில் ஒருவருக்குத்தான் அனுமதி கொடுப்பேன் என்று சொன்னேன். எப்படியாவது 10 நிமிடம் கொடுங்கள் என்று என்னை வந்து கேட்டீர்கள். அதனாலேதான் நான் பேச அனுமதி கொடுத்தேன். ஆனால் 16 நிமிடங்கள் பேசி இருக்கிறீர்கள். இதற்கு மேலே கிடையாது.

**திரு. இரா. விசுவநாதன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவது எதுவும் அவைக்குறிப்பிலே ஏறாது, உட்காருங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆம். என் அதிகாரத்திற்குட்பட்டதுதான். அதனால்தான் உங்களை உட்காருங்கள் என்று சொல்கிறேன்.

**திரு. இரா. விசுவநாதன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் புறக்கணிக்கப்படுகிறீர்கள் என்று சொல்லிவிட்டு நீங்கள் வெளிநடப்புச் செய்யுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கும் வெளிநடப்பு பண்ணுங்கள். யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) என்னைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அழகிரி

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவர்களுக்கு 15 நிமிடம் கொடுக்கப்படும். மற்ற உறுப்பினர்களெல்லாம் 10 நிமிடத்திலே பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும், ஆளும் கட்சியாக இருந்தாலும்சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும்சரி. இன்னொரு கருத்தையும் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள், தான் பேசும்போது ரேஷன் கடையிலே கிடைக்கின்ற அரிசி இப்படி இருக்கிறது என்று சொல்லி ஒரு பொட்டலத்தை என்னிடம் காட்டியிருக்கின்றார்கள். ஆகவே, அதைப்பற்றி அவர்கள் பேச அனுமதி தருகிறேன் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது தமிழ் மாநில காங்கிரசின் சார்பாக எனது கருத்துகளை எடுத்துவைக்க விரும்புகின்றேன். இந்த ஆளுநர் உரையிலே புதுமையான கருத்துகள் எதுவும் இல்லை. சுவையான விஷயங்கள் இல்லை. புரட்சிகரமான திட்டங்கள் எதுவும் இல்லை. இயந்திரத்தனமாக ஓர் ஆளுநர் உரையைத் தயாரித்து இந்தப் பேரவையிலே ஆளுநர் வாசித்தார் என்பதைத் தவிர அதிலே குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விஷயங்கள் எதுவும் இல்லை என்பதனை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். சமுதாய இருளுடன் போராடுகின்ற ஒளியாக, உதய சூரியனாக இந்த ஆளுநர் உரை இருக்கும் என நாங்கள் கருதினோம். ஆனால், புஸ்வாணத்தைப்போல செயற்கை ஒளியாய்க் கண் சிமிட்டும் நேரத்தில் மறைந்துபோகும் மின்மினிப் பூச்சிகளைப் போல இந்த உரை காட்சியளிக்கிறது. எனவே, அது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது என்பதனை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே விவசாயத்தைப் பற்றிய எந்தவிதமான ஆக்கபூர்வமான கருத்துகளும் சொல்லப்படவில்லை. இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற விவசாயிகள் பெருத்த அவலநிலையிலே இருக்கிறார்கள். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



என்று வள்ளலார் அவர்கள் சொன்னார்கள். வள்ளலார் காலத்திலே பயிர்கள்தான் வாடியிருந்தன. ஆனால் இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே விவசாயிகளே வாடியிருக்கிறார்கள் என்பதனை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாகக் கரும்பு விவசாயிகளுடைய நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. கரும்பை வெட்டி ஆலைக்குக் கொண்டு சென்றால், டிராக்டர் வாடகையை மட்டுமே ஆலைக்காரர்கள் கொடுக்கிறார்கள். கரும்புக்கான பணத்தைக் கொடுக்க மறுக்கிறார்கள். கடந்த 5 ஆண்டு காலமாக இதே காட்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஏன் இந்த அரசாங்கத்தால் அதற்கு ஒரு நிலையான மாற்று ஏற்பாட்டைச் செய்ய முடியவில்லை என்று நான் இந்த ஆட்சியாளர்களைப் பார்த்துக் கேட்கிறேன். கரும்புக்குப் பணம் தவணை முறையிலே தரப்படுகிறது. ஆனால், விவசாயி வாங்கியிருக்கிற கூட்டுறவுக் கடனுக்கு மட்டும் உடனடியாக அந்தப் பணத்தைப் பிடித்துக்கொள்கிறார்கள். எனவே, விவசாயிகளுடைய வயிற்றில் அடிப்பதைப் போன்றதொரு சூழ்நிலை இந்த ஆட்சியில் இருக்கிறது என்பதனை நான் தெளிவுபடுத்துகிறேன்.

கரும்புக்கு விலை நிர்ணயம் செய்கிறபோது 8.5% பிழிதிறன் கொண்ட கரும்புக்குத்தான் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இதுவரையில் தமிழகத்திலே அதைப் போன்றதொரு நடைமுறை இருந்தது. ஆனால், நீங்கள் அதனை மாற்றி 10 சதவிகிதம் பிழிதிறன் கொண்ட கரும்புக்கு 1,000 ரூபாய் தருகிறோம் என்று சொன்னீர்கள். அதுவே ஒரு ஏமாற்று வேலை. ஆனால், அப்படியே வைத்துக்கொண்டாலும் கூட, 8.5 சதவிகிதம் பிழிதிறன் கொண்ட கரும்புக்கு 850 ரூபாய் எங்காவது கொடுத்திருக்கிறீர்களா என்றால், நீங்கள் எங்கும் கொடுக்கவில்லை. இதற்கு என்ன காரணம்? அவையிலே ஒன்றை அறிவிக்கிறீர்கள்; பத்திரிகையிலே ஒன்று செய்தியாக வருகிறது. ஆனால், விவசாயி போகிறபோது, கரும்புக்கான பணத்தைக் கேட்கிற போது நீங்கள் அறிவித்த விலையிலே அவர்களுக்கு அந்தக் கரும்புக்கான பணம் கிடைக்கவில்லை என்பதனை இந்த அரசாங்கம் மறுக்கமுடியாது. ஆனால், அரியானாவிலே 8.5 சதவிகிதம் பிழிதிறன் கொண்ட கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் தருகிறார்கள். பல விஷயங்களுக்கு இந்தியா முழுவதும் நாங்கள்தான் முன்னுதாரணம் என்று சொல்கிறீர்களே, அரியானாவிலே 1,000 ரூபாய் தருகிறபோது, தமிழகத்திலே உங்களால் 1,000 ரூபாய் ஏன் டன் ஒன்றுக்குத் தரமுடியவில்லை என்பதனை அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவுபடுத்த வேண்டும்.

*முற்பகல் 11-25*

நெல்லுக்கு விலை இல்லை. இன்றைக்கு விவசாயிகள் அம்பாரம், அம்பாரமாய் நெல்லைக் குவித்து வைத்திருக்கிறார்கள். ஆனால், நெல் விலைபோக மறுக்கிறது. ஆனால், அரிசி விலை மட்டும் ஏறிக்கொண்டே இருக்கிறது. இன்றைக்குச் சாதாரண ரக அரிசி மார்க்கெட்டிலே 20 ரூபாய்க்கு விற்கிறது. 20 ரூபாய் கொடுத்து அரிசியை வாங்க முடியுமா? நீங்கள் ரூ.3-50க்கு 3 கிலோ அரிசிதான் ரேஷன் கடையிலே கொடுக்கிறீர்கள். மீதம் உள்ள அரிசியை 20 ரூபாய்க்கு அவர்கள் வெளிமார்க்கெட்டிலே வாங்க வேண்டும். எனவே, அரிசி விலையைக் கட்டுப்படுத்துவது என்பதில் ரேஷன் கடையிலே மட்டுமல்லாமல் வெளி மார்க்கெட்டிலேயும் அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த அரசு ஏன் முயற்சிக்கவில்லை. அந்தத் துறையிலே நீங்கள் ஏன் தோல்வி அடைந்தீர்கள் என்பதனை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புள்ளியியல் துறை சார்பாக, தமிழ்நாடு அரசு சார்பாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. 4 ஆண்டு காலம் தொடர்ந்து ஒரே அளவிலே அரிசி விலை இருந்து கொண்டிருக்கிறது என்பதைப் புள்ளியியல் கணக்கீட்டாளர்கள் கணக்கிட்டுச் சொல்லி இருக்கிறார்கள். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு எட்டணா குறைவாக இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், ஒருகாலத்திலே, ஐப்பசி மாதம், அந்த மழைக் காலத்திலே வெள்ளைப் பொன்னி மட்டும் 1 கிலோ 20 ரூபாய்க்கு விற்கும். அது உயர்ந்த ரக அரிசி. இன்றைக்கு அந்த வெள்ளைப் பொன்னியைக்கூட அதிகமான விலைக்கு விற்கமுடியவில்லை. விவசாயிகள் அந்த நெல்லை அதிகமான விலையில்லை என்று சொல்லி வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். எந்த இடத்திலும் 20 ரூபாய்க்கு அரிசி விற்கவில்லை. எங்காவது சூப்பர் ரகப் பொன்னி என்று சொல்லி, மிக மிக நல்ல ரகமாகத் தேர்ந்தெடுத்து வாங்குகிறபோது அதனுடைய தேவையின் அடிப்படையில் விலை கூடியிருக்குமே தவிர, சாதாரண அரிசி கிலோ 10 ரூபாயிலிருந்து 12 ரூபாய் வரை எங்கு வேண்டுமானாலும் கிடைக்கும்.

மேலும், விவசாயிகள் நெல்லை வைத்துக் கொண்டு அல்லல்படுகிறார்கள் என்று சொன்னார். நேற்றுகூட, கடலூர் மாவட்டத்திற்கு அவருடைய சொந்த மாவட்டத்திற்குச் சென்றிருந்தபோது 75 இடங்களிலே நேரடி நெல் கொள்முதல்



நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. தேவைப்பட்டால் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் எங்கெல்லாம் விவசாயிகள் விரும்புகிறார்களோ, அங்கெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எவ்வளவு நெல் உற்பத்தியானாலும், இங்கே சாதாரண ரக நெல் ஒரு குவிண்டால் 510 ரூபாய் என்றும், நல்ல ரக நெல் குவிண்டால் 540 ரூபாய் என்றும் மத்திய அரசு நிர்ணயித்திருக்கிறது. கூடுதலாக இடையிலே ஏற்படுகிற செலவையும் சேர்த்து, ஒரு குவிண்டாலுக்கு 40 ரூபாய் சேர்த்து தமிழக அரசு கொள்முதல் செய்யத் தயாராக இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போலவே புள்ளியியல் கணக்குத் துறையின் பிரகாரம் 4 ஆண்டு காலம் ஒரே புள்ளியில் இருக்கிறது சொன்னால் 4 ஆண்டு காலமாக விலை குறையவில்லை என்றுதானே அர்த்தம்?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விலை ஒரே நிலையில் இருப்பதற்குக் காரணமே இந்த அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைதான். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் 4 ஆண்டு காலத்திற்கு முன்பு மத்திய அரசு ஒரு குவிண்டாலுக்கு 100 ரூபாய் விலை குறைவாகக் கொடுத்தது. இன்றைக்கு 100 ரூபாய் அதிகப்படுத்தி இருக்கிறது. அதைவிடக் கூடுதலாக 40 ரூபாய் கொடுத்தபோதும் நுகர்வோருக்கு அரிசியை அதே விலையில் கொடுப்பதுதான் இந்த அரசினுடைய சாதனை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல பருத்தி விவசாயம். பருத்தி விவசாயத்தைப் பொறுத்தவரையில் விவசாயத் துறை ஒரு பரிதாபகரமான தோல்வியைச் சந்தித்து இருக்கிறது கடந்த 5 ஆண்டு காலங்களிலே. ஏனென்றால் இந்தியாவிலே இருக்கிற நூற்பாலைகளிலே சரியாக 50 சதவீதம் நூற்பாலைகள் தமிழகத்திலே இருக்கின்றன. தொழில் துறையில் மாபெரும் புரட்சி என்றுகூடச் சொல்லலாம். ஆங்கிலேயர்கள் காலத்திலும், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் அதன் பிறகும் நூற்பாலைகள் பெரிய அளவிலே தமிழகத்திலே இடம்பெற்றன. அப்போதெல்லாம் இங்கே பருத்தி விவசாயம் நடைபெற்றது. ஆனால் இன்று என்ன நிகழ்ந்திருக்கிறது என்று சொன்னால் பருத்தி விவசாயமே தமிழகத்திலே இல்லை. பருத்தியை வாங்க வேண்டியவர்கள் பஞ்சாபிலும்,

அரியானாவிலும், பாகிஸ்தானுக்கும் சென்று வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதன் விளைவாக பருத்தி ஆலைகள், நூற்பாலைகள் மிகப்பெரிய நட்டத்தை அடைய இருக்கின்றன. ஆனால் மகாராஷ்டிராவிலே இருக்கிற நூற்பாலைகள் எல்லாம் அங்கேயே பருத்தி கிடைக்கின்ற காரணத்தினால் அவர்கள் இலாபகரமாக நடத்துகிறார்கள். தமிழகத்திலே இருக்கிற நூற்பாலைகளால் இலாபகரமாகச் செயல்பட முடியவில்லை. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், ஒரு செயல்திறனுள்ள அரசாக நீங்கள் இருந்திருப்பீர்களேயானால், இந்த ஐந்து ஆண்டு காலத்திலே பருத்தி விவசாயத்திற்கான முன்னுதாரணத்தை, ஒரு முயற்சியை நீங்கள் ஏற்பாடு செய்திருக்க வேண்டும். நம்மிடத்திலே எவ்வளவு நூற்பாலைகள் இருக்கின்றனவோ அதற்கு இணையாகப் பருத்தி விவசாயத்தை ஏற்பாடு செய்வதற்கு, பருத்தி விளைவிப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்திருக்க வேண்டும். அதிலே நீங்கள் தோல்வி அடைந்திருக்கிறீர்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

*முற்பகல் 11-30*

இன்றைக்கு நீங்கள் ஒரு டைடல் பார்க் ஏற்படுத்தியிருக்கிறீர்கள். இந்த டைடல் பார்க்தான் அரசாங்கத்தினுடைய மிகப் பெரிய சாதனை என்று சொல்கிறார்கள். நான் அதனை வரவேற்கிறேன். அதிலே மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், இங்கே நூற்பாலைகள் இருக்கின்றனவே, அவை நூறு டைடல் பார்க்கிற்குச் சமமான நூற்பாலைகள். நூறு டைடல் பார்க்குகளை ஆரம்பிப்பதற்கு நீங்கள் என்ன முதலீடு செய்ய வேண்டுமோ அதைவிட அதிகமான முதலீடு நூற்பாலைகளிலே செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல ஆயிரம் டைடல் பார்க்குகளிலே வேலை செய்கிற அளவிற்குத் தொழிலாளர்கள் அந்த நூற்பாலைகளிலே வேலை செய்கிறார்கள். ஆனால், நூற்பாலைகள் இங்கே புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. இதை அரசாங்கம் கவனத்திலே கொள்ள வேண்டும். இந்த நாட்டின் ஜீவாதாரமான விஷயமே நூற்பாலைகள்தான். இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் அங்கே பணிபுரிகிறார்கள். ஆனால், இன்றைக்கு அவை எல்லாம் மூடப்படக்கூடிய அபாயத்தில் இருக்கின்றன. 10 சதவீத நூற்பாலைகள் மூடிக்கிடக்கின்றன. காரணம், போதுமான பஞ்சு கிடைக்கவில்லை. எனவே, அரசாங்கம் இந்தத் துறையிலே அடைந்திருக்கிற தோல்வியை ஒப்புக்கொண்டு, இனிமேலாவது பருத்தி விவசாயத்திற்கான ஒரு செயல் திட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்ததாக ஆளுநர் உரையிலே சட்டம்-ஒழுங்கைப் பற்றிய தெளிவான குறிப்புகள் எதுவுமே கிடையாது. சட்டம்-ஒழுங்கைப் பற்றிய தெளிவான எந்தக் கருத்தும் சொல்லப்படவில்லை. உதாரணமாக, வீரப்பனைப் பிடிப்பதைப் பற்றி நேற்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள். ஆனால், ஆளுநர் உரையிலே வீரப்பனைப் பற்றிய செய்திகளே வரவில்லை. நான் கேட்கிறேன், வீரப்பனைப் பிடிப்பதே இல்லை என்று இந்த அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதா? இல்லையென்றால் அந்தப் பிரச்சினையைப் பற்றி ஏன் ஆளுநர் உரையிலே குறிப்பிடப்படவில்லை என்பதனை உங்களுடைய பதிலுரையிலே நீங்கள் சொல்ல வேண்டும். ராஜ்குமார் விடுதலைக்குப் பிறகு, ராஜ்குமார் வந்து சென்னையிலே முதலமைச்சரைச் சந்திப்பார் என்று அரசாங்கத்தின் தரப்பிலே சொல்லப்பட்டது. பத்திரிகைகளிலே எல்லாம் எழுதினார்கள். ஆனால், ராஜ்குமார் வந்து முதலமைச்சரைச் சந்திக்கவில்லை. அதற்கான காரணம் என்ன? நாங்கள் கேள்விப்பட்ட வரை ராஜ்குமார் காட்டிலே இருந்தபோது, வீரப்பனுக்கும் தமிழ்நாடு அரசாங்கத்திற்கும் இருந்த தொடர்பை அவர் நேரடியாகக் கண்ட காரணத்தினால் மனம் வெதும்பித்தான் அவர் முதலமைச்சரை வந்து சந்திக்கவில்லை என்று பரவலான குற்றச்சாட்டு இருக்கிறது. எனவே, அதற்கு உங்களுடைய பதில் என்ன என்பதை நீங்கள் உங்களுடைய பதிலுரையிலே சொல்ல வேண்டும்....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் தனக்குத் தெரிந்த விவரங்களைச் சொல்வதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், கற்பனையாக வீரப்பனிடத்திலே இந்த அரசாங்கம் வைத்துக்கொண்டிருக்கிற தொடர்பு காரணமாகத்தான் ராஜ்குமார் இங்கே வந்து முதலமைச்சரைச் சந்திக்கவில்லை என்று சொல்வது முற்றிலும் தவறு. அவர் விடுதலை செய்யப்பட்டவுடன், அவருடைய மகன்கள் நேரடியாக வந்து முதலமைச்சரையும் சந்தித்து, மற்றவர்களையும் சந்தித்து, ரஜினி போன்றவர்களை எல்லாம் சந்தித்து, நன்றி தெரிவித்தார்கள். அவர் விடுதலையானவுடனே, அவருடைய உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் வரமுடியவில்லை என்ற காரணத்தையும் தெரிவித்தார்கள். காலம் கடந்ததற்குப் பிறகு, அவருடைய பிள்ளைகளே வந்து நன்றி தெரிவித்ததற்குப் பிறகு, அவர் நேரடியாக வந்து நன்றி தெரிவிக்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை. நன்றியை எதிர்பார்த்தும் இந்த அரசாங்கம் எந்தக் காரியத்தையும் செய்வதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு.ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலேயே சட்டம்-ஒழுங்கு என்பது ஒரு பிரச்சினைக்குரிய அம்சமாக இருக்கிறது. உதாரணமாக புதிய தமிழகம் கட்சியினுடைய அலுவலகம் சூறையாடப்பட்டிருக்கிறது. அலுவலகத்தைச் சூறையாடியவர்கள், அவ்வாறு சூறையாடுவதற்கு முன்பாக Fax மூலமாக எல்லா பத்திரிகை அலுவலகங்களுக்கும் செய்தி அனுப்பினார்கள். அந்தக் கட்சி அலுவலகத்தைக் கைப்பற்றப்போகிறோம் என்று செய்தி அனுப்பினார்கள். அந்த அலுவலகத்திற்கு அருகிலேயே காவல் நிலையம் இருக்கிறது. ஆனால், அவர்கள் வந்து அந்த அலுவலகத்திலே, அதனுடைய தலைவர் கிருஷ்ணசாமியினுடைய உருவப் பொம்மையை எரித்து, அலுவலகத்தைச் சூறையாடி, நாற்காலி, மேசைகளை எல்லாம் சேதப்படுத்திய பிறகுகூட, காவல் துறையினர் வந்து அவர்களைக் கலைந்து போகத்தான் செய்தார்களேயொழிய அவர்கள்மீது எந்தவிதமான கடுமையான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதற்குக் காரணம் என்ன? மாநகரக் காவல் துறை என்ன செய்து கொண்டிருக்கிறது? ஒரு அரசியல் கட்சியினுடைய அலுவலகம் சூறையாடப்பட்டிருக்கிறது; காவல் நிலையத்திற்கு அருகிலேயே சூறையாடப்பட்டிருக்கிறது; காவல் துறை அதிலே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், மாநகரக் காவல் துறை செயல்படுகிறதா, இல்லையா என்பதனை நான் அறிய விரும்புகிறேன். எனவேதான் மாநகரத்திலேயே சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருக்கிறது என்பதனை நான்......

முற்பகல் 11-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, புதிய தமிழகம் கட்சியின் பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிடுகிறார். அது உள்கட்சித் தகராறு. (குறுக்கீடு) நேரம் கொடுப்பார்கள், அந்த நேரம் கொடுத்து விடுவார்கள். அது உள்கட்சித் தகராறு. ஒரு உள் கட்சித் தகராறு ஏற்படுகின்ற நேரத்திலே போலீஸ் ஒரு பக்கத்திலே போய் ஒருவர் மீது தவறான நடவடிக்கை எடுக்குமானால் பிறகு அதையே ஒரு பிரச்சினையாகவும் ஆக்குவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அழகிரி பார்க்க வேண்டியது என்னவென்றால், அந்தக் குற்றம் செய்தவர்கள் யாரோ அவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டார்கள். 11 பேர் அந்தக் குற்றம் செய்தார்கள் என்று புகார் சொல்லப்பட்டது. அந்த 11 பேரையும் உடனடியாக, 24 மணி நேரத்திற்குள்ளாகக் கைது செய்து சிறைச்சாலையிலே அடைத்திருக்கிறார்கள். இப்படி உடனடியாக



நடவடிக்கையெடுத்த காவல் துறையைப் பாராட்ட வேண்டுமே தவிர, நோக்கம் கற்பிப்பது சரியல்ல.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு உறுப்பினர் சுப. தங்கவேலன் அவர்கள் பேசுகிறபொழுது, ரேஷன் கடைகளிலே தும்பைப் பூவைப்போல அரிசி வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இந்தப் பிரச்சாரம் நன்றாக இருக்கிறது. ஒரு ஆளுங்கட்சிக்குத் தேவையான பிரச்சாரம்தான். ஆனால், உண்மை அதுதானா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நாற்றம் எடுக்கிற அரிசியைத் தவிர கிராமப்புறங்களிலே வேறு அரிசியே கிடைப்பதில்லை. (குறுக்கீடு) இதோ நான் அரிசி கொண்டு வந்திருக்கிறேன். நான் அமைச்சரிடமே கொடுக்கிறேன். எனக்கு ஒன்றும் இதிலே மாற்றுக் கருத்து இல்லை. நான் அமைச்சரிடமே கொடுக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு துணைத் தல்லைவரவர்களே, இல்லையென்றால் இன்னும் ஒன்றுகூடச் செய்யலாம். சுகாதாரத் துறை அமைச்சர் முகர்ந்து பார்க்கட்டும். ஒருவார காலம் நம்முடைய உணவுத் துறை அமைச்சர் இந்த அரிசியைத்தான் சமைத்துச் சாப்பிட வேண்டும். (சிரிப்பு) அந்தத் தொகுதியிலே இடைத் தேர்தல் வருகிறதா இல்லையா என்று பாருங்கள். நான் எதற்காக...

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் இதை ஒரு வார காலம் சமைத்துப் பார்த்துத்தான் அதை உறுதி செய்து கொண்டு இங்கே கொண்டு வந்து காண்பிக்கிறாரா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு வார காலம் அமைச்சர் சமைத்துச் சாப்பிட வேண்டுமென்று சொன்னார். நம் வேளாண்மைத் துறை அமைச்சர் ஒரு வார காலம் சமைத்துச் சாப்பிட்டிருந்தால் அங்கேயும் இடைத்தேர்தல் வந்திருக்கும் என்றால் அவர் கொண்டு வந்த அரிசியை எங்கேயிருந்து கொண்டு வந்தார், அது ரேஷன் கடையிலேயிருந்துதான் வந்ததா என்பது முதலிலே தெரிய வேண்டும், நான் உங்களிடத்திலே ஒரு விளக்கம் சொல்கிறேன். உங்களுக்கு நான் மறுப்புச் சொல்வதாக இதை எடுத்துக்கொள்ள வேண்டாம்.

தமிழ்நாட்டிலே மொத்தம் 27,452 கடைகள் இருக்கின்றன. 27,452 கடைகளிலே தமிழக அரசு அமைச்சரவையிலேயே முடிவு செய்து 100 சதவீதம் அரிசி கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

கிட்டத்தட்ட 1 கோடியே 59 இலட்சம் குடும்பங்களுக்கு அரிசி கொடுக்கிறோம். 810 இடங்களிலேயிருந்து விநியோகம் பண்ணுகிறோம். ஒவ்வொரு மாதமும் மத்திய உணவுத் திட்டத்திற்கும் சேர்ந்து 2 இலட்சம் டன் விநியோகம் பண்ணுகிறோம். இதிலே 91 ஆயிரத்து 450 டன் அரிசியை வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்காக மத்திய அரசு சார்பாக நமக்குக் கொடுக்கிறார்கள், 5 ரூபாய் 80 காசு வீதம்.

மீதம் இருக்கிற அரிசி ஒரு பக்கம் விவசாயிகளிடத்திலேயிருந்து நாம் கொள்முதல் செய்கிறோம். விவசாயிகளிடத்திலேயிருந்து குறுவை நெல் கொள்முதல் செய்கின்றபொழுது இதே உறுப்பினர்கள்தான் எவ்வளவு ஈரப்பதம் இருந்தாலும் அதைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். எவ்வளவு ஈரப்பதம் என்று சொன்னால், ஒரு காலத்திலே 15 புள்ளிக்கு மேல் இருந்தால் கொள்முதல் செய்வதில்லை. இன்றைக்கு முதலமைச்சர் 25 சதவீதம் வரை ஈரப்பதம் இருந்தாலும் கொள்முதல் செய்ய வேண்டும். விவசாயிகளுடைய நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நெல்லைக் கொள்முதல் செய்து, ஹல்லிங் ஏஜண்ட் மூலமாக அரைத்து வருகின்றபொழுது அதிலே 10 சதவீதம் நாம் கறுப்பு அரிசியை ஏற்றுக் கொள்கிறோம். 10 சதவீதம் இருந்தால்கூடப் பரவாயில்லை என்று ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் முதலமைச்சர் என்ன சொன்னார் என்றால், கறுப்பு அரிசியைக் கொடுக்காதீர்கள், முழுவதையும் மறுபடியும் நீங்கள் டென்டர் விட்டுவிட்டு நல்ல அரிசிதான் கொடுக்க வேண்டுமென்று சொன்னார். இப்படி இந்தப் பொது விநியோகத் துறையிலே இதைச் சொல்லுகிறோம். ஆனால் எங்கோ ஒரு கடையிலே — 27 ஆயிரம் கடைகளில் ஒரு கடையின் — குளோசிங் பேலன்ஸ் 60 மூட்டை, 70 மூட்டை மாதத்திலே இருக்கிறது. 25 ஆம் தேதியிலேயிருந்து 10 ஆம் தேதி வரைக்கும் அரிசி எடுக்கிறார்கள். ஒரு கடையிலே 800 கார்டு இருந்து, 500 கார்டுக்கு வாங்கிவிட்டு 300 கார்டுக்கு வாங்காமல் இருந்தார்கள் என்றால் அந்த அரிசி மிச்சமாக இருக்கிறது. வருகின்ற அரிசியை இருப்பு மூட்டையின் மேலே அடுக்கி விட்டார்கள் என்றால் இந்த அரிசி 2 மாத காலம் அங்கேயே தேங்கி விடுகிறது. ஒருசில இடங்களிலேதான் — இதுபோல தவறு இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் ஏதோ தும்பைப் பூப்போல அரிசி என்றார். நல்ல அரிசியாக நிச்சயமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒருசில இடங்களிலே எங்கேயாவது இதுமாதிரி கறுப்பாக இருந்தது என்றால், உறுப்பினர்கள் சொன்னீர்கள் என்றால் உடனே மாற்றித் தரத் தயாராக இருக்கிறோம்.



விவசாயிகளிடத்திலேயிருந்து நெல்லைக் கொள்முதல் பண்ணுகிறோம். அதையும் மத்திய அரசு கொடுக்கிற நெல்லையும் அரிசியாக்கித்தான் கொடுக்கிறோம். அதிலே தவறு ஏற்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் இராமசாமி அவர்களுக்கே தெரியும்; ஏற்கெனவே நேரே ஆதாரபூர்வமாகச் சொன்னார்கள். நேரடியாக அங்கேயிருந்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி, அந்தப் பணியைச் செய்திருக்கிறோம். சொன்னவுடன், அங்கேயிருக்கின்ற அதிகாரிகளெல்லாம் அந்தக் குறிப்பிட்ட கடையாளர் மீது நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னார். உடனடியாக மறுநாளே அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உண்மையைச் சொன்ன எந்தப் பணியாளர் மீதும் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறோம். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், முதலமைச்சர் அவர்கள் நல்ல சிறந்த அரிசியைத்தான் தரச் சொல்லியிருக்கிறார்கள். எங்காவது கருப்பு அரிசி இருக்குமானால் அதை மாற்றித் தரவும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. அழகிரி அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எப்படி அழகிரி அவர்கள் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவரோ, அதைப்போல நானும் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன்தான். இதைவிட மோசமான அரிசியை ஒரு வருடம் சாப்பிட்டாலும் கூட எங்கள் தொகுதியில் இடைத் தேர்தல் வராது. (சிரிப்பு) அதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி, 18 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் ஐந்து நிமிடத்தில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) குறுக்கீடுகள் எல்லாம் சேர்த்துத்தான் சொல்கிறேன். குறுக்கீடு சேர்த்து 18 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன. இன்னும் 5 நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல, மண்ணெண்ணெய் விலை. ரேஷன் கடைகளில் இன்றைக்கு மண்ணெண்ணெய் 8 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. 8 ரூபாய் கொடுத்து மண்ணெண்ணெய் வாங்கமுடியுமா? இதற்கு இந்தத் தமிழக அரசாங்கம் ஏதாவது எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறதா என்பதுதான் எங்களுடைய கேள்வி. இது உலகளாவிய பிரச்சினை என்று நீங்கள் சொல்வீர்கள். ஆனால், இதே தேசிய ஜனநாயக முன்னணியில் இருக்கின்ற திரு. சந்திரபாபு நாயுடுவும், செல்வி மம்தா பானர்ஜியும்

டில்லியில் எதிர்ப்புக் குரல் எழுப்பியபோது, நீங்கள் வாயடைத்து அமர்ந்திருந்தீர்களே, அதற்கு என்ன காரணம்? உங்களுடைய எஜமான விசுவாசமா? அன்றைக்கு நீங்கள் அதைக் கடுமையாகக் கண்டித்திருக்க வேண்டாமா? தமிழகத்திலே இருக்கின்ற ஏழை மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று உரிமைக்குரல் நீங்கள் கொடுத்திருக்க வேண்டாமா? (குறுக்கீடு) முடித்து விடுகிறேன்...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, கண்டிப்பது என்பதிலே இரண்டு வகைகள் உண்டு. பிரச்சாரத்திற்காக ஒரு அறிக்கை கொடுத்துக் கண்டிப்பது என்பது ஒன்று. இரண்டாவது, நேரடியாகத் தொடர்பு கொண்டு சம்பந்தப்பட்டவர்களோடு பேசி, விலையைக் குறைக்க முடியுமா என்று கேட்பது இன்னொன்று. அப்படிக் குறைக்க முடியாத ஒரு சூழ்நிலையில், நம்முடைய அரசாங்கத்திலிருந்து ஏதாவது மானியம் கொடுத்து விலையைக் குறைக்கலாமா என்று முயற்சிப்பது மற்றொன்று. அந்த அடிப்படையிலேதான் மத்திய அரசாங்கம் விலையைக் குறைக்கமுடியாது என்று சொன்ன நேரத்தில் நம்முடைய தமிழக அரசே மானியம் கொடுத்து மண்ணெண்ணெய் விலையைக் குறைத்திருக்கிறது.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல, இந்த அவையில் கடந்த ஐந்தாண்டு காலமாக, புதிய கூட்டுறவுச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதாக அமைச்சர் அவர்களும் கூறி வந்தார்கள்; முதலமைச்சர் அவர்களும் கூறி வந்தார்கள். இங்கே உறுதிமொழிக் குழு என்று ஒன்று இருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால், நீங்கள் அப்படிச் சொல்லி அந்த சென்ட்ரல் ஆக்ட்டை இங்கே இதுவரை அறிமுகப்படுத்தவில்லையே, ஏன்? (குறுக்கீடு) நான் பேசிவிடுகிறேன்......

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** ஒரு நிமிடம் நீங்கள் இதற்காக நேரம் எடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள், புதிய கூட்டுறவுச் சட்டத்தை ஏன் இங்கே அறிமுகப்படுத்தவில்லை என்று கேட்கிறார்கள். மத்திய வங்கியின் தலைவர்களுடைய மட்டத்திலே இது குறித்து விவாதிக்கப்பட்டு, மாநில வங்கியின் தலைவர் திரு. சி.டி. தண்டபாணி அவர்களுடைய தலைமையிலே அதிகாரிகள், தலைவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்; இன்னும் சொல்லப்போனால், மறைந்த மரியாதைக்குரிய சி.எஸ். அவர்களிடம்கூட நேரில் சென்று காண்பித்து, அதைப்பற்றி விவாதித்து வந்து, புதிய கூட்டுறவுச் சட்டம் குறித்து ஒரு



குழுவினர் அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தந்திருக்கிறார்கள். அது சட்டத் துறையில் ஆராயப்பட்டு வருகிறது. எனவே, புதிய சட்டம் சட்டமன்றத்திலே அறிமுகப்படுத்தப்படும். அதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். விரைவிலே அது அறிமுகப்படுத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது கடைசி கூட்டத் தொடர். ஐந்தாண்டு காலம் ஆகிவிட்டது. அந்த விவாதத்திற்குள் மீண்டும் நான் வரவில்லை. ஆனால் இது தவறு என்பதை மட்டும் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். ஐந்தாண்டு காலம் ஆகி, கடைசி கூட்டத் தொடர் முடிகின்றபோதுகூட உங்களால் தாக்கல் செய்ய முடியவில்லை என்றால், உங்களுக்கு அதில் அக்கறை இல்லையென்றுதான் பொருள். ஆகவே, விரைந்து அதில் செயலாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நீதியரசர் மோகன் விசாரணைக் கமிஷனுடைய அறிக்கை இங்கே வைக்கப்பட்டது. திருநெல்வேலியில், தாமிரபரணி ஆற்றிலே 17 பேர் கொலை செய்யப்பட்டு வீசியெறியப்பட்டார்கள். ஆற்றிலே இறங்கியவர்கள் அடித்துக் கொல்லப்பட்டார்கள். பத்திரிகையிலே பெரிய படம் வந்தது. ஆற்றிலே நீந்திக் கரையேறுகிறவரை ஒரு காவல் துறை அதிகாரி அடிப்பதைப் போன்ற படம் எல்லாம் வந்தது. ஆனால் நீதியரசர் மோகன் அவர்கள் என்ன தீர்ப்பு வழங்கியிருக்கிறார்? அவர்கள் எல்லாம் தவறுதலாக, விபத்தின் காரணமாக இறந்துவிட்டார்கள் என்று எழுதியிருக்கிறார். நாங்கள் அதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

நாம் எதற்காக ஒரு விசாரணைக் கமிஷன் போடுகிறோம்? எனக்குத் தெரிந்த ஒன்றைச் சொல்கிறேன். ஒரு காரியம் கெட்டுப் போகவேண்டுமானால், ஒரு கல்லைத் தூக்கிப் போடு என்று சொல்வார்கள். இன்னும் மோசமாகக் கெடவேண்டுமென்று சொன்னால் ஒரு கமிட்டியைப் போடு என்று சொல்வார்கள். அதேபோல, அன்றைக்கு நீங்கள் ஒரு கமிட்டியைப் போட்டீர்கள். ஆனால், அந்த விசாரணைக் கமிஷன் நேர் எதிராகச் சொல்கிறது. ஜாலியன்வாலாபாக் படுகொலைக்கு இணையான ஒரு படுகொலை அது. 17 பேர் அடித்துக் கொல்லப்பட்டார்கள். ஆற்றிலே மிதந்தார்கள். ஆனால் நீதியரசருடைய நீதி அறிக்கையில், அவர்கள் எல்லாம் நீரில் மூழ்கி இறந்தார்கள், போலீசார் அடித்து அவர்கள் இறக்கவில்லை என்று, ஓர் அப்பட்டமான, ஒரு தவறான, உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தியை அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அதனை தமிழ் மாநிலக் காங்கிரஸின் சார்பாக நாங்கள் மிகக் கடுமையாகக் கண்டிக்கிறோம்.

*முற்பகல் 11-45*

அதேபோல, இன்றைக்குத் தமிழகத்திலே ஒரு பெரிய தவறு நடந்து வருகிறது. அதனை அமைச்சரவையினுடைய கவனத்திற்கும், முதலமைச்சர் மற்றுமுள்ள அமைச்சர்களுடைய கவனத்திற்கும் நான் கொண்டு வருகிறேன். ஆற்று மணலும், கருங்கல் ஜல்லியும் ஏலம் விடப்படாத மாவட்டங்கள் எத்தனை, ஏலம் விடப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்பதை மட்டும் நீங்கள் சொல்ல வேண்டும். நான் இந்தப் பிரச்சினைக்குள் அதிகமாகச் செல்ல விரும்பவில்லை. ஆனால், அதிலே கோடிக்கணக்கான ரூபாய்க்கு முறைகேடுகள் நடக்கின்றன. சமூக விரோதிகள் அதிலே அங்கம் வகிக்கிறார்கள். சென்னையிலும், மதுரையிலும் அது கொடிகட்டிப் பறக்கிறது. எனவே, எந்தெந்த மாவட்டங்களிலே ஆற்று மணல், ஜல்லி ஏலம் விடப்படவில்லை? ஏலம் விடப்படாததற்கான காரணம் என்ன? அப்படி ஏலம் விடாத மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதனை நான் அறிய விரும்புகிறேன்.

சேலம் இரும்பாலை. இந்தப் பேரவையிலே நீங்கள் தீர்மானம் இயற்றினீர்கள். ஆனால், அந்தத் தீர்மானத்திற்கு என்ன மரியாதை கிடைத்திருக்கிறது? இன்றைக்கு மத்திய அரசாங்கம் சேலம் இரும்பாலையை எடுத்துக்கொள்ளக்கூடிய தனியார்கள் யார் யார் என்று அவர்களையெல்லாம் பட்டியலிட்டு, அவர்களுக்கு எல்லாம் அனுமதி வழங்குவதற்குத் தயாராக இருக்கிறது. நாம் ஒரு தீர்மானம் நிறைவேற்றிய பிறகும்—மத்திய அரசாங்கத்தில் நீங்களே அங்கம் வகிக்கிறீர்கள். நீங்கள் அங்கம் வகித்த பிறகும்—சேலம் இரும்பாலை இன்றைக்கு தனியாருக்குப் போகிறது என்று சொன்னால், ஏன் இந்த அரசாங்கம் அதற்குத் தடையாக இல்லை என்று நான் கேட்க விரும்புகிறேன். ஒரு தீர்மானம் இயற்றியதோடு உங்களுடைய பொறுப்பு முடிந்து விட்டதா? தீர்மானம் இயற்றினால் மட்டும் போதுமா? அதைத் தடுத்து நிறுத்துகின்ற முயற்சி இல்லை. மேற்கொண்டு தனியாருக்குப் போவதற்கான செயல்பாடுகள் ஒன்றன்பின் ஒன்றாகப் பாராளுமன்றத்திலே, மத்திய அரசாங்கத்திலே நடந்து வருகின்றன என்பதனைச் சொல்லி, இந்த அரசாங்கம் தனியாருக்கு அதைத் தாரை வார்த்துவிடக்கூடாது என்று கூறிக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம். நீண்டகாலமாக நீங்கள் சொல்லி வருகிறீர்கள். ஆனால், இன்றைக்கு எங்காவது ஒரு புதிய இலவச மின்சார இணைப்பைப் பெற முடிகிறதா? 10 ஆயிரம் ரூபாய் கட்ட



வேண்டும் அல்லது 25 ஆயிரம் ரூபாய் கட்டவேண்டும். அப்படிக் கட்டினால்தான் மின்சார இணைப்புக் கிடைக்கும் என்ற சூழ்நிலை இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக இலவச மின்சாரம் என்கிற concept அடிபட்டுப் போய்விட்டது. அதற்குப் பதிலாக பணம் கொடுத்துத்தான் மின்சாரத்தைப் பெறவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) எனவே, அரசாங்கம் அந்த நிலையிலே இருந்து தன்னை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயத்திற்கு இன்றைக்கு இலவசமாக புதிய இணைப்புகள் கொடுப்பதே கிடையாது.

கடைசியாக, கிருஷ்ணா தண்ணீர். ராதைகூட கிருஷ்ணா என்று கூப்பிட்டாள்; கிருஷ்ணர் வந்தார். குசேலர் கூப்பிட்டார்; கிருஷ்ணர் வந்தார். ஆனால், துரைமுருகன் கூப்பிட்டால் மட்டும் கிருஷ்ணா வருவது கிடையாது. என்ன காரணம்? நீங்கள் சொல்கிறீர்கள், கிருஷ்ணா தண்ணீர் வருகிறது என்று. நாங்கள் மறுக்கவில்லை. மறுத்தால், எங்கே வரவில்லை, உங்களால் காட்ட முடியமா என்று கேட்பீர்கள். ஆனால், பத்திரிகையிலே இரண்டு மாதங்களுக்கு முன்பு பார்த்தேன். மேயர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சரும் கிருஷ்ணா தண்ணீரைப் பெறுவதற்காக ஐதராபாத் பயணம் செய்ய இருக்கிறார்கள் என்று பத்திரிகையிலே பார்த்தேன். என்ன காரணம்? கிருஷ்ணா தண்ணீர் வந்தால் வர வேண்டியதுதானே? அதன்பிறகு அதைப் பெறுவதற்கு நீங்கள் ஏன் போகிறீர்கள்? எனவேதான் நாங்கள் சொல்கிறோம், இன்னும் அந்தத் திட்டம் முழுமையாக நிறைவு பெறவில்லை என்று. முழுமையாக நிறைவு பெற்று விட்டதாக நீங்கள் சொன்னால், ஒரு சட்டமன்றக் குழு அமைத்து, உறுப்பினர்களை நீங்கள் தேர்ந்தெடுத்து, எங்களை அழைத்துக்கொண்டு போய்க் காட்ட வேண்டும். இன்றைக்கு சென்னையிலே குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. உங்களுடைய கணக்குப் பிரகாரம், கிருஷ்ணா நீர் வந்திருக்குமேயானால் தண்ணீர்ப் பிரச்சினை ஏற்படுவதற்கான காரணமே கிடையாதே? குடி தண்ணீர்ப் பிரச்சினை வந்திருக்கக்கூடாதே? ஆனால், குடிநீர்ப் பிரச்சினை சென்னை நகரத்தை வாட்டுகிறபோது, கிருஷ்ணா நீர் வரவில்லை. அதனைக் கொண்டுவருவதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

வீராணம் திட்டம். அதை மூன்று ஆண்டுகளிலே நிறைவேற்றுவதாகச் சொன்னீர்கள். 111 கோடி ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டது. ஆனால் எவ்வளவு சதவிகிதம் வேலை நடைபெறுகிறது? இன்னும் வீராணம் ஏரியிலிருந்து செல்கின்ற கிளை வாய்க்கால்கள் செப்பனிடப்படவில்லை.

அவை அப்படியே இருக்கின்றன. எனவே, ஒரு வெள்ளை அறிக்கை வைக்க வேண்டும். வீராணத்திலே எவ்வளவு பணம் முதலீடு செய்திருக்கிறீர்கள்; எவ்வளவு சதவிகித வேலை நடைபெற்றிருக்கிறது; மற்ற வேலைகள் ஏன் நடைபெறவில்லை என்பதனை நீங்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையின் முடிவாக,

'பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

என்கின்ற குறளைச் சொல்லி, தனக்கு நன்மையை புரிவோராகிய பெரியார் ஒருவரின் நட்பினை இழத்தல், வல்லமை வாய்ந்த பலருடைய பகைமையைத் தேடிக் கொள்வதைவிட பத்து மடங்கு அதிகமான தீமையை விளைவிக்கும் என்பதனைச் சொல்லி, என்னுடைய உரையை முடிக்கின்றேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் *11-50*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நல்ல திருக்குறளோடு நம்முடைய அழகிரி அவர்கள் உரையை முடித்திருக்கிறார்கள். இந்த அவையிலே இந்த அரிசியைக் காட்டி இந்த அரிசியை முகர்ந்து பார்க்க வேண்டும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் என்று சொன்னார்கள். இதை உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு வாரத்திற்கு சாப்பிட்டால் அங்கே இடைத் தேர்தல் வரும் என்று சொன்னார்கள். எப்போதுமே அழகிரி சொன்னால் அதை நான் நம்பக்கூடியவன். எனவே, நானும் இதை வாங்கி முகர்ந்து பார்த்தேன். பிறகு கொஞ்சம் அரிசியை எடுத்து வாயில் போட்டும் பார்த்தேன். நான் போட்டுப் பார்த்ததோடு மட்டுமல்லாமல் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயனும் சாப்பிட்டுப் பார்த்தார். பார்ப்பதற்கு நிறம் அப்படி இருக்கிறதே தவிர உண்மையிலேயே அரிசி அப்படி மோசமான அரிசி இல்லை. வேண்டுமானால் அழகிரிக்கு சந்தேகம் இருந்தால்—நான் மிசா கைதியாக இருந்தவன் ஓராண்டு காலம், அங்கே எப்படிப்பட்ட அரிசியை எல்லாம் எங்களுக்குச் சமைத்துப் போட்டார்கள் என்பது என்னைப் போன்றவர்களுக்குத் தெரியும்—அழகிரி வீட்டிலே இதே அரிசியைக் கொண்டு வந்து ஒரு வார காலம் சமைத்துப் போட்டால் நான் சாப்பிடத் தயாராக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனாலே ஒரு இடைத் தேர்தல் வந்தாலும் நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழக்கமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்களுக்கு கிருஷ்ணாவை இழுக்காமல் தூக்கம் வருவது இல்லை. அதிலும் இன்றைக்கு ராதையை எல்லாம் கொஞ்சம் அவருடைய சுபாவத்திற்கு ஏற்றபடி சொன்னார். ஒன்றை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், இப்போது சென்னை மாநகரத்தைக் குடிநீர்ப் பிரச்சினையிலிருந்து காப்பாற்றிக் கொண்டிருப்பது கிருஷ்ணா தண்ணீர்தான். அதைத்தான் அவரும் ஹாஸ்டலில் குடித்துக் கொண்டிருக்கிறார். எனவே, கிருஷ்ணா தண்ணீர் வந்திருக்கிறது. தண்ணீர்தான் வருகிறதே, ஏன் போனீர்கள் என்றார். இன்னும் தண்ணீர் அதிகமாக வரவேண்டும் என்பதைக் கேட்பதற்காகப் போனோம். இதனாலே பிரச்சினை இல்லை. எனவே, கிருஷ்ணா தண்ணீர்தான் இப்போது சென்னை குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டிருக்கிற தண்ணீர் என்று ஒரு பத்திரிகையிலே எழுதினார்கள், எந்தப் பத்திரிகை கிண்டல் பண்ணி எழுதுவார்களோ அதே பத்திரிகைதான். இன்றைக்கு சென்னை மாநகரில் குடிநீர்ப் பிரச்சினையை தீர்ப்பது கிருஷ்ணா தண்ணீரே என்று தீர்ப்புக் கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

***திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்று சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் சுப. தங்கவேலன் அவர்கள் முன்மொழிந்து, மாண்புமிகு உறுப்பினர் மீ.அ. வைதியலிங்கம் அவர்கள் வழிமொழிந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன்னால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் எஜமான விசுவாசத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் அது எந்தச் சூழ்நிலையிலும், எந்தக் கால கட்டத்திலேயும் தன்னுடைய கொள்கையை விட்டுக் கொடுக்காத இயக்கம் என்பதை சமீபத்திலே நடைபெற்ற நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். எனவே, தனியாக ஓர் அமைப்பு கண்டதற்குப் பிறகும், டெல்லியில் விசுவாசத்தோடு யார் இருக்கிறார்கள் என்பது இந்த நாட்டு மக்களுக்குத் தெரியும் என்பதை நான் முன்னாலேயே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் தகவல் தொழில்நுட்ப வசதிக்காக தனிக் கொள்கை வகுத்த மாநிலம் தமிழகம். இதைப் பாராட்டி நேற்றையதினம் தினமணி பத்திரிகையில் ஒரு துணைத் தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது. அதிலே தொடங்கப்படுகிறபோது, "தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பப் புரட்சி ஆரவாரமின்றி நிகழ்ந்து வருவது கண்கூடு'' என்று தொடங்கி, ''தமிழகத்தின் முனைப்பான செயல்பாடுகளின் பயனாக இந்தியாவில் தலைசிறந்த தகவல் தொழில்நுட்ப மாநிலமாக தமிழகம் திகழுமென நம்பலாம்" என்று ஒரு அருமையான தலையங்கத்தைத் தீட்டியிருக்கிறார்கள்.

இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இந்த அரசைப் பொறுத்தவரையில் கிரேக்க பழமொழியையொட்டி, "ஒரு நல்ல அரசுதான் ஒரு நல்ல குடிமகனை உருவாக்க முடியும்' என்கின்ற அந்த வார்த்தைக்கொப்ப "A perfect Government makes a perfect citizen" என்று சொல்வார்களே, அதைப்போல ஒரு நல்ல ஆட்சியை வழங்கி வருகிற மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பற்றி சமீபத்திலே ஒரு ஆங்கில தினசரி பத்திரிகையிலே வந்த ஒரு செய்தி வரிகளை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்தப் பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தி, ``Kalaignar is an ace Parliamentarian with political acumen, a powerful tongue and a mighty pen" என்று பாராட்டி இருக்கிறார்கள். எல்லா வகையிலும் வல்லமை பொருந்திய ஒரு நாடாளுமன்றவாதி, கூர்மையான அரசியல் ஞானம் உடையவர், சிறந்த நாவன்மை படைத்தவர், வல்லமை பொருந்திய எழுத்தாளர் என்று புகழப்பட்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலைமையில் இயங்கிக் கொண்டிருக்கிற இந்த ஆட்சியில் கடந்த நாலரை ஆண்டு காலத்தில் ஐந்தாவது முறையாக ஆளுநர் உரையின்மீது நன்றி தெரிவித்துப் பேசுகிற வாய்ப்புப் பெற்றதை என்னுடைய வாழ்க்கையில் பெரும்பேறாகக் கருதுகிறேன்.

*முற்பகல் 11-55*

இன்னும்கூடச் சொல்லவேண்டுமானால், நீதியரசர்களுடைய குழுவினுடைய பரிந்துரைகளைப் பெற்று சிறப்பான முறையில் இந்த ஆட்சியை நடத்தி வருபவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். ஆளுநர் உரையைப் பற்றிச் சொல்கிறபோது, இது ஒரு கொள்கைக் குறிப்பு என்று சொல்வது உண்டு. இந்த அறிக்கையில் நாலரை ஆண்டு காலத்தில் மக்களின் அடிப்படைத் தேவைகளில் பெரும்பகுதியை நிறைவேற்றியுள்ள, நிறைவேற்றி வருகிற நிலையைக் காண முடிகிறது.



இங்கே தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு ஒரு Tamil Vertual University என்ற அளவில் உருவாக்கப்பட்டு, ஒரு மொழியைப் பற்றிச் சொல்கிறபோது சொல்வார்களே, மொழியின் வழியில்தான் ஒரு மனித சமுதாயம் தன்னை அடையாளம் காட்டிக்கொள்ள முடியும். அதாவது Language is a real identity of human race என்று சொல்வார்களே, அதனை இன்றைக்கு உலகமே தெரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு ஒரு தமிழ் இணையப் பல்கலைக்கழகம் உருவாக்குகிற அந்த முயற்சி பாராட்டத்தக்க ஒன்று.

இன்னும்கூடச் சொல்லவேண்டுமானால், மருத்துவ வசதி குறித்த ஆலோசனைகளை வெளிநாடுகளிலிருந்து பெறக்கூடிய வாய்ப்புகளை உருவாக்கி இருப்பது, பணிகளை விரைந்து முடிக்க கணினிமயமாக்கும் திட்டம், பாசன வசதிகள் அதிகரிப்புத் திட்டம், அமைப்புசாராத் தொழிலாளர் நலத் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், நமக்கு நாமே திட்டம், வருமுன் காப்போம் திட்டம், கால்நடை பாதுகாப்புத் திட்டம், இப்படி எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றியுள்ள ஒரே அரசு இந்தியநாட்டிலே நம்முடைய அரசுதான் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மறைந்துவிட்ட நேரு அவர்கள் ஒருமுறை குறிப்பிடுகிறபோது சொன்னார்கள்; 'கடைசியாக ஒரு ஏழையின் கண்ணீர் துடைக்கப்படும் வரை எங்கள் பணி முடிந்ததாக அர்த்தமில்லை' என்று. அந்த வரிகளுடைய தாக்கம் இன்றைக்கு செயல்படக்கூடிய அளவுக்கு, 'இருக்க இடம், நடக்கப் பாதை, குடிக்கத் தண்ணீர், பார்க்க வெளிச்சம், படிக்கப் பள்ளி, உயிர் காக்கச் சுகாதாரம்' ஆகிய அனைத்தும் முழுமையாக இந்த மக்களுக்குக் கிடைக்கும் வரை ஓயமாட்டேன் என்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் இலட்சியம் ஈடேறும் வரை எங்கள் பணி ஓயாது என்று பணியாற்றிக் கொண்டிருக்கிற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரைப் போன்ற அனைத்து அமைச்சர் பெருமக்களுடைய பணிகளும் பாராட்டத்தக்க அளவுக்கு இருக்கிற ஒரே அரசு நம்முடைய அரசு என்பதை நான் அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே முதன்முதலாக கழக ஆட்சியில்தான் மாநிலத்திற்கு என்று ஒரு திட்டக் குழு உருவாக்கப்பட்டது. ஏழைகளுக்கு வீடு கட்டுவது குறித்து நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு சொற்றொடர் உண்டு, 'ஒரு அரசனுக்கு அரண்மனை கட்டுவது எளிது.

ஆனால் குடிசையில் வாழும் ஏழைக்கு வீடு கட்டுவதுதான் சாதனை' என்று. அந்த வார்த்தைக்கு உயிரோட்டமும், செயலாக்கமும் கொடுத்துவரும் ஒரே அரசு, இந்தியாவில் நம்முடைய கலைஞர் அவர்களுடைய தலைமையில் இருக்கிற இந்த அரசுதான் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடல் பகுதியிலே வாழ்ந்து வந்த மக்களுக்கு ஒரு ஏக்கம் இருந்தது. (மணியடிக்கப்பெற்றது) இவ்வளவு தண்ணீர் இருக்கிறதே, குடிக்க முடியவில்லையே என்று. அதைக்கூட verses of Coleridge என்ற அந்த அறிஞருடைய வார்த்தைகளிலே சொல்லவேண்டுமானால், ``Water, water everywhere but not a drop to drink". சமுத்திரத்திலே தண்ணீர் இருந்தாலும் குடிக்க முடியாமல் இருந்த நிலையை மாற்றி கடல் நீரையே குடிநீராக மாற்றித் தருகிற ஒரு அற்புதமான திட்டத்தை நிறைவேற்றி வருகிற ஒரு அரசு நம்முடைய அரசு.

சுற்றுச்சூழலைப் பொறுத்தவரையில், 'A bad environment is a silent killer' என்று சொல்வார்கள். 'மோசமான சுற்றுச்சூழல், சமுதாயத்தை அமைதியாகக் கொல்லும் கொலையாளி' என்று சொல்வார்கள். அதற்காக 1,700 கோடி ரூபாய் ஒதுக்கீடு. பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்துகிற மிகப்பெரிய திட்டம். இன்னும்கூட சொல்ல வேண்டுமானால், இந்திய நாட்டிலே போடப்பட்டிருக்கிற ஐந்தாண்டுத் திட்டங்களோடு இந்தத் தமிழக அரசினுடைய திட்டங்களை ஒப்பிட்டுப் பத்திரிகையிலே வந்த செய்தியை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அந்தச் செய்தியில் கோடிக்கணக்கான ரூபாயைச் செலவழித்து போடப்பட்ட இந்திய நாட்டினுடைய ஐந்தாண்டுத் திட்டங்களைவிட கலைஞர் அரசின் திட்டங்கள் சாதித்துள்ளவை வியக்கத்தக்க ஒன்றாகும் என்று அந்தப் பத்திரிகை பாராட்டியிருக்கிறது.

இன்னும் ஒரு பத்திரிகை 'A revolutionary force here lies, not in the proliterate, but at the Secretariat,' நிர்வாக இயந்திரத்தை தூய்மையாக, நேர்மையாக, துரிதமாக சுழற்றினால், தலைமைச் செயலகத்தில் வெளியிடப்படும் அரசாணை மூலம் அமைதிப் புரட்சியை நிகழ்த்திவிட முடியும் என்பதற்கு தமிழகம் எடுத்துக்காட்டாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

இதற்கெல்லாம் என்ன ஆதாரம்? கேட்கக் கூடும். இதற்கு ஆதாரம் இன்றைக்கு India Today பத்திரிகையிலே வந்திருக்கிற ஒரு கருத்துக்



கணிப்பு. அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் மக்களின் எதிர்ப்பு அலையோ, ஆட்சிக்கு எதிரான கோபமோ Anti-incumbency mood இல்லாத ஒரே மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது என்று அந்த India Today பத்திரிகையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை வலியுறுத்தி, அதை. விளக்கி, இன்னொரு பத்திரிகையிலே, துக்ளக் பத்திரிகையிலே ஒரு கேள்வி வருகிறபோது, அந்த பத்திரிகை ஆசிரியர் இதை உறுதிபடுத்திச் சொல்கிறார். கேள்வி: 'தி.மு.க.தான் மீண்டும் ஆட்சிக்கு வரும் என்று India Today கணித்திருப்பது சரியா?' துக்ளக் பத்திரிகையினுடைய பதில்: 'சில மாதங்களுக்கு முன்பு துக்ளக் நிருபர்கள் பல தொகுதிகளைச் சுற்றிப் பார்த்து மக்களைச் சந்தித்துத் தெரிவித்த கருத்தும் இந்தக் கருத்துதான்' என்று துக்ளக் பத்திரிகையினுடைய அந்த ஆதாரத்தைக்கூட நான் சொல்ல விரும்புகிறேன். இவையெல்லாம் அந்த India Today பத்திரிகை இந்த அரசுக்கு கொடுத்திருக்கிற சான்று ஆகும். ``There is no indication of any anti-incumbency mood." Perceived improvement is the quality of life. இதெல்லாம் அந்தப் பத்திரிகையிலே வந்திருக்கிற பாராட்டுச் செய்திகள். இவையெல்லாம் ``Ivory tower" என்று சொல்லப்படுகிற, தந்த கோபுரத்திலே ஏதோ ஒரு தோட்டத்திலே அமர்ந்திருப்பவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆனால், நான் ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். எவ்வளவு பெரிய புரட்சிகரமான சிந்தனையாளர்கள் நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் வந்தாலும், அவர்களுடைய புரட்சிகரமான எண்ணம் குறைகிற வாய்ப்பு உண்டு என்று பொதுவுடைமைக் கட்சியினுடைய மூத்த தலைவராக இருந்த, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த, மிகப் பெரிய தலைவர், அன்பாக ஏ.கே.ஜி. என்று அழைக்கப்பெற்ற ஏ.கே. கோபாலன் அவர்கள் சொன்னதாக Women Parliamentarian என்ற புத்தகத்திலே ஒரு செய்தியை நான் பார்த்தேன். அவர் சொல்கிறார் Parliament is a machine which weakens the revolutionary mind. புரட்சிகரமான உள்ளங்களைக்கூட நாடாளுமன்ற இயந்திரம் பலவீனப்படுத்திவிடும் என்று ஏ.கே.ஜி. அவர்கள் சொன்னதற்கு மாறாக (மணியடிக்கப்பெற்றது) விதிவிலக்காக இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல ஆண்டு காலம் சட்டமன்றத்திலே பங்கு பெற்று, பல்வேறு அனுபவங்களைப் பெற்றுள்ள அவர் இன்னும் புரட்சிகரமான சிந்தனைகளால், புரட்சிகரமான எண்ணங்களால் மக்களின் தேவைகளை வேகம் குறையாமல் நிறைவேற்றும் பாங்கு பாராட்டத்தக்க ஒன்று.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியைப் பொறுத்தவரையில் ஒரே ஒரு வேண்டுகோள். எங்களுக்கு அதிகமான நேரம் இப்படிப்பட்ட நேரங்களிலே ஒதுக்கப்படுவதில்லை. எனவே, இந்தச் செய்தியின் அருமை கருதி இரண்டு மணித்துளிகள் வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆளுநர் உரை உப்பு சப்பில்லாத உரை, அரைத்த மாவையே அரைப்பதைப்போல என்று சொல்லப்படுவது, அரசியல் ஆதங்கத்தின் வெளிப்பாடு. இவர்கள் எல்லாம் யாரை நோக்கிப் பேசுகிறார்கள் என்பதற்கு தினமணி பத்திரிகையில் 'மறத்துவிட்ட அரசியல்' என்று ஒரு தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது. நேரத்தின் அருமை கருதி அதை நான் குறிப்பிட விரும்பவில்லை. நண்பர்கள் அந்தத் தலையங்கத்தைப் படித்துக் கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். தேர்தல் ஆணையம், கிரிமினல் குற்றவாளிகளாக இருந்தால் தேர்தலிலே போட்டியிட கட்சி சார்பில் டிக்கெட் கொடுக்கக் கூடாது என்று ஒரு அருமையான ஆலோசனையை வழங்கியிருக்கிறது. இங்கே படமாக வீற்றிருக்கிற பசும்பொன் தேவர் அவர்கள், தியாக வாழ்வே தேசிய வாழ்வு என்ற இலக்கணத்தோடு வாழ்ந்த அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டதைப் பல நேரத்திலே பலர் சொல்ல நாங்கள் கேட்டிருக்கிறோம். "மங்கை சூதகமானால் கங்கையிலே மூழ்கலாம். கங்கையே சூதகமானால் எங்கே மூழ்குவது" என்று. ஒரு அரசியல் கட்சிக்கு டிக்கெட் கொடுப்பவர்களுக்கே அந்தத் தகுதியின்மை இருக்கிறதென்றால், நிற்க வைக்கப்படுபவர்களுக்கு எப்படிப்பட்ட தகுதி இருக்கும் என்பதை இந்த நாடு நன்றாக உணர்ந்திருக்கிறது.

ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கருத்துக் கணிப்பில் ஊழல் ஒரு பொருட்டல்ல என்று சொல்கிற நண்பர்களுக்கு India Today பத்திரிகையிலிருந்தே ஒரு சான்று தருகிறேன். அதிலே ஒரு செய்தி கேட்கப்பட்டிருக்கிறது. பெரும் அவமானமாகவும், தலைகுனிவாகவும் எதைக் கருதுகிறீர்கள் என்ற கேள்விக்கு, கேட்கப்பட்டவர்களில் 30 சதவீதம் பேர் ஊழல் என்று பதில் அளித்திருக்கிறார்கள். நாட்டிற்கு பெரும் அவமானத்தை ஏற்படுத்திக்கொண்டிருப்பது ஊழலே என்பது பெரும்பான்மையோரின் கருத்து.

நான் என்னுடைய பேச்சின் இறுதியாகச் சொல்ல விரும்புவது, இந்த நிலையில் 4½ஆண்டு காலத்தில் வெகுவாக சாதித்து இருக்கிற ஆட்சிக்குப் பதிலாக நாங்கள் ஆட்சிக்கு வருவோம் என்று சொல்கிறபோது எனக்கு ஒரு வாசகம் நினைவுக்கு வருகிறது.



If wishes were horses, beggars will ride என்ற வாசகம் தான் நினைவுக்கு வருகிறது. ஆசைகள் குதிரைகளானால், யார் வேண்டுமானாலும் சவாரி செய்யலாம் என்ற நினைவுதான் வருகிறது.

*பிற்பகல் 12-05*

இறுதியாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் இந்த மன்றத்திலே முன்பு ஒரு முறை சொன்னார்கள். அதை ஒரு முறை நான் வழிமொழிந்தும் இருக்கிறேன். இன்றைக்கும் அதை மீண்டும் வழிமொழிய வேண்டிய ஒரு அவசியமான சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே மீண்டும் வழிமொழிகிறேன். அவர் அருமையாக ஒரு வாசகத்தைச் சொன்னார். "Don't create a ghost and then try to destroy it," ஒரு பேயை உருவாக்கிவிட்டு, அதை அழிக்கிற முயற்சிகளில் ஈடுபடக் கூடாது என்று சொன்னார், நாங்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். சேராத இடங்களிலே சேர வேண்டாம் என்பதுதான் எங்களுடைய ஆதங்கம் எனறு சொல்லி, இவ்வளவு சிறப்பாக ஆட்சி செய்து இருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடத்தி வருகிற ஆட்சிக்குப் பாராட்டையும், ஆளுநர் உரைக்கு நன்றியையும் தெரிவித்து, வரவேற்று என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் கல்யாணம் அவர்கள் India Today கருத்துக் கணிப்பு பற்றியும், துக்ளக் கருத்துக் கணிப்புப் பற்றியும் சொன்னார்கள். 1998 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வந்தபோது, நீங்களும் நாங்களுமே கூட்டணியில் இருந்தபோது, Exit poll-லே நாற்பதும் நமதே என்ற கருத்துக் கணிப்பு வந்ததெல்லாம்கூட பொய்த்துப் போனது நம்முடைய குத்தாலம் கல்யாணம் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். துக்ளக் பற்றிச் சொன்னார்கள். அது பல மாதங்களுக்கு முன்னால் எடுக்கப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பு; இன்றைய சூழ்நிலை வேறு.

அடுத்து, Don't create a ghost, அதில் இப்பவும் நான் நிற்கிறேன்; என்னுடைய அந்த வாதத்தில், Don't create a ghost and don't try to destroy it என்று. நேற்றுகூட திரு. நெடுமாறனைப் பற்றிச் சொல்கிறபோது, நீங்கள் பொதுவாக ஒரு Ghost-ஐ உருவாக்கிவிட்டு, பிறகு அழிப்பதிலே சிரமப்படவேண்டாம் என்கிற கருத்திலேதான் நல்ல ஆலோசனையாக

இந்த அரசுக்கு அடிக்கடி வைத்து வருகிறேன். இதே கருத்தை நீங்கள் நெடுமாறன், வீரப்பன் விஷயத்திலே எடுத்துக்கொண்டால் நன்றாக அமையும்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்ட அந்த துக்ளக் பத்திரிகையின் செய்தியில் அவர்கள் தெளிவாகச் சொல்கிற பதில் மதிப்பிற்குரிய சோ அவர்கள் சொல்கிற பதில், எந்தக் கருத்தை India Today சொல்லி இருக்கிறதோ, அதே நிலை இன்றைக்கும் நீடித்து இருக்கிறது என்று 24-1-2001 துக்ளக்கிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அவர் இப்போது இருக்கிற நிலையைத்தான் உறுதி செய்து பதில் அளித்து இருக்கிறாரே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் அ. செல்லக்குமார்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விவாதம் இங்கே நடந்து கொண்டிருக்கிறது, துக்ளக் பத்திரிகையிலே வந்த கருத்துக் கணிப்பு பற்றி. அதுதான் இந்த அரசினுடைய சாதனையினுடைய சாட்சி என்று குத்தாலம் கல்யாணம் அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அண்மையிலே துக்ளக் பத்திரிகையின் ஆண்டு விழா நிகழ்ச்சி சென்னையிலே நடந்தது. அந்தப் பத்திரிகையினுடைய ஆசிரியர் சோ அவர்கள் பேசுகின்றபோது, ஊழலை தமிழ்நாட்டிலே கொண்டுவந்து விட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் என்றும், தி.மு.க. ஆட்சி இருக்கின்றபோதெல்லாம் தமிழகத்திலே பிரிவினைக் கோஷம் அதிகமாக இருக்கிறது என்றும், பிரிவினைவாதிகளுக்கு இங்கே அடைக்கலம் கொடுக்கிறார்கள் என்றும், பகிரங்கமாகவே சொன்னதைத் தொலைக்காட்சி வாயிலாக அத்தனை பேரும் பார்த்து இருக்கிறோம். எனவே, துக்ளக் பத்திரிகையிலே வந்த கருத்துக் கணிப்புதான் இந்த ஆட்சியினுடைய சாட்சியம் என்று சொன்னால், அந்தப் பத்திரிகையினுடைய ஆசிரியர் அவர்கள் சொன்னதை குத்தாலம் கல்யாணம் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, துக்ளக் பத்திரிகையினுடைய கருத்தோ, எண்ணமோ அது அல்ல. India Today என்கிற ஆங்கில பத்திரிகையினுடைய கருத்துக் கணிப்பு நூற்றுக்கு நூறு சரி என்பதை துக்ளக் உறுதிப்படுத்தி இருக்கிறது என்பதைத்தான் சொன்னேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதற்கு அதைப்போட்டு வம்புக்கு இழுக்கிறீர்கள்? அதிலே வருகிறமாதிரி அவர்களே நடந்து கொள்வதில்லை; வழுக்கைத் தலையில் முடி வளரும் என்று விளம்பரம் வருகிறது! *(சிரிப்பு)* திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எனது கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன். கவர்னர் ஆற்றி இருக்கிற உரையில் தமிழகப் பிரச்சினைகளைத் தொடாமல் மேலோட்டமாகச் சொல்லப்பட்டு இருப்பது வருத்தத்திற்குரியது. தொட்டும் தொடாமலும், பட்டும் படாமலும் கவர்னர் உரை இங்கே அளிக்கப்பட்டு இருக்கிறது. குறிப்பாக பல்வேறு கருத்துகளை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கவர்னர் உரையிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டு இருப்பதில், தமிழக மக்களுக்கு எல்லாவிதமான வாய்ப்பு வசதிகளுமே இப்போது விஞ்ஞானபூர்வமாக அமைக்கப்பட்டு இருக்கிற டைடல் பூங்காவின் மூலம் கிடைத்துவிடும் என்று சொல்லப்பட்டு இருப்பது ஒரு பிரேமையைத் தோற்றுவிப்பதாக நாங்கள் கருதுகிறோம். இதனாலே இதை எதிர்ப்பதாகப் பொருள் கொள்ளக் கூடாது. இந்த மென்பொருள் பூங்காவின் மூலம் மட்டுமே எல்லாவிதமான பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டுவிட முடியுமா? அப்படிக் காணப்பட்டிருந்தால் பல்வேறு பிரச்சினைகள் பற்றி இங்கே விவாதிக்க வேண்டிய அவசியமே இல்லாமல் போய் இருக்கும். ஆகவே, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக திசை திருப்புகிற முயற்சியிலே, எல்லாமே 'டைடல் பார்க்' மூலம் நிறைவேற்றப்படுவதாகச் சொல்லப்படுவது சரியல்ல என்பதை எடுத்த எடுப்பிலேயே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-10*

இப்போது மத்திய ஆட்சியிலே இருக்கிற பாரதிய ஜனதா கட்சியும், அதிலே கூட்டணியாக அங்கம் வகிக்கிற திராவிட முன்னேற்றக் கழகமும், புதிய பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோல, இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கை மட்டுமல்லாமல், தாராளமயமாக்கல் கொள்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தத் தாராளமயமாக்கல் கொள்கையை உலகம் முழுமையும் பரப்பச் செய்கிற அமெரிக்காவிலேகூட இந்தக் கம்ப்யூட்டர் என்பது தோல்வி அடைந்துவிட்டது என்பதை நேற்று முன்தினம் புதிதாக ஜனாதிபதியாகப் பதிவியேற்று இருக்கிறவரே

ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆகவே, இந்தக் கம்ப்யூட்டர்மயமே தோல்வி என்று சொன்னாலே, அது மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது. அதனாலே பெரிய பொருளாதார பாதிப்பு வந்திருக்கிறது என்று அமெரிக்காவினுடைய புதிய ஜனாதிபதி புஷ் அவர்களே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கும் நமக்கும் சம்பந்தம் இல்லையென்று சொல்லிவிடமுடியாது. அந்தக் கொள்கையை அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கிற மத்திய ஆட்சி, அதிலே அங்கம் வகிக்கிற தி.மு.க. இந்த டைடல் பூங்காவைப் பற்றி என்ன கருதுகிறது என்பதைப் பற்றிப் பின்னாலே சொல்ல வேண்டிய அவசியத்திலே இருக்கிறது என்பதை மட்டும் நான் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இது மிகப்பெரிய பாதிப்பை, பொருளாதார பாதிப்பை, மக்களுக்கு ஒரு சுமையாக மாற்ற இருக்கிறது என்கிற அபாயம் இருக்கிறது என்பதை நான் எச்சரிக்கையாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியா என்று சொல்கிறபோது 70 சதவீதம் முற்றிலும் விவசாயத்தையே நம்பியிருக்கிற நாடு. அப்படி விவசாயத்தையே நம்பியிருக்கிற இந்த நாட்டில், விவசாயிகளைப் பற்றி அக்கறை இல்லாமல் பல்வேறு செய்திகள் சொல்லப்படுகின்றன. இதை நாங்கள் திரும்பத் திரும்ப நான்கு ஆண்டுகளாக இந்த அவையிலே சொல்லி வருகிறோம். ஆனால் விவசாயிகளுடைய பிரச்சினையை ஏறெடுத்துப் பார்க்க மறுக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, இந்தக் கவர்னர் உரையில், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய பகுதி, விவசாயம். அதேபோலக் கைத்தறித் துறை. அதேபோலத் தொழிலாளர் துறை. இவற்றைப் பற்றி எந்தவிதமான அறிவிப்புகளும், எந்தவிதமான செய்திகளும், அதைப்பற்றிய பார்வையே இல்லாமல் இந்தக் கவர்னர் உரை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை வேதனைக்குரிய ஒன்றாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

அதேபோல, நெல், கரும்பு, தென்னை, மஞ்சள் சாகுபடி செய்கிற விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை இல்லை. இரட்டைக் கொள்முதல் என்று நம்முடைய தமிழக அரசு அறிவித்தது. இரட்டைக் கொள்முதல் முறையை அறிவித்தால் விவசாயிகள் பயனடைவார்கள், விலை கூடுதலாகக் கிடைக்கும் என்று எதிர்பார்த்து அந்தக் கொள்கை அறிவிக்கப்பட்டது. ஆனால் அதற்கு மாறாக, விவசாயிகள் எப்போது விலை குறைப்பார்கள் என்று, காத்திருந்துதான் கொள்முதல் செய்கிறார்களே தவிர, விவசாயிகளுக்குக் கூடுதலான விலை கிடைப்பதற்கு உரிய முயற்சியை இந்த இரட்டைக் கொள்முதல் நிலை ஏற்படுத்தவில்லை. இது ஒரு நிலைபாடாக இருக்கிறது.



அதேபோல இறக்குமதிக் கொள்கையாலே விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டிருக்கிறது. நேற்று முன்தினம்கூட, திருச்சியிலே நடைபெற்ற வணிகர் நலச் சங்கத்திலே ஒரு தீர்மானம் போடப்பட்டிருக்கிறது. இந்த இறக்குமதிக் கொள்கையாலே வியாபாரம் பாதிக்கப்பட்டுவிட்டது என்று அவர்கள் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். இதையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிமெண்ட் விலையைப் பற்றி மாண்புமிகு அழகிரி அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு இங்கே ஒரு விளக்கமே அளித்திருக்கிறார்கள். நேற்று முன்தினம் கோவை நகரத்திலே 215 ரூபாய் மூட்டை விற்றிருக்கிறது. ஆனால் இங்கே சொல்லப்படுகிற விலைக்கும் அதற்கும் வித்தியாசம் இருக்கிறது. இந்த விலைப் பட்டியலை அறிவிக்கிறபோது வாங்குகிறவர்கள் சொல்வதை, பயன்படுத்துகிறவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்வதா அல்லது நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே அறிவிப்பதை ஏற்றுக்கொள்வதா என்பது புரியாத புதிராக இருக்கிறது. ஆகவே, இந்த சிமெண்ட் விலை உயர்வைப் பற்றி மற்ற இடங்களில் இருப்பதை இங்கே சுட்டிக்காட்டுவதைப் போல, இந்தியா முழுமையிலும் இருக்கிற நிலைமைகளை, குறிப்பாக கேரளா, ஆந்திராவிலே இருக்கிற நிலைக்கும் தமிழகத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, நிரம்ப வித்தியாசம் இருக்கிறது என்பதை மறைக்கப் பார்ப்பதுதான் இதிலே நடைபெறுவதாக நான் கருதுகிறேன். ஆகவே, இந்த சிமெண்ட் விலை உயர்வைக் குறைப்பதற்கான முயற்சியை நம்முடைய அரசாங்கம் உடனடியாக எடுக்க வேண்டும். ஆறு மா்த காலமாக இதன் விலை உயர்ந்து கொண்டேயிருக்கிறது. ஆறு மாத காலமாக இதிலே இருக்கிற மர்மம் என்னவென்றே புரியவில்லை. ஆகவே, இதிலே உடனடியாகத் தீர்வு காண்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய வாஜ்பாய் அவர்கள் பதவியேற்றவுடனே ஆறு மாத காலத்திற்குள்ளாகவே அவர் செய்த மிகப் பெரிய சாதனை என்னவென்று சொன்னால், கோதுமை, அரிசி, சீனிக்கு இருக்கிற மானியத்தை நிறுத்தியதுதான். இதை நாம் கண்டிக்கவில்லை என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்லியாகிவிட்டது. இந்த மானியத்தை நிறுத்தி, ஏழையெளியவர்கள் வாங்கிப் பயன்படுத்துகிற உணவுப் பொருட்களை கிடைக்காமல் செய்தார்கள். அதேநேரத்தில் மத்திய ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற பாரதிய ஜனதா நெல் மற்றும் கோதுமை வாங்கி சேமித்து

வைத்திருந்ததைச் சரியாகப் பாதுகாக்காத காரணத்தினாலேயே 1,200 கோடி ரூபாய் மதிப்புள்ள உணவுப் பொருட்கள் அப்படியே மக்கி, கெட்டுப் போய், வீணாகவே போய்விட்டன. இதனால் இன்றைக்கு மத்திய ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற பாரதிய ஜனதா கட்சியினுடைய சாதனை. 1,200 கோடி ரூபாய் மதிப்புள்ள உணவுப் பொருள் வீணாகப் போய்விட்டது. அதை இந்த ஏழை எளியவர்களுக்கு மானியமாகவோ, விலை குறைத்தோ கொடுத்திருந்தால்கூட பசி பட்டினி இல்லாமல் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கிற மக்கள் பயன்படுத்தியிருப்பார்கள். அதைச் செய்யாமல் இருந்த ஆட்சிதான் பாரதிய ஜனதா. அதை ஆதரிக்கும் கூட்டணியாக இருப்பதுதான் தி.மு.க. இதையெல்லாம் கேட்கவே கூடாதா? கூட்டணி ஆட்சியிலே இருக்கிறவர்கள், கூட்டணிக்கு இலக்கணமாக இப்படிப்பட்ட தவறுகள் நடப்பதைக்கூடச் சுட்டிக்காட்டக் கூடாது என்ற ஒரு தர்மம் இருக்கிறதா என்பதுதான் என்னுடைய கேள்வியாக இருக்கிறது.

பிற்பகல் 12-15

அதுபோல இங்கே இருக்கிற பொருளாதார நிலைகளைப் பற்றிச் சொல்கிறபோது படிப்படியாக விவசாயிகள்மீது உள்ள கடன் சுமையைத் தீர்ப்பதற்குரிய முயற்சி இல்லை. ஆனால் தமிழ்நாடு அரசாங்கம் பல்வேறு வகைகளில் பெரிய கடன் சுமைக்கு ஆளாகி இவர்கள் கடனைச் செலுத்த முடியாத நிலைக்கு ஆளாகி இருக்கிறார்கள். அரசாங்கம் என்றால் ஒரு நீதி, விவசாயிகள் என்றால் ஒரு நீதியாக இருக்கிறது. பழுப்பு நிலக்கரி நிறுவனத்திடமிருந்து அரசாங்கம் மின்சாரம் வாங்குகிறது. யூனிட் 90 பைசாவுக்கு வாங்கி ரூ. 2.50, ரூ. 4.50 என்ற அளவிலே விற்பனை செய்கிறோம். ஆனால் விற்பனை செய்வதற்கு 90 பைசா வீதம் வாங்கிய மின்சாரத்திற்குக்கூட கிட்டத்தட்ட 900 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசாங்கம் கொடுக்கவில்லை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏதோ 90 பைசாவுக்கு மின்சாரம் தருவதாகச் சொன்னார்கள். எந்த ஊரிலே தருகிறார்கள் என்று நானும் தெரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால், 90 பைசாவுக்கு யாருமே மின்சார வாரியத்திற்கு மின்சாரம் தரவில்லை. அப்படி யாராவது தகவல் கொடுத்தால் அது தவறான தகவல். ஆனால் ஒன்றைச் சொல்கிறேன். அப்படிக் குறைவான விலையில் மின்சாரம் அங்கிருந்து வாங்குகிறோம் என்பது உண்மை. அதை வைத்துக்கொண்டுதான் ஏறக்குறைய 29 சதவீதம் மக்களுக்கு இலவசமாக 16 இலட்சம் பம்பு



செட்டுகளுக்கு இலவசமாகத் தந்து கொண்டிருக்கிறோம். அதனுடைய விளைவு 2,300 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு மின்சார வாரியம் இழந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுவது அந்த நிறுவனத்திற்கு நாம் 900 கோடி ரூபாய் என்ற அளவில் மூன்று மாதம் முன்பு வரை பாக்கி இருந்தது, இன்றைக்கு அது 1,000 கோடி ரூபாயாகக் கூட இருக்கலாம் என்ற கருத்து சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தவறான தகவலைச் சொல்லக்கூடாது. இந்தியாவிலே NTPC-க்கு முறையாகப் பணம் செலுத்துகின்ற ஒரே ஒரு மாநிலம் தமிழ்நாடுதான் என்று அந்த அமைச்சரே பாராட்டியிருக்கிறார்கள். ஆந்திரா 900 கோடி ரூபாய் தர வேண்டும்; மேற்கு வங்காளம் தர வேண்டும், இந்தியாவிலே இருக்கக்கூடிய கர்நாடகம் தர வேண்டும். ஆனால் தமிழ்நாட்டில் இருக்கின்ற அரசாங்கம்தான் 130 கோடி ரூபாய் தர வேண்டும். அது நாம் கொடுக்க வேண்டிய பணம் அல்ல. Disputed Amount-க்கு அவர்கள் வட்டி போட்டார்கள். அந்த வட்டி குறித்து நாங்கள் அப்பீல் செய்திருக்கிறோம். அதுதான் பாக்கி இருக்கிறதே தவிர வேறு எந்தவிதமான பாக்கியும் கிடையாது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அதுபோல நம்முடைய அரசுப் பேருந்துக் கழகங்கள் பெட்ரோல், டீசல் மற்றும் பெட்ரோலியப் பொருட்களை இந்தியன் ஆயில் கம்பெனி மற்றும் பாரத் பெட்ரோலியம் கம்பெனிகளிடமிருந்து வாங்குகின்றன. இவர்கள் வாங்கிய வகையில் கொடுக்கவேண்டிய பணம் 800 கோடி ரூபாய் வரைக்கும் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதைப்போல விவசாயிகளிடத்தில் பால் வாங்கிவிட்டு, ஆவின் நிறுவனத்தின் மூலமாகக் கொடுக்க வேண்டிய பணம் கிட்டத்தட்ட 570 கோடி ரூபாய் இருக்கிறது. இப்படி வரிசையாகப் பார்த்தால் அரசாங்கம் விவசாயிகளுக்காக, மற்றவர்களுக்காக, மற்ற நிறுவனங்களுக்காகக் கொடுக்க வேண்டிய கடன்கள் பல ஆயிரம் கோடி ரூபாயாக இருக்கிறது. அதேநேரத்திலே, சில நூறு கோடி ரூபாய் அளவில் இந்த விவசாயத்திற்கு, கடன்பட்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்கு, மறு உற்பத்தி செய்து இந்த நாட்டுக்கு உணவு படைக்க வேண்டிய விவசாயிகளுக்கு மட்டும் நிவாரணம் அளிப்பதற்கு

இந்த அரசு தயாராக இல்லை என்பதுதான் வருத்தத்திற்குரிய செய்தியாக இருக்கிறது. அதைப்போல இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கை மூலமாக தமிழகத்திலே பாதிப்பே இல்லை என்று இந்த ஆட்சி கருதுகிறதா என்று தெரியவில்லை.

நாமக்கல்லில் இருக்கக்கூடிய கோழி மற்றும் கோழி முட்டைகள் உற்பத்தி செய்யக்கூடிய வியாபாரிகளைக் கேட்டால் தெரியும். அநேகமாக பல இலட்சக்கணக்கான முட்டைகள் தினசரி அழிக்கப்படுகின்றன என்று சொல்கிறார்கள். இன்றைக்கு பத்திரிகைச் செய்தி கிலோ 25 ரூபாய், 28 ரூபாய் என்று இருந்த கறிக் கோழி கிலோ 21 ரூபாய்க்கு விற்பனை செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்படி என்றால் வெளிநாட்டிலிருந்து கோழி இறைச்சி, கோழிக்கறியிலிருந்து கோழி தலை முதல் கால் வரைக்கும் எல்லாமே இறக்குமதி என்று வந்துவிட்டால் என்ன ஆகும்? இங்கே உள்நாட்டு தொழில்கள் எல்லாமே பாதிக்கப்படுகின்றன. இதைப்பற்றி நாம் அக்கறை கொள்ளவில்லையே என்பதுதான் வேதனைக்குரியதாக இருக்கிறது.

அதுபோல ஓமலூரில் Novartis India Limited என்ற ஒரு நிறுவனத்தின் மூலமாக பருத்தி விவசாயிகளுக்கு பருத்தி விதை அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பருத்தி விதையை வாங்கி விவசாயிகள் பயன்படுத்தியபோது செடியாக மட்டுந்தான் வளர்ந்ததே தவிர, இன்று வரைக்கும் காய் காய்க்கவே இல்லை என்ற செய்தி வந்திருக்கிறது. இதைப் பார்க்கிறபோது இந்த உலகமயமாக்குதல், தாராளமயமாக்குதல் கொள்கையினுடைய விளைவு, இங்கு இருக்கிற சாதாரண விவசாயிகள் குடும்பம் வரைக்கும் பாதித்து இருக்கிறது. இப்படி இது எல்லா வகையிலும் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லிவிட்டு..... (மணியடிக்கப்பெற்றது)

இதிலே குறிப்பாக சமத்துவபுரங்களைப் பற்றி இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. நல்ல நோக்கத்திற்காகத் தொடங்கினார்கள். அது பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் தொடங்கப்பட்ட அந்த சமத்துவபுரங்கள் உண்மையிலே சமத்துவபுரங்களாக முழு நோக்கத்தோடு நடைபெறுகின்றனவா என்பதை மட்டும் இங்கே சொல்ல வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

என்னுடைய தொகுதியில் நொச்சூர் என்ற இடத்தில் தொடங்கப்பட்டிருக்கின்ற சமத்துவபுரத்தில் கிட்டத்தட்ட 58 பேர்களுக்கு



மேல் இதுவரையில் குடிவரவில்லை. வந்தவர்கள்கூட தவறான முறையைப் பயன்படுத்தி பெற்றார்கள் என்று அந்த மாவட்ட ஆட்சித் தலைவரே அவர்களுக்கு நோட்டீஸ் விட்டு உங்களுக்கெல்லாம் இரத்து செய்கின்றேன் என்று அறிவிக்கின்றார். அதிலே ஐயர்கள் பெயர் இருக்கிறது, ஐயங்கார் பெயர் இருக்கிறது. தேவர் பெயர் இருக்கிறது. கள்ளர் பெயர் இருக்கிறது. இன்னும் பலவகையான சாதிப் பெயர்கள் இருக்கின்றன. அவர்களுக்கு அதிகாரபூர்வமாக நோட்டீஸ் கொடுத்து, நீங்கள் தவறாக இந்த வீட்டைப் பெறுவதற்கு முயற்சிகள் எடுத்தீர்கள், ஆகவே நான் இரத்து செய்கின்றேன் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமத்துவபுரத்தைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே தேர்வு செய்யப்படுவது அறிவிக்கப்பட்டு, அதை எடுத்து, அந்த நார்ம்ஸ்-க்கு உட்பட்டு அமைக்க வேண்டுமென்று விதிகள் வகுக்கப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே தவறுதலாக யாராவது வருவார்களானால் சம்பந்தப்பட்டவர்களை விசாரணை செய்து தவறுகள் இருந்தால் நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அப்படி யாராவது வராமல் இருந்தால், அதற்கு உரியவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டு மறுபடியும் அதை எடுத்து உரிய பட்டியலில் இருப்பவர்களை அதில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. பல இடங்களில் அதைச் செய்திருக்கிறோம். இதையெல்லாம் குற்றம் என்று சொல்லிவிட முடியாது; குறைபாடுகள். குறைபாடுகளைச் சொல்லி நிவர்த்தி செய்யாமல் இருக்கிறோமா என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனிக்க வேண்டும். இப்போது குறிப்பிட்டிருக்கிறீர்கள். நாளையே இதைக் கேட்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அப்படி ஏதாவது திருத்தங்கள் செய்யவேண்டுமென்றால், அதைச் செய்வதற்கும் இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் பால் உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகை 570 கோடி ரூபாயாக இருக்கிறது என்ற ஒரு தகவலை இங்கே தெரிவித்தார்கள். அது முழுக்க, முழுக்க தவறு. பால் உற்பத்தியாளர்களுக்கு நாம் தர வேண்டியது 69 கோடி ரூபாய்தான். அதில் 30 கோடி ரூபாய் பால் பொருட்கள் உள்ளன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்கம் கொடுக்க வேண்டிய மொத்தம் 69 கோடி ரூபாயில் பால் பொருளுக்குக் கொடுக்க

வேண்டியது *30* கோடி. ஆக *570* கோடி என்பது உண்மையான தகவல் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'சாண்டோபெட்' *34* பருத்தி விதையை வாங்கி பயிரிட்டதிலே, அப்படிப் பயிரிட்ட விவசாயிகள் பெரிய பாதிப்புக்கு உள்ளானார்கள் என்று இங்கே குறிப்பிட்டார்கள். அது தனியார் நிறுவனம். அதையும் அவர் கோடிட்டுத் தான் காண்பித்தார். அது தனியார் நிறுவனம், அரசு நிறுவனம் அல்ல. ஆனால் அந்த விதையை வாங்கி *73* ஏக்கரிலே பயிரிட்டு, விவசாயிகள் அதிலே பைரித் தைராய்ட் என்ற பூச்சிக்கொல்லி மருந்தைக் கூடுதலாக அடித்துவிட்ட காரணத்தாலே பருத்தி விளைச்சலில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. அது குறித்து *8-1-2001*-ல் உடனடியாகத் தெரிந்தவுடன், வேளாண்மை விதை இயக்குநர், பல்கலைக் கழகத்தினுடைய விஞ்ஞானிகள், வேளாண்மை அதிகாரிகள் போன்றவர்களை எல்லாம் அனுப்பி ஆய்வு செய்து பார்த்ததில் அது கண்டுபிடிக்கப்பட்டது. இருப்பினும்கூட அந்த விவசாயிகளுக்கு ஏற்பட்ட நட்டத்திற்கு, அந்த விதைத் தயாரிப்பாளர்கள் அவர்களுக்கு நட்டயீடு வழங்கவேண்டுமென்ற ஆலோசனையும் அரசின் சார்பில் வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** கொஞ்சம் நேரம் கொடுங்கள். துணைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் விளக்கங்களை அளித்திருக்கிறார்கள். பால் பணம் பாக்கி என்பதைச் சொன்னேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லி *69* கோடி ரூபாய் பாக்கியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். கணக்கு வழக்குகளைச் சரியாகப் பார்க்கவில்லை என்பதிலே ஆட்சேபகரமான கருத்து ஏதுமில்லை. மிக்க நன்றி. இந்த *69* கோடி ரூபாயை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதுதான் பிரச்சினை. ஆங்காங்கே பிரச்சினைகள் இருக்கின்றன. பால் கறவைக்கே மாடுகளைக் கொண்டு போவதா, வேண்டாமா என்று பிரச்சினை இருக்கிறது. இதிலே பசு வதைத் தடுப்பு பற்றி சங்கராச்சாரியார் பேசிக் கொண்டிருக்கிறார். பல மாடுகள் இப்போது வயதாகிப் போய்விட்டன. அவற்றையெல்லாம் சங்கராச்சாரியார் விலைக்கு வாங்கிக்கொண்டால்கூட நல்லது என்று வெளியே கருத்து இருக்கிறது. அதையும் தாண்டி பல பிரச்சினைகள் இருக்கின்றன என்பதற்காகத்தான் நான் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன்.



சமத்துவபுரம் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உடனடியாகப் பார்ப்பார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால், அந்த இடத்தைப் பொறுத்தவரையில் அதை அமைத்ததே பிரச்சினைக்குரியது என்பது அவர்களுக்கே தெரியும், அதே சாலையில் இன்னொரு சமத்துவபுரத்தை அமைத்து அதுவும் பிரச்சினைக்குரிய விஷயமாக இருக்கிறது. நீங்கள் சொல்லுகின்ற அடிப்படையில் மக்கள் அங்கே குடியிருப்பதற்கு ஒப்புக்கொண்டு வர மறுக்கிறார்கள் என்பதுதான் உண்மை. அதாவது தவறுதலாகக் கொடுக்கப்பட்டது என்று வேறு. ஆனால், ஏற்றுக்கொண்டு என்ன நோக்கத்திற்காகக் அமைக்கப்பட்டதோ அந்த நோக்கத்தின் அடிப்படையில் அங்கே குடியிருப்பதற்கு யாரும் தயாராக இல்லை என்பதுதான் இதில் இருக்கின்ற பிரச்சினை. (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடம் அவகாசம் கொடுங்கள், ஒரே ஒரு பிரச்சினையைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *16* நிமிடங்கள் ஆகிவிட்டன. திரு. வ. அன்பழகன்.

*பிற்பகல் 12-25*

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்தில் நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது ஒருசில கருத்துகளைக் கூறுவதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த *1996* தேர்தலின்போது நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 'திராவிட முன்னேற்றக் கழகம் பாசாணத்தில் புழுத்த புழு' என்று சொல்வார்கள். ஆனால், ஊழலிலே புழுத்த புழுவாக விளங்கிய ஒரு ஆட்சியைத் தூக்கி எறிந்துவிட்டு, ஒப்பற்ற ஆட்சியைக் கொண்டு வந்து, இந்த ஐந்தாண்டு காலத்திலே அடுக்கடுக்கான திட்டங்களை நிறைவேற்றி இன்றைக்கு அற்புதமான ஒரு ஆட்சியைத் தந்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய ஆட்சியிலே, இந்த ஐந்தாண்டு காலத்திலே ஒவ்வோர் ஆண்டும், ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலே தரப்பட்ட திட்டங்களை மிகச் சிறப்பான முறையிலே ஆளுநர் உரையிலே எடுத்துக்காட்டி, வண்ண மலர்களைத் தொடுத்து, மணம் வீசும் ஒரு மலர் மாலையாக நம்முடைய ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. இன்றைக்கு நம்முடைய திட்டங்களை எடுத்துக்கொண்டால், இங்கே சாதித்திருக்கிற திட்டங்களை

யாருமே மறுக்க முடியாது; மறைக்க முடியாது. ஆனால், இந்தத் திட்டங்களையெல்லாம் மறைத்துவிட்டு, கூடா நட்பு என்று சொல்வார்களே, அந்த நட்பின் காரணமாக, நம்முடைய அன்பிற்குரிய முன்னாள் தோழமைக் கட்சி நண்பர்கள், இன்றைக்கு அவையிலே பார்த்தால், எல்லோருமே ஏறுக்கு மாறாக மாற்றி மாற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். கற்பனைக்கு எட்டிய விதத்திலெல்லாம், தங்களுடைய கற்பனை எவ்வளவு தூரம் போக முடியுமோ அந்த அளவிற்கெல்லாம் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய மதிப்புமிக்க அழகிரி அவர்கள், இந்த அவையிலே பேசுகிறபோதெல்லாம் எதைப் பேசினாலும் ஆதாரத்தோடு பேசக்கூடியவர். நாங்களெல்லாம் அவரை மதிக்கக்கூடியவர்கள். ஆனால், இங்கே உரையாற்றிய நேரத்தில், தொடக்கத்திலே ஒரு குற்றச்சாட்டை நம்முடைய ஆட்சியின் மீது வீசினார்கள். என்னவென்று சொன்னால், வீரப்பனுக்கும் இந்த அரசுக்கும் தொடர்பு இருக்கிற காரணத்தால்தான் ராஜ்குமார் அவர்கள் நம்முடைய முதல்வர் அவர்களைச் சந்திக்கவில்லை என்று சொன்னார். எவ்வளவு கற்பனையான வாதம் என்பதை அவர் புரிந்துகொள்ள வேண்டும். ஒருவேளை நாங்கள் சொல்லவேண்டுமென்று சொன்னால், நாங்கள் மதிக்கக்கூடிய தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள், வீரப்பனுடைய பிள்ளைகளுக்குப் படிப்பதற்கு உதவி செய்கிறார்; நாங்கள் சொல்லக்கூடாதா வீரப்பனுக்கும் மூப்பனார் அவர்களுக்கும் தொடர்பு இருக்கிறது என்று. ஆனால், நாங்கள் சொல்லமாட்டோம். காரணம், இந்தக் கட்சி, பண்பாடு உள்ள கட்சி என்ற காரணத்தால் கற்பனையான குற்றச்சாட்டை என்றைக்கும் சுமத்த மாட்டோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று ஏனோ தெரியவில்லை; காலையிலிருந்து இந்தச் சபையிலே தொடர்ந்து சாம்பிளாகக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். காலையில் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் தண்ணீரை சாம்பிள் காட்டினார். அடுத்து, நம்முடைய அழகிரி அவர்கள் அரிசியைக் கொண்டு வந்து காட்டினார். கறுப்பாக இருக்கிறது என்று சொன்னார். கறுப்பாக இருக்கிறது என்று சொன்னால், அந்தக் கறுப்புக்கு எவ்வளவு மவுசு என்று அவருக்குத் தெரியாது. இப்போது பாட்டே வந்திருக்கிறது "கறுப்புத்தான் எனக்குப் பிடித்த கலரு" என்று. புட்டு அரிசி கூடக் கறுப்பாகத்தான் இருக்கும். ஆனால் மிகவும் சுவையாக இருக்கும். அதைச் சாப்பிட்டால் ஆயுள் கெட்டி. அவருக்குத் தெரியாது. அமைச்சர் அந்த அரிசியைச் சாப்பிடச் சொன்னார். இடைத் தேர்தல் வரும் என்று சொன்னார். எந்தக் காலத்திலும் எங்களுக்கு இடைத் தேர்தல் வராது. வர இருக்கிற தேர்தலிலும் நாங்கள்தான் ஆட்சியை அமைப்போம் என்பதை அவருக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அவர்கள் எப்போதும் மக்களுக்கு எந்த உணவு ஆகாதோ அதைத்தான் சாப்பிடச் சொல்வார்கள். ஒரு காலத்திலே எலிக் கறியைச் சாப்பிடச் சொன்னவர்கள் அல்லவா? அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். அடுத்து, மூப்பனார் அவர்கள் மீது நம்முடைய அழகிரி அவர்களுக்கு என்ன கோபம் என்று தெரியவில்லை. இன்னோர் உதாரணம் சொன்னார். அந்த ஒன்றை மட்டும் சொல்லி நான் ஆளுநர் உரையின் மீதான விவாதத்திற்கு வருகிறேன்.

அவர் சொல்லியபோது; ஒரு காரியம் மிகவும் கெட்டுப் போகவேண்டுமென்று சொன்னால் ஒரு கமிட்டியைப் போட வேண்டுமென்று சொன்னார். நான் கேட்கிறேன், கூட்டணி பற்றிப் பேசுவதற்கு மூப்பனார்கூட ஒரு கமிட்டி போடச் சொல்லியிருக்கிறார். ஆகவேதான் கேட்கிறேன், எதற்காக இப்படிச் சொல்கிறார்கள் என்று எனக்கே தெரியவில்லை. இருந்தாலுங்கூட, அந்த நட்பின் காரணமாக, அவர்களிடம் இன்னும் அந்தப் பாசம் போகாத காரணத்தால்தான்...

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெளியில் நடைபெறுகிற அரசியலைப் பற்றி இந்த அவையில் அதிகம் பேசவேண்டிய அவசியம் இல்லை. இந்த அவையில் நடைபெறுகிற விவாதத்தில் அரசாங்க நடவடிக்கைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பேசினால் போதும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. வ. அன்பழகன்:** ஆளுநர் அவர்கள் உரையின் தொடக்கத்திலே ஊழலற்ற நிர்வாகத்தை இந்த ஆட்சி தந்திருக்கிறது என்று சொன்னார்கள். Transparent Government என்று சொல்வார்கள். அதைப்போல வெளிப்படையான ஒரு அரசாங்கத்தை இன்றைக்கு நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் நடத்திக்கொண்டு வருகிறார்கள். இன்றைக்குப் போடப்படுகிற திட்டங்களை எண்ணிப் பார்க்கிறபோது, ஒவ்வொரு திட்டத்தையும் மக்கள் வரவேற்கிறார்கள். 'வருமுன் காப்போம் திட்டம்' என்று சொன்னால், இன்றைக்கு எந்த அளவிற்கு மக்கள் மனதிலே அந்தத் திட்டம் நிலைபெற்று இருக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

*பிற்பகல் 12-30*

இன்றைக்கு நம்முடைய ஆட்சியிலே மருத்துவமனைகளிலே எல்லா வசதிகளும் இருக்கின்றன. மருத்துவமனைகளிலே மருத்துவர்கள் இருக்கிறார்கள். மருந்து கிடைக்கிறது. கிராமப்புறங்களிலே மருத்துவமனை இருக்கிறது. வட்ட அளவிலே மருத்துவமனை இருக்கிறது. மாவட்ட அளவிலே மருத்துவமனை இருக்கிறது. தலை நகரத்திலே மருத்துவமனை இருக்கிறது. மக்களுக்கு என்ன நோய் வந்தாலும் சிகிச்சை பெறுவதற்கு வாய்ப்பு இருந்தாலும்கூட, இந்த வருமுன் காப்போம் திட்டம், என்கின்ற திட்டத்தை ஏன் நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்தார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். கிராமப்புறத்திலே இருப்பவர்கள் தங்களுக்கு நோய் வந்த பிறகுதான் மருத்துவமனைக்குச் செல்கிறார்கள். நோய் வருவதற்கு முன்பாகவே அவர்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டுமென்கின்ற அடிப்படையிலே வருமுன் காப்போம் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதைப் போல கால்நடைகளுக்காக இதுவரை, இந்தியாவிலே, எந்தத் தலைவரும் சிந்திக்கவில்லை. கால்நடைகளுக்குப் பாதுகாப்பு, வாழ்வு அளிக்கின்ற ஒரு திட்டத்தை யாரும் சிந்திக்கவில்லை. கல்லுக்குள் இருக்கும் தேரைக்குக்கூட படி அளப்பவன் கடவுள் என்று சொல்வார்கள். அதுபோல் கால்நடைகளுக்குக்கூட வாழ்வு அளிக்கக்கூடிய, ஒப்பற்ற தலைவர், நம்முடைய அருமைத் தலைவர், நம்முடைய கலைஞர் முதலமைச்சர் என்று சொன்னால் அது மிகையாகாது.

அதைப்போல உழவர் சந்தைத் திட்டம், இப்போது செய்யாறில்கூட, உழவர் சந்தைத் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம். தினந்தோறும் நான் அங்கே சென்று பார்க்கிறேன். பார்க்கிறபோது, தாய்மார்கள் எல்லோரும் சொல்கிறார்கள். மகாராஜா கலைஞர் மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும்; மலிவு விலையிலே இன்றைக்கு காய்கறி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று தாய்மார்கள் அனைவரும் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளைச் சந்தித்து கேட்கிற நேரத்திலே, இவ்வளவு நாள் நாங்கள் காய்கறிகளைப் பயிரிட்டோம். எங்களுக்கு இப்படிப்பட்ட விலை, விளை பொருளுக்கு உகந்த விலை கிடைத்ததில்லை என்று வாழ்த்துகிறார்கள். அப்படிப்பட்ட திட்டத்தை, உழவர் சந்தைத் திட்டத்தை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.



அதைப்போல நமக்கு நாமே திட்டமாக இருந்தாலும், அண்ணா மறுமலர்ச்சித் திட்டமாக இருந்தாலும், சமத்துவபுரம் திட்டமாக இருந்தாலும் சிறந்த முறையில் நிறைவேற்றுகிறார்கள்.

அதுபோன்று குடிநீர்த் திட்டம். இன்றைக்கு குடிநீர்ப் பிரச்சினை எந்தத் தொகுதியிலும் இல்லாத நிலையை ஏற்படுத்தியிருப்பவர் நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் என்று சொன்னால் அது மிகையாகாது.

அதைப் போல பொதுப்பணித் துறை மூலமாக ஏராளமான அணைக்கட்டுகள், நீர்ப்பாசனத் திட்டங்கள் இன்றைக்கு நம்முடைய நாட்டிற்குக் கிடைத்திருக்கிறது.

அதைப்போல அமைப்பு சாரா தொழிலாளர் நலன். எந்த மாநிலத்திலேயும், எந்த முதல்வரும் சிந்திக்காத ஒரு கோணத்தில் சிந்தித்து, சமுதாயத்திலுள்ள அனைத்துத் தரப்பு மக்களையும் திருப்திப்படுத்த வேண்டுமென்றும், அவர்களுடைய குறைகளைப் போக்க வேண்டுமென்றும் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்து அந்த வாரியத்தை அமைத்து, மக்களுடைய வாழ்விலே ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்தியிருப்பவர் நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் என்று சொன்னால் அது மிகையாகாது.

அதுபோல இன்றைக்கு எங்கு பார்த்தாலும் கணினிக் கல்வி. சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்த மாணவர்கள் எல்லாம் பள்ளிக்கூடத்திலே, கணினி படிக்கக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கக்கூடிய ஒப்பற்ற ஆட்சி நம்முடைய கலைஞர் அவர்களுடைய ஆட்சி என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தகவல் தொழில்நுட்பப் புரட்சி, இந்தியாவிலே எங்கே ஏற்பட்டு இருக்கிறது என்று கேட்டால் தமிழகத்திலேதான் ஏற்பட்டிருக்கிறது.

அதைப்போல சிமெண்ட் சாலை. இங்கே நேற்றுகூட சுப. தங்கவேலன் அவர்கள் சொன்னார்கள். எந்தக் கிராமத்தை எடுத்துக்கொண்டாலும், போகிறபோது, தாய்மார்கள் எங்களிடத்திலே கேட்கிறார்கள். சிமெண்ட் சாலை மிக அற்புதமாக இருக்கிறது. எங்களுக்கு அமைத்துத் தாருங்கள் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட அற்புதமான திட்டங்களை நம்முடைய ஆட்சியிலே கண்டிருக்கிறோம்.

பாலங்களை எடுத்துக்கொண்டால், இந்தப் பாலம்தான் இந்த ஆட்சிக்கு பலம். இன்றைக்கு சிங்காரச் சென்னையை

உருவாக்கிக்கொண்டிருக்கிற நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் சென்னையிலே பாலங்களை உருவாக்கி சிங்கப்பூருக்கு நிகராக இந்த சென்னை மாநகரத்தை மாற்றியிருக்கிறார்கள். அதேபோல தமிழகத்திலே எங்கு பார்த்தாலும் பாலங்கள். என்னுடைய தொகுதியிலே மாத்திரம் 25 கோடி ரூபாய் செலவிலே 4 பாலங்களை, நம்முடைய தலைவர், கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார் என்று சொன்னால் இப்படிப்பட்ட அற்புத ஆட்சியை எந்தக் காலத்திலே நாம் பார்க்கமுடியும் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

எனவே, இந்த ஆட்சியினுடைய சாதனைகளை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பாட்டுக்கு பாரதி, படைப்புக்கு கம்பன், கொடைக்கு கர்ணன், தத்துவத்திற்கு சாக்ரடீஸ், தியாகத்திற்கு காந்தி, திடமான உள்ளத்திற்கு வல்லபாய் பட்டேல், புரட்சிக்கு அம்பேத்கர், மதி நுட்பத்திற்கு இராஜாஜி, எளிமைக்கு கர்மவீரர் காமராஜர், பகுத்தறிவுக்கு தந்தை பெரியார், அறிவுக்கு அறிஞர் அண்ணா, இவர்கள் எல்லாம் நம்மிடையே இல்லை. அவர்களின் ஒட்டுமொத்த ஆற்றலுக்கு சரித்திர சாட்சியாக இருப்பவர் நம்முடைய ஒப்பற்ற முதலமைச்சர் கலைஞர், கலைஞர் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சாதனைகளை நினைத்துப் பார்த்து, யார் கூட்டணியிலே இருந்தாலும் இல்லாவிட்டாலும், மக்கள் கூட்டணி எங்களிடத்திலே இருக்கிறது. வர இருக்கின்ற தேர்தலிலே நிச்சயமாக 5-வது முறையாக, இதே மாமன்றத்திலே அடுத்து அற்புதமான திட்டங்களை அறிவிக்கப் போகிறவர் நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர், கலைஞர் என்பதை எடுத்துச் சொல்லி, ஆளுநர் உரையை வரவேற்று அமர்கிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையிலே எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பில் கருத்துகளை எடுத்து வைப்பதற்கு அனுமதித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரித்து, இந்த நாடு சுதந்திரம் பெற வேண்டும், அந்த சுதந்திரத்தின் மூலமாக ஏழ்மை, வறுமை ஒழிக்கப்பட்டு, எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கின்ற ஒரு நல்ல நிலை ஏற்பட வேண்டுமென்பதற்காக இந்திய தேசிய இராணுவத்தை ஏற்று நடத்தி, போராடிய ஒரு மாபெரும் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்கள் உருவாக்கிய இயக்கம்,



இந்த இயக்கம்; இன்றைக்கு அவருடைய பிறந்த நாளைக் கொண்டாடுகின்ற இந்த வேளையில் அந்தத் தேசியத் தலைவன் தன்னுடைய போராட்டத்தின் மூலமாக, இந்த நாட்டிற்கு என்னவெல்லாம் கிடைக்கவேண்டும் என்று நினைத்தானோ அவனுடைய சிந்தனைகள் இன்றைக்கு நிறைவுபெற்று இருக்கின்றனவா என்பதைச் சிந்திக்கின்ற ஒரு காலகட்டத்திலே இன்றைக்கு இந்த ஆளுநர் உரையிலே என்னுடைய விவாதத்தை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-35*

இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கின்ற விவசாயமும், தொழிலும் நலிந்து கொண்டிருக்கின்றன. விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மக்களும், தொழிலை ஏற்று, தொழிற்சாலைகளிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களும் இன்றைக்கு மிகவும் இக்கட்டான சூழ்நிலையிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். தங்களுடைய அன்றாட வாழ்க்கையைக்கூட நடத்துவதற்கு முடியாத ஒரு நிலையை இப்போது ஏற்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நாங்கள் இந்த அவையிலே விவசாயிகளுடைய பல்வேறு குறைபாடுகளை பலமுறை எடுத்துச் சொல்லியும்கூட, இந்த 5 ஆண்டுகளிலே அந்த விவசாயிகளுக்கு என்று உருப்படியாக எதுவும் நிறைவு செய்ததாக எங்களுடைய உள்ளத்திலே படவில்லை. இங்கு குறிப்பிடுகின்றபோதுகூட, விலைவாசி எல்லாம் மிகுந்த கட்டுப்பாட்டிலே இருக்கிறது, அந்த விலைவாசிகளைக் கட்டுப்பாட்டிலே வைப்பது ஓர் அரசினுடைய கடமை என்று இங்கு அமைச்சர் குறிப்பிட்டார்கள். இங்கு, அவையில் இருக்கின்ற உறுப்பினர்களும் ஆரவாரம் செய்து அதை வரவேற்றார்கள். நானும் அதை வாதத்திற்காக ஏற்றுக்கொள்கிறேன். விலைவாசியைக் கட்டுப்படுத்தி, ஏழை எளிய மக்கள் அந்த விலைவாசி உயர்வின் மூலமாக பாதிக்கப்படக் கூடாது என்கின்ற நிலை எடுப்பது ஓர் அரசினுடைய கடமையாகும்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர்-திரு. பி. வெங்கடசாமி தலைமை)*

இன்றைக்கு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுடைய இடுபொருளாக இருக்கின்ற அந்த உரங்கள் எல்லாம் அதாவது யூரியா, காம்ப்ளக்ஸ் போன்றவற்றின் விலை உயர்ந்திருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. அதுபோல், அவர்கள் உபயோகப்படுத்துகின்ற டீசல் போன்றவற்றின் விலை எல்லாம்—டிராக்டர்களையும் ஆயில் எஞ்சின்களையும் வைத்து விவசாயம் செய்கின்ற அந்த விவசாயிகள் உபயோகிக்கின்ற டீசல் விலை—அளவுக்கு மீறி உயர்ந்திருக்கிறது

என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்படி உழவன் உற்பத்திச் செய்கின்ற பொருட்களுக்கு மட்டும் கட்டுப்படியான விலையை ஏற்படுத்திவிட்டு, அவன் உபயோகிக்கின்ற அந்தப் பொருட்களுக்கெல்லாம் அளவு கடந்த விலை உயர்வு; அப்படி இந்த அரசின் மூலமாக உயர்த்தப்படுகின்றது என்கின்ற நிலை இருக்கும்போது, அவர்கள் பாதுகாப்பிற்கு அரசு என்ன செய்திருக்கிறது என்ற கேள்வியைத்தான் இந்த அரசுக்கு நான் முன்வைக்க விரும்புகிறேன். அவர்கள் பட்டிருக்கின்ற கடனுக்கான வட்டியையாவது தள்ள வேண்டும் என்று பல்வேறு சந்தர்ப்பங்களிலே கோரிக்கை வைத்து, முதலமைச்சர்கூட இதற்கு எதிர்க் கட்சித் தலைவரும் மற்ற எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களும் என்ன ஆலோசனையைக் கூறுகிறீர்களோ அதை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று இந்த அவையிலே சொல்லி, எதிர்க் கட்சித் தலைவர்கூட எங்களையெல்லாம் கையெழுத்திட வைத்து ஒரு கோரிக்கையை முதலமைச்சரிடம் சமர்ப்பித்தார்கள், விவசாயிகளுடைய கடன் பிரச்சினையைப் பற்றிப் பேசலாம் என்று. ஆனால், இன்று வரைக்கும், அந்தப் பேச்சு நடந்திருக்கிறதா அதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று சொன்னால், அது மிகப் பெரிய கேள்விக்குறியாகவே இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது.

அதுபோன்று, கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயி, ஆலைகளுக்கு கரும்பை கொடுத்துவிட்டு, பல மாதங்களாகியும் அவன் பணத்தை பெற முடியவில்லை. அந்தக் கரும்பிற்கு 1,000 ரூபாய் டன்னுக்கு வேண்டும் என்று கேட்டும், இன்றைய வரைக்கும் அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இப்படி விவசாயிகளுடைய நிலை இருக்கிறது.

அதுபோல, தொழிற்சாலைகளிலே வேலை செய்கின்ற தொழிலாளர்கள்; இன்றைக்கு எல்லா தொழிற்சாலைகளும் மூடப்படுகின்ற நிலை. பஞ்சை மூலப் பொருளாகக் கொண்டு நடந்து வருகின்ற அந்த நூற்பாலைகள் எல்லாம், அரசாங்கத் துறையிலும் சரி, பல்வேறு தனியார்கள் நடத்துகின்றவையும் சரி, பல்வேறு இடங்களிலே மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதிலே வேலை செய்து கொண்டிருக்கின்ற பல இலட்சம் தொழிலாளர்கள் இன்றைக்கு வேலையின்றி பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அன்றைக்கு அந்நிய ஆதிக்கம் இங்கு இருக்கக் கூடாது என்று போராடி நாம் சுதந்திரம் பெற்றோம் என்றாலும் இன்றைக்கு இங்கு தழைத்து நிற்பதெல்லாம் அந்நிய ஆதிக்கத்தினுடைய முதலீடுகள். பெரும், பெரும் ஆலைகள் எல்லாம் இங்கு வந்து கொண்டிருக்கின்றன; அந்நிய முதலீடு இந்த நாட்டிலே நுழைந்திருக்கிறது. ஆனால், நமது நாட்டிலே இருக்கின்ற சிறிய ஆலைகள் எல்லாம் மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அங்கிருக்கின்ற தொழிலாளிகளுக்குப் பாதுகாப்பு இல்லை, விவசாயிகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்கின்ற நிலைதான் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இதிலே இந்த அரசு அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்பதைத்தான் இன்றைக்கு இருக்கின்ற கவர்னர் உரை குறிப்பிடுகிறது.



*பிற்பகல் 12-40*

அடுத்து டைடல் பார்க். அதன் மூலமாக நாட்டிலே வேலைவாய்ப்பைப் பெருக்குகிறோம் என்கின்ற அறிக்கை எழுதினாலும்கூட, எங்கே வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்பதுதான் இன்றைக்கு எல்லோருடைய உள்ளங்களிலேயும் எழுந்திருக்கின்ற கேள்வியாக இருந்துகொண்டிருக்கிறது. இன்றைக்கு வறுமை ஒழிக்கப்படவில்லை; ஏழ்மை குறைக்கப்படவில்லை. இன்றைக்கும் வறுமையிலே இருக்கின்றவன் வறுமையிலேதான் இருக்கின்றான். வள்ளுவர் குறிப்பிட்டதைப்போல,

**'நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்'**

என்பதுபோல, அந்த வறுமையிலே வாடிக் கொண்டிருக்கின்ற அந்த மக்களுக்கெல்லாம் பலவிதத்திலே தொல்லைகளும் துயரங்களும் இப்போது சென்றடைந்து கொண்டிருக்கின்றன. உண்பதற்கு உணவு இல்லை என்கின்ற நிலை இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கின்றது. உடுப்பதற்குத் துணி இல்லை; குடியிருப்பதற்கு வீடு இல்லை என்கின்ற நிலை இருக்கிறது. அதுபோல அரசுத் துறையிலே இருக்கின்றவர்களும் சுகமாக இருக்கின்றார்களா என்று சொன்னால், இல்லை. நமது அரசுத் துறையிலே, ஓர் உதாரணத்திற்காகச் சொல்கிறேன். அக்ரோ சர்வீசிலே வேலை செய்து கொண்டிருக்கிறவர்கள், அந்த சொசைட்டியிலே வேலை செய்துகொண்டிருக்கிறவர்கள் கடந்த 4 மாதங்களாகச் சம்பளத்தைப் பெற முடியவில்லை என்கின்ற நிலை இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கின்றது.

கூட்டுறவுத் துறையிலே வீடு கட்டுகின்ற சங்கங்கள் வைத்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த வீடு கட்டுகின்ற சங்கங்களிலே முதல் தவணையாக கடனைப் பெற்றவர்கள் எல்லாம்....

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அக்ரோஃபெட்-ல் பணியாற்றக்கூடிய ஊழியர்கள் கடந்த 4 மாத காலமாக சம்பளம் பெறாமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். 1991-லேயிருந்து 1996 வரை தொடர்ந்து மாதா மாதம் அவர்கள் சம்பளம் பெற்றுக் கொண்டிருந்தார்களா? அதையும் விளக்க வேண்டும்.

**திரு. லா. சந்தானம்:** கடந்த காலங்களை ஒப்பிட்டுப் பேச வேண்டிய நிலை இருந்தாலும்கூட இன்றைக்கு இருக்கின்ற அரசிலே அவர்கள் விடுத்திருக்கின்ற கோரிக்கையை நீங்கள் ஏற்றுச் செய்கிறீர்களா என்பதுதான் என்னுடைய கேள்வியே தவிர....

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** ஒருவேளை கடந்த கால ஆட்சியை ஒப்பிட்டுப் பேச முடியாத அளவிற்கு இந்த ஆட்சி சிறப்பாக நடைபெறுகிறது என்ற காரணத்தினாலே இப்போது சுட்டிக்காட்டுவதற்கு நன்றி. ஆனால், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு அந்த அக்ரோஃபெட் நிறுவனத்தின் சார்பிலே இருக்கக்கூடிய அந்தச் சங்கங்களெல்லாம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்குச் சம்பளம் வழங்க உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவது, கடந்த கால ஆட்சியைப் பற்றிப் பேசுவது, திசை திருப்புவதற்காகப் பயன்படுமே தவிர வேறல்ல. இன்றைக்கு இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு நீங்கள் என்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதுதான் இன்றைக்கு என்னுடைய வாதம்.

அதுபோல, இந்த வீடு கட்டுகின்ற சொசைட்டிகள் (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடம் வேண்டும். வீடு கட்டுகின்ற சொசைட்டியிலே முதல் தவணையாகக் கடன் பெற்றவர்களெல்லாம் அடுத்த தவணையைப் பெறுவதற்கு ஆறு மாதங்களாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் வாயிலாக அவர்கள் ஏற்று நடத்திய அந்த வேலைகளெல்லாம் அப்படியே நின்றிருக்கின்றன. அது வழங்கப்படாமல் இருக்கிறது. அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்கின்ற முறையிலே அதைக் கொண்டு வருகின்றேன்.



அதுபோல, கூட்டுறவுச் சங்கங்களுக்கு நமது அரசு நிர்ணயித்து இருக்கின்ற நிலை என்னவென்றால் 20 கிலோ அரிசி ஒரு குடும்பத்திற்கு வழங்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த 20 கிலோ அரிசி என்பது எந்தக் கூட்டுறவுச் சங்கத்திலும் வழங்கப்படவில்லை. 12 முதல் 15 கிலோ வரையிலும்தான் ஒரு குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வருகிறதே தவிர முழுமையாக 20 கிலோ எந்த சொசைட்டியிலும் வழங்கப்படவில்லை. அதற்கு ஆதாரம் வேண்டுமென்று சொன்னால் நான் பல்வேறு இடங்களிலேயிருந்துகூட அந்த மக்கள் பயன்படுத்துகின்ற கார்டைக் கொண்டு வந்து இந்த அவையிலே ஒப்புவிப்பதற்கு தயாராக இருக்கிறேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, இனி வருகின்ற காலங்களிலாவது நீங்கள் அந்த 20 கிலோ அரிசியையும் முழுமையாக வழங்குகின்ற ஒரு நிலையை எடுத்துக்கொள்ள வேண்டும்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள். இங்கே சொல்கின்ற போது, 16 கிலோ, 17 கிலோ அரிசிதான் கொடுக்கிறார்கள், 20 கிலோ கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அதனால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு கடைக்கும் எவ்வளவு ஒதுக்கீடோ அவ்வளவு ஒதுக்கீட்டையும் தரச் சொல்லி மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் வழங்கியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் இப்போது இருக்கின்ற கோவை மாவட்டம், ஈரோடு மாவட்டம், நாமக்கல் மாவட்டம். கரூர் மாவட்டம் போன்ற பகுதிகளில் 25 சதவீதத்திலிருந்து 35 சதவீதத்திற்கு மேல் அரிசி அவர்கள் பெறுவதேயில்லை. அங்கு தேவையானதைவிட அதிகமாகக் கொடுக்கிறபோது அதை எடுத்து வெளியே விற்கிறார்கள். பிறகு பல புகார்கள் அதிலே வருகின்றன. முழுமையாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு சொல்வதை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலோ அல்லது மாவட்ட வழங்கல் அலுவலரிடமோ தெரிவிப்பது நல்லது. உள்ளபடியே தேவை என்றால் 100 சதவிகிதம் அரிசி தரச் சொல்லி அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. மீறி, அவர்கள் தரவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டுச் சொல்கிற பகுதியாக இருந்தால், உடனடியாக இங்கிருந்து அதிகாரியை அனுப்பி அரிசி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

**திரு. லா. சந்தானம்:** உள்ளபடியாக தேவையிருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லலாம் என்று அமைச்சர் அவர்கள் தந்த விளக்கத்திற்கு நன்றி. உள்ளபடி தேவை என்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எப்படி விளக்கம் அளிக்கிறார்கள் என்று சொன்னால், பல்வேறு இடங்களிலே எல்லோருக்கும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கும், மேலே இருப்பவர்களுக்கும் இந்த ரேஷன் அட்டை வழங்கப்பட்டிருக்கிறது. ஒட்டுமொத்தமாக எல்லோருக்கும் வழங்குகிறோம்; ஆனால், பல பேர் அந்த ரேஷன் அரிசியைப் பெறாதவர்கள் இருப்பார்கள் கிராமத்திலே; அதை நாங்கள் ஈடுசெய்து கழித்துக் கொண்டு 80 சதவிகிதம் தான் வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைத்தான் விளக்கமாக அளித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பல கிராமங்களிலே 100-க்கு 100 சதவிகிதம் வாங்குகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தால் அதை மனதில் வைத்து அரசு எல்லோருக்கும் 20 கிலோ அரிசி வழங்குவதற்கு முற்பட வேண்டும் ன்று சொல்லி வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

***திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது தமிழ்ப் பாட்டாளி மக்கள் கழகத்தினுடைய சார்பிலே என்னுடைய கருத்துக்களை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். பொதுவாக, இந்த ஆளுநர் உரை என்பது வள்ளுவன் தீட்டிய குறளுக்கு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தீட்டிய உரையைப்போல, இன்னும் ஒரு படி மேலே சென்று பார்க்கிறபோது அந்தக் குறளுக்கு தமிழக முதல்வர் தீட்டிய குறளோவியம் போல, மிக எளிமையாக, சிறப்பாக இருக்கிற ஒரு ஆளுநர் உரையை வரவேற்பதிலே, பாராட்டுவதிலே நான் இந்த நேரத்திலே என்னுடைய கடைமையைச் செய்ய விரும்புகிறேன்.

இந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியிலே நடைபெற்றவற்றை ஒரு இரத்தினச் சுருக்கமாக இங்கே கொடுத்திருக்கிறார்கள். 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்ற அடிப்படையிலே சொன்னதையும் செய்திருக்கிறார்கள். சொல்லாததையும் செய்திருக்கிறார்கள். ஆகவே, ஒரு பொதுவான நிலையிலே இருந்து



பார்க்கிறவர்களுக்கு இந்த ஆட்சி ஐந்து ஆண்டு காலத்திலே சரியான பாதையிலே செயல்பட்டிருக்கிறது என்பதற்கு அடையாளமாக ஒன்றிரண்டை நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். சொன்னதைச் செய்தது, ஊழல்வாதிகளை, நீதிமன்றத்திலே நிறுத்தி தண்டனை பெற்றுத் தருவோம் என்று சொன்னார்கள்; இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறார்கள். சொல்லாததைச் செய்திருப்பது, இன்றைக்கு மக்களிடையே சமத்துவத்தை வளர்க்கின்ற சமத்துவபுரத் திட்டங்கள்; உழவனுக்கும், உண்பவனுக்கும் பயனளிக்கிற உழவர் சந்தைத் திட்டங்கள்; மக்கள் நலத்தை மையமாக வைத்து மருத்துவ முறையிலே அமைந்த வருமுன் காப்போம் திட்டங்கள். இப்படி எத்தனையோ திட்டங்களை இந்த அரசு சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்றாலும், இடஒதுக்கீட்டுக்காகத் தொடர்ந்து போராடுகிறவர்கள் என்ற முறையிலே, இந்தச் சமூக நீதிச் சாதனையிலே இந்தியாவிலே வேறு எந்த ஓர் அரசும் செய்யாத சாதனையை இந்த அரசு செய்திருக்கிறது என்பதற்காக நாங்கள் மனம் திறந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தியாவிலே எந்த ஒரு மாநிலத்திலேயும் ஒரு மாநில அரசு, சமூக நீதி மறுக்கப்பட்ட தரப்பார்களுக்கு பின்னடைவுப் பணியிடங்களை முன்கொணரும் திட்டத்தினை நிறைவேற்றியதாக வரலாறு இல்லை. ஆனால் தமிழக அரசு தான் அந்தச் சாதனையை இன்றைக்குச் செய்து இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன். ஆகவே, ஒரு சமூக நீதிப்படி மக்களுக்குச் சாதனைகளைச் செய்து கொண்டிருக்கிற ஒரு ஆட்சி மீண்டும் மீண்டும் வரவேண்டும் என்று நாங்களும் நினைக்கிறோம்; நாட்டு மக்களும் இன்றைக்கு நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதில் எந்த மாற்றமும் இல்லை. அதிலே சில பேர்கள் அடுத்து நாங்கள்தான் • ஆட்சிக்கு வருவோம், ஆட்சிக்கு வருவோம் என்று சொல்லலாம். நான் வள்ளுவரைப் பார்த்துக் கேட்டபோது அவர் சொன்னார்-

> 'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
> கிறையென்று வைக்கப் படும்'

என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே எழுதியிருக்கிறானே, அப்படி என்றால் இன்றைக்கு முறை செய்து தமிழகத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிற கலைஞர் அல்லவா இந்தத் தமிழகத்தினுடைய முதல்வராக மீண்டும் வரமுடியும். இது விளங்கவில்லையா' என்று

கேட்பதுபோல எனக்குப்பட்ட காரணத்தினாலே இந்த அவையிலே நான் இதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-50*

அதே நேரத்திலே இந்த ஆட்சியிலே இந்த முன்கொணர்வுத் திட்டத்தை, அரசு திட்டமிட்டு ஆணை பிறப்பித்ததற்குப் பின்னாலும் ஒருசில அதிகாரிகள் அவர்கள் தவறுகள் செய்யவில்லை என்று நான் சொல்லமுடியாது; ஒருசில அதிகாரிகள் தவறு செய்கிறார்கள். எடுத்துக்காட்டிற்காக, சென்னைப் பல்கலைக்கழகத்திலே விரிவுரையாளர் பணி நியமனங்களிலே இப்படிப்பட்ட ஒரு அரசினுடைய திட்டம், அதாவது சுழற்சி முறை மறுக்கப்பட்டிருக்கிறது. அரசினுடைய கொள்கை அங்கே மீறப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். விரிவுரையாளர் பணியிடங்களிலே 65 இடங்களைத் தேர்வு செய்து, அதிலே மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்க வேண்டிய 13 இடங்களிலே 2 இடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டிருக்கின்றன. மலைவாழ் இன மக்களுக்கு ஒன்றுகூட இல்லை. பெண்கள், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒன்றுகூட இல்லை. இந்தக் குறையை நாங்கள் சுட்டிக்காட்டவும் தவறவில்லை. இன்னும் சொல்லப்போனால், இதே தமிழகத்திலே உள்ள, நான் ஆட்சிமன்றக் குழு உறுப்பினராக இருக்கின்ற, பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலே அரசினுடைய கொள்கைக்கேற்ப இடஒதுக்கீட்டு முறையை மிகச் சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறார்கள். அப்படியும் அதிகாரிகள் இருக்கிறார்கள். இன்றைக்கு மதுரை பல்கலைக்கழகத்தினுடைய விளம்பரத்தைப் பார்த்தால் சமூக நீதி நிலை நாட்டப்பட்டிருக்கிறது. 45 இடங்கள் நிரப்பப்பட்டு, உண்மையான சமூக நீதி அரசினுடைய கொள்கைப்படி நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதையும் நாம் பார்க்க வேண்டும். அதேநேரத்திலே சென்னைப் பல்கலைக் கழகத்திலே மட்டும் அந்தப் பணியிடங்களுக்காகக் கருதப்படுகின்ற தொழில்நுட்ப அதிகாரிகள் - டெக்னிகல் ஆபீசர்கள்— 15 பேர்களை நியமனம் செய்ததிலே தவறு இருப்பதாகப் பலரும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

நான் தமிழக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவதெல்லாம், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மட்டுமல்லாமல், சமூக நீதியிலே உண்மையாகவே மாற்றம் கொண்டு வரவேண்டும் என்பதற்காக, கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத்தொடரில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் ஒரு வேண்டுகோளை வைத்தேன்; சுழற்சி முறையிலே மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பாதிப்பு



இருக்கிறது; சமூக நீதி அடிப்படையிலே இந்தச் சுழற்சி முறை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்தவுடனே தமிழக முதல்வர் அவர்கள் அதனைத் திருத்தி, உண்மையான சமூக நீதியை இன்றைக்கு அந்தச் சுழற்சி முறையிலே கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், அதனை சென்னைப் பல்கலைக்கழகத்திலே மீறியிருக்கிறார்கள். அதை அரசு கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல இன்றைக்கு நீங்கள் பார்த்தால், 3 துணை நூலகர் பணியிடங்களிலும் அந்தக் குறைபாடு இருக்கிறது. அவற்றையும் அரசு கண்காணிக்க வேண்டும். அண்ணா பல்கலைக்கழகத்திலே ஏறத்தாழ 620 பேர்கள், ஆசிரியப் பெருமக்களாக இருந்தும்கூட, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் 20 பேர்கள்கூட இல்லை. ஆகவே, அங்கும் சமூக நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

தனியார் துறைகளிலே இடஒதுக்கீடு வலியுறுத்தப்படுவது வழக்கமாகச் சொல்லப்படுகிறது என்றாலும்கூட, அதற்கு நாடாளுமன்றத்திலே திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும். இங்கு பேசுகிற கட்சிகள், நாடாளுமன்றத்திலே பிரதிநிதித்துவம் பெற்றிருக்கிற கட்சிகள், நாடாளுமன்றத்திலே திருத்தங்களைக் கொண்டு வந்து, ஏற்பாடுகளைச் செய்தாலேயொழிய, எந்தத் தனியார் துறையிலேயும் ஒரேயொரு இடத்தைக்கூட யாராலும் பெற்றுத் தரமுடியாது. ஆகவே, அதற்கும் தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்....

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் துறையிலே இடஒதுக்கீடு வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றத்திலே மட்டும் நாங்கள் வலியுறுத்தவில்லை. பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே டெல்லியிலே மாநாடு நடத்தியது மாத்திரமல்லாமல், நாடாளுமன்றத்திலேயும் வலியுறுத்தி, அதை மத்திய அரசு கொள்கை ரீதியாக ஏற்றுக்கொண்டு இருக்கிறது என்ற செய்தியை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பொதுவாகச் சொன்னேன். நாடாளுமன்றத்திலே திருத்தம் கொண்டு வந்தாலேயொழிய அதைச் செய்ய முடியாது என்று பொதுவாகச் சொன்னேன். செய்திருந்தால் நன்றி. செய்யாதவர்கள் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதேபோல ஒரு முக்கியமான வேண்டுகோளை நான் இப்போது மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன். பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவால் பரிந்துரை அறிக்கை அளிக்கப்பட்டது. அதிலே மின்வாரியத்திலே இளநிலை உதவியாளர்கள் 119 பேர்; இன்றைக்கு அவ்வளவு பேர் இல்லை. சுமார் 60 பேர் மட்டும் இருக்கிறார்கள். பலர் பல இடங்களிலே வேலைக்குப் போய்விட்டார்கள். நிர்வாகப் பிரிவிலே இருக்கின்ற அப்பதவிகளுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு ஆய்வு செய்து பரிந்துரை செய்ததற்குப் பின்னரும்கூட, விதி இல்லை, அது இல்லை, இது இல்லை என்றெல்லாம் சொல்லி மறுக்கப்பட்டு வருகிறது. நான்கூட மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரிடம் பல முறை கோரிக்கைகளை வைத்திருக்கிறேன். இப்போது 5 ஆண்டுகாலம் முடிவடையப்போகிறது. தயவுசெய்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கருணை அடிப்படையிலேயாவது அவர்களுக்கு, தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு, பணிகள் வழங்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

*பிற்பகல் 12-55*

இந்த ஆட்சியிலே தவறுகளே நடக்கவில்லையா, குறைகளே நடக்கவில்லையா என்று சொல்கிறார்கள். இருக்கலாம். 'வீடு என்று இருந்தால் குப்பை இருக்கத்தான் செய்யும்' என்று சொல்லி, தமிழக முதல்வர் அவர்கள் இங்கே குற்றம், குறைகளை அனுமதிப்பது இல்லை. யாராக இருந்தாலும், அவர்கள் ஆளுங்கட்சியிலே இருந்தாலும்கூட, கண்டுபிடித்து, தவறுகளைக் கண்டுபிடித்து நிவர்த்தி செய்கிறார்கள், நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால், கடந்த ஆட்சிக் காலத்திலே— நான் கேட்கிறேன், இங்கே கூடப் பேசினார்கள் பல உறுப்பினர்கள்— இந்தியாவிலேயே முதலமைச்சராக இருந்து தண்டிக்கப்பட்ட ஒரே ஒரு ஆள் யார் என்பதை இங்கே எல்லோருக்குமே நன்றாகத் தெரியும். எந்த மாநிலத்தினுடைய முதலமைச்சரும் இப்படிப்பட்ட தண்டனைக்கு ஆளானது இல்லை. சில அமைச்சர்கள் ஆளாகியிருக்கலாம். ஒருவேளை பஞ்சாபிலே அப்படியொரு முறை நடந்திருக்கிறது என்று நினைக்கிறேன். ஆனால் எனக்குத் தெரிந்து அண்மைக் காலத்திலே எந்த ஒரு முதலமைச்சரும் கிடையாது. முன்னாள் முதலமைச்சர்தான் அப்படிப்பட்ட தண்டனைக்கு ஆளானார்கள். அவர் மீது



குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்துகொண்டிருக்கும்பொழுது அவரை ஏன் கைது செய்யவில்லை, அவரை வளர விட்டிருக்கிறீர்களா, அந்தப் பூதத்தை விட்டு வைத்திருக்கலாமா, இந்த பூதத்தை வளர விட்டுவிட்டு அதற்குப் பின்னாலே இப்படியெல்லாம் இருக்கலாமா, வருத்தப்படலாமா என்று சொன்னவர்கள், இன்றைக்கு நீதிமன்றம்— அரசு அல்ல, நீதிமன்றம்— நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையிலே அவர்களை ஆதரிப்பது நியாயம்தானா, முறைதானா என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு ஒரேயொரு உதாரணத்தைச் சொல்லி நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆசிரியர் பணியிடங்கள் இன்றைக்கு சுமார் 34,000 பேர்கள் போடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. என்னுடைய தொகுதியிலே பலபேர்கள் உங்களாலே ஒரு வாத்தியார் உத்தியோகம்கூட வாங்கிக் கொடுக்க முடியவில்லையே என்றெல்லாம்கூடச் சொன்னார்கள். ஆனால் ஆட்சி மாறியிருக்கிறது அப்பா, போன ஆட்சியிலே ஒன்றரை இலட்சம், இரண்டு இலட்சம் ரூபாய் வரையிலே இலஞ்சம் வசூலித்தார்கள். நான் உதாரணத்திற்காகச் சொல்கிறேன். இன்றைக்கு இந்த ஆசிரியர் பணியிடங்களிலே மட்டும் மக்களுடைய பணம் ஏறத்தாழ 600 கோடி ரூபாய்க்கு மேலே அவர்களுக்கு மிச்சமாகியிருக்கிறது, முறையாக ஆசிரியர் பணியிடங்கள் போடப்பட்ட காரணத்தினாலே என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இப்படி எத்தனையோ உதாரணங்களை நாம் சொல்லிக்கொண்டே போகலாம். நேரம் இல்லை. ஆகவே, இந்த ஆட்சியிலே தவறுகள் இருந்தால்கூட எப்படி ஒரு குடும்பப் பெண் அன்றாடம் வீட்டைப் பெருக்கி, தூய்மைப்படுத்தி, சுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறாளோ அதைப்போல தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தூய்மையாக இந்த நாட்டை வைத்து இருக்க வேண்டுமென்று திட்டமிட்டுச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, இந்த ஆட்சி மீண்டும் வர வேண்டும் என்பதிலே எங்களைப் போன்றவர்கள் பெருவாரியாக ஒத்துழைப்பாக இருப்போம் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே விவசாயிகளுடைய பிரச்சினைகளைப் பேசியிருக்கிறார்கள். நான் தமிழக முதல்வரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுவதெல்லாம், இந்த ஆண்டு பருவமழை தவறி விட்டது, விளைபொருளுக்கு இந்த அரசுதான் நெல்லுக்கு ஆதார விலைக்குமேல் இடை நிகழ்வுச் செலவாக 40 ரூபாய் தருகிறார்கள். இன்றைக்கு நெல்

விலை மிகவும் வீழ்ச்சி அடைந்திருக்கிற காரணத்தினாலே மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் இந்த இடை நிகழ்வுச் செலவைச் சற்றுக் கூடுதலாகத் தர வேண்டுமென்று நான் கேட்கிறேன்; 100 ரூபாய் கேட்கிறேன்; இடை நிகழ்வுச் செலவாக 100 ரூபாய் தாருங்கள் குவிண்டாலுக்கு என்று கேட்கிறேன் என்றாலும், உங்களால் முடிந்ததை நீங்கள் தர வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இந்த நெல் விலை வீழ்ச்சியானது இன்றைக்கு விவசாயிகளைப் பாதித்துக் கொண்டிருக்கிறது. வறட்சியின் காரணமாக இந்த ஆண்டு அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும். அவர்களிடமிருந்து அந்தப் பயிர்க் கடனை வசூலிப்பதை ஓராண்டுக்குத் தள்ளி வைக்க வேண்டும். நில வரியை ரத்து செய்ய வேண்டும். அதேபோல இந்தக் கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரை வட்டியைவிட அபராத வட்டி அதிகமாக இருக்கிறது என்றெல்லாம் சில இடங்களிலே குறைபாடுகள் சொல்கிறார்கள். அதையும் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஓர் செய்தி. கடந்த ஆண்டு வள்ளுவருடைய சிலை திறப்பு விழாவிலே தமிழ் ஆண்டாக 2000 ஆண்டை அறிவிக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு, நான் உள்பட அனைத்துக் கட்சித் தலைவர்களும் அந்த விழாவிலே கலந்து கொண்டு வேண்டுகோள் வைத்தோம். இன்றைய வரையிலே மத்திய அரசு அதை நிறைவேற்றவில்லை. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் 2001-ஆம் ஆண்டையாவது தமிழ் ஆண்டாக மத்திய அரசு அறிவிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அதேபோல தமிழை மத்தியிலே செவ்வியல் மொழியாக அறிவித்தால்தான் இந்தியப் பல்கலைக்கழகங்களிலே, வெளிமாநிலத்திலே உள்ள, வெளிநாடுகளிலே உள்ள பல்கலைக்கழகங்களிலே தமிழானது தன்னுடைய சிறப்பை உரிய முறையில் பெற முடியும். மத்திய அரசாங்கத்தினுடைய உதவித் திட்டங்களை, சமஸ்கிருதத்தைப் போலப் பெற முடியும் என்ற காரணத்தினாலே, தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்க மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். 2001 ஆம் ஆண்டைத் தமிழ் ஆண்டாக அறிவிக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது).

ஒரேயொரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். கல்குவாரித் தொழிலிலே 5 ஆண்டுகள் குத்தகை காலத்தைப் போராடி முதல்வரிடம் 10 ஆண்டுகளாக உரிமம் காலத்தை நீட்டித் தரக்கேட்டோம். ஆனால் இன்றைக்கு அதிகாரிகள் அந்த 5 ஆண்டு 10 ஆண்டு ஆனது



எதிர்காலத்திலே உள்ளவர்களுக்குத்தானே தவிர இப்பொழுது தொழில் செய்து கொண்டிருப்பவர்களுக்கு இந்த 5 ஆண்டு நீட்டிப்பு பொருந்தாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் தமிழக முதல்வரிடம் நான் முறையிட்டிருக்கிறேன். எல்லோருக்கும் இந்த 10 ஆண்டு குத்தகை காலம் கிடைக்கிற மாதிரி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே தமிழகத்திலே வன்னியருடைய சொத்துக்களை, கரையான் புற்றெடுக்க கருநாகம் குடிபுகுந்தது போல, பல பேர்கள் இன்றைக்குச் சுய இலாபத்திற்காக அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய சொத்துக்களையெல்லாம் வன்னியர்களுக்குப் பயன்படுகிற மாதிரி ஆவன செய்ய வக்ஃப் போர்டு மாதிரி வன்னியர் நல வாரியம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சமூக நீதிப் போராட்டத்திலே இரண்டு தியாகிகள் விடுபட்டுப் போனார்கள். கடலூர் மாவட்டத்தில் புலவனூர் ஜெயவேல் பத்தர் அவர்களுக்கும், விழுப்புரம் மாவட்டத்தில் சித்தணி சேகர் என்பவருக்கும் இன்னும் அந்த 20% இடஒதுக்கீடு போராட்ட தியாகி நிதி உதவி கிடைக்காமல் இருக்கிறது. அதையும் அரசு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

பெருந்தலைவர் இராமசாமி படையாட்சியார் அவர்களுடைய சிலையைத் திறப்பதற்கு அரசு அறிவிப்புச் செய்திருக்கிறது. அதற்காக நாங்கள் மீண்டும் ஒருமுறை இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அந்தச் சிலைத் திறப்பு விழா நிகழ்ச்சியை, இராமசாமி படையாட்சியார் நினைவு நாளான 3-4-2001 அன்றோ, அல்லது அதற்கு முன்னதாகவோ நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், தேர்தல் வந்துவிட்டால் திறக்க முடியாமல் கூடப் போய் விடலாம். எனவே, தயவுசெய்து இந்தச் சிலைத் திறப்பு விழாவை அரசு உடனே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

கடைசியாக ஒன்றே ஒன்று. இந்த அரசு சட்டம் ஒழுங்குப் பிரச்சினையில் எவ்வளவோ சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும் கூட, இராயபுரத்திலே, ஏறத்தாழ 8 ஆண்டுகளாகி விட்டது, ஏழுமலை நாயக்கர் என்பவர் கொலை செய்யப்பட்டார். அவர், அங்கே எட்டியப்ப நாயக்கர் மேல்நிலைப் பள்ளி ஒன்றை வைத்து மக்களுக்குக் கல்விப் பணிகள் எல்லாம் நிரம்பச் செய்தவர்.

இன்றுவரையில் அந்தக் கொலைச் சம்பவத்தில் சரியாகப் புலனாய்வு செய்து காவல் துறை நடவடிக்கை எடுக்கவில்லை. அல்லது நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, தயவுசெய்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

தொகுதிக்காக ஒரே ஒரு கோரிக்கை. என்னுடைய தொகுதிக்காக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நான் வைத்த வேண்டுகோள்கள் பலவற்றை ஏற்று நிறைவேற்றியிருக்கின்றார்கள். ஆனாலும் எனக்கு ஒரே ஒரு மனக்குறை இருக்கிறது. முந்திரி அதிகமாக விளையக்கூடிய என்னுடைய தொகுதியில், ஒரு முந்திரி ஆலை வைத்தால் அது எனக்கு ஒரு பெருமையாக இருக்கும். அந்தத் தொகுதி வாழ் மக்களில் முந்திரி அதிகமாகப் பயிரிடுவோர்களுக்குச் சரியான விலை கிடைக்காமல், யார் யாரிடமோ அள்ளு விலைக்கும் கொள்ளு விலைக்கும் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கே முந்திரி ஆலை ஒன்றை அமைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டு, இந்த ஆளுநர் உரையானது தமிழகத்தினுடைய ஐந்தாண்டு காலப் பொற்கால ஆட்சியைப் பறைசாற்றக்கூடிய ஒரு வீர முரசாக அமைந்திருக்கின்றது என்பதைப் பாராட்டி அமைகின்றேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன்.

***திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து, சில கருத்துகளை நான் சொல்ல விரும்புகின்றேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது தோழமைக் கட்சிகளையும், எதிர்க்கட்சிகளையும் பார்த்து, சுட்டிக் காட்டுங்கள், எங்களைக் குட்டியும் காட்டுங்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். சமீபகாலத்திலே ஒன்றைச் சொன்னார்கள். இந்த ஆட்சியில் குற்றம் இல்லை, குறைகள் இருந்தால் சுட்டிக்காட்டுங்கள் என்று சொன்னார்கள். இப்படித் தெளிவாக, உள்ளத்தில் பட்ட கருத்தை, ஆட்சியின் மாண்பைப் பற்றி வெளிப்படையாகச் சொன்ன முதல்வர், இந்தியாவிலேயே நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது என்று நாங்கள் கருதுகிறோம்.

மேலும் எதிர்க்கட்சிகளை மதிக்கின்ற ஆற்றல் மிக்கத் தலைவரான நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்று மிகச் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். ஆனால், எதிர்க்கட்சிகளைச்



சுட்டியும் குட்டியும் காட்டச் சொன்னால், ஈட்டியால் இதயத்தைக் குத்திக்காட்டுகிறார்கள். எனக்கு ஒரு கதைதான் நினைவுக்கு வருகிறது. ஒரு இளைஞன் ஒரு விலைமாதை விரும்புகின்ற அந்த நேரத்திலே, அந்த விலைமாது, உன்னுடைய தாயின் இதயத்தைக் கிழித்து எடுத்துக் கொண்டுவா என்று அவனுக்கு ஆணையிட, அந்த இளைஞன் ஓடி, தன்னுடைய தாயின் இதயத்தைக் கிழித்து எடுத்துக் கொண்டு வேகமாக ஓடிவருகின்றபோது, அவன் கால் தவறிக் கீழே விழுகிறான். அவனோடு அவன் கொண்டு வந்திருந்த அவனுடைய தாயின் அந்த இதயமும் கீழே விழுகிறது. அப்போது அந்த இதயம் கேட்டதாம், மகனே உனக்கு அடிபட்டுவிட்டதா, உனக்கு ஏதாவது ஆகிவிட்டதா என்று. அதேபோலத்தான் இன்றைக்கு எவ்வளவுதான் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், நம்முடைய அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சிகளைப் பார்த்து, நலமா என்று விசாரிக்கிறார்கள், சுகமாக இருக்கிறார்களா என்று விசாரிக்கிறார்கள். அந்தப் பண்பாளருடைய ஆட்சி இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை எதிர்க்கட்சியினர் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தத் தாயுள்ளம் படைத்த தலைவர்தான், எதிர்க்கட்சிகளை மதித்து நடக்கிற தலைவர்தான், இன்றைக்கு இங்கே ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறார்கள். அதைப் பாராட்ட மனம் இல்லையென்றாலும், குறை சொல்லக்கூடிய உள்ளம் சிலருக்கு இருக்கிறது. குற்றம் சொல்லக்கூடிய உள்ளம் இருக்கிறது. அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை என்று ஆட்சிப் பொறுப்பை மிகச் சிறப்பாக நடத்துகின்ற ஆற்றல்மிக்க தலைவர்தான் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள். நல்ல காரியங்களைக் கொச்சைப்படுத்துகின்ற ஒரு நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாங்கள் அதைப் பார்க்கிறபோது சற்று வேதனையாக இருக்கிறது.

வருமுன் காப்போம் திட்டம் வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டம் என்று மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் ஊரில் வயதானவர்கள் இருக்கிறார்கள். அவர்களை என்ன என்று கேட்டால் வயிற்றுவலி என்பார்கள். என்ன இளைத்து விட்டீர்கள் என்று கேட்டால் உடல் சரியில்லை என்று சொல்வார்கள். எப்போது மருத்துவமனைக்குப் போகப் போகிறீர்கள் என்று கேட்டால் நெல் அறுவடை முடிந்தபின் போகிறேன் என்பார்கள். நெல் அறுவடை முடிந்தபின் கேட்டால் நடவுக்குப் பின் போகிறோம் என்று சொல்வார்கள். ஆனால், அப்படிப் போவதே இல்லை.

அப்படிப்பட்ட அபலைப் பெண்களுக்கு, ஏழைப் பெண்களுக்கு நம்முடைய கலைஞர் அவர்கள் அறிவித்த திட்டம், மகத்தான திட்டம், வருமுன் காப்போம் திட்டம். இத்திட்டத்தில் நீங்களும் பார்த்திருப்பீர்கள்,

நானும் எல்லா முகாம்களிலும் கலந்து கொண்டிருக்கிறேன். ஒருவர்கூடக் குறை சொல்லாத திட்டம் 'வருமுன் காப்போம் திட்டம்'. சிறப்பு மருத்துவர்கள்; சிறந்த மருந்துகள் அனைத்தும் கிடைக்கின்ற ஒரு திட்டம். திண்டிவனம் தொகுதியிலே மட்டும் 40 ஆயிரம் மக்கள் பயன் பெற்றிருக்கிறார்கள். பல ஆயிரக்கணக்கானவர்கள் மேல் சிகிச்சைக்காக நோய்கள் கண்டுபிடிக்கப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-05*

மேலும் சொல்கிறேன், 250 ரூபாய் செலவு செய்தால் முழு உடலையும் பரிசோதிக்கின்ற ஒரு நல்ல திட்டத்தை நம்முடைய அரசுப் பொது மருத்துவமனையிலே அறிமுகப்படுத்திய பெருமை நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கு உண்டு. இந்தத் திட்டத்தால் 250 ரூபாய்க்கு அனைத்தையும் பரிசோதித்துக் கொள்ளலாம். அப்படி ஒரு நல்ல திட்டம். வெளியிலே சென்றால் 5 ஆயிரம் ரூபாய், 10 ஆயிரம் ரூபாய் ஆகுமே என்று கருதி, அவர்களுக்கெல்லாம் நல்ல திட்டமாக, அவர்கள் எல்லாம் பாராட்டுகின்ற திட்டமாக இந்தத் திட்டம் அமைந்திருக்கிறது.

நான் குறை சொல்வோரைக் கேட்கிறேன்; குற்றம் சொல்வோரைக் கேட்கிறேன். நியாய விலைக் கடைகளில் மூன்று ரூபாய் ஐம்பது காசுக்கு இந்தியாவில் இன்று எந்த மாநிலத்திலாவது அரிசி கிடைக்கிறதா? அதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதேபோல, மீண்டும் கேட்கிறேன், தமிழகத்தில் போக்குவரத்துத் துறையிலே ஒரு கிலோமீட்டருக்கு 22 பைசா என்று வசூலிக்கின்ற, ஏழை மக்களைப்பற்றி எண்ணுகின்ற, சாதாரண மக்களைப்பற்றி எண்ணுகின்ற ஓர் ஆட்சி இது. இங்கே பேசுகின்றார்களே, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் சரி, ஆளுகின்ற மாநிலத்திலும் சரி, 22 பைசா ஒரு கிலோமீட்டருக்கு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால், கலைஞர் அவர்கள்தான் ஏழை மக்களையும், சராசரி மனிதர்களையும், சாமானியர்களையும் எண்ணிப்பார்த்து கட்டணத்தை உயர்த்தாமல் இருக்கிறார்கள்.

அதேபோல, நெடுஞ்சாலைத் துறையை எடுத்துக்கொண்டால் சொல்லத் தேவையில்லை. வரலாற்றுச் சிறப்புமிக்க பணி இந்த 5 ஆண்டு காலத்தில் நடைபெற்றிருக்கிறது. பாலங்களைப் பொறுத்தவரையில் நெடுஞ்சாலைத் துறையிலே 1996-வரை 195 பாலங்கள் 170 கோடி ரூபாய்க்குக் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்த



ஐந்தாண்டு காலத்தில் 1996-க்குப் பிறகு 516 பாலங்கள் அமைக்க முடிவு எடுக்கப்பட்டு, 325 பாலங்கள் முடிக்கப்பட்டிருக்கின்றன. 191 பாலங்கள் அமைக்கும் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மொத்தத்தில் 516 பாலங்கள் தமிழகத்திலே, இந்த ஐந்தாண்டு காலத்திலே வந்திருக்கின்றனவே, சுதந்திரம் பெற்ற பிறகு 1996-வரை 195 பாலங்கள் மட்டுமே கட்டப்பட்டிருக்கின்றனவே, அதை எண்ணி, இதைப் பாராட்ட வேண்டாமா எதிர்க்கட்சிகள் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கல்வித் துறையைப் பொறுத்தவரையில் பள்ளிகள்; தொடக்கப் பள்ளிகள் இந்த ஐந்தாண்டு காலத்தில் 965 பள்ளிகள்; இது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆட்சி இல்லையா? வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி இல்லையா? பொன் ஏடுகளில் பொறிக்கப்பட வேண்டிய வரலாறு அல்லவா என்று உங்களைப் பார்த்துக் கேட்கிறேன்.

அதேபோல, தொடக்கப் பள்ளிகள் 965; நடுநிலைப் பள்ளிகள் 512. ஆனால், ஏற்கெனவே இருந்த ஆட்சிக் காலத்தில் 196 பள்ளிகள். நம்முடைய ஆட்சிக் காலத்தில், இந்த 5 ஆண்டு கால ஆட்சியில் 512 நடுநிலைப் பள்ளிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உயர்நிலைப் பள்ளிகள் 380 கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் கடந்த கால ஆட்சியில் 134 பள்ளிகள் மட்டுமே கொடுத்தார்கள். நம்முடைய பேராசிரியர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு 380 உயர்நிலைப் பள்ளிகள் தமிழகத்திற்கு வழங்கப்பட்டு, மாணவச் செல்வங்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக இந்த அரசு பாடுபட்டுக் கொண்டிருக்கிறதே, இதை நீங்கள் பாராட்ட வேண்டாமா? பாராட்டத் தேவையில்லை, குறை சொல்லாமல் இருக்க வேண்டாமா? (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம்.

அடுத்து, மேல்நிலைப் பள்ளிகள் 303 இந்த ஐந்தாண்டு காலத்தில் வந்திருக்கின்றனவே தமிழகத்திற்கு; இவை மாணவச் செல்வங்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்குத்தானே? ஆனால் கடந்த 5 ஆண்டு காலத்தில், அவர்கள் ஆட்சிக் காலத்தில், 80 பள்ளிகள் மட்டுமே கொடுக்கப்பட்டன. இப்போது 303 பள்ளிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதை எதிர்க்கட்சிகள் எண்ணிப்பார்க்க வேண்டாமா, பாராட்ட வேண்டாமா என்று கேட்டுக் கொள்கிறேன். மக்கள் எண்ணுகிறார்கள், பாராட்டுகிறார்கள்.

சிமெண்ட் சாலையைப் பொறுத்தவரையில் எங்கள் ஊரில் ஒன்று சொல்வது உண்டு; சொல்வார்கள். அதைச் சொல்லியே ஆகவேண்டும். சேட்டுத்தெரு என்று ஒரு தெரு இருக்கிறது. அந்தத் தெருவிலேதான்

***Thiru B. Venkatasamy:** Hon'ble Deputy Speaker Sir, on behalf of BJP I whole heartedly welcome the address presented to this House by Justice Fatima Beevi, Governor of Tamil Nadu.

I am very happy to say that Dr. Kalaignar's Government is one of the best Governments in our Nation. Why I am telling this is that when I went to villages to ask for vote, we were not allowed to enter the villages. I asked them why? They told that there is no light, no water, no drainage. They asked, why are you coming to the villages? They asked us to get out. I told them that I am not that M.L.A. Then they recognised me and asked me to come. Other fellows were not allowed. That is the reason why they were defeated last time. After I came to this House, I represented this matter to the Hon'ble Minister for RD & LA. He called for a meeting. The Hon'ble Chief Minister was kind enough to allot 50 crores of rupees for providing lights, pumpsets and roads within 15 days. I remembered the Hon'ble Minister told in a meeting, "If you do not do this within 15 days, ஒருத்தரும் இருக்காதீர்கள், நீங்கள் போங்கள், நான் செய்துகொள்கிறேன்."

He told this in the presence of all the M.L.As. This is the administration we are having in Tamil Nadu today. We are having the best administration. For example, social harmony has been improved by calling for a meeting of all the community leaders.

We have the best distribution system in our State. This is a marvellous system. We have given subsidy of Rs.1,700 crores. Rice is sold at a price of Rs.3.50 per kg. Nowhere in India we can see this. Then how can others say that this is not a good Government. You must appreciate this Government.

One thing I want to stress to the Hon'ble Minister is regarding the counter sellers. They are creating lot of troubles. Definitely I can say that you will get a bad name because of them. Why do not you pack rice as 20 Kg., 15 kg., packets so that nobody can tamper. I request that this may be done.

The infrastructural facilities are available in Tamil Nadu to attract Industries. Our State was in the fifth place. Now we are in the first place, How? Because, infrastructural facilities have been improved. There is upgradation of roads, construction of bridges, augmentation of water facilities. That is the reason why large number of industries have been attracted in our State.



Now, Tidel Park has come. The second Tidel Park is also about to come.

We have laid 5,000 Kms. of cement roads by investing 472 crores of rupees.

*பிற்பகல் 1-15*

We have put up 20,900 Kms. of thar roads and at the same time, the Central Government has accorded approval for upgradation of roads under the Prime Minister's Grama Sadak Yojana at a cost of Rs.78.76 Crores. Similarly, lot of schemes like Varumun Kappom Thittam, Schemes for providing free veterinary service to the remote villages have been introduced. Our Uzhavar Sandhai in Hosur has sold about 7.56 Crores of rupees worth of vegetables in one year. Ours is the first in the State and lot of people have been benefitted out of this.

Other schemes like Anna Marumalarchi Thittam, Namakku Naame Thittam, MLA Constitutency Development Fund, Periyar Samathuvapuram have been implemented in Tamil Nadu. Thirty thousand acres of waste land have been developed into cultivable lands, social security for 60 categories of manual workers in unorganised sector; 11 separate boards for the welfare of the unorganised labour, for protecting social rights of adi-dravidas, scheduled tribes, backward classes and most backward classes have been set up. I want to stress one more thing in this regard.

There are about 10% Arundhathiyars in the State and they have been neglected. I request the Hon. Chief Minister to see that Arundhathiyar community is given 10% quota because they are not developed. 10% quota should be given to them so that they can also economically prosper. I want to stress one more thing. There are about 2 crores, consisting of about 33 Castes of Telegu speaking people, in the State. We have organised a meeting last time. I am the Secretary of the Telugu Federation and there was a demand for separate quota. I request the Hon. Chief Minisiter to consider Telugu as Second Official Language as there are 2 Crores of Telugu people. Though 13% of Urdu people are living in Hyderabad, they have considered Urdu as Second official Language there. If it is done here also, we, the Telegu people will always be faithful to you and definitely we can improve our culture Sir. Coming to the other point sir, (Interruption.)

We want Tamil also to be taught to us. I request our Hon. Minister for Tamil Culture and Hindu Religious and Charitable Endowments to teach Tamil to us. We want to learn Tamil also. Because we don't know Tamil, we have been treated

as second class citizen. Our boys went for Interview in the Police Department and they were sent back as they don't know Tamil. (The gong was sounded). I will finish in 5 minutes sir. (Interruption) *சேஸ்தாமு, சேஸேதானிகி மாகு அவகாசம் லேது ...*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *... மீ ஊர்ல தெலுகு மாட்லாடுதாரு ...*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *எல்லோருக்கும் புரிகிற மாதிரி பேசுங்கள். அதுவும் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.*

**Thiru B. Venkatasamy:** I request the Hon. Minister to complete Kelavarapally dam. (Interruption). No, No, we are the people who were able to give lot of water to the State. So I Will..............

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *திரு. வெங்கடசாமி, நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். அமைச்சர் உட்கார்ந்து கொண்டு பேசுகிற நிலைமையை உண்டாக்காதீர்கள்.*

**Thiru B. Venkatasamy:** I request Cauvery Water for Hosur. Lot of small scale industries are suffering. I request the Minister to see that large industries come to Hosur so that small industries can get employment opportunities.

Tamil Pandits have been posted to improve Tamil in Elementary and Higher Elementary Schools. But Telegu Pandits have not been posted for Telegu schools. I request you to post Telegu Pandits in Higher Elementary Schools. (The Gong was sounded) I will finish in 2 minutes.

I am coming to the GATT agreement; Everybody is telling that it is only because of GATT agreement, WTO, prices have completely gone down—because we are importing—I request the N.D.A. Government also—they are thinking to increase tax on imported items—to look into this.

*பிற்பகல் 1-20*

However we have to see that the prices of all industrial products come down, Sir. Coming to other industrial items, I came to know that the prices of all the agricultural products are coming down. But the hotels have not reduced the rate of any item. The prices of all items should come down. How can the people get it if they are not able to buy it at subsidised rates. I request you to see to it.

Yesterday our friends - our so called secular friends - had organised a 'Manitha Changili-human chain - protesting against the incident of killing of Graham Stain and his children at Orissa. It is against the policy of BJP. Hence,



we also condemned and investigation was done and the culprits were identified. I want to know from the Hon. Members........(Interruption). I will finish, Sir. I am not yielding. (Interruption).

**Hon. Deputy Speaker:** He is not yielding.

***Thiru J. Hemachandran:** It was organised by many parties and not one party.

**Thiru B. Venkatasamy:** I am telling about all the parties. I want to know from all the parties, those who have joined it, why did not you convence such a chain against Kovai bomb blast in 1998?. There was a big blast at Kovai and 60 Tamilians died. Why they did not organise a chain like this?.

**Thiru J. Hemachandran:** In Bombay when Tamilians were beaten by Sivasena men we had organised.

**Thiru B. Venkatasamy:** I am asking about Tamil Nadu. In Coimbatore (The gong was sounded)

I will finish with this point, Sir.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.........*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். அவர் பேசி முடித்தவுடன் நீங்கள் கேளுங்கள்.*

**Thiru B. Venkatasamy:** I want to tell my friends that Hon. Vajpayee is more secular than anybody else because Abul Kalam was awarded the Nobel Prize. All those Haj Pilgrims who have applied were allowed. Previously there was a quota.

Hon. Vajpayee is more secular. I request the Hon. Minister to see that idol breaking is thoroughly investigated and punish the culprits.

Thank you for this opportunity.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *திரு. கே.ஆர். இராமசாமி.*

**திரு. கே.ஆர். இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கக்கூடிய தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துகளைச் சொல்ல நான் முற்படுகிறேன். இன்றைக்கு தமிழகத்திலே விவசாயிகளுடைய நிலை மிக மோசமான நிலையாக*

இருக்கிறது. இன்றைக்கு அவர்கள் என்ன செய்வது என்று தெரியாத நிலையிலே இருக்கிறார்கள். இந்த அரசாங்கம் *5* ஆண்டு காலமாக விவசாயிகளுக்குப் பல நன்மைகளைச் செய்வதாகக் கூறிக்கொண்டு இருந்தாலும், இப்போது விவசாயம் செய்வதற்குரிய இடுபொருட்களுடைய விலைகள் அதிகமாக ஏறிக்கொண்டிருக்கின்றன. ஒரு மூடை D.A.P. உரத்தினுடைய விலை ஏறத்தாழ *500* ரூபாயாக இருக்கிறது. ஒரு மூடை நெல்லினுடைய விலை.....

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கடந்த 4½ ஆண்டுகாலமாக இடுபொருட்களான D.A.P. மற்றும் யூரியா போன்ற எல்லா விலையையுமே ஒரே கட்டுப்பாட்டில்தான் வைத்திருக்கிறோம், Purchase Tax-ஐ எல்லாம் குறைத்து, விலை ஏறாமல் கட்டுப்பாட்டில் இருக்கிறதே தவிர, 4½ ஆண்டு காலத்தில் விலை ஏறவில்லை. ஏறாத விலையை நீங்கள் ஏற்றி, ஏதோ இந்த அரசு வந்த பிறகு இடுபொருள் விலை ஏறியிருக்கிறது என்று பேசுவது அவ்வளவு நல்லதல்ல.

*பிற்பகல் 1-25*

**திரு. கே.ஆர். இராமசாமி:** D.A.P. உரத்தினுடைய விலை *500* ரூபாயாக இருக்கிறது. ஆனால் இன்றைக்கு ஒரு மூட்டை நெல்லினுடைய விலை *300* ரூபாயாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல் விலைகூட, அதன் ஆதார விலையைக்கூட மாநில அரசாங்கம் நிர்ணயிப்பது இல்லை; மத்திய அரசாங்கம்தான் எல்லா மாநிலங்களினுடைய நெல் உற்பத்திச் செலவுக் கணக்கையெல்லாம் கேட்டு, ஒரு குவிண்டாலுக்கு என்ன விலை நிர்ணயிக்கலாம் என்று ஒவ்வோர் இரகத்திற்கும் விபரங்களைப் பெற்று, இந்திய அளவில், மத்திய அரசாங்கம் நிர்ணயிக்கக்கூடிய விலையைத்தான் நம்முடைய மாநில அரசாங்கம் கொள்முதலுக்கு வழங்குகிறது. இதிலே கூடுதல் விலையாக ஊக்கத் தொகையாக, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு நம்முடைய தமிழகத்திலேதான் நம்முடைய முதலமைச்சர் இன்றைக்கு வழங்குகிறார் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



**திரு. கே. ஆர். இராமசாமி:** இதுபோன்று இடுபொருட்களின் விலை அதிகமாக இருப்பதால் இன்றைக்கு நெல்லினுடைய விலையையும் இடுபொருட்களின் விலைக்கு ஏற்றாற்போல கூட்ட வேண்டுமென்று நான் கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதும்கூட கடந்த 4½ஆண்டு காலமாக இடுபொருட்கள் D.A.P. யூரியா, போன்ற மற்றவற்றை எல்லாம் நாங்கள் ஒரே கட்டுப்பாட்டில் வைத்து இருந்தாலும், ஒவ்வோர் ஆண்டும் மத்திய அரசாங்கம் ஒரு விலையைக் கூடுதலாகத்தான் நெல்லுக்கு நிர்ணயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள், வாங்கிச் சாப்பிடக்கூடியவர்களுடைய கணக்கையும் பார்த்து உற்பத்திச் செலவுக் கணக்கையும் பார்த்து ஒரு விலையை நிர்ணயிக்கிறார்கள். இந்த மாநில அரசாங்கம் ஒவ்வோர் ஆண்டும் கூடுதலாகத்தான், அவர்கள் நிர்ணயிக்கின்ற விலையைவிட கூடுதலாகவே, பரிந்துரை செய்கிறது. ஆனால், அவர்கள் இந்திய அளவில் ஒரு முடிவு எடுத்து ஒரு குவிண்டாலுக்கு இவ்வளவு என்று நிர்ணயிக்கிறார்கள். உரவிலை கட்டுப்பாட்டில் இருந்தாலும், ஒவ்வோர் ஆண்டும் நெல்லுக்குக் கூடுதல் விலை கிடைத்துக்கொண்டுதான் இருக்கிறது.

**திரு. கே.ஆர். இராமசாமி:** நீங்கள் வழங்கக்கூடிய விலை போதவில்லை. அதிகமான விலை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தமிழகத்திலே 80 சதவீதம் மக்கள் விவசாயத்தை நம்பிய மக்கள் இருக்கிறார்கள். விவசாயத்தை நம்பி இருக்கக்கூடியவர்களுக்கு இந்த அரசு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது டீசலினுடைய விலையைக் கூட்டி இருக்கிறார்கள். உழவுக்குப் பயன்படுத்தக்கூடிய டிராக்டருடைய வாடகை அதிகமாக இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது நெல்லினுடைய விலையை நீங்கள் கூடுதலாகக் கொடுப்பதிலே தவறில்லை. இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு நெல்லினுடைய விலையை அதிகமாகத் தர வேண்டும். அதேபோல, கரும்பு, தேங்காய் போன்ற விளைபொருட்களினுடைய விலையை நீங்கள் அதிகரித்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயம் சம்பந்தப்பட்ட கண்மாய்களை ஆழப்படுத்த நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மிகமிகத் தீவிரமாக ஒரு திட்டத்தைச் செயல்படுத்தினார்கள். ஒவ்வொரு

சட்டமன்ற உறுப்பினரும் ஒவ்வோர் ஆண்டுக்கும் ஒரு கண்மாயைச் சிபாரிசு செய்தால், அதைச் சிறப்பாகச் செய்து தருகிறேன் என்று கூறி, அந்தத் திட்டத்தை ஓராண்டு செய்து கொடுத்தார்கள். அதற்குப் பிறகு அதை ஏன் விட்டு விட்டார்கள்? அவர்களுக்கு விவசாயிகள் மீது என்ன கோபம் ஏற்பட்டு இருக்கிறது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கோபம் இல்லை. நானே விவசாயிதான். என்மீது எனக்கு எப்படிக் கோபம் வரும்? இப்போது நபார்டு மூலமாக நாம் ஏரிகளை எடுத்து இருக்கிறோம். அதேநேரத்தில் உலக வங்கியின் மூலம் 628 ஏரிகளை—தாமிரபரணி, வைகை, பாலாறு பேசினில் இருக்கிற ஏரிகளைத் தூர்வாருவதற்கு எடுத்து இருக்கிறோம். அதிலே நாம் கிட்டத்தட்ட 200, 300 ஏரிகளை எடுக்க வேண்டுமென்று பிளான் போட்டு, முதலிலே 44 ஏரிகளுக்கு இப்போது நபார்டு மூலம் தொகை வந்து இருக்கிறது. அது இந்த ஏரிகளைச் சரி செய்வதற்கே போதாது. அதிலேயும் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதியிலேயும் ஏரிகள் இதில் கலந்து வருகிற மாதிரி எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து இருக்கிறேன். அதனால்தான் இதைத் தனியாக எடுக்கத் தேவையில்லையே தவிர, கோபத்தால் நிறுத்தப்படவில்லை.

**திரு. கே.ஆர். இராமசாமி:** இன்னும் அதிகமாகக் கண்மாய்களைத் தூர்வாரித் தரவேண்டும். நீங்கள் தஞ்சை மாவட்டத்திலே எவ்வாறு கால்வாய்களை ஆழப்படுத்திக் கொடுத்தீர்களோ, அதேபோல வானத்தை நம்பி இருக்கக்கூடிய பூமியான இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களிலே இருக்கக்கூடிய கண்மாய்களையும் நீங்கள் அதிகமாக ஆழப்படுத்தித் தர வேண்டும்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராமசாமியினுடைய கருத்து நல்ல கருத்து. ஏனென்றால், டேங்கில் இரண்டு வகை இருக்கின்றது. System Tank, Non-system Tank. ஆற்றிலிருந்து தண்ணீர் போய்ப் பாய்ந்து ஏரி நிரம்புவது System Tank. மழைத் தண்ணீரை நம்பியிருப்பது Rain-fed Tanks. நாங்கள் இப்போது தூர்வாருவது.. *(மணியடிக்கப்பெற்றது)* இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன். *(சிரிப்பு)*

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** ஆகையினாலே இப்போது நாங்கள், மழையை நம்பியிருக்கிற ஏரிகளை, குளங்களை, கண்மாய்களைத் தூர் வார இதிலே எடுத்திருக்கிறோம்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** அந்தத் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் அதிகமான கண்மாய்களை எடுத்து ஆழப்படுத்த நீங்கள் ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமக்கு நாமே என்று ஒரு திட்டம். அதேபோல அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். நமக்கு நாமே திட்டத்தைப் பொறுத்தமட்டில் எங்களுடைய மாவட்டங்களிலேயிருந்து மக்களுடைய பங்குத் தொகை முழுவதையும் கட்டியிருக்கிறோம். ஆனால் அதற்குரிய அரசினுடைய பங்குத் தொகைகள் கிடைக்கப் பெறவில்லை. அதேபோல அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திலே முதல் ஆண்டிலே ஏறத்தாழ 1¼ கோடி ரூபாய் அளவிற்கு ஒரு பஞ்சாயத்திற்கு ஒதுக்கினீர்கள். அதற்கு அடுத்தபடியாக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கினீர்கள் இப்போது கடைசியாக வெறும் 30 இலட்சம் ரூபாய் அளவிற்கு ஒதுக்கியிருக்கிறீர்கள். இவையெல்லாம் நல்ல திட்டங்கள் என்று நாம் ஏற்றுக்கொண்ட பிறகு அதற்கு நிதியை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும். அதிகமாக நிதியை ஒதுக்கிக் கொடுக்கவில்லையென்றாலும், முதலிலே கொடுத்த தொகையையாவது குறைக்காமல் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்களது தென் மாவட்டங்களிலே நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்து, அந்தப் பகுதியில் என்னென்ன செய்ய வேண்டுமென்று இந்த அரசு நல்ல நோக்கத்துடன் ஆராய்ந்தது. ஆனால் அதற்குப் பிறகு இந்த அரசினுடைய நடவடிக்கை என்ன என்று தெரியவில்லை. இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் பல சிபாரிசுகளை இந்த அரசுக்குச் செய்திருக்கிறார்கள். அதிலே ஒன்றைக்கூட இந்த அரசாங்கம் இன்னும் செயல் முறைக்குக் கொண்டு வராததன் காரணம் என்ன என்பதை நீங்கள் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பல திட்டங்களை, அதாவது அந்தப் பகுதியிலே சாதிச் சண்டைகள் நடக்காமல் இருக்க என்ன செய்ய வேண்டும், அங்கே தொழிற்சாலைகளை எவ்வாறு ஏற்படுத்த வேண்டும், தொழில்களை இன்னும் எவ்வாறு அதிகப்படுத்த வேண்டும் என்பது பற்றியெல்லாம் கூறியிருக்கிறார்கள். அந்த அறிக்கையைப் பெற்றுக்கொண்ட இந்த அரசு இன்னும் அந்தத் திட்டங்களுக்கு எந்தவிதமான 'முன்னுரிமையும்

கொடுக்காமல் இருக்கிறது. அதை உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அந்த அறிக்கையிலே ஒரு மிகப் பெரிய திட்டமாக சிவகங்கையிலே கிராபைட் தொழிற்சாலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தினை நீங்கள் நிறைவேற்றினால் அந்தப் பகுதி மக்களுக்கு மிக மிகப் பிரயோசனமாக இருக்குமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மின் சாரத் துறையைப் பொறுத்தமட்டில் விவசாயிகளுக்கு இன்னும் நீங்கள் எளிமையாக, தாராளமாக மின் இணைப்புக் கிடைக்க ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, நீங்கள் டெபாசிட் தொகையை மிக அதிகப்படுத்தியிருக்கிறீர்கள். ஏறத்தாழ 3 மடங்கு அதிகரித்து இப்போது வசூல் செய்கிறார்கள். அது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. மின்சாரத் துறைக்கு பணத்தேவை அதிகமாக இருக்கிறதா? அதனால் நீங்கள் இதுபோன்று.....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது குறுக்கிடவே கூடாது என்று இருந்தேன். இருந்தாலும் அவர் ஒரு நல்ல கேள்வியைக் கேட்டிருக்கிறார். Indian Electricity Act, 1957—ன்படி, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை consumers பயன்படுத்துகின்ற மின்சாரத்தின் அளவிற்கேற்ப டெபாசிட் தொகை வசூலிக்க வேண்டுமென்று இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். இன்றையதினம் மீட்டர் ரீடிங் எடுத்தால் அதற்கு எப்போது பில் வருகிறது? எப்போது பணம் கட்டுகிறார்கள் என்றால் 3 மாத காலம் கழித்துத்தான் பணம் செலுத்த வேண்டும். அந்த 3 மாதத்திற்குத் தேவையான டெபாசிட் தொகை மின்வாரியத்திடம் இருக்க வேண்டும். ஏனென்றால் யாராவது 3 மாதம் மின்சாரத்தை அனுபவித்துவிட்டு, பிறகு disconnect செய்கிற நேரத்தில் அவர்களுடைய டெப்பாசிட் பணம் ஒன்றுமே இல்லை என்றால் மின்சார வாரியத்திற்கு இழப்பு ஏற்படும். இது இப்போது, நேற்றல்ல; 1957 ஆம் ஆண்டு, எப்போது இந்தச் சட்டம் வந்ததோ அப்போதிருந்து செய்து கொண்டிருக்கிறோம். எல்லோருக்கும் அல்ல. இப்போது விவசாயிகளுக்கு டெப்பாசிட் கேட்கிறோமா? இல்லை. Consumers யார், யார்? Domestic consumers; அதேபோல Commercial consumers அதேபோல Industrial consumers இவர்களெல்லாம் எவ்வளவு மின்சாரம் பயன்படுத்துகிறார்களோ அதற்கேற்றாற்போல் டெப்பாசிட் கட்ட வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறோம்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் அளித்தார்கள். இந்த முறையில் பொதுவாக 3 மாதம் கழித்து நாம் பில் கட்டுவதில்லை. வீடாக இருந்தாலும் சரி, தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, நிறுவனங்கள், லாட்ஜுகள், இவற்றுக்கு அடுத்த மாதமே பில் வந்து விடுகிறது. அல்லது 2 மாதத்திற்கு ஒரு முறை பில் வருகிறது. அப்படி வருகிறபோது, 4,000 ரூபாய் என்று சொல்கிறபோது நீங்கள் 3 மடங்கு 12,000 ரூபாய் டெப்பாசிட் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, எந்த அளவிற்கு பயனீட்டை அவர்கள் செய்கிறார்களோ, பயன்படுத்துகிறார்களோ அந்த அளவிற்கு 4,000 ரூபாய் அவர்கள் கரண்ட் பில் கட்டினால், அந்த 4,000 ரூபாயை மட்டும் நீங்கள் வசூலித்தால்கூட பரவாயில்லை. ஏனென்றால் அடுத்து உடனே disconnect பண்ணிவிடுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டு, உங்களுக்கு நிதி நெருக்கடி இருக்கலாம், அதற்காக எங்களையெல்லாம் பாதிக்கிற வகையில் குருவித் தலையில் பனங்காயை வைக்காதீர்கள் - அந்த வைப்புத் தொகைத் திட்டத்தை நீங்கள் அதிகரிக்க வேண்டாம் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-35*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** எப்போதும் இந்த அரசாங்கம் யாருடைய தலையிலும் சுமத்த வேண்டும் என்பது இல்லை. மின்சார வாரியம் நஷ்டத்திலே போகிறது என்பதற்காக இதைச் செய்யவில்லை. ஒவ்வொரு முறையும் எப்போது இந்த டெப்பாசிட் வசூலித்து இருக்கிறார்கள் என்ற கணக்கு உங்களுக்குத் தேவைப்பட்டால் நான் தருகிறேன். மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை; எந்த அளவிற்கு Consumers மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்களோ அதற்கு ஏற்றாற்போல உதாரணத்திற்குச் சொல்கிறேன், நீங்கள் மின்சாரத்தை அதிகமாகப் பயன்படுத்தவேயில்லை என்று வைத்துக்கொள்வோம்; உங்களிடத்திலே கேட்க மாட்டார்கள். யார் அதிகமாக மின்சாரம் பயன்படுத்துகிறார்களோ அவர்களிடத்திலேதான் இந்தத் தொகை கேட்பார்களே தவிர, வீட்டைப் பூட்டி வைத்து இருப்பவர்களிடத்திலே நிச்சயமாக மின்சாரக் கட்டணத்தை மூன்று மடங்கு கேட்கமாட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி, ஒரு நிமிடத்தில் பேசி முடிக்கவும்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** தேவகோட்டையில் 18-11-1999 அன்று பட்டு குருக்கள் என்பவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். அது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து முழு விவரத்தையும் கூறியிருந்தோம். அந்தக் கொலை சம்பந்தமான வழக்கை சிபிசிஐடி போலீஸ் விசாரித்து வருகிறது. ஆனால் கொலை நடந்து ஏறத்தாழ 14 மாதங்கள் முடிந்துவிட்டன. இந்த நிலையிலும் குற்றவாளி யார் என்பதைக் கண்டறியாத ஒரு சூழ்நிலை அந்தப் பகுதியிலே ஏற்பட்டிருக்கிறது. இது அந்தப் பகுதி மக்களுடைய நிலையைப் பாதித்திருக்கிறது. அந்தப் பகுதியைப் பொறுத்த மட்டில் ஓராண்டுக்கு முன்பு முதல்வர் அவர்கள் தலையிட்டு அந்தப் பகுதியிலேயுள்ள காவல் துறை அதிகாரிகளை எல்லாம் மாற்றி நல்ல முடிவுகளை எடுத்து, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய தவறுகளைத் தட்டிக்கேட்க வேண்டுமென்று எண்ணி பல மாறுதல்களைச் செய்தார்கள். ஆனால் இன்று வரையிலும் அந்தக் கொலையைச் செய்த கொலையாளி யார் என்பது கண்டுபிடிக்கப்படாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த மாதம் 2-ம் தேதி அந்த நகரத்தைச் சேர்ந்த அத்தனை பிரிவு மக்களும் எல்லா கட்சியைச் சேர்ந்தவர்களும் ஒன்று சேர்ந்து, ஒரு பந்த்க்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த பந்த் வெற்றிகரமாக அங்கே நடந்தது. பந்த் எல்லாம் முடிந்த பிறகு இரண்டு நாட்கள் கழித்து காவல் துறையினர் அந்த பந்த்-ல் முனைப்பாக நின்று யார் யார் பந்த்-க்கு ஏற்பாடு செய்தார்களோ அவர்கள் மீது ஏறத்தாழ 17 பேர்கள் மீது தவறுதலாக உண்மைக்குப் புறம்பாக பிசிஆர். வழக்கில் பதிவு செய்திருக்கிறார்கள். இந்த வழக்கை என்ன காரணத்திற்காகப் பதிவு செய்திருக்கிறார்கள் என்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கோருவதற்கு அந்த பந்த் நடந்தது. ஆனால் இன்றைக்கு காவல் துறையினர் அந்த ஏற்பாட்டைச் செய்த 17 பேர்கள் மீது எஸ்சி/ எஸ்டி. பிரிவின்கீழ் வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதிலே ஓர் ஆசிரியர் கைது செய்யப்பட்டு சிறையிலே இருக்கிறார். இது ஒரு நல்ல உதாரணம், அவர் ஏறத்தாழ 1994 ஆம் ஆண்டு தனது குழந்தையைப் பள்ளியிலே சேர்க்கச் சொல்கிறார், அப்போது உங்களுடைய ஜாதி என்ன என்று அங்கே கேட்கிறார்கள், அப்போது அவர் கூறுகிறார், எனக்கு ஜாதியே இல்லை, நான் ஜாதியை விரும்பாதவன் என்று கூறியிருக்கிறார். அந்த நபர் மீது இன்றைக்கு பிசிஆர். வழக்கு, இந்த பிசிஆர். வழக்கு என்பது எதற்காக இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால், எஸ்.சி. / எஸ்.டி.



பிரிவு மக்களின்மீது தவறு நடக்கும்போது, அவர்களுக்குச் சாதகமாக இந்த வழக்கைத் தொடர வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு உண்மையை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறவர்கள் மீது எஸ்சி/ எஸ்டி/ஆக்டின்கீழ் இந்த வழக்கைப் பதிவு செய்திருக்கிறார்கள். இதற்கு நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதிலே தவறு இருந்தால், நான் சொல்லுவதிலே தவறு இருந்தால் நான் பொறுப்பேற்பதற்குத் தயாராக இருக்கிறேன். முழுமையாக இந்த வழக்கைத் தவறாகப் போட்டு இன்னும் மிரட்டுகிறார்கள். 17 பேர்கள் மீது அங்கே இருக்கிற ஆள்தான், இங்கே இருக்கிற ஆள்தான் என்று சொல்லி இன்றைக்குப் போலீஸ் வந்து மிரட்ட ஆரம்பித்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-40*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த இந்தக் கருத்து குறித்து உரியவர்களிடத்திலே விசாரித்து, உரிய நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24-1-2001) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

3. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்று ஆறாவது அறிக்கை. (2000-2001)
4. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்று ஏழாவது அறிக்கை. (2000-2001)
5. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்று எட்டாவது அறிக்கை. (2000-2001)

6. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்று ஒன்பதாவது அறிக்கை. (2000-2001)

7. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்றுப் பத்தாவது அறிக்கை. (2000-2001)

8. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

9. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

D
V211,31 '801

2292790

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**